ஸ்ரீ வேதாந்த தீபிகை

தொகுதி-25 எண்-1.2.3.

ஜூலை முதல் செப்டம்பர் வரை

1936

265ஜ31,1-
N36·25·1-3
158960

ஸ்ரீ:

ஸபை ஆபீசில் கிடைக்கக்கூடிய புத்தகங்கள்

1. ந்யாயஸித்தாஞ்ஜனம்—(ஸ்ரீ வேதாந்த தேசிகன்) விலை ரூ. 5 0 0
(வ்யாக்யானத்துடன்) பண்டிதர்களுக்கும் வித்யார்த்தி
களுக்கும் அரைவிலை).

467

2. வேதார்த்த ஸங்க்ரஹம்—(ஸ்ரீ பாஷ்யகாரர்) (ஸ்ரீ உப:
வாஸுதேவாசார்யரின் தமிழ் உரையுடன் விலை. ரூ. 3 0 0
3. ஸ்ரீ பஞ்சஸ்தவம் (ஸ்ரீஸ்துதி) ஸ்ரீ உப. வாஸுதேவா
வாச்சான் பிள்ளையின் வ்யாக்யானத்துடன்) ரூ. 0 8 0
4. ஸ்ரீ வேதாந்த தேசிகரின் தத்வடீகை (ஸ்ரீ பாஷ்யத்
திற்கு விரிவான வ்யாக்யானம்) அச்சிலிருக்கிறது.
சீக்கிரம் வெளியாகும்.

हिंगु

காயம்

" हृद्यं हिंगु कटूष्णं च क्रिमिवातकफापहम् ।
विबन्धाध्मान शूलघ्नं चक्षुष्य गुल्मनाशनम् ॥ "

சுத்தமான பெருங்காயம் ஹ்ரு தயத்திற்கு பலம் தரும்; காரமும் உத்ஸாஹமுமளிப்பது; வயிற்று க்ரிமி களையும், வாத தோஷத்தையும், கப தோஷத்தையும் போக்கும்; மலகந் தம், வயிற்று நோய் இவைகளையும் தீர்க்கும்.

இவ்விதம் சாஸ்திரத்திலுள்ள குணங்களைப் பெற்ற சிறந்த பெருங் காயம் L. G. குறி உள்ளதுதான்—

லால்ஜி கோது & கம்பெனி

பிரபல பெருங்காய வியாபாரிகள்,

பம்பாய் சென்னை கும்பகோணம்

अमृतांजनम्

அம்ருதாஞ்சனம்

உண்மையில் அம்ருதம் போன்றது. இப்பெயர் அகரத்தில் ஆரம்பிப்பதால் இது அகில மங்களமும் அளிக்கக் கூடியது என்று அடியில் கூறும் ப்ராசீன முது மொழி கூறுகிறது.

"अ इति भगवतो वाचकमकारं
प्रयुञ्जानेन किं नाम मङ्गलं न कृतम् ।"
" अकारोपक्रमश्चास्मिन्मङ्गलत्वाभिसन्धितः ।"

தலைவலி, ஜலதோஷம்,
சுளுக்கு முதலான சகல
நோய்களையும் தீர்க்கவல்ல
ப்ரஸித்தமான லேபனம்—

அம்ருதாஞ்சனம் டிபோ

பம்பாய், மதராஸ், கல்கத்தா

ஸ்ரீ:
ஸ்ரீ.வெ நஜ:
திலாவநகஜநம் தஜாயுவண
ரவிகுரமளரவரா ஜரம ஜயாநெ ।
வவாரஜககாயுரவ தாநநாவெ
விஜயஸவெர திரஹூ ஜெஉநவஷா ॥

வேதாந்த தீபிகை

பத்ராதிபர்கள் : { ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்
வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்.

ஸம்பு. 25] தாது ஹு—ஆனி மீ [ஸஞ்சிகை 1

விஷய ஸூசிகை.

1. ஸம்பாதகரின் குறிப்புகள் 665
2. தீபிகையின் புத்தாண்டு 669
[ஸ்ரீ. உப. ரெ. திருமலை ஐயங்கார்]
3. தர்ம ப்ரஹ்ம காண்டங்களின் ஐகாஹஸ்யம் 672
[ஸ்ரீ. உப. அ. ராமாநுஜாசார்யர், திருக்குடந்தை]
4. ஸ்ரீ ராமாவதார வைபவம் 679
[ஸ்ரீ. உப. சேட்லூர் துரைசாமி அய்யங்கார், சித்தூர்]
5. வேத வைபவம் 688
[வித்வான் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸதாதாசார்யர், திருவாதி]
6. ஆவ்ருத்யதிகரண ரஸங்கள் 696
[ஸ்ரீ. உப. எ. வி. கோபாலாசார்யர் M.A.,B.L., அட்வொகேட்]
7. ஒரு நாள் விவாகமும் தர்ம சாஸ்த்ரங்களும் 702
[பரவஸ்து ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யர்]
8. ஸ்ரீவரதராஜ பஞ்சாசத் 704
[ஸ்ரீ. உப. எ. வி. கோபாலாசார்யர்]
9. ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் தனியன் 712
[திருவரங்கம் ஸ்ரீ உப. திருமலை தாதாசாரியர்.]
10. மீமாம்ஸா ஸங்க்ரஹம் 717
[திவான் பஹதூர் ஸ்ரீ உப. வி. கே. ராமாநுஜாசார்யர்]
11. தீவ்யஸூரி சரிதம் 241

[சந்தாதாரர்கள், சந்தாத் தொகையை, "ஜெனரல் கார்யதர்சி, 'ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபை, 39, முத்தியாலு செட்டித்தெரு, வேப்பேரி, மதிராஸ்' என்னும் விலாஸத்திற்கும், வ்யாஸம் எழுதுபவர்கள் வ்யாஸங்களையும் அவை ஸம்பந்தங்களான மற்றை கடிதங்களையும் "ஸம்பாதகர், வேதாந்த தீபிகை வாணி விலாஸ் போலீஸ் ராகவாசார்யர் தெரு, பார்க் டௌன், மதிராஸ்" அல்லது "ஸம்பாதகர், ராமஸ்வாமி தெரு, ஈஸ்டு மாம்பலம், தியாகராயநகர், மதிராஸ்" என்னும் விலாஸத்திற்கும் அனுப்பவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.]

158960

ஸ்ரீ:

ஸ்ரியை நம:

ஸம்பாதகரின் குறிப்புகள்

ஸ்ரீ
வேதாந்த தீபிகை

சென்ற ஸஞ்சிகையுடன் ஸ்ரீ வேதாந்த தீபிகையின் இருபத்து நான்காவது ஸம்புடம் முடிந்தது. இது இருபத்தைந்தாவது ஸம்புடத்தின் முதல் ஸஞ்சிகை. இந்த இருபத்து நான்கு வர்ஷங்களாகத் தீபிகை நமது ஸுஹ்ருத்துக்களால் ஆதரிக்கப் பெற்றுச் செழிப்புடன் வளர்ந்து வந்தது என்பதைப் பற்றி நாம் ஸந்தோஷிக்கிறோம். இரண்டொரு காலங்களில், இதற்கு லோபம் ஸம்பவித்துவிடுமோ என்று சங்கிக்கும்படியான துர்த்தசைகளும் நேர்ந்தன. ஆனால் அந்தக் காலங்களில் ஸ்ரீ சரண்யனுடைய க்ருபையால் சிற்சில மஹான்கள் முன் வந்து அந்தத் துர்த்தசைகளிலிருந்து தீபிகையை ஸம்ரக்ஷித்தார்களென்பது பெரும்பாலும் எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இப்பொழுது இரண்டு வர்ஷ காலமாகச் சென்னை ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபையார் அதன் பாரம் முழுவதையும் ஏற்றுக்கொண்டு, அதை மிக்க சிறப்புடன் நடத்தி வருகிறார்கள். ஆனால் இவ்விதம் அதை நடத்திவருவதால் அந்தச் சபையாருக்கு பெருத்த நஷ்டமே நேர்கிறபடியால், அவர்களுடைய ஆதரம் அதிக காலம் நீடித்து நிற்குமோ வென்று நமக்கு ஒரு அதிசங்கை ஜனிக்கின்றது. சந்தாதாரர்களிடமிருந்து கிடைக்கும் தொகை, தீபிகையால் ஏற்படும் செலவின் ஒரு அம்சத்திற்காவது பர்யாப்தமாக இருந்தால் இம்மாதிரியான அதிஶங்கைக்குக் காரணம் இருக்கமாட்டாது. அது அத்யந்தம் குறைந்ததாக இருப்பதால் மாத்ரம் நாம் இவ்விதம் பயப்படுகிறோம். ஆனால் ஸர்வேச்வரன் இச்சித்தால் ஒரு வஸ்துவின் ஸ்திதிக்கு வேறு ஸாமக்ரிகளும் வேண்டுமோ?

ஒரு நாள் விவாஹம்

கீழச்சேரி பரவஸ்து ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, 'ஒரு நாள் விவாஹம்' என்பதைப் பற்றி எழுதியிருக்கும் வ்யாஸத்தை இந்த ஸஞ்சிகையில் மற்றொரு பக்கத்தில் வெளியிட்டிருக்கிறோம். ஒரே தினத்தில் விவாஹத்தைப் பூர்த்தி செய்வது என்பது சாஸ்த்ர விருத்தமே. ஆனால் பல விடங்களில் பலபெயர்களால் அது இப்பொழுது அநுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. சாஸ்த்ர வச்யர்களென்று ஸாமாந்ய ஜநங்களால் க்ரஹிக்கப்படும் சில வைதிகவித்வாங்களும் அதை நிஷேதியாமலிருக்கிறார்கள்; அது மாத்ரமின்றிக்கே, அந்த விவாஹங்களில் தாம் ஸந்நிஹிதர்களாக இருந்து, அவைகளில் சிற்சில ஸம்பந்தங்களையும் வஹித்து, அவைகளை ஒருவாறு அவர்கள் அப்யுபகமம் செய்தும் வருகிறார்கள். இது காலத்தின் வைபரீத்யமே. ஆனால் இதைப் பற்றிச் சோகிப்பதால் பயனென்ன? இதைக் காட்டிலும் பன்மடங்கு ப்ரதாநங்களாயுள்ள ஸந்த்யாவந்தநம் முதலிய அநுஷ்டாநங்களும், சிகா தாரணம் முதலிய ஆசாரங்களும் அத்யந்தம் லுப்தங்களாகி வருகையில், நாலு நாள் விவாஹம் குன்றி வருவதைப்பற்றி மாத்ரம் நாம் சோகிப்பதில் பயனென்ன? ப்ரபலமான ப்ரவாஹம் புரண்டு வந்து க்ராமங்களையும் ஜநபதங்களையும் இருந்தவிடம் தெரியாமல் நாசம் செய்து வருகையில், நாம் நமது வாஸ க்ருஹம் போய் விட்டதே என்று சோகிப்போமோ? கால பலத்தாலும் பாஸ்சாத்ய ஸம்ஸர்க்கத்தாலும் இக்காலத்திய ஜநங்களுக்கு நம்முடைய சாஸ்த்ரங்களில் விச்வாஸம் குன்றிவிட்டது என்பது வஸ்து ஸ்திதி. சாஸ்த்ர விதிகளெல்லாம் பொய்யென்று பஹிரங்கமாகச் சொல்லி அவைகளை நிராகரிக்க தைர்யமற்றவர்களாய், அவர்கள் அவைகளை அநுஷ்டிப்பதுபோல நடித்து மாத்ரம் வருகிறார்கள். இந்த ஸ்திதியில் நாம் எதைப்பற்றி எவ்வித சோகத்தைச் செய்ய ப்ராப்தம்? சாஸ்த்ரங்களில் உண்மையான விச்வாஸமுடையவர்களாக இக்காலத்தில் யாராவது இருந்தால், அவர்கள் செய்யக்கூடியது ஒன்றே. அதாவது: தம்தம் அநுஷ்டாநத்தை மாத்ரம் யதா சக்தி அவர்கள் பாதுகாத்து வருவதுதான். இதை மீறி அவர்கள் லோகத்தைச் சிக்ஷிக்க ப்ரயத்நப்பட்டால், அவர்கள் பரிபவத்திற்கு ஆஸ்பதமாவார்கள் என்பதில் ஆக்ஷேபமில்லை. "ஸுகொவாய ந ஸாஷெயெ" என்பதன்றோ இக்கால ஸ்திதி?

ஈசாவாஸ்ய உபநிஷத்தின் ரஸ விவரணம்.

ஸ்ரீரங்கம் ஸ்ரீ. உப. எ. வி. கோபாலாசார்ய ஸ்வாமியால் இங்க்லீஷ் பாஷையில் எழுதப்பட்டுள்ள ஈசாவாஸ்யோபநிஷத் வ்யாக்யாநமொன்றை நாம் வரப்பெற்றோம். புத்தகத்தின் ஆரம்பத்தில் உபநிஷத்தின் மூலமும், பிறகு இங்க்லீஷ் பாஷையில் அதன் வ்யாக்யாநமும் அச்சுப் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன. இந்த வ்யாக்யாநத்தில் அநேக அருமையான அர்த்தங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன என்பது அதைப் படிக்குமெல்லாருக்கும் ஸுலபமாய் விளங்கும். இம்மாதிரியே மற்றை உபநிஷத்துக்களுக்கும் அவர் வ்யாக்யாநம் எழுதப்போவதாக நாம் அறிகின்றோம். இது மிகவும் ஆநந்தகரமான ஸமாசாரமே.

ஆனால், இது ஸம்பந்தமாக ஒரு விஷயம் மாத்ரம் நாம் விசேஷித்து விஜ்ஞாபநம் செய்துகொள்ள விரும்புகிறோம். இந்தப் புஸ்தகத்தின் முகவுரையில் இவர் தமது ப்ரதிஜ்ஞைகளுள் ஒன்றைப் பின்வருமாறு வெளியிட்டிருக்கிறார்.

" In bringing out the humour, we shall also attempt to interpret the passages almost in the literal sense, careless of what system of Vedanta they might support. "

அதாவது, 'உபநிஷத் வாக்யங்களின் ரஸவிசேஷங்களை வெளியிடும் விஷயத்தில் நாம் அந்த வாக்யங்களின் சப்தார்த்தத்தை அநுஸரித்தே உரையை எழுதுவோமே தவிர, ஏதாவது ஒரு ஸித்தாந்தத்தை அவலம்பித்து அதற்கு அநுகுணமாக உரையை நாம் எழுத மாட்டோம். அந்த வாக்யங்கள் எந்த ஸித்தாந்தத்திற்கு ஒத்தவையாக இருந்த போதிலும் அதை நாம் கவனிப்போமில்லை.' இந்த ப்ரதிஜ்ஞையின் கருத்து, 'இந்த உபநிஷத்தில் தென்படும் வாக்யங்கள் ஓரிடத்தில் அத்வைத ஸித்தாந்தத்திற்கு ஒத்தவை போலவும், மற்றுமோரிடத்தில் வேறு ஸித்தாந்தங்களுக்கு ஒத்தவை போலவும் தோன்றினாலும், அவைகளை உள்ளபடி விவரிப்போமே தவிர, இரண்டு வாக்யங்களையும் ஸமந்வயம் செய்து பூர்வாபர விரோத மிராத ஒரு தாத்பர்யத்தை விவரிப்பதில் நமக்கு நோக்கம் இருக்க மாட்டாது' என்று இருத்தல் வேண்டுமென்றே நமக்குத் தோன்று

கின்றது. இது கருத்தாக இருக்கும் பக்ஷத்தில், இந்த உரை எவ்விதத்தில் ப்ரசஸ்தமாக இருக்கும் என்பது நமக்கு விளங்கவில்லை உபநிஷத்துக்களின் வாக்யங்கள் ஏதாவது ஒரு ஸித்தாந்தத்திற்கு ஒத்தவையாக இருத்தல் வேண்டுமே தவிர, பரஸ்பர விருத்தங்களான இரண்டு ஸித்தாந்தங்களுக்கு ஒத்தவையாக இருக்கமாட்டா. அப்படி இருந்தால் அவை உந்மத்த ப்ரலபிதங்களாகத் திரியுமன்றோ? இதை உத்தேசித்தே நமது ஆசார்யர்கள், தாம் பாஷ்யாதிகளை எழுதும்பொழுது சிற்சில விடங்களில் க்லேசங்கள் ஸம்பவித்தபோதிலும், அவைகளை ஸஹ்யங்களாகப் பொறுத்து வாக்யங்களுக்கு வ்யாக்யாநம் செய்திருக்கிறார்கள். அந்த மார்க்கத்தை விட்டு விலகி, இவர் மார்க்காந்தரத்திற் சென்றதால் என்ன ப்ரயோஜநத்தை அடைந்தார் என்பது நமக்குத் தெரியவில்லை. ஸித்தாந்த த்ரயத்தையும் கசடற அப்யஸித்திருக்கும் இவர், அந்த ஸித்தாந்தங்களுக்குள் எதில் இந்த உபநிஷத்தானது தாத்பர்யமுள்ளதாக இருக்கின்றதோ அதை ந்யாய ஸஞ்சாரபுரஸ்ஸரமாக விசாரம் செய்தாலும் செய்திருக்கலாம்; இல்லாவிட்டால், ஏதாவது ஒரு ஸித்தாந்தத்தைக் கைப்பற்றி அதற்கு அநுகுணமாக உரையை எழுதினாலும் எழுதி இருக்கலாம். இவை இரண்டையும் கைவிட்டு, நிஷ்ப்ரயோஜநமான இந்தமூன்றாவது மார்க்கத்தில் இவர் ப்ரவர்த்தித்து விட்டாரே என்று மாத்ரம் நாம் சோகிக்கிறோம்.

ஸ்ரீ:

தீபிகையின் புத்தாண்டு

[பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ஸ்ரீ. உ.ப. வெ. திருமலை ஐயங்கார், காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.]

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபையாரால் ப்ரசுரிக்கப்பட்டு வரும் ஸ்ரீ வேதாந்த தீபிகையின் இருபத்து நான்காவது ஆண்டு நாளது தாது வருஷம் வைகாசித் திங்களுடன் நிறைந்து, ஆனி மாதத்தில் ஐயையாண்டு ஆரம்பமாகிறது நம்மவர் அறிந்த விஷயம். சுமார் பதினெட்டு வருடங்களாக நமக்கு இப்பத்திரிகையுடன் சம்பந்தம் உளதாயினும், நெருங்கிய ஸ்நேகம் ஸமீபித்துத்தான் ஏற்பட்டது. "ஒரு நாட் பழகினும் பெரியோர் கேண்மை இருநிலம் பிளக்க வேர் வீழ்க்கும்மே" என்றபடி, தீபிகை நட்பு வளர்பிறை போல் நாளுக்கு நாள் அதிகரித்து வருவது அகமகிழும் விஷயம்.

தெக்கணத்திற் சிறந்த திராவிட நற்றிரு நாட்டில் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாய அபிவிருத்திக்காக உலவி வரும் பத்திரிகை நம் தீபிகை ஒன்றேதான் என்று கூசாது கூறலாம். வடமொழி தென்மொழி யெனும் இரு மொழிகளிலும் நன்கு பயின்றோர் ஸம்ப்ரதாயத்துக்கு அனுகுணமாக விசேஷக் கட்டுரைகள் எழுதி வருவது மிகவும் போற்றத்தக்கதாயினும், இதுகாறும் இக்கைங்கர்யத்தில் ஈடுபடாது நிற்கும் அறிஞரும் அரிய விஷயதானஞ் செய்வரேல் தீபிகை நிகாற்று விளங்கும் என்பதில் எள்ளளவும் ஐயமுண்டோ? பண்டித ஆதரவு பூர்த்தியாகப் பெறின் எப்பத்திரிகையும் நன்கு விளக்க முறும்.

நம்மவரில் ஐகமத்யம் பூர்ணமாயில்லை என்பது மிகவும் சோகிக்க வேண்டிய விஷயம். ஒற்றுமையே நாடிய பொருள் கைகூடுவிக்கும். 'ஒன்றுபட்டா லுண்டு வாழ்வேம்; நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் கேடே' என்பன அமுத மொழிகள். இப் பத்திரிகை விஷயத்தில் ஸ்ரீ வைஷ்ணவர்க ளனைவரும் ஒருமைப்பட்டால் சகல நன்மைகளும் தாமே வரும். சந்தாக்குறைவு. விஷயம் அபாரம். பத்திரிகை அமைப்புப் பார்க்கப் பார்க்கக் களியூட்டும். மன முண்டானால் இட முண்டு.

இப்பத்திரிகையின் அபிவிருத்தியை உத்தேசித்துச் சில வார்த்தைகள் இச்சமயம் சொல்ல விரும்புகின்றேன். ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபையார் முன்னையினும் கொஞ்சம் பரிச்ரமம் எடுத்துக்

கொள்ளவேண்டுவதற்கு அத்யாவசியக முண்டாகியிருக்கிறது. பொன் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டுமென்பர் அறிவுடையர். நம் ஆஸ்திகப் பிரமுகர்கள் ஒரு சுற்றுப் பிரயாணம் செய்யவேண்டும். ஆங்காங்கு நம் ஸம்பிரதாய ப்ரவசனத்துடன் தீபிகைக்கு நிரந்தரச் சந்தாதாரர்களைச் சேர்க்கவேண்டும். வேண்டுமானால் தக்க ஏஜண்டுகளைத் தகுந்த முறையில் ஏற்படுத்தல் மிக நலம். பண்டித பாமரருக்கும் உபயோகப்படுமாறு பல் வேறு முறையில் நம் ஸித்தாந்தத்தைப் பிரசாரம் செய்து ஒரு புது உணர்ச்சியை உண்டாக்கவேண்டும். தேவ பாஷையான வடமொழியில் பிரசாரம் செய்வது ஸாத்யமில்லாததால், தென் மொழியுடன் ஆங்கிலத்தையும் கலந்துகொள்ளல் நலம். நம் பெரியோர்கள் முன்னையோர் கொண்ட முறையில் நிற்கின்றனர். அரைகுறை லௌகிகரும் யுவர்களும் வழிதெரியாமல் அல்லலுறுகின்றனர். ராஜ்யபாஷையான ஆங்கிலத்தின் மூலம் இவர்களைச் சற்றே நன்முறைக்குத் திருப்பிவிட்டால் அப்புறம் பிராசீன ஸம்பிரதாயம் தழைத்தோங்கும். இதற்காக நம் தீபிகை ஒருபாகம் ஆங்கிலத்திலும் மற்றொரு பாகம் பிராசீன உபய பாஷைகளிலும் வருமானால் மிக நன்மை உண்டாம் எனப் பலர் அபிப்பிராயம் கொண்டுள்ளார்கள் என்பதை அடியேனும் அறிவேன். அங்ஙனம் செய்வது நன்மை பயக்குமாகையால் சபையார் இதனைச் சற்று கவனிப்பாராக. தவிர, எப்பாகங்கள் தனிப் புத்தகமாக அமைக்கலாமோ அவற்றைக் கூடியவரை தீபிகையில் சேர்க்காது, தனி அநுபந்தமாகவோ தனிப் பிரதிகளாகவோ வெளியிடுதல் நலம். நிற்க: மிகப் ப்ரீதியுடன் ஒரு விஷயத்தை நன்கு படித்து உற்சாக மடைகையில் அச்சஞ்சிகையில் 'தொடரும்' என்ற பதம் வருமானால் படிப்போர் மனம் தொடராது சோர்வடைந்து கவலையுறும். எனவே ஒவ்வொரு ஸஞ்சிகையிலும் ஒவ்வொரு விஷயமும் பூர்ணமாய் நின்றால் ஆனந்தம் அதிகரிக்கும். விவாதத்திற்கும் நிந்தனைக்கும் இடமான விஷயங்களை விலக்குதலோ அல்லது தனியாக அவற்றை அச்சிடுவதோ செய்தால் அநுகூலம் விளைக்கும். ஆங்காங்கு நடைபெறும் ஆஸ்திக நடவடிக்கைகளையும் ஸம்பவங்களையும் திரட்டித் தனியாகப் பிரசுரித்தல் வேண்டும். திவ்ய க்ஷேத்ரங்கள், திருக்கோயில்கள், ஆசாரியர்கள், மஹான்கள் முதலியோரின் திருவுருவப் படங்களையும் ஸஞ்சிகையில் சேர்ப்பது மேன்மை தரும். ஆஸ்திக்யம் தலைதூக்க எவ்வெவ்வுபாயங்கள் உண்டோ அவற்றையெல்லாம் தீபிகை வாயிலாக அமைத்தால் விசேஷ நன்மை உண்டு.

நம்மவர் கடமை மிகவும் பொறுப்புள்ளது. நம் தீபிகை என்ற அபிமானம் நமக்கு வாஸ்தவத்தில் உண்டாகிவிட்டால், அது சீர் பெற்றோங்கும் என்பது ஒருதலை. ஸ்ரீவைஷ்ணவனாக ஜனித்த ஒவ்வொருவரும்

இதனை ஆதரிக்க மனம் வைப்பரேல், நாடு க்ஷேமம் அடையுமாறு இலகுவில் செய்யலாம்.

நம் ஆசார்யர்கள் அருளிச்செய்த நூல்களை ஒன்று விடாமல் எளிய தமிழ் நடையில் அனைவரும் அறிந்து உய்யும்வண்ணம் வெளியிடலாம். பாலர் பகுதி மாதர் பகுதிகளும் இருத்தல் நலம். ஸ்ரீ வைஷ்ணவ சித்தாந்தம் என்றாலே இன்னதென்று அறியாதார் பலர் நம்மிடையே காணலாம். அவரும் பயன்படுமாறு விஷயங்கள் சுருக்கமாகவும் எளிதாயும் வந்து கொண்டிருப்பது ஒரு அரிய தொண்டாகும்.

தீபிகையின் வெள்ளி விழா சமீபிக்கின்றது. அதற்குள் அதன் ஜ்வாலை எங்கும் கொழுந்து விட்டு எரிந்து விளக்குப் புக இருள் மாய்ந்தாங்கு அஞ்ஞானம் நீங்கி அனைவரும் அமலன் அடி அடையுமாறு செய்தல் மிக அவசியம். வார்த்தையாற் பயனில்லை. செய்கையே வேண்டற்பாலது. கருமமே கண்ணாயினார்க்கு எதனையும் முடிப்பது அசாத்தியமில்லை.

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசாரக ஸபையார் அனைவரும் தீர்க்காயுளும் திடசரீரமும் பெற்று, திருவுக்கும் திருவாகிய செல்வனுக்குத் தீராக் கைங்கரியம் அல்லும் பகலும் செய்யுமாறு அமல மூர்த்தியான அவ் வச்சுதன் அடிபணிந்து இக்கட்டுரையை நிறுத்துவாம். குற்றம் கடிந்து குணமே கொள்க. ஆசை பற்றி இங்ஙனம் அறையலுற்றேன். முறையில் நூலுணர்ந்த முதியோர் முனியற்க.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்."

———

ஸ்ரீ:

கர்ம ப்ரஹ்ம காண்டங்களின் ஐகரஸ்யம்

[ஸ்ரீ. உப. அ. ராமாநுஜாசார்யர், திருக்குடந்தை]

மேற்படி விஷயத்தைப் பற்றித் திருக்குடந்தை ஸ்ரீ. உப. அக்நிஹோத்ரம் வித்வான் தாததேசிக தாதாசார்ய ஸ்வாமியால் ஸமீபத்தில் செய்யப்பட்ட ஒரு உபந்யாஸத்தின் ஸாராம்சத்தை இங்கு அடியேன் வெளியிடுகிறேன். அது வருமாறு:—

வேதங்களின் இரு பாகங்களான கர்ம ப்ரஹ்ம காண்டங்கள் பரஸ்பரம் உபஜீவ்யங்களாகவே அமைந்து ஐகரஸ்யத்தை அடைந்துள்ளன. ஆகையால் கர்ம காண்டத்தின் பூர்ணமான உதவி இல்லாதவரையில், உபநிஷத் பாகங்களிலிருந்து உண்டாகும் வேதாந்த ரஸமும் பூர்ணமானதாக இருக்க ந்யாயமில்லை. இவ்விரு பாகங்களும் பிரிக்க முடியாத நிலையில் அமைந்திருப்பதைக்கொண்டே ஸூத்ரகாரரும் ஸ்ரீ பாஷ்யகாரரும் இவ்விரு பாகங்களின் விசார ரூபமான பூர்வோத்தர மீமாம்ஸைகளுக்கும் ஐகஶாஸ்த்ர்யத்தை அங்கீகரிக்கவேண்டியதாயிற்று. உபநிஷத் பாகங்கள் பரம புருஷார்த்தமான மோக்ஷத்தையும் பரப்ரஹ்மஸ்வரூபத்தையும் ப்ரதிபாதித்தபோதிலும், பெரும் பாகமும் அவை பூர்வ காண்டத்தின் உதவியை அண்டி அதை உபஜீவித்தே நிற்கின்றன.

ஆபாதத: பூர்வோத்தர காண்டங்களுக்கு அபேதம் தோன்றினாலும், உட்புகுந்து கவனித்தால், பூர்வ காண்டத்தில் இல்லாத புதிய அம்சம் எதுவும் உத்தரகாண்டத்தில் இல்லையெனப் புலப்படும்.

வேத பாகங்களில் கர்ம காண்டம் மிகப் பெரிதானது. ரிக்வேதத்தின் கர்ம காண்ட பாகத்தில் மட்டும் பதினாயிரத்திற்கு மேற்பட்ட மந்த்ரங்கள் இருக்கின்றன. யஜுஸ்ஸாமாதர்வாதிகளிலும் ஆயிரக் கணக்கில் மந்த்ரங்கள் இருக்கின்றன. ஆயிரக்கணக்கில் க்ரந்தங்களைக் கொண்ட பல ப்ராஹ்மணங்கள் கர்ம காண்டங்களில் இருக்கின்றன. இந்த நிலையிலிருந்து பார்த்தால், உபநிஷத்பாகம் மிக மிகச் சிறியதாக இருக்கும். உபநிஷத்துக்களிலும் உபாஸநா விதிகளை அநுஸரித்துப் பல கதைகள் காணப்படுகின்றனவேயன்றி, பெரும்பான்மையாக மந்த்ர பாகம் காணப்படவில்லை. ஆதலால் கர்ம காண்டத்தின் உதவியில்லாமல் ப்ரஹ்ம காண்டம் தனித்து நிற்க முடியாது. கர்ம காண்டத்திலும் பரப்ரஹ்ம ஸ்வரூபாதிகள்

வ்யங்க்யமாகவும் ஸ்பஷ்டமாகவும் மந்த்ர ப்ராஹ்மணாதி பல பாகங்களில் ப்ரதிபாதிக்கப்பட்டிருப்பதை மேலே நிரூபிப்போம். மேலும் ப்ரஹ்ம வித்யைக்கு அங்கமாக முமுக்ஷுக்கள் அநுஷ்டிக்கவேண்டிய யஜ்ஞாதிகளும், அதற்கான மந்த்ரங்களும், ப்ரயோகங்களும், பூர்வ காண்டத்திலிருந்து க்ரஹிக்கவேண்டியவையாக இருக்கின்றன. கர்ம காண்டத்தின் நித்ய நைமித்திக காம்ய கர்மாக்கள் பகவதாராதந ரூபமாக ப்ரதிபாதிக்கப்படுகின்றன என்பதில் ஒருவருக்கும் ஆக்ஷேபமில்லை. நித்ய நைமித்திக கர்மாக்களைப் போல் காம்ய கர்மாக்களால்கூட பகவானே ஆராதிக்கப்படுகிறார் என்பது, 'ஐந்த்ராவைஷ்ணவம்', 'யேயஜ்ஞேந தேவதா ஹந்த்ரா:' இத்யாதிகளில் ஸ்பஷ்டம். மேலும். 'ஏகோ ஜக்ஷெவாரமஉ' என்ற மந்த்ரம் பூர்வோத்தர காண்டங்களில் ஆராத்ய வஸ்து ஒன்றே என்று சொல்லுகிறது. ஆதலால் கர்ம காண்டத்தின் காம்யகர்மாக்களில்கூட அக்நி இந்திராதி சப்தங்களைச் சொல்லியோ, ஸாக்ஷாத்தாகவே பகவத் வாசக சப்தங்களைச் சொல்லியோ, பகவானின் ஸ்வரூப குணாதிகள் ப்ரதிபாதிக்கப்படுவதால், அந்த பாகங்களும் வேதாந்திகளுக்குப் பகவத் ஸ்வரூப குணாதிகளை அறியும் விஷயத்திற்கு அத்யந்த உபாதேயங்களே. இந்த விஷயத்தைச் சில மந்த்ர ப்ராஹ்மணாதி மூலமாக வெளியிடுவோம்.

கர்ம காண்டம் என்பது, மந்த்ரம் ப்ராஹ்மணம் அதர்வாதம் என்ற மூன்று பாகம் கொண்டது. இவைகளில் மந்த்ர பாகம் கர்மாக்களால் ஆராதிக்கப்படும் தேவதைகளின் ஸ்வரூபாதிகளை ப்ரதிபாதிப்பது. யஜுர் மந்த்ரங்கள் கர்ம ஸ்வரூபாதிகளையும் சொல்லுகின்றன. ப்ராஹ்மண பாகம், அக்நிஹோத்ராதி விஶ்வஸ்ருஜாமயநாந்த நித்ய நைமித்திக காம்ய கர்மாக்கள், அதன் அங்கங்கள், இவைகளை விதிப்பது. அர்த்தவாத பாகம் இவைகளைப் பல வழிகளாலும் ஸ்துதி செய்ய ஏற்பட்டது. நிஷித்த கர்மாக்களை நிஷேதிப்பதும், அதை நிந்தை செய்வதும் கீழ்ச் சொல்லப்பட்ட இடங்களைச் சேர்ந்ததே.

ஸ்தூலமாகக் கவனித்தால் கர்மாக்கள் ஸம்பந்தமான விதி நிஷேத பாகங்கள், கர்ம ஸ்வரூபத்தை வெளியிடும் மந்த்ர பாகம், இவை அத்யாத்ம ரஸாநுபவத்தில் உபயோகப்படா என்று தோற்றலாம். ஆழ்ந்து கவனித்தால் இந்த பாகமும் உபாதேயமாகவே ஆகிறது.

"ப்ரஹ்ம ஸ்ருசோ க்ருதவதீ: । ப்ரஹ்மணா ஸ்வரவோ மிதா: । ப்ரஹ்ம யஜ்ஞஸ்ய தந்தவ: । ருத்விஜோ யே ஹவிஷ்க்ருத: ।"

என்பன போன்ற மந்த்ரங்கள், "ஆஜ்யம் உள்ள ஸ்ருக் என்ற யஜ்ஞ பாத்திரங்கள் ப்ரஹ்மம்," "யஜ்ஞத்தைச் சேர்ந்துள்ள ஸ்வருக்குகள் ப்ரஹ்மம்",

"யஜ்ஞவிஸ்தாரங்களும் ப்ரம்ஹம்", "ரித்விக்குகளும் ப்ரஹ்மம்" என்பது போல் உபலக்ஷணமாகக் கர்மாக்களில் ஸம்பந்தப்பட்ட சிலவற்றிற்கு ப்ரஹ்மஸ்வரூபத்வத்தைச் சொல்லி யஜ்ஞஸம்பந்தமான எல்லாவற்றிற்குமே ப்ரஹ்ம ஸ்வரூபத்தைச் சொல்லுகிறது. கடைசியாக 'யஜ்ஞோ வை விஷ்ணு:' என்ற ச்ருதி ஸாங்கோபாங்கமான யஜ்ஞத்திற்கே பகவத் ஸ்வரூபத்வத்தைச் சொல்லிவிட்டது.

'தஸ்யைவம் விதுஷோ யஜ்ஞஸ்ய' என்றாரம்பித்துப் புருஷ வித்யை சொல்லப்படுகிறது. அந்த வித்தையின் த்ருஷ்டி விதியில், யஜ்ஞாங்கங்களான [illegible]—வேதி:—பர்ஹி:—வேத:, யூப:, என்பவைகளும் சொல்லப்படுகின்றன. இவை கர்மகாண்டத்தின் விதி நிஷேதாதிகளில் ஸம்பந்தித்துள்ளன. உபநிஷத் பாகத்திலுள்ள புருஷவித்யையை நன்கு அநுஷ்டிக்கக் கர்மகாண்டத்தின் உதவி இங்கு அவச்யமாகிறது.

அடுத்தாபடியாக ஸ்ருஷ்டிவாத ஸாமத்தை எடுத்துக்கொள்வோம். இந்தப் பாகம் விதிநிஷேத விஷயமான பதார்த்தங்களின் ஸ்துதி நிந்தைகளைச் செய்ய ஏற்பட்டாலும், இந்த ஸாமம் ரத்நாகரம் போன்றது. இங்கு எவ்வித ரஸத்தையும் ரஸிகர்கள் எதிர்பார்க்கலாம். இந்த ஸாமத்தை ஆழ்ந்து கவனித்தால், இதிலுள்ள விசேஷங்கள் யாருக்கும் புலப்படக் கூடும். சுருங்கச் சொன்னால், அந்தந்த விஷயங்களில் ரஸிகனுக இருப்பவன் இஷ்டப்பட்ட ரஸத்தை அநுபவிப்பதற்காகத் திறந்து வைக்கப்பட்ட ரஸ பொக்கிஷமென்றே இதைக் குறிப்பிடலாம். எவ்விதமானாலும் வேதாந்திகள் ரஸிக்கவேண்டிய பல விஷயங்கள் இங்குள்ளன.

ஓரிடத்தை முதலில் கவனிப்போம்.

ஸ்ருஷ்டிஹோம மந்த்ரங்கள் கர்மாக்களில் விநியோகிக்கப்படுபவை. இதை ஸ்துதி செய்யக் கதாரூபமான அர்த்தவாதம் உள்ளது. அங்கு 'ப்ரஜாபதி: ப்ரஜா அஸ்ருஜத' என்று ஆரம்பித்து 'தா நாமரூபேண ந ப்ராவிசத்। தா நாமரூபேண ப்ராவிசத்।' என்று சொல்லப்படுகிறது. இங்கு ப்ரஜாபதி ப்ரஜைகளை ஸ்ருஷ்டித்தார்; நாமரூபாதிகள் இல்லாததால் "இவன் தேவன்," "இவன் மநுஷ்யன்," "இது பசு" என்பனபோன்ற வ்யவஹாரத்திற்கு யோக்யமில்லாமல் ஸம்ஸ்லிஷ்டங்களாகவே ஸ்ருஷ்டிக்கப்பட்டவை இருந்தன. ப்ரஜாபதி நாமரூப விசேஷாகாரத்தால் அநுப்ரவேசம் செய்தார்' என்று சொல்லப்படுகிறது. 'தத்தேதம் தர்ஹ்யவ்யாக்ருதமாஸீத்। தந்நாமரூபாப்யாம் வ்யாக்ரியத।' என்ற ப்ருஹதாரண்யக ச்ருதி முதலியவைகளை மனத்தில் வைத்துக்கொண்டு இந்த இடத்தை அநுபவித்தால் இதிலுள்ள வேதாந்த ரஸம் ஸ்பஷ்டமாகும்.

தேவதா ஸ்வரூபாதிகளை வெளியிடும் மந்த்ரபாகத்தை எடுத்துக் கொள்வோம். இங்கு மந்த்ரங்கள், அந்தந்தக் கர்மாக்களில் ஆராத்யமாக விதிக்கப்பட்ட அக்நி இந்திராதி சப்தங்களால் சொல்லப்படும் தேவதையின் ஸ்வரூபாதிகளை வெளியிடுகின்றன. ஆனால் இங்கெல்லாம் சொல்லப்படும் அக்நி, இந்திராதிகள் யார் என்பது மந்த்ரங்களிலுள்ள லிங்கங்களைக் கொண்டே நிர்ணயிக்கவேண்டி வருகிறது. மந்த்ரங்களிலுள்ள லிங்கங்களைக் கவனித்தால் சில விடங்களில் அக்நி இந்திராதிகளின் [illegible] மூலமாகவே பரம புருஷனுக்கு ஆராத்யத்வம் வருகிறது. ஆயிரக் கணக்கில் உள்ள கர்ம காண்ட மந்த்ரங்களில் கணக்கற்ற விடங்களில் பரம புருஷா ஸாதாரணமான லிங்கங்கள் இருக்கின்றன. சிலவிடங்களில் இவ்வித மந்த்ரங்களில் அக்நி இந்திராதி சப்தங்களும், சிலவிடங்களில் ஸாக்ஷாத்தாகவே பகவத் வாசகமாக ப்ரஸித்தமான சப்தங்களும் இருக்கின்றன. எவ்வழியிலும் இவ்வித மந்த்ரங்களுக்குப் பரம புருஷ பரத்வம் சொல்லியே தீரவேண்டும். அவ்விதமுள்ள ஒரு இடத்தை நிரூபிப்போம்.

அக்நிஷ்டோம யாகத்தில் ஶுக்ராமந்திக்ரஹ ஹோமம் ஒன்றுண்டு. க்ரஹ ஹோம காலத்தில் சொல்லவேண்டிய மந்த்ரமொன்றுண்டு; "ஸ ப்ரதம: ஸம்ஸ்க்ருதிர் விச்வகர்மா। ஸ ப்ரதமோ மித்ரோ வருணோ அக்நி:। ஸ ப்ரதமோ ப்ருஹஸ்பதிச் சிகித்வாந்। தஸ்மா இந்த்ராய ஸுதமாஜுஹோமி।" என்பது அங்கு மந்த்ரம். இங்கு "முதல்வனான அவனே (ஜகத்ரக்ஷணாதிரூபமான) நல்ல க்ர்மாவை உடையவன். (ஸமஸ்த கார்யங்களையும் செய்யும்) விச்வகர்மா அவனே. முக்யனான அவனே மித்ரனும் வருணனும் இருக்கிறான். முக்யனான அவனே ஸர்வஜ்ஞ ப்ருஹஸ்பதி. அவ்வித இந்திரனை உத்தேசித்து அபிஷவம் செய்யப்பட்ட ஸோமரஸத்தை ஹோமம் செய்கிறேன்" என்று சொல்லப்படுகிறது. இந்த மந்த்ரத்தில் இருப்பது இந்திர சப்தமே. ஆனால் இங்குள்ள லிங்கங்கள் பரமபுருஷா ஸாதாரணமானவை. இதனால் இங்குள்ள இந்திர சப்தத்தால் பரமாத்மாவைக் குறிப்பிடவேண்டி வருகிறது. இந்த மந்த்ரத்திற்கு ப்ரதிபாத்யனும் அவனேயாகிறான். இம்மந்த்ரத்தினால் செய்யப்படும் கர்மாவிற்கு ஆராத்யனாகவும் அவனே ஆகிறான். கல்ப ஸூத்ர பாஷ்யகாராதிகளும் இங்குப் பரமபுருஷனே ஆராத்யனாகிறான் என்பதை ஸ்பஷ்டமாக்கியுள்ளார்கள். யாஜ்ஞிகர்களும் இங்குப் பரமாத்மாவிற்கே உத்தேச்யத்வத்தை அநுஷ்டித்து வருகிறார்கள்.

தமேவாக்நிமத்வர்யவ உபாஸதே [illegible] ।

தமேவ [illegible] ஸ ப்ரஜாபதி: ।

என்ற உபநிஷத்தை இங்கு த்யானம் செய்தால் இந்த மந்திரத்தின் பாவம்

நன்கு வெளியாகும். இவ்விதம் பலவிடங்கள் உள்ளன. வேதாந்திக்கும் இவை முக்யமானவைகளே.

முமுக்ஷுவிற்கு மோக்ஷத்தின் ஸாக்ஷாத் ஸாதனமாகக் கர்மாக்கள் தேவையற்றவை. காம்யகர்மாக்கள் அதன் பலன்கள் இவையும் தேவையற்றவைகளே. ஆனால் இதைக்கொண்டே அவைகளில் ஆராத்யனைச் சொல்லப்படும் பரமபுருஷனின் ஸ்வரூபாதிகள் அநாவச்யங்கள் என்று நினைக்க முடியாது. கர்மாக்களில் விநியோகிக்கப்பட்ட காரணத்தால் மந்த்ரத்தின் பாவம் மாறிவிடாது.

கர்மகாண்டத்தில் படிக்கப்பட்டுக் கர்மாக்களில் விநியோகிக்கப்பட்டதால் பரமபுருஷ ஸ்வரூபத்தை ப்ரதிபாதிக்கும் மந்த்ரங்களோ, அங்கு சொல்லப்படும் பகவத் ஸ்வரூபாதிகளோ, நமக்கு அநாவச்யமாகுமானால், வேதாந்த ஸித்தாந்தத்திற்குப் பலவித க்ஷோபங்கள் நேரிடும். ஸித்தாந்தத்திற்குப் பலவிதத்திலும் முக்யமான புருஷஸூக்தமே நமக்கு உபயோகப்படாது போய்விடும்.

எந்த வேதத்திலும் அநேகமாகப் புருஷஸூக்தம் கர்மகாண்டத்தில் படிக்கப்படுவதே. யஜுர் வேதத்திலுள்ளதை எடுத்துக்கொள்வோம். இங்குப் புருஷஸூக்தம் ப்ரஹ்மமேத ப்ரகரணத்தில் படிக்கப்படுகிறது. இதனாலேயே இதற்கு ப்ரம்ஹ மேதத்தில் விநியோகம் உபஸ்தாநம், புருஷமேத மிவைகளி லிதற்கு விநியோகமுண்டு. இதனால் வேதாந்திக்குப் புருஷஸூக்தம் தேவையற்றதாகிவிடுமா?

'ஸாக்ஷாச்சோபயாம்நாநாத்' என்று ஸூத்ரகாரர் ப்ரஹ்மத்திற்கே நிமித்தத்வமும் உபாதானத்வமும் நேரிலேயே ஓதப்படுகிறது என்று சொல்லுகிறார். இங்கு 'ப்3ரஹ்ம வநம் ப்3ரஹ்ம ஸ வ்ருக்ஷ ஆஸீத் யதோ த்3யாவாப்ருதி2வீ நிஷ்டதக்ஷு: ।' என்பது இங்கு விஷயவாக்யம். இந்த மந்த்ரத்திலேயே ப்ரஹ்மத்திற்கு உபாதானத்வமும் நிமித்தத்வமும் ஓதப்படுகின்றன. இம்மந்த்ரம் உபஹோமத்தில் விநியோகிக்கப்படுவது. காம்ய பசுயாஜ்யா காண்டத்தில் இம்மந்த்ரம் இருக்கிறது. கர்மாவில் விநியோகிக்கப்பட்டதால் ப்ரம்ஹமே உபாதானம் நிமித்தம் என்ற பாவத்திற்கு இங்கு ஹானி இல்லையென்பதைக் கவனிக்கவேண்டும்.

'அந்த:ப்ரவிஷ்ட: சாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா' என்ற மந்த்ரம் ஈச்வரனுக்கு ஸர்வாத்மத்வாதிகளை வெளியிடுகிறது. இம்மந்த்ரத்தை ஸித்தாந்திகள் எடுக்கின்றனர். இம்மந்த்ரம் ஹ்ருதய மந்த்ரத்தைச் சேர்ந்தது. இது உத்தரவேதிக்ருதயநயாமத்தின் இஷ்டகை உபாதானத்தில் விநியோகிக்கப்படுவது.

நாஸதாஸீத் ஸூக்தத்தை எல்லா ஸித்தாந்திகளும் எடுக்கின்றனர். இதுவும் கர்மகாண்டத்தில் காம்ய பசுயாஜ்யா ப்ரகரணத்தில் படிக்கப்படுவது. உபஹோமத்தி லிதற்கும் உபயோகம்.

கர்மாக்களில் உபயோகப்பட்டுவிடுவதால் கீழ்ச் சொல்லப்பட்ட இடங்களில் உள்ள வேதாந்த பாவம் மறைந்துவிடவில்லை. இவைபோன்ற விடங்களில் வேதாந்திக்குப் பல முக்யமான விஷயங்க ளிருக்கின்றன என்பதையும் மறக்கலாகாது.

ஆகவே மந்த்ர பாகத்திலும், கர்மாக்களில் அதற்கு விநியோக மிருந்தும், பல முக்யமான வேதாந்த விஷயங்க ளிருப்பதால் வேதாந்திக்கு அது அவச்யமானதென் றேற்பட்டது.

மேலும்: கர்மகாண்டத்தால் உபநிஷத்பாகத்திற்கு அவச்யமான உதவியும் பல வழிகளில் ஏற்படுகிறது.

உபநிஷத் பாகத்தில் உபாஸநமே முக்யமானதாக விதிக்கப்படுகிறது. இங்குக் கர்மகாண்டம் செய்யும் உபகாரம் மிகவும் முக்யமானது. எவ்விதமென்றால்: கர்மகாண்டத்தில் கர்மாக்களே விதிக்கப்பட்டு வந்தாலும் அடிக்கடி உபாஸநமும் விதிக்கப்படுகிறது. இவ்வுபாஸநத்தில் பூர்ணமான பரிசயம் கர்மாநுஷ்டாநத்தாலேயே ஏற்படும். கர்மாநுஷ்டாந காலத்தில் செய்யப்படவேண்டிய இவ்வித உபாஸனங்களால் உபாஸனம் செய்வதில் த்ருடமான பரிசயம் ஏற்பட்டால்தான் உபநிஷத் பாகங்களில் சொல்லப்படும் உபாஸநம் வைதிகனுக்கு ஸுலபமாக ஸாத்யமாகும். அவ்விதமுள்ள ஒரு உபாஸநத்தைக் கவனிப்போம்.

நாசிகேதாக்நிசயந ப்ரகரணத்தில் நாசிகேதாக்நி தேவதையின் உபாஸநம் "அயம் வாவ ய: பவதே" என்றாரம்பித்துச் சொல்லப்படுகிறது. அங்கு ப்ரத்யக்ஷமாக ஸஞ்சரிக்கும் வாயுவே நாசிகேதாக்நி தேவ ஸ்வரூபமானது. மேற்படி வாயு கிழக்கு முகமாக ஸஞ்சரிப்பது மேற்படி தேவதையின் சிரஸ்ஸ்தானமானது. தெற்கு வடக்குப் பக்கங்களில் ஸஞ்சரிப்பது நாசிகேதாக்நி தேவதையின் இடது வலது பக்ஷங்கள். மேற்குமுகமாக ஸஞ்சரிப்பது புச்சஸ்தானமானது. நான்கு பக்கங்களிலும் பரவி வாயு ஸஞ்சரிப்பதே அந்தத் தேவதையின் ஸங்கோசாதிகள். த்யானத்திற்காகவே இவ்விதம் கல்பிப்பது என்று சொல்லப்படுகிறது. இவ்விதம் கர்ம மத்தியில் அநுஷ்டிக்க ஏற்பட்ட உபாஸநங்களைக் கர்மகாண்டத்தில் பலவிடத்தில் காணலாம்.

மேலும், பல இடங்களில் ஸாமாந்யமாகச் சொல்லப்பட்ட சப்தங்களுக்குக் கர்மகாண்டத்தால் விசேஷ நிர்ணயம் ஏற்படுகிறது.

'ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரசாஸநே கார்கி த்யாவாப்ருதிவ்யௌ வித்ருதே திஷ்டத:'

என்ற ப்ருஹதாரண்ய ச்ருதியை எடுத்துக் கொள்வோம். இந்தச் ச்ருதி ஏதத்வாச்யனுக்கு ஸர்வப்ரசாஸந த்யாவாப்ருதிவ்யாதிதாரகத்வத்தைச் சொல்லுகிறது. கர்ம காண்டத்தில் 'யேநேமே வித்ருதே உபே । விஷ்ணுநா வித்ருதே பூமீ ।' என்ற ஒரு மந்த்ர முள்ளது. இதற்கு ஸ்வயமாத்ருண்ணேஷ்டகோபதாநத்தில் விநியோகம். இம்மந்த்ரத்தில் யாரால் இந்த த்யாவாப்ருதிவிகள் தரிக்கப்படுகின்றன என்ற கேள்வியும், விஷ்ணுவால் த்யாவாப்ருதிவிகள் தரிக்கப்படுகின்றன என்ற வத்ஸரிஷியின் பதிலும் காணப்படுகின்றன. உபநிஷத் ச்ருதியில் ஸாமாந்யமாகச் சொல்லப்பட்ட வஸ்து விஷ்ணுவே என்ற விசேஷ நிர்ணயம் கர்மகாண்டத்தாலேயே ஏற்படுகிறது.

அவ்விதமே, 'ய: பூர்வ்யாய வேதஸே நவீயஸே ஸுமஜ்ஜாநயே விஷ்ணவே ததாசதி...' என்ற மந்த்ரம் ஜகத்திற்குப் பூர்வ்யனுகவும், ஜகத் ஸ்ரஷ்டாவாயும், (ராமக்ருஷ்ணாத்யவதாரங்களால் நவீனனுகவும், நல்ல ஸந்தோஷ முள்ள (லக்ஷ்மீ யாகிற) பத்நியை உடையவனுகவும் இருப்பவன் விஷ்ணுவே என்று தெரிவிக்கிறது. இங்கு வேதாந்த பாகத்தில் ஸத் ப்ரஹ்மாதி சப்தங்களால் சொல்லப்படுவன ஸ்ரிய:பதியான நாராயணனே என்ற நிர்ணயம் ஏற்படுவது கவனிக்கத்தக்கது.

அவ்விதமே காரணத்வாவஸ்தையில் லக்ஷ்மீ வைசிஷ்ட்யம் சொல்ல 'ஹ்ரியாதல்பகம்' என்ற ச்ருதி முக்யமானது. இதுவும் கர்மகாண்டத்தில் படிக்கப்பட்டு உபஹோமத்தில் விநியோகிக்கப்பட்டது.

அவ்விதமே, 'அந்த: ப்ரவிஷ்டம் கர்த்தாரமேதம் । அந்தச்சந்த்ரமஸி மநஸா சரந்தம்' என்ற மந்த்ரம் கர்மகாண்டத்தில் படிக்கப்படுகிறது. இங்கு ஸ்ரஷ்ட்ரு தேவதைக்கு அந்த: ப்ரவேசமும் கர்த்ருத்வமும் சொல்லப்படுகின்றன. சந்திரனுக்குள்ளும் மநஸ்ஸங்கல்பத்தால் ஸஞ்சரிப்பவனு மவனே. என்றும் சொல்லப்படுகிறது. இங்கு சந்திரன் மட்டும் சொல்லப்பட்டிருந்தாலும், சந்திர பதத்தை உபலக்ஷணமாகக் கொண்டு ஸர்வாந்தர்யாமித்வம் சொல்ல இட முண்டு. அந்தர்யாமிப்ராஹ்மணம் இதன் வ்யாக்யாநம் போலமைந்து ப்ரஹ்மத்துக்கு ஸர்வாந்தர்யாமித்வத்தை விஸ்தாரமாக வெளியிடுகிறது.

மேலும், ஸ்வாத்யாயாதிகத்தில் 'சாஸ்த்ரத்ருஷ்ட்யாது உபதேசோ வாமதேவவத்' என்று வாமதேவருடைய அநுபவத்தை உதாஹரிக்கிறார்.

உபநிஷத்தும் 'தத்தைதத் பச்யந் ருஷிர்வாமதேவ: ப்ரதிபேதே' என்று சொல்லி வாமதேவருடைய அநுபவத்தைச் சொல்லும் ரிக்கை எடுக்கிறது. இந்த வாமதேவர் ரிக்வேத மண்டல த்ரஷ்டா. 'அஹம் மநுரபவம்' என்றாரம்பித்து ஸ்வாத்மசரீரக பரமாத்மாவிற்கும், மநு கக்ஷீவதாத்யந்தர்யாமியான பரமாத்மாவிற்கும், ஸாமாநாதிகரண்யத்தை அங்கு வாமதேவர் வெளியிடுகிறார். இவ்வித அநுபவத்தை வாமதேவர் இரண்டு மூன்று ரிக்குகளால் வெளியிடுகிறார். இவை முழுவதும் கர்மகாண்டத்திலேயே படிக்கப்படுபவை.

இவ்விதம் பல வழிகளிலும் உபநிஷத் பாகத்திற்கும் கர்மகாண்டத்திற்கும் பிரிக்க முடியாத ஸம்பந்த மிருப்பதால், வைதிக வேதாந்திக்குக் கர்மகாண்ட ஜ்ஞானம் அவச்யமானதாகவே ஆகிறது. கர்ம ப்ரஹ்ம காண்டங்களை ஒன்று சேர்த்தே அநுபவிக்கவேண்டு மென்ற எண்ணத்தாலேயே ச்ருதி கர்மகாண்டத்தில் ப்ரஹ்ம காண்ட விஷயங்களையும், ப்ரஹ்மகாண்டத்தில் கர்மகாண்ட விஷயங்களையும் கலந்து சொல்லுகிறது. இதற்கு விரோதமாகக் கர்மகாண்டத்தில் வேதாந்திக்கு ஒன்று மில்லை என்று சொல்வதும் நினைப்பதும் வேதத்தின் அபிப்ராயத்திற்கு மாறுனதாகவே யாகும்.

ஸ்ரீ ராமாவதார வைபவம்

[ஸ்ரீ. உப. சேட்லூர் துரைசாமி அய்யங்கார், சித்தூர்]

லோககண்டகனுயும், பிரம்மாவினுல் தேவ தானவ கந்தர்வாதிகளால் அவத்யனுக வரம்பெற்று, மனுஷ்யனுல் மாத்திரம் அம்மாதிரி வரம் பெருமல், தேவாதிகளையும் ரிஷிகளையும் மிகவும் ஹிம்ஸை செய்துகொண்டிருந்த ராவணனை ஸம்ஹரிக்கும் பொருட்டு ப்ரம்ஹாதி தேவர்களால் ப்ரார்த்திக்கப்பட்ட பகவான் ஏக மூர்த்தியாய் அவதாரம் செய்யாமல், ஸ்ரீராம லக்ஷ்மண பரத சத்ருக்னர்கள் என்னும் நான்கு மூர்த்திகளாய் அவதாரம் செய்தார். இப்படி நான்கு மூர்த்திகளாக அவதாரம் செய்யக் காரண மென்ன வென்றால்:—

இதற்கு முன்னமே நடந்திருக்கும் ஒரு விருத்தாந்தத்தை ஸ்ரீவராஹ புராணத்தினுலறியலாம். அறுபதினுயிரம் வருஷம் ராஜ்ய பரிபாலனம் செய்த ஸ்ரீ தசரதசக்ரவர்த்தி, தமக்குப் புத்திரனுண்டாகவில்லை யென்கிற தினுலுண்டான சோகத்தை ஸ்ரீ வஸிஷ்ட மகரிஷியினிடம் விண்ணப்பம் செய்ய, மஹரிஷி நியமனப்படி அஞ்ஜனாத்ரியென்று விளங்கும் திருவேங்கட

மாம்லேயில் தசரத சக்ரவர்த்தி தவம் செய்தார். அப்போது ப்ரம்ஹாதி தேவர்கள் பரமபத நாதனை ராவண ஸம்ஹாரம் செய்ய மனுஷ்யனாயவ தாரம் செய்யவேண்டுமென்று பிரார்த்திக்க, அவர்களை அஞ்ஜனாத்ரிக்குப் போய்த் தான் தசரத சக்ரவர்த்திக்குக் கொடுக்கப்போகும் வரத்தை நிரீக்ஷிக்கும்படி பகவான் நியமித்தார்.

பிறகு தசரத சக்ரவர்த்தியின் தபஸ்ஸின் பரிபூர்த்தியில் பரமபத நாதன் ஸ்ரீ வேங்கட நாதனாக ப்ரத்யக்ஷ கோசரனாகியபோது, சக்ரவர்த்தி யும் நான்கு ச்லோகங்களினால் புத்ராபேக்ஷையாகிய தன் மனோரதத்தை விண்ணப்பித்துக்கொள்ள,

“ யஸ்மாத்த்வயா சதுச்ச்லோகீ ஸ்தோத்ரா தத் உபவர்திதே ।
தஸ்மாத் தவ சதுர்பாகா: பஞ்சாஸ்யஸமவிக்ரமா: ॥
சஸ்த்ராஸ்த்ர பலவந்தஸ்ச புத்ரா: பலவிக்ரமா: ।
புத்ரார்த்தம் ஸ்வாமயோத்யாம் கத்வா யஷ்டவ்யச்சாச்வமேதக:” ॥

என்று பகவானுமுகந்து, “ஏ தசரத சக்ரவர்த்தியே! எந்தக் காரணத்தினால் பக்தியோடு நீர் என்னை நான்கு ச்லோகங்களினால் ஸ்தோத்ரம் பண்ணிப் புத்ரனை அபேக்ஷிக்கிறீரோ, அதனால் உமக்கு என்னோடொத்த பல பராக் கிரம முள்ளவர்களான நான்கு புத்ரர்கள் உண்டாகக் கடவர். நீர் அயோத்திக்குச் சென்று புத்ரகாமேஷ்டியாகம் செய்யும்” என்று அனுக் ரஹித்தார். பிறகு ப்ரம்ஹாதி தேவர்களைப் பார்த்துப் பரமபத நாதனான திருவேங்கடமுடையான்,

“ அஹம் வா ஸஹ ப்ராத்ருபிர் வா ராவணம் லோககண்டகம் ।
அசிராத்தம் வதிஷ்யாமி ஸத்யம் ஸத்யம் வதாம்யஹம்” ॥

என்று லோக கண்டகனான ராவணனை நான் வதிப்பது நிச்சயமென்று தேவர்களுக்கும் அனுக்ரஹித்தார்.

பிறகு வரம்பெற்ற சக்ரவர்த்தியும் அயோத்திமா நகரம் சேர்ந்து புத்ர காமேஷ்டி யாகத்தை உபக்ரமிக்க, அங்கு சேர்ந்த பிரம்மாதி தேவர்களும் மறுபடியும் எம்பெருமானை ப்ரார்த்தித்தார்கள். ஏற்கெனவே ஸ்ரீநிவாஸ னுடைய அனுக்ரஹத்தினால் நான்கு புத்ரர்கள் சக்ரவர்த்திக்கு அவதாரம் செய்தமையால் ததனுகுணமாகவே ப்ரம்ஹாவும்:

“ தஸ்ய பார்யாஸு திஸ்ருஷு ஹ்ரீ ஸ்ரீ கீர்த்யுபமாஸு ச ।
விஷ்ணோ புத்ரத்வமாகச்ச க்ருத்வாத்மானம் சதுர்விதம்” ॥

என்று ஸ்ரீ கீர்த்தி ஹ்ரீக்களுக்கு ஸமானர்களான கௌஸல்யா கைகேயி சுமித்ரைகளிடம் நான்கு ரூபமாகத் தேவரீர் அவதரிக்கவேண்டுமென்று ப்ரார்த்தித்தார். பட்டமஹிஷியாயும் ராஜ்யலக்ஷ்மிக்கு உரியவளுமான கௌஸல்யை இங்கு ஸ்ரீக்கு ஸமானமாகச் சொல்லப்படுகிறாள். மத்யமாம் பாவாகிய கைகேயி கீர்த்தி யென்று ஸ்ரீராமன் வாக்யங்களால் ஸ்பஷ்ட மாகிறது. ஸ்ரீராமபிரான் பரதனைப்பார்த்துப் பலதடவைகளில் “தவ மாதா யசஸ்விநீ” என்கிறார். மேலும் “ அஸ்வாதூஷ்ய ஸுமித்ராம் ச கைகேயீம் ச யசஸ்விநீம்” என்று வால்மீகியும் அருளிச் செய்திருக்கிறார். ஹ்ரீ என்பவள் ஸுமித்ரை. இம்மாதிரியாக ப்ரம்ஹா பிரார்த்திக்க எம்பெருமானும்,

“ தத: பத்மபலாசாக்ஷ: க்ருத்வாத்மானம் சதுர்விதம் ।
பிதரம் ரோசயாமாஸ ததா தசரதம் ந்ருபம்” ॥

என்கிறபடியே புத்ரகாமேஷ்டி யாகத்தில் பாயஸ ரூபேண நான்கு ரூபமாய் அவதரித்தார்.

ஸ்ரீராமாவதாரம் அஸாதாரணமான ஓர் அவதாரம். மனுஷ்ய சரீரத் தில் ப்ரவிஷ்டனான ஸ்ரீராமபிரான் மனுஷ்யனாகவே ஸம்பூர்ணமாக நடனம் செய்து, தன்னுடைய விஷ்ணுத்வத்தை அப்போதைக்கப்போது இதரர் களைக் கொண்டு வெளியிடச் செய்தார்.

“ ஆத்மானம் மானுஷம் மன்யே ராமம் தசரதாத்மஜம் ।
யோஹம் யஸ்ய யதச்சாஹம் பகவாம்ஸ்தத் ப்ரவீது மே” ॥

என்று எம்பெருமான் சொல்வதினாலும்,

“ பவான் நாராயணோ தேவ: ஸ்ரீமாஞ் சக்ராயுதோ விபு:” ॥

என்று பிரம்ஹா வெளியிடுவதினாலும்,

“ வதார்த்தம் ராவணஸ்யேஹ ப்ரவிஷ்டோ மானுஷீம் தனும் ।
கிம் நவேத்ஸி ஸ்வாத்மானம் யதா நாராயணோ ஹ்யயம் ।
சாச்வதஸ்ய மஹாபாக ஸர்வஸ்யாத்மா ஸனாதன:” ॥

இத்யாதிகளின்படியே ரிஷ்யாதிகளின் ஸ்ரீ ஸூக்திகளைக்கொண்டு ஸ்ரீராமா வதார ரஹஸ்யத்தை யறியவேணும். இப்படியே யுத்தத்தில் ஸ்ரீராமபிரான் கொஞ்சம் சிரமத்தை யடைந்த தருணத்தில், அகஸ்திய பிரம்மரிஷி ஆதித்ய ஹ்ருதயமாகிய மஹா மந்த்ரத்தை உபதேசம் செய்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விடத்தில் அதனைக் கொஞ்சம் விமர்சிப்

போம். ஸ்ரீராமசந்த்ரனுடைய விஷ்ணுத்வத்தைத் மனுஷ்ய ரூபியான ஸ்ரீராமபிரானுக்கு ஸ்மரிப்பிக்கிறார்போலும்.

ஆதித்திய ஹ்ருதயமென்பதற்கு ஸூர்யனுடைய ஹ்ருதய ஸ்தானம் என்பது பொருள். அதாவது மஹாவிஷ்ணு.

"த்யேயஸ்ஸதா ஸவித்ருமண்டல மத்யவர்த்தீ நாராயணஸ்ஸரஸிஜாஸந ஸந்நிவிஷ்ட: ।"

இத்யாதித்யான ச்லோகங்களைப் பார்க்கவும். இப்படியே விஷ்ணுவின் சதுர்த்தாம்சமான லக்ஷ்மணனும் தானே தெய்வத்தைத் திரஸ்கரிக்கிறவன்போல் நடிக்கிறார்.

"விக்லவோ வீர்யஹீநோ ய: ஸ தைவமநுவர்த்ததே ।
வீராஸ்ஸம்பாவிதாத்மாநோ ந தைவம் பர்யுபாஸதே ।
தைவம் புருஷகாரேண."

இப்படியெல்லாம் சொல்லும் லக்ஷ்மணன் ராவண யுத்த ஸமயத்தில்,

"சக்த்யா ப்ராஹ்ம்யா து ஸௌமித்ரிஸ் தாடிதஸ்து ஸ்தநாந்தரே ।
விஷ்ணோரசிந்த்யம் ஸ்வம் பாகம் மாநுஷம் தேஹமாத்மந: ॥
ததோ தாநவதர்ப்பக்நம் ஸௌமித்ரிம் தேவகண்டக: ।
தம் பீடயித்வா பாஹுப்யாம் ந ப்ரபுர்லங்கநேऽபவத் ॥"

என்று பேசுகிறார். பெருமாள் தன்னுடைய விஷ்ணு அம்சத்வத்தை ஸ்மரிக்கவே ராவணனுக்கு அசைக்கக் கூட அஸாத்யமானார். இம்மாதிரி விஷ்ணுத்வம் பிரகாசித்தது. இப்படி மோஹிக்கும்படி பண்ணத்தக்க ராமாவதார தத்வத்தைப் பலர் பலவிதமாக அபிப்பிராயம் கொள்ளுகிறார்கள்.

"பரதோ லக்ஷ்மணஸ் சத்ருக்நஸ்ச மஹாயசா: ।
உபாஸாம் ச க்ரியே ஹ்ருஷ்டா வேதாஸ்ய ஸ்வாத்யாய: ॥"

இப்படிப் பரத லக்ஷ்மண சத்ருக்னர்கள் மூன்று வேதாந்தங்களாகச் சொல்லப்பட்டார்கள். இதுவும் ஸ்ரீ வால்மீகி பகவானுடைய வாக்யமே. இப்படிப்பட்ட வைபவமுள்ள ஸ்ரீ ராமன் ஸ்ரீநிவாஸனே யாவான்.

இங்குத் தசரதன் தவம் செய்த ஸ்ரீ வேங்கடாசலத்தின் ப்ரபாவத்தை கிஞ்சித் விண்ணப்பம் செய்கிறேன். நம்முடைய ஸித்தாந்தத்துக்கு அஸாதாரண ப்ரதிதந்த்ரமான ஸ்ரீ வைகுண்டமென்பது திருவேங்கட

மாமலையே யென்று அடியேனுடைய அபிஸந்தி. வேத ப்ரதிபாதிதனை பரமபதநாதனே இத் திருவேங்கடமுடையான் என்று ஆழ்வாராசாரியர்களின் ஸ்ரீ ஸூக்திகளால் ஓதப்படுகிறது.

"சோதி யாகியெல் லாவுல குந்தொழும்
ஆதி மூர்த்தியென் றாலள வாகுமோ
வேதி யர்முழு வேதத்த முதத்தை
தீதில் சீர்த்திரு வேங்கடத் தானையே!"

என்று நம்மாழ்வார் அருளிச் செய்தார்.

"ஸப்தகிரிசிரஸி விபாதே ப்ருஹணீ ஸ்ரீநிவாஸே" என்று உடையவரும் அருளிச் செய்தார். இங்கு 'ஸப்தகிரிசிரஸிவிபாதே' என்பதற்கு வ்யாக்யானமாக நம்முடைய ஆசாரியன் ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் 'வேங்கட வெற்பென விளங்கும் வேதவெற்பே' என்று அருளிச்செய்தார். மேலும், 'திண்ணமிது வீடென்னத் திகழும் வெற்பு' என்றும், 'பொன்னுலகில் போகமெல்லாம் புணர்க்கும் வெற்பு' என்றும், 'விண்ணவரும் மண்ணவரும் விரும்பும் வெற்பு' என்றும் இத்யாதிகளின்படியே திருவேங்கட மாமலையானது ஸாக்ஷாத் ஸ்ரீ வைகுண்டமென்றே பரக்கப் பேசப்பட்டிருக்கிறது. இவைகளில் ரூட பதங்களான 'வீடு,' 'பொன்னுலகு' இத்யாதிகளாலும், இது தான் ஸ்ரீ வைகுண்டமென்பது ஸுஸ்பஷ்டம். மேலும் நம்மாழ்வார் அருளிச்செய்த, "ஒழிவில் கால மெல்லாம்" என்கிற பாசுரத்தை ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் நிகமநாதிகாரத்தில் இப்படியே அருளிச்செய்கிறார்.

'பாரத ராமாயணங்களில் சொல்லப்பட்ட அவதார ரகஸ்யத்தாலே வ்யஞ்ஜிமான பரமபத பர்யங்கத்தில் எழுந்தருளி யிருக்கிற ஸபத்னீகனான ஸர்வேச்வரன் தாளிணைக் கீழ் ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலாவடிமை செய்யவேண்டும் நாம் என்கிற மனோரதத்தின்படியே ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தோசித ஸர்வவித கைங்கரியங்களையும் பெற்று வாழ்வார்கள். இப்படியான ஸ்ரிய:பதியான நாராயணன் திருவடிகளே உபாய தசையிலும் பல தசையிலும் உபஜீவ்யங்கள்' என்கிறார். ஆகையால் உபாய தசையிலும் (அதாவது முமுக்ஷு தசையிலும்) பல தசையாகிற முக்த தசையிலும் கைங்கரியம் செய்யவேண்டும் ஸ்தானம் ஒன்றே என்று ஏற்படுகிறது. இதிலுண்டாய் விமர்சம் 'எப்படி' என்றால்; வேங்கட மாமலை என்பது ஆதிசேஷனுடைய யோகிருதார்த்தம். இங்கு ஆதிசேஷனுக்கும் திருமலைக்கும் சரீர சரீரி பாவம் அநுஸந்தேயம். இப்படியே பரமபதநாதனுக்கும் அர்ச்சாவதாரமான திருவேங்கடமுடையானுக்கும் ஸம்பந்தம் கண்டு கொள்வது.

பரமபத நாதன் ஸவ்யம் பாதமாக எழுந்தருளியிருக்கும் நிலையிலே அர்ச்சாவதார ஸங்கல்ப விசேஷத்தாலே நின்ற திருக்கோலமானார். மற்றொன்றும் பேதமில்லை. ஸ்ரீநிவாஸன் திருமேனியில் சங்க சக்ர கதா கட்கங்கள் இல்லாமலிருப்பது ஒரு விசேஷம். அவைகளெல்லாம் ரௌத்ராபரணங்கள். ஆஞ்ஜாதிகங்கள். ஸ்ரீவத்ஸம் வைஜயந்தீ முதலான ஸௌம்யாபரணங்கள் எப்பொழுதும் காணப்படுகின்றன. இப்படி அர்ச்சாவதாரமாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ பரமபதநாதன் திருவேங்கடமுடையானாகத் தன்னிரு கைகளாலும் சரம ச்லோகார்த்தத்தை ப்ரகாசிப்பிக்கிறார். ஆகையால் வஸிஷ்ட மகரிஷியின் நியமனத்தாலே தசரத சக்ரவர்த்தி ஸ்ரீ வேங்கடாசல கமனம் செய்து புத்ரார்த்தமாக வரம்பெற்றதும் ப்ரம்ஹாதி தேவர்களும் இந்தப் பரமபத வாசலிலே நிரீக்ஷித்து அபயம் பெற்றதும் பிரகாசித மாயிற்று.

இங்கு ஸ்ரீ ராமாவதார விசேஷத்தை அநுபவிக்க வேண்டும். மற்ற அவதாரங்கள் மாதிரியன்றியே இந்த ராம லக்ஷ்மண பரத சத்ருக்னர்கள் நால்வரும் சேர்ந்து ஓர் அவதாரம். இதுவும் ஒரு விசிஷ்டாத்வைதம். இந்த நால்வரும் சதுர்விதமாக அவதரித்ததாக முன்னமே சொன்னோம். இந்த நால்வருக்கும் பல பராக்கிரமங்கள் சமமாயிருந்தன. ஏற்றக் குறைவுகள் கிடையா. இதுவும் அஞ்ஜனாத்ரியில் தவம்செய்த தசரதனுக்கு ஸ்ரீநிவாஸன் செய்த அனுக்கிரஹ விசேஷம். பல பராக்ரமங்களில் ஸ்ரீ மஹா விஷ்ணுவுக்குச் சமானர்கள் என்று. 'விஷ்ணுநா ஸத்ருஶோ வீர்யே' என்கிற நாரத வாக்யத்தால் ஸித்தம். ஸ்ரீ ராமனுடைய பல பராக்ரமங்களை விமர்சிக்க வேண்டிய ஆவசியகமில்லை. அது ஸர்வபிரஸித்தம். மற்றவர்களுடைய பல பராக்கிரமங்களும் தத்ஸமங்களா யிருந்தன வென்று நிரூபிக்கலாம். அதாவது: லக்ஷ்மணன் இந்திரஜித்தை ஸம்ஹாரம் செய்தது ஒன்றே போதுமானது. ஸ்ரீமத் ராமாயணம் உத்தர காண்டத்தில் அகஸ்த்யாதி மஹரிஷிகள் ஸ்ரீ ராமனே ராவண வதம் செய்ததைப் பற்றி ஸ்தோத்திரம் செய்யும்போது, இந்திரஜித்தின் ஸம்ஹாரத்தைப் பற்றி அதிகமாகப் புகழ்ந்தார்கள். அப்பொழுது ஸ்ரீராமனே கேட்கிறார்.

"பவத்பி: கும்பகர்ணம் ராவணம் ச நிஶாசரம் |
அதிக்ரம்ய மஹாவீர்யௌ கிம் ப்ரஶம்ஸத ராவணிம் ||
மஹோதரம் ப்ரஹஸ்தம் ச விரூபாக்ஷம் ச ராக்ஷஸம் |
அதிக்ரம்ய மஹாவீர்யான் கிம் ப்ரஶம்ஸத ராவணிம் ||
மத்தோந்மத்தௌ ச துர்தர்ஷௌ தேவாந்தக நராந்தகௌ |
அதிக்ரம்ய மஹாவீர்யான் கிம் ப்ரஶம்ஸத ராவணிம் ||

கீத்ருஶோ வை ப்ரபாவோ(அ)ஸ்ய கிம் பலம் க: பராக்ரம: |
கேந வா காரணேநைஷ ராவணாத் அதிரிச்யதே ||"

"அதிக பராக்ரமத்தை யுடைய ராவணன், கும்பகர்ணன், மஹோதரன், பிரஹஸ்தன், விரூபாக்ஷன் முதலான ராக்ஷஸ வீரர்களின் ஸம்ஹாரமிருக்க, இந்த்ரஜித்து ஸம்ஹாரத்தை மாத்திரம் இம்மாதிரி அதிகமாகப் புகழவேண்டிய காரணமென்ன? அந்த இந்திரஜித்தினுடைய பலம் பிரபாவம் இவைகளைத் தெரிவிக்கவேண்டு மென்று ஸ்ரீ ராமன் கேட்க, அகஸ்தியர் அவைகளை எல்லாம் விவரித்துச் சொன்னார். இந்த மாதிரியாக இந்திரஜித்தை ஸம்ஹாரம் செய்வதில் ஸம்பூர்ணமான பல பராக்கிரமத்தை லக்ஷ்மணன் காட்டி, '[illegible]' என்கிற ஸ்ரீநிவாஸன் ப்ரஸாதத்தை ஸார்த்த மாக்கினார். பிறகு பரத சத்ருக்நர்களுடைய பல பராக்ரமங்களைப் பார்ப்போம். ராமலக்ஷ்மணர்கள் இருவரும் தண்டகாரண்யத்துக்கு எழுந்தருளியும், பிறகு ஸேதுவையும் தாண்டி லங்கைக்கு எழுந்தருளியும், ஆக பதினான்கு வருஷகாலம் அயோத்யா ராஜ்ய பரிபாலனம் செய்து சக்ரவர்த்தித்வத்தை நிலைநிறுத்திக்கொண்டு, உத்தர தேசத்திலிருந்த ஸாமந்த ராஜாக்களெல்லோரையும் தான் ஆதீனத்தில் வைத்துக்கொண்டு, தன்னுடைய நியமனப்படி செய்வித்துக்கொண்டிருந்த தெல்லாம் பரதனுடைய பல பராக்கிரம மஹிமையே. ராவணன் ஸீதாபஹரணம் செய்த சமாசாரத்தை ப்ரதனறிந்து, தனக்கு உட்பட்ட ராஜாக்களை அவர்களுடைய ஸைன்யங்களுடன் ஸ்ரீ ராமனுடைய ஸஹாயத்துக்குப் போகவேண்டிய பிரமேயம் ஏற்பட்டால் போவதற்கு ஸம்ஸித்தமாய் வைத்துக்கொண்டிருந்தான். ஸீதாதேவி ஹநுமானைக் கேட்கிறாள்:

"அக்ஷௌஹிணீபி: ஸேநாபி: ஸமேதோ ப்ராத்ருவத்ஸல: |
[illegible] ப்ரேஷயிஷ்யதி [illegible] ||"

"பிராத்ரு வத்ஸலனான பரதன் அக்ஷௌஹிணிகளான சைன்யத்துடன் வந்து ஸஹாயம் செய்வான்?" இது விஷயமாக ஸ்ரீராமன் பட்டாபிஷேகானந்தரம் அந்த ராஜாக்களிடம் சொல்லுகிறார்.

"யே மதா: [illegible] தேஜஸ்வி [illegible]
ராவணஸ்ய [illegible]
[illegible] ஸாகேதா [illegible] |
[illegible] ||

காட்டில் ஸீதாபஹரணத்தைப் பரதன் கேட்டு, 'உங்களையெல்லாம் ஸைன்யங்களுடன் ஸம்ஸித்தர்களாய் வந்திருக்க வேண்டுமென்று ஆஜ்ஞாபித்தபடி, நீங்களனைவரும் இங்கு ஸம்ஸித்தாளாயிருந்த தேஜோபலத்தாலாயே நான் ராவணாதிகளை ஸம்ஹாரம் செய்தேன்' என்றார். இப்படிக்கு ராமலக்ஷ்மணர்கள் தூரதேசம் எழுந்தருளின ஸமயத்தில் பரத ராஜ்யம் யாதொரு குறைவுமில்லாமல் நடைபெற்று வந்ததே பரதனுடைய பலபராக்கிரம விசேஷத்தைக் காட்டுகிறது.

சத்ருக்னன் லவணாஸுரனை ஸம்ஹாரம் செய்து தம்முடைய பலபராக்கிரமத்தைக் காட்டினார். இந்த ராமாவதாரத்தில் ஸ்ரீராமன் ஸ்ரீமஹாவிஷ்ணு அம்சத்தில் அர்த்தாம்சமென்றும், லக்ஷ்மணன் ஆதிசேஷாம்சமென்றும், மற்ற மிகுதி சங்கசக்ராம்சத்தில் கிஞ்சித் பேதத்துடன் பரத சத்ருக்னர்கள் அவதரித்ததாகவும் சொல்லப்பட்டது. ஆகையினால் நம்முடைய ஸம்பிரதாயத்தில் லக்ஷ்மணனை இளையபெருமாள் என்கிறார்கள். தவிர: லக்ஷ்மணனுக்கு ஆதிசேஷனென்றும், பரத சத்ருக்னர்களுக்கு ஆழ்வான் என்றும் ப்ரஸித்தி. லக்ஷ்மணன் ஸ்ரீராமன் விஷயத்தில் நேராகக் கைங்கரியம் செய்பவன்.

"ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா வடிமை செய்ய வேண்டும் நாம்" என்கிறபடியே ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தையிலும் ஸர்வவித கைங்கரியங்களையும் செய்து, தனக்கு அக்ரஜனை பரதனிடத்தில் இம்மாதிரியே விசுவாசம் வைக்காததினாலும், இந்த லக்ஷ்மணனுக்குப் பாகவத சேஷத்வத்தைச் சொல்லாமல் ஆதிசேஷத்வமானது சொல்லப்பட்டது. லக்ஷ்மணன் விபவத்திலே செய்த கைங்கரியம் போதாமல் அர்ச்சையிலும் கூட பிராட்டி ஒரு பக்கத்திலிருக்க, தான் ஒரு பக்கம் தனுர்த்தரனாக நின்று ஸ்ரீராமனுக்கு அர்ச்சையில் கூட ஒரு தீங்கும் வராமல் காவல் காக்கும் நிலைமையை நாமெல்லோரும் அனுபவிக்கிறோம். பரதன் ஸாமவேத லக்ஷணத்தையும், சத்ருக்னன் 'ஸுத்யஸ்யஸுத்ய:' என்கிறபடியே பாகவத சேஷத்வத்தையும் அனுஷ்டானம் செய்து காட்டினார்கள். ப்ராதாக்கள் செய்துவந்த அனுஷ்டானம் இப்படியிருக்க, ஸ்ரீராமானுஷ்டானத்தைப் பார்க்கவும்: ஸ்ரீராமன் ஆதிமுதல் அந்தம் வரையிலும் தம்முடைய மானுஷ ஸ்வரூபத்தையே வெளியிட்டாரே தவிர, பகவத் ஸ்வரூபத்தை வெளியிடவில்லை. ஆகையால் தான் ஸம்க்ஷேப ராமாயணத்தில் நாரத வால்மீகி இரண்டு மஹரிஷிகளும் 'நர:' என்றே சொல்லுகிறார்கள்.

"கோந்வஸ்மிந் ஸாம்ப்ரதம் லோகே" என்று தொடங்கி, "ஏவம் வித: நர:" என்று வால்மீகி சொல்லிமுடித்தார். நாரதரும், "ஸம்ஸோ-

ஜாஸுதோஹாஸ்யைவ யேகாபர கீர்த்தித்தா குணா: । ஸுநேத்ரவக்ஷ்யாஸ்ஹம் ஸூர்யா தையக்ஷ்த: ஸ்ருப்ரியதாம் நர:" என்று அருளிச் செய்கிறார். கேவலம் ஒரு ராவண ஸம்ஹாரம் செய்வதற்காக அவதரித்திருந்தால், நரஸிம்மன் மாதிரி க்ஷணிக அவதாரமா யிருந்திருக்கலாம். அப்படியன்றியே, ஸந்நிஹிதமாயிருந்த கலியுகத்தையும் அபேக்ஷித்து, ஸ்ரீகிருஷ்ண பகவான் அருளிச்செய்த கீதா சாஸ்திரத்திற்கும், பூர்வபாவியாக லோக ஸங்க்ர்ஹார்த்தம் ஸ்வாநுஷ்டாநத்தில் கர்ம ஜ்ஞாந பக்தி பிரபக்தி யோகங்களையும், அவ்யோகங்களின் பிரபாவத்தையும் காட்டும்பொருட்டுப் புருஷர்களுள் உத்தம புருஷனாய் அவதரித்தவன் ஸ்ரீராமபிரான்.

"ஸ்வயமாசரதே ஜ்ஞாநவைராக்ய ஸாயுஜ்யக்ருதோ ராகவ:"

என்று தாமே ஸ்வதர்மாஷ்டானத்தையும் ஜீவாத்ம பரமாத்ம ஸம்பந்தத்தையும் வைராக்யத்தையும் பக்தியையும் காட்டினார். இந்த ஸ்ரீராமனுடைய சரித்திரத்தை உத்தேசித்தே பகவான் ஸ்ரீகிருஷ்ணன் ஞானயோகத்தில்,

"இமம் விவஸ்வதே யோகம் ப்ரோக்தவாநஹமவ்யயம் ।
விவஸ்வாந் மநவே ப்ராஹ மநுரிக்ஷ்வாகவேऽப்ரவீத் ॥
ஏவம் பரம்பராப்ராப்தமிமம் ராஜர்ஷயோ விது: ॥"

என்று இக்ஷ்வாகு வம்சத்தைக் குறிப்பிட்டார். ஸ்ரீமத்ராமாயணத்தில் ஸ்ரீராமன் நித்யகர்மானுஷ்டானங்களைத் தவறாமல் பண்ணிக்கொண்டு வந்தாரென்று அநேக விடங்களில் சொல்லப்பட்டது. ஆரம்பத்திலேயே விசுவாமித்திரர்,

"கௌஸல்யா ஸுப்ரஜா ராம பூர்வா ஸந்த்யா ப்ரவர்த்ததே ।
உத்திஷ்ட நரசார்தூல கர்த்தவ்யம் தைவமாஹ்நிகம்" ॥

என்கிறார். இப்படி அநேக விடங்களில் ஸ்ரீராமன் ஆன்னிகங்களைத் தவறாமல் செய்துவந்தாரென்று வால்மீகி அருளிச்செய்கிறார். ஒரு திருஷ்டாந்தம் மாத்திரம் விண்ணப்பம் செய்கிறேன். "தேஷ்வேவ ஸர்வம் க்ருத்வா ஸௌம்யம் வைஷ்ணவமேவ ச" என்று செய்த வைசுவதேவத்தைப்பற்றியும் வால்மீகி அருளிச்செய்கிறார்.

இப்படி நித்திய நைமித்திக கர்மங்களையெல்லாம் ஸ்ரீராமன் லோக ஸங்க்ரஹார்த்தம் செய்துவந்தார். தன்னுடைய க்ஷத்திரிய குலதர்மத்தை அனுஸரித்துப் பிரஜா ஸம்ரக்ஷணமும், ரிஷிகளின் தபோ விக்னங்களைச் செய்யும் ராக்ஷஸ ஸம்ஹாரங்களும், ஸ்ரீமத்ராமாயணம் ஆதிமுதல் அந்தம்

வரையில் முறையிடுகிறது. காமக்ரோதாதிகளும் ஸுகதுக்கங்களும் மனுஷ்யர்களுக்கு ஸஹஜமென்று தானும் ஸ்வானுஷ்டானத்தில் காட்டி, அவைகளையெல்லாம் ஜெயித்து ஜிதேந்திரியனாக ஆகும் வழியையும் காட்டினார். ஸத்ய பரிபாலனம் செய்யும் விஷயத்தில் ராஜ்ய போகங்களையெல்லாம் துறந்து வைராக்கியத்தையும் காட்டினார். கைகேயியினால் தமக்கு ராஜ்யாபிஷேக பங்கமும் வனவாஸமும் ஏற்பட்டதென்று கௌஸல்யாதிகள் கைகேயியையும் தசரதனையும் நிந்திக்கும்போது, அவையெல்லாம் தெய்வ ஸங்கல்பமென்றும், தெய்வ ஸங்கல்பமில்லாமல் ஒன்றும் நடவாதென்றும் இப்படியெல்லாம் பரமாத்ம விவேகத்தை ஸ்வானுஷ்டானம் பண்ணித் தெரிவித்தார். இப்படி 'धर्मज्ञान वैराग्य साध्य सहेतु मानवः । नारायणः परं ब्रह्म' என்பதை லோக ஸங்கிரஹார்த்தம் தெரிவிக்கும் பொருட்டுப் பூலோகத்தில் எழுந்தருளின ஒரு மஹாவதாரம் இது.

ஸ்ரீ:

வேத வைபவம்

[வித்வான் ஸ்ரீ. உ.வே. ஸ்ரீநிவாஸதாதாசார்யர், திருவாதி.]

மனுஸ்மிருதி:—

"न तेन वृद्धो भवति येनास्य पलितं शिरः
यो वै युवाप्यधीयानस्तं देवाः स्थविरं विदुः ।
सैनापत्यं च राज्यं च दण्डनेतृत्वमेव च ।
सर्वलोकाधिपत्यं च वेदशास्त्रविदर्हति ।
वेदाभ्यासोऽन्वहं शक्त्या महायज्ञक्रियाक्षमा ।
नाशयन्त्याशु पापानि महापातकजान्यपि ।
वेदमेवाभ्यसेन्नित्यं यथाकालमतन्द्रितः ।
तं ह्यस्याहुः परं धर्ममुपधर्मोऽन्य उच्यते ॥"

ஸ்வரப்பிழை எழுத்துப்பிழையுள்ள மந்திரமானது சரியாக உபயோகிக்கப்படாமையால், அது தன் அர்த்தத்தைத் தெரிவிப்பதில்லை. வஜ்ரம் போன்ற அம்மந்திரமானது ஸ்வர தோஷத்தால் இந்திரசத்ரு சப்தம் போல் யஜமானனை ஹிம்ஸிக்கிறது. பாணினியின் சிக்ஷை:

'मन्त्रो हीनः स्वरतो वर्णतो वा मिथ्याप्रयुक्तो न तमर्थमाह । स वाग्वज्रो यजमानं हिनस्ति यथेन्द्रशत्रुः स्वरतोऽपराधात् ॥'

த்வஷ்டாவின் புதல்வனான விசுவரூபனை இந்திரன்கொன்றான். அதன்மேல் த்வஷ்டா மிகுந்த கோபத்துடன் இந்திரனை விலக்கி ஸோமயாகத்தை நடத்த முயற்சித்தான். அந்த யாகத்தில் இந்திரன் தன்னைக் கூப்பிட விரும்பினான். தன் பிள்ளையைக் கொன்றபடியினால் த்வஷ்டா இந்திரனைக் கூப்பிடவில்லை.

இந்திரன் யஜ்ஞத்திற்கு இடைஞ்சல் செய்து தன்னுடைய பலத்தினால் ஸோமரஸத்தைப் பானம் செய்தான். த்வஷ்டா ஸோமரஸத்தில் மிகுந்த அம்சத்தை யெடுத்துக்கொண்டு அபிசாரம் செய்யவேண்டி, ஆஹவநீயம் என்னும் அக்நியின் ஸமீபம்சென்று சத்ருவை யுண்டுபண்ணவேண்டி ஹோமத்தால் ஜ்வலிக்கச் செய்தான். அந்த ஹோமத்தில் 'स्वाहेन्द्रशत्रुर्वर्धस्व' என்கிற மந்திரத்தை யுச்சரித்தான். "ஓ அக்நியே! இது நல்ல ஆஹுதியாயிருக்கட்டும். நீ இந்திரனைக் கொல்லும் ஒரு புருஷனாய் ஆகி விருத்தியடையவேண்டும்" என்பது அம்மந்திரத்தின் அர்த்தம். எக்காரணத்தால் புருஷனுடைய பிறப்புக்காக ஆஹுதியைச் செய்தானோ, அதனால் உண்டான புருஷனுக்கு வ்ருத்திரன் என்ற பெயர் ஏற்பட்டது. 'इन्द्रशत्रुः' என்கிற பதத்தில் 'शत्रुः' என்பதற்கு சாதயிதா (கொல்லுபவன்) என்று அர்த்தம். இதில் 'इन्द्रस्य शत्रुः' என்று தத்புருஷ ஸமாஸத்தை ஸ்வீகரித்தால் மேற்படி ஸமாஸத்தின் கடைசியில் உதாத்த ஸ்வரம் வரும். 'इन्द्रः शत्रुः यस्य' என்கிற பஹுவ்ரீஹி ஸமாஸத்தை ஸ்வீகரித்தால் முதலில் உதாத்தம் வரும். அந்த ஹோமத்தில் முதலில் உதாத்த ஸ்வரத்தை யுபயோகித்ததால் பஹுவ்ரீஹி ஸமாஸமாக ஆகி அர்த்தம் மாறுபட்டு இந்திரனால் கொல்லப்படும் புருஷன் ஜனித்தான். தைத்திரீய ஸம்ஹிதை, இரண்டாவது காண்டம், ஐந்தாவது பிரச்னம், இரண்டாவது அனுவாகம்:

"त्वष्टा हतपुत्रो वीन्द्रँ सोममाहरत् तस्मिन्निन्द्र उपहवमैच्छत तं नोपाह्वयत पुत्रं मेऽवधीरिति स यज्ञवेशसं कृत्वा प्रासहा सोममपिबत् तस्य यदत्यशिष्यत तत्त्वष्टाऽऽहवनीयमुप प्रावर्तयत् स्वाहेन्द्रशत्रुर्वर्धस्वेति यदवर्तयत् तद्वृत्रस्य वृत्रत्वं यदब्रवीत् स्वाहेन्द्रशत्रुर्वर्धस्वेति तस्मादस्येन्द्रश्शत्रुरभवत् ।"

மேற்படி மந்திரத்தால் ஹோமம் செய்த பிறகு, அந்த அக்நி எவ்வளவுக்குள் உயர்ந்த ஜ்வாலையோடு இந்திரனை அவமதிப்பதற்காக அடிக்கப் போகிறேன் என்று முயற்சிசெய்ததோ, அவ்வளவுக்குள் தானே அணைந்துவிட்டது. மேற்படி காண்டம், நான்காவது பிரச்னம், 12-வது அனுவாகம்,

'ஸயாவஜ-ஹுர்ஃ வராவியுதி தாவதி ஷயவெவ வுாஜகெ'. அவ்விடத்தில் பாஷ்யகாரர், "இவ்விதம் ஜ்வாலை யணைந்ததற்கு ஸ்வரப் பிழையுடன் மந்திரத்தைச் சொன்னதே காரணம்; ஜ்வாலை யணைந்ததனால் யஜமானனுக்குக் காரியம் நடைபெருது என்று குறிக்கப்படுகிறது" என்று எழுதியிருக்கிருர். அங்கு எப்படி ஸ்வரதோஷத்தால் மிகுந்த அநர்த்தம் விளைந்ததோ, அம்மாதிரியே மற்ற மந்திரங்களை உச்சரிக்கும்பொழுது ஸ்வரப்பிழை எழுத்துப்பிழைகள் இருக்குமானுல் மந்திரத்தைச் சொல்லுகிறவனுக்கு மிகுந்த கஷ்டம் ஏற்படுமென்று தாத்பர்யம். இம்மாதிரியான ஸ்வர நிர்ப்பந்தத்தால் ஏற்படும் கௌரவம் வேறு எதற்கும் கிடையாது.

பகவானுக்கு வாகனமான கருடனுக்கு வேதத்தினுடைய அவயவங்கள் அங்கங்களாக இருக்கின்றன. தைத்திரீய ஸம்ஹிதை, நான்காவது காண்டம், முதல் பிரச்னம், பத்தாவது அனுவாகம்:

'ஸுபர்ணோஸி கருத்மான் த்ரிவ்ருத்தே சிரோ காயத்ரம் சக்ஷுஃ ஸ்தோம ஆத்மா ஸாம தே தனூர்வாமதேவ்யம் ப்ருஹத்ரதந்தரே பக்ஷௌ யஜ்ஞாயஜ்ஞியம் புச்சம் சந்தாம்ஸ்யங்கானி திஷ்ண்யாஃ சபா யஜூம்ஷி நாம'

இவ்விஷயத்தை ஆளவந்தார் சதுச்லோகியில் 'வாஹனம் வேதாத்மா விஹகேச்வரஃ' என்று ஸாதித்தார். எல்லா வித்தைகளுக்குள்ளும் வேதம் சிறந்த வித்தையாகச் சொல்லப்பட்டுள்ளது. ஆகையால் வேதத்தை உபதேசிப்பவன் ஸ்வர்க்கம் மோக்ஷம் இவைகளையும், எல்லா வஸ்துக்களின் தானத்தால் ஏற்படும் பயனையும் அடைகிறுன். கருடபுராணம்:

"ஸர்வஸ்வேஷ்வபி தானானாம் வேதவித்யாப்ரதாயகஃ ।
ஸ்வர்கம் ப்ராப்னோதி ஸததம் ஸர்வகாமஸமன்விதஃ ॥
வித்யானாம் ச பராவித்யா ப்ரஹ்மவித்யா ஸமீரிதா ।
ஸர்வஸ்வ தானாந் தாநம் ஸர்வதாநமயம் ததஃ" ॥

வேதமே த்ரைவர்ணிகர்களுக்கு ச்ரேயஸ்ஸுக்குச் சிறந்த ஸாதனம். ஆதலால் வேதத்தை அத்யயனம் செய்தல் உருச்சொல்லுதல் இவைகளால் ஒருவன் பிரஹ்மத்தை யடைகிறுன். பண்டிதன் வேதத்தையே அப்யஸிக்க வேண்டும். சிஷ்யர்களுக்கு அதை உபதேசிக்கவேண்டும். வேதத்தை உருச்சொல்லல் சொல்லிக்கொடுத்தல் இவைகளால் அடையாத பலன் ஒன்றுமில்லை. தேவீபுராணம்:

'வேத ஏவ த்விஜாதீனாம் ஸாதனம் ச்ரேயஸஃ பரம் ।
ததோ஽ப்யஸ்யேத் அத்யயனாப்யாஸாத்ப்ரஹ்மாதிகச்சதி ॥
ததேவ நித்யமப்யஸ்யேத் சிஷ்யேப்யச்ச ப்ரதாபயேத் ।
அப்யாஸ ப்ரதானாப்யாம் தந்நாஸ்தி யன்னாதிகம்யதே ॥'

த்ரைவர்ணிகர்களுக்கு யாகம், தபஸ்ஸு, உபநயனம் முதலிய கர்மாக்கள் இவைகளைத் தெரிவிப்பதால் வேதமே சிறந்த ச்ரேயஸ் ஸாதனம். யாக்ஞவல்க்யர்:

'யஜ்ஞானாம் தபஸாம் சைவ சுபானாம் சைவ கர்மணாம் ।
வேத ஏவ த்விஜாதீனாம் நிச்ச்ரேயஸகரஃ பரஃ ।'

வேதாத்யயனத்தைவிட்டு வேறொன்றைப் படிக்க விரும்புகிறவன் கறக்கிற பசுவைவிட்டு க்ராமத்திலிருக்கும் வராஹத்தைக் கறக்க விரும்புகிறுன்.

காசி காண்டம் :—

'ஹித்வா ச்ருதி தர்மத்யயனம் யோ஽ன்யத்ர குருதே ச்ரமம் ।
ஸ தோக்த்ரீம் தேனும் உத்ஸ்ருஜ்ய க்ராமஸௌகரீம் துதுக்ஷதி ॥'

தர்மங்களை வெளிப்படுத்தும் வேதத்தைச் சிஷ்யர்களுக்குச் சொல்லிக் கொடுப்பவன், பூதானம் கோதானம் இவைகளால் ஏற்படும் பலனை யடைகிறுன். மஹாபாரதம்:

'யோ ப்ரூயாத் சாபி சிஷ்யேப்யோ தர்மயுக்தாம் ப்ராஹ்மீம் ஸரஸ்வதீம் ।
ப்ருதிவீகோப்ரதானாப்யாம் ஸ தத்புல்யம் பலமச்னுதே ॥'

வேதத்தைச் சொல்லிக்கொடுப்பதால் எல்லா யாகங்களின் பலத்தையும் அடைகிறுன். ஆயுர்வேதம், தனுர் வேதம், காந்தர்வ வேதம், ஸ்தாபத்யவேதம் இவைகளைச் சொல்லிக்கொடுப்பதால் கந்தர்வர்களுடன் ஸந்தோஷப்படுகிறுன். விஷ்ணுதர்மோத்தரம்:

'வேததானாதவாப்னோதி ஸர்வயஜ்ஞபலம் நரஃ ।
உபவேதப்ரதானேன கந்தர்வைஸ்ஸஹ மோததே ॥'

வேதத்தைச் சிறிதளவாயினும் சொல்லிக்கொடுப்பதால் அடையும் பயன் ஆயிரம் கல்பங்களாலும் சொல்ல முடியாது. ப்ரஹ்ம புராணம்:

'ந தச்சக்யம் ஸஹஸ்ரேண வக்தும் கல்பசதைரபி ।
யதேகதானாதாப்னோதி ஸர்வாதவி கஹாசதே ॥'

எப்பொழுதும் வேதாத்யயனம் செய்பவன் பிள்ளையில்லாமலிருந்தால் பிள்ளையையும், தனமில்லாமலிருந்தால் தனத்தையும், கடைசி காலத்தில் ப்ரஹ்மத்தையும் அடைகிறுன். 'அபுத்ரோ லபதே புத்ரம் அதனோ லபதே தனம் । ஸதா யோ஽த்யயனாஸக்தஃ அந்தே ப்ரஹ்மணி லீயதே ॥'

மதுரகவிகளும், ஸ்ரீ தேசிகனும், கண்ணிநுண் சிறுத்தாம்பு, பிரபந்த

ஸாரம் இவைகளில் கீழ்க்கண்ட பாட்டுக்களால் வேதத்தின் பெருமையை விளக்கியுள்ளார்கள்.

‘அருள்கொண் டாடும டியவ ரின்புற
அருளி னனவ் வருமறை யின்பொருள்’

‘மிக்க வேதியர் வேதத்தி னுட்பொருள்
நிற்கப் பாடியென் நெஞ்சுள்நி றுத்தினன்
தக்க சீர்ச்சட கோபனென் நம்பிக்காள்
புக்க காதல டிமைப்ப யனன்றே.’

‘அந்தமிலா வாரணங்கள் நாலாய் நின்ற
வதன்கருத்தை யாழ்வார்க ளாய்ந்தெடுத்து
செந்தமிழா லருள்செய்த வகை தொகையுஞ்
சிந்தாம லுலகங்கள் வாழவென்று
சந்தமிகு தமிழ்மறையோன் தூப்புல் தோன்றும்
வேதாந்த குருமொழிந்த ப்ரபந்தசாரம்
சிந்தையினு லனுதினமும் சிந்திப் போர்க்குச்
சேமமதாந் திருமால்தன் கருணையாலே.’

அர்த்த மறியாமல் வேதத்தைச் சொல்லுவது பயனற்றது என்கின்றனர் சிலர் ரிக்வேத பாஷ்ய உபோத்காதத்தில், அத்யயனம்செய்து அர்த்தத்தை யறியாதவன் மூட்டை சுமப்பவன் என்றும், கிளைகள் வெட்டப்பட்ட உலர்ந்த அடிமரமென்றும், எப்படி அம்மரம் புஷ்பம் பழம் முதலியவைகளுக் கில்லாமல் விறகுக்காக மட்டும் உபயோகிக்கப்படுகிறதோ அம்மாதிரி அத்யயனம் செய்து அர்த்தம் தெரியாதவனுக்கு வ்ராத்யத்வம், இல்லாமை என்பதுதான்; மேலும்கர்மானுஷ்டானமோ ஸ்வர்க்கம் முதலிய பலன்களின் ஸித்தியோ கிடையாது என்கிற தாத்பர்ய வர்ணனத்துடன் ‘ஸ்தாணுரயம் பாரஹார: கிலாபூத் அதீத்ய வேதம் ந விஜாநாதி யோ(அ)ர்த்தம்’ என்கிற வசனத்தையும், அர்த்தமறியாமல் சொல்லப்படும் வேதமானது நெருப்பில்லாத இடத்தில் போட்ட உலர்ந்த விறகுபோல் ஜ்வலிப்பதில்லை; அதாவது தன் அர்த்தத்தை வெளிப்படுத்துவதில்லை என்கிற தாத்பர்ய வர்ணனத்துடன்,

‘யதகீதம் அவிஜ்ஞாதம் நிகதேநைவ ஶப்த்யதே । அநக்நாவிவ ஶுஷ்கைதோ ந தஜ்ஜ்வலதி கர்ஹிசித் ।’ என்கிற வசனத்தையும்,

‘யே அர்வாஞ்சஸ்தாந் பராசோ வேதம் விதாம்ஸமபிதோ வதந்த்யாதித்யமேவ தே பரிவதந்தி ஸர்வே அக்நிம் த்விதீயம் த்ருதீயஞ்ச

ஹம்ஸமிதி யாவதீர்தேவதாஸ்தாஸ்ஸர்வா வேதவிதி ப்ராஹ்மணே வஸந்தி தஸ்மாத் ப்ராஹ்மணேப்யோ வேதவித்ப்யோ திவேதிவே நமஸ்குர்யாந்நாஶ்லீலம் கீர்தயேத் ஏதா ஏவ தேவதா: ப்ரீணாதி” என்கிற தைத்திரீய ஆரண்யக வாக்யங்களில் ‘அர்வாஞ்ச: பராசோ வேதம் விதாம்ஸம்’ என்கிற பதங்களுக்கு,

‘வேதம் விதாநயர்தாபிஜ்ஞ: பராஞ்ச: ஸ ச த்விவித: அர்வாசீநகாலே ஸம்பந்ந: உத்பந்நபவிஷ்யாஸ்ஸநகாலமா: கஶ்சிது வாயுயாய: பராஞ்ச நகாலே ஸம்பந்நோ வ்யாஸாதிஶ் தமேதம் உபயவிதம் விதாம்ஸம்’

என்ற அர்த்தம் எழுதி, ‘ந வேதத்யயந ஸேவ்ய ஷொட்சிமக்ஷணீயம் விதாம்ஸத்ராத்வகாச அந்யா வேதஶ்ரீயா நத்ராத்யயேதி’ என்றிம்மாதிரி அர்த்த ஜ்ஞானமுள்ளவன் விஷயமாகவே வ்யாக்யானம் செய்து அவைகளையும் பிரமாணமாகக் காட்டியிருக்கிறார். இவ்விஷயம் யோசிக்கவேண்டியதாயிருக்கிறது. ‘யே அர்வாஞ்ச’ என்பதற்கு முன் வாக்கியம் ‘ஸ்வாத்யாயோ(அ)த்யேதவ்யோ யம் யம் க்ரதுமதீதே தேந தேநாஸ்யேஷ்டம் பவதி அக்நேர்வாயோராதித்யஸ்ய ஸாயுஜ்யம் கச்சதி ததேஷா ப்யுக்தா’ என்பது. இவ்விடத்தில் பாஷ்யத்தில் ‘ஸ்வாத்யாயோ(அ)த்யேதவ்ய:’—பிதா பிதாமகன் முதலியோரிடமிருந்து வந்த வேதத்தின் அத்யயனத்தையும் ப்ரஹ்ம யஜ்ஞத்தின் அத்யயனத்தையும் செய்யவேணும். யாகத்தை அனுஷ்டிக்காததால் அர்த்த மறியாமல் வேதத்தைச் சொல்லுவதால் மாத்திரம் புருஷார்த்தமில்லையென்று ஸந்தேகிக்கக் கூடாது. இந்த வேதாத்யயனம் செய்தவன் அக்நிஷ்டோமம், வாஜபேயம், ராஜஸூயம், அச்வமேதம் முதலிய யாகங்களுக்குள் அங்கங்களுடன் கூடின எந்தெந்த யாகத்தைத் தெரிவிக்கிற வேதபாகத்தை அத்யயனம் செய்கிறானோ, அந்தந்த யாகத்தால் ஏற்படும் பயன் இந்த அத்யயனம் செய்பவனுக்கு வருகிறது. காயிகம், வாசிகம், மானஸம் என்று யாகம் மூன்று வகை. கேவலாத்யயனம் செய்தவனுக்கு வாசிக யாகம் ஸித்திப்பதில் விவாதமில்லை அத்யயனம் செய்தவன் அர்த்தத்தையும் அறிந்தால், அத்யயனகாலத்தில் அர்த்தத்தை அனுஸந்திப்பதால், மானஸமும் ஏற்படுகிறது. திரவ்யத்தைச் சம்பாதிக்காதவனுக்கு அதிகாரமின்மையால் காயிகம் இல்லாவிடில் போகட்டும். எவன் அதிகாரியோ அவன் காயிகத்தையும் செய்யட்டும். மற்றவனுக்கு வாசிகத்தாலேயே

அந்தப் பலன் கிடைக்கிறது. ஆகையால் அத்யயனம் செய்தவன் அக்னி, வாயு, ஸூர்யன், இவர்களுடைய தன்மையை அடைகிறான். வேதம் தெரிந்தவன் பிரபாவ விஷயத்தில் ஒரு ரிக் சொல்லப்பட்டது என்று வ்யாக்யானம் செய்து அந்த ரிக்கைக் காண்பிக்கிறார் என்கிற அவதாரிகை வைத்து, 'யே ஸவிதாரம்—ஹவிஷீதி' என்கிறவரையில் வேதாத்யயனம் செய்து, இப்பொழுதிருக்கும் மனுஷ்யனும், வ்யாஸர் வஸிஷ்டர் முதலிய ப்ராசீனர்களுமான வேதமறிந்தவர்களைத் தூஷிப்பவர்களை, ஸூர்யன் அக்கினி வாயு இவர்களைத் தூஷிக்கிறார்களென்றும் தாத்பர்ய வர்ணனம் செய்து இந்த மந்திரத்துக்குத் தாத்பர்யம் காண்பிக்கிறார் என்று அவதாரிகை வைத்து, 'யாவதீர்வை—வீர்ணாதி' என்கிற வரையில் அக்கினி முதல் விஷ்ணு வரையில் உள்ள தேவதைகளில் ஒவ்வொரு தேவதை ஒவ்வொரு மந்திரத்தில் சொல்லப்படுகிறது. அம்மந்திரங்களெல்லாம் வேதாத்யயனம் செய்து அர்த்த மறியாதவனுடைய வாக்கிலும், அத்யயனம் செய்து அர்த்த மறிந்தவனுடைய மனஸிலும் வாக்கிலும் இருக்கின்றன.

ஆகையால் வேதவித்துக்கள் எல்லா தேவதைகளின் ஸ்வரூபமானதால் அவர்களின் பொருட்டுத் தினந்தோறும் நமஸ்காரம் செய்யவேண்டும். அவர்களிடம் ஏதாவது தோஷமிருந்தாலும் சொல்லக்கூடாது. வேதமறிந்தவனைப் பூஜிப்பதால் எல்லா தேவதைகளையும் ஸந்தோஷப்படுத்துகிறான் என்று தாத்பர்ய வர்ணனம் செய்தார். இதிலிருந்து, வேதாத்யயனம் செய்து அர்த்தமறியாதவன் அத்யயனம் செய்து அர்த்தமறிந்தவன் இருவரும் இவ்வாக்கியங்களுக்கு விஷயம் என்று ஏற்படுகிறது. ரிக்வேத பாஷ்ய உபோத்காதத்தில் 'வேதம் விப்ராஸ:' என்ற பதம் பிரயோகித்திருப்பதால், அர்த்தமறியாதவன் விஷயம் அன்று என்று சொல்வதை விசாரிக்கவேண்டும். சாந்தோக்யம் ஏழாவது பிரபாடகத்தில்: "ஓ பூஜ்யரே! நான் சப்தஜ்ஞான முள்ளவனாக இருக்கிறேன்; ஆத்மஜ்ஞான முள்ளவனாக இல்லை" என்று ஸநத்குமாரரைப் பார்த்து நாரதர் சொல்லுகிற 'ஸோஹம் பகவோ மந்த்ரவிதேவாஸ்மி நாத்மவித்' என்கிற வாக்கியத்தில் மந்த்ர பதம் மந்த்ரார்த்தத்தை யறிவித்தால் 'நாத்மவித்' என்பது விரோதிக்கு மாதலால், கீழே 'மந்த்ரவித்' என்னும் பதத்தில் வித் தாதுவின் ஸ்வாரஸ்யம் போய் எப்படி மந்த்ர பதம் சப்தத்தையே தெரிவிக்கிறதோ, அதுபோல் இங்கும் 'ஸ்வாத்யாயோऽத்யேதவ்ய: யம் கஞ்ச ... தத்யேத' என்று அத்யயனப் பிரபாவத்தைச் சொல்லும் வாக்கியத்திற்கு வ்யாக்யானமாக, 'யே ஸவிதாரம்—வீர்ணாஷி' என்கிற வாக்கியங்கள் ஏற்பட்டிருக்கிறபடியால், அர்த்தமறியாமல் வேதம் சொல்பவனை 'விப்ராஸ:' என்கிற சப்த ஸ்வாரஸ்யத்தைக்கொண்டு விலக்குவது உசிதமன்று. மேலும் சாந்தோக்ய

'தேநோபௌ குருதோ யஶ்சைதேவம் வேத யஶ்ச ந வேத நாநா து வித்யா சாவித்யா ச யதேவ வித்யயா கரோதி ஶ்ரத்தயோபநிஷதா ததேவ வீர்யவத்தரம் பவதி' என்று முதல் காண்ட வாக்யம், 'ப்ரஸ்தோதர்யா தேவதா ப்ரஸ்தாவமன்வாயத்தா தாம் சேதவித்வாந் ப்ரஸ்தோஷ்யஸி மூர்தா தே விபதிஷ்யதீதி'

என்று 10-வது கண்ட வாக்யம். 'ததோக்தஸ்ய மயேதி' என்று 11-வது கண்ட வாக்யம். இவைகளுக்கு வ்யாக்யானம் பண்ணும் பொழுது சங்கர பாஷ்யம், அதன் வியாக்யானம், ஆனந்தகிரி டீகா, ஸ்ரீரங்கராமாநுஜமுனி பாஷ்யம் இவைகளில், ஞானமில்லாதவனுக்கும் அக்னிஹோத்ரம் யாகம் வேதாத்யயனம் ஜபம் முதலிய எல்லாக் கர்மாக்களிலும் அதிகாரம் உண்டு என்றும், பலத்தில் அபேக்ஷை ஸாமர்த்தியம் ஞானம் விலக்கப்படாமை இவைகள் கர்மானுஷ்டானத்துக்கு அதிகாரமாகச் சொல்லப்பட்டிருந்தாலும் திரவ்யாதி ஞானமிருந்தால் போதுமென்றும், விஷயங்களை நன்கு அறிந்து அனுஷ்டித்தால் அஜ்ஞனுடைய கர்மானுஷ்டானத்தைக் காட்டிலும் அதிக பலம் உண்டென்றும், வித்வான் ஸமீபத்திலிருந்தால் அவரை அநாதரித்து அவித்வான் கர்மானுஷ்டானம் செய்தால் பிரத்யவாயம் ஏற்படுமென்றும், அவர் உத்தரவின் பேரில் செய்யவேண்டுமென்றும் ஸ்பஷ்டமாக நிரூபணம் பண்ணப்பட்டிருக்கிறது. அதற்கு மாறுபாடாக அவித்துவானுக்குக் கர்மானுஷ்டானத்தில் அதிகாரமில்லையென்றும், அனுஷ்டித்தால் பலஸித்தியில்லையென்றும் சொல்லுவது எவ்விதம் பொருந்தும்? ஆகையால் 'ஸ்தாணுரயம்' 'யததீதம்' என்றிம்மாதிரியான வசனங்களுக்கு அர்த்த ஜ்ஞானம் சிறந்தது என்கிற தாத்பர்யமே கொள்ளவேண்டும். ரிக்வேத பாஷ்யத்தின் உபோத்காதம் அர்த்த ஜ்ஞானத்தின் ஆவச்யகதையைச் சொல்லி அதன் மூலமாக வேதபாஷ்யத்தின் ஆவச்யகதையைப் பிரதிபாதிப்பதில் தாத்பர்யமுடையது என்பது தத்வம்.

(தொடரும்)

ஸ்ரீ:

ஆவ்ருத்யதிகரண ரஸங்கள்

[ஸ்ரீ. உப. வே. வி. கோபாலாசார்யர் M.A.B.L., அட்வொகேட், திருச்சி.]

இரண்டே ஸூத்ரங்கள் அடங்கிய இவ்வதிகரணத்தின் ரஸங்களைப் பரிச்சேதிக்க இயலாது. ஆலோசிக்க ஆலோசிக்க ரஸத்திற்கு ஶதகுணி தோத்தர க்ரமேண ஆவ்ருத்தி பலிக்கும். எம்பெருமானார் ஸ்ரீ பாஷ்யாதி ஸ்ரீ ஸூக்திகளின் ஆவ்ருத்திகளை ஸாதநமாகக் கொண்டு அவை காட்டும் க்ரமத்தில் அச்யுத பதாம்புஜத்வயத்தில் அச்சுதமாகப் பக்திரஸபரித ஸ்வச்ச மதுர ஸ்நேஹ சிந்தா தாரைகளை ஆநந்த பாஷ்ப தாரைகளோடு பெருக்கிக் கொண்டே ஆநந்த பரவசராய் ஸ்ரீ தேசிகன் யௌவநம் முதல் தம்முடைய வைதிகமான (வேத நூற் பிராயமான) சதாயுஷ் காலத்தையும் அதிவாஹநம் செய்தது ப்ரஸித்தம். 'கிளரொளி யிளமை'த் திருவாய்மொழியில் ஆழ்வாருக்கு அழகர் 'விஷயமான அநுபவப் பாரிப்பு தொடங்கி, அதை 'முடிச்சோதி'யில் அநுபவித்து, அந்த சதகம் முழுவதும் ஒவ்வொரு திருவாய்மொழியிலும் சோதி நினைப்பு அநுவர்த்தித்து வந்தது. திருமலை அநுபவத்திலும், 'எழில்கொள் சோதி' என்று திருவாக்கில் வந்தது. கிளரொளியிளமைத் திருவாய்மொழியின் ஸங்க்ரஹ ச்லோகத்தில் ஸ்ரீதேசிகன் 'நிவிஷ்டவேஶ' என்று ஆழ்வாரது ஆழ்ந்த அநுபவத்தை வர்ணித்தார். தம் யௌவநம் முழுவதும் உடையவர் ஸ்ரீ ஸூக்திகளின் ஆவ்ருத்திகளால் நிர்விஷ்டமாயிற்றென்று ஸாதித்ததால், எம்பெருமானார் ஸ்ரீஸூக்திகளில் தம்முடைய இன்ப ரஸம் கிளரொளி யிளமையிலும் முடிச் சோதியிலும் ஆழ்வாருடைய இன்பரஸத்தை ஒக்குமென்று ஸூசித்தார். ப்ரஹ்ம விஷயகமான மதுர ப்ரத்யயா வ்ருத்திகயா - ஸ்ரீ பாஷ்யகாரர் ஸ்ரீ ஸூக்தி மந்த்ராவ்ருத்திகளைக் கொண்டு செய்ததாக ஸூசநம். உடையவர் ஸ்ரீ ஸூக்தி ரஸங்களை அச்யுதமாக நெஞ்சில் கொண்டே இவர் அச்யுத சிந்தா ரஸத்தை அச்யுதமாக அநுபவித்தார். ரஸ கநரான பெருமாளையும் இவர், யதீஶ்வர ஸரஸ்வதீ ரஸபரிதராகவே அநுபவித்தது திண்ணம். உடையவர் கீதா பாஷ்யத்தைப் பற்றி, நம் தேசத்துக்கு அலங்காரமான ஸ்ரீ திவான் பஹதூர் ராமஸ்வாமி சாஸ்த்ரிகள் பல வர்ஷங்களுக்கு முன் எழுதியதொரு வ்யாஸத்தில், அதில் ஒவ்வொரு பதத்திலும் பக்தி ரஸம் ஒழுகுகிற தென்றும், பதேபதே புளகாங்கித மாகாமல் அதை ஸேவிக்க முடியாதென்றும், தம்முடைய ரஸபாரவஶ்யாநுபவத்தை அறுதியிட்டார். ராமாநுசன் பாஷ்யத்தில் ராமன் ரஸாநுபவம்.

அவதீர்ணரான கண்ணன் பக்தியோக மென்னும் கீதையை உலகத்தில் அவதாரம் செய்துவைத்தார். 'ஸ்வதீய ஸ்வதீய' என்றபடி அவதரணத்தில் மிக்க பாண்டித்யமுடையவர் பகவான். அந்த அவதரண கலாபாண்டித்யம் முழுவதையும் கீதாவதாரத்தில் க்ருஷ்ணன் விநியோகப் படுத்தினாரென்பது, 'ஸ்வதீயஸ்வதீய..........ஹ்யொம உவதார யூவாஸா' என்னும் உபோத்காதத்தால் வ்யஞ்ஜநம். அவதார மவத நியத்த ஓர் விலக்ஷண அவதார மென்றும் வ்யஞ்ஜநம். விபவாவதாரம் தன்னடிச் சோதிக்கு எழுந்தருளியும் அவர் அவதரிப்பித்த பக்தியோகாவதாரமாகிய கீதை சாச்வத ஸரஸ்வதியாக ஸர்வ லோக வ்யாப்தமாய் விபஶ்சிஹ்வி நீதமாய் இவ்விருள் தருமா ஞாலத்தில் இருளைப் போக்கிக்கொண்டிருப்பது ஸர்வலோக ஸாக்ஷிகம். கண்ணன், கீதை யென்னும் ஞானச் சுடர் விளக்கை ஏற்றிவைத்தார். அது சிறந்த நிபுண க்ருத்யமே. ஏற்றிவைத்த விளக்கு மங்காமல் அணையாமல் நந்தா விளக்காய் அகண்ட தீபமாய் எரிந்துகொண்டிருப்பதற்கு வற்றாத ஒரு ஸ்நேஹக் கடல் வேண்டுமே. 'வையம் தகளியா வார்கடலே நெய்யாக' என்றபடி பாஷ்யம் வையம்; பாஷ்ய வாக்கிலுள்ள ஸ்நேஹக்கடல் நெய்; ஸ்நேஹ தைலதாரைதானே உபாஸந மென்னும் ஸ்ம்ருதி ஸந்தாநத்திற்கு உபமாநம். இதற்கு உயர்ந்த ஸாக்ஷியாக எமது ஆத்ம பந்துவும் பஞ்ச ப்ராணன்களுமென்று சொல்லக் கூடிய பெரியார் அநுபவத்தை நிதர்சித்தோம். கோவில் கட்டுவார்கள்; அதில் பூஜை உத்ஸவங்கள் சாச்வதமாய் நடப்பதற்கும், கட்டின கோவில் இடியாமல் அப்பொழுதப்பொழுது திருப்பணி செய்வதற்கும் மூலதநத்தை ஏற்படுத்தாவிட்டால் கோவில் கட்டினது பயன்படுமோ? கண்ணன் கீதை பாடி ஞான விளக்கேற்றிவைத்து, அது அகண்டமாக அகண்ட ஸ்நேஹத்தால் ஜ்வலித்து, 'வயுஷ்டெதஶவியஷ்டெத' என்று அஹரஹ ருபசய மடைவதற்கு ராமாநுஜன் பாஷ்யம் வற்றாத ஸ்நேஹாசய மாயிற்று. கீதை பாடியது பெரிதல்ல; அதற்கு ராமாநுசன் பாஷ்யம் ரசனை செய்யப்பெற்ற பாக்யமே கண்ணன் பாக்யமென்று தாத்பர்ய சந்த்ரிகை மங்கள ச்லோகத்தால் தேசிகன் விளக்குகிறார். 'யதிராஜன் எவர் கீதங்களுக்கு உபநிஷத்துக்களின் நெருங்கிய உட்பொருளை நேராக விளக்கினாரோ அந்தக் கண்ணன்' என்று அங்கே கண்ணன் வர்ணநம். ப்ரஹ்மாகாரமும் ஸ்நேஹ பரிதமுமான மநோவ்ருத்தி ப்ரவாஹம் அவிச்சிந்நமாக ஆவ்ருத்தமாய்ப் பரமபத ப்ராயண காலமான மஹா ப்ரயாண க்ஷணம் வரையில் அநுவர்த்திக்க, உடையவர் ஸ்ரீ பாஷ்யாதி வாக்குகளின் ஆவ்ருத்திகள் உத்தமமான ஸாதநமென்பது தேசிகன் அநுபவம். ஆப்ரயாணம் அஸக்ருதாவ்ருத்தமான ப்ரீதி பரித த்யாநமென்னும் நிரந்தர சிந்தநம் மோக்ஷஸாதநமென்று பாதராயணர் தீர்மாநம். அதை ஸுலபமாய் ஸாதிக்க யதிஸார்வபௌம வச

ஸாமாவ்ருத்திகள் அநபாயமும் ஸுஸுகமுமான ஸாதநமென்று திருவுள்ளம். இந்த சப்தங்களைப் படந ப்ரவசநாதிகளால் ஆவ்ருத்தி செய்து கொண்டே இந்த ரஸத்தோடு ஆநந்த ப்ரஹ்ம ப்ரத்யயாவ்ருத்தி செய்ய ப்ராப்தம். தேவனிடமும் தேவனை குருவினிடமும் பரமான பக்தி சேர்ந்தே நிரம்பியிருந்து யதிராஜ குருகர்த்தித பாஷ்ய கர்த்திதமான பரப்ரஹ்மம் மேலும் மேலும் விசதமாய் ப்ரகாசித்துவரு மென்று தாத்பர்யம்.

'ஆஶரீராத் ஶாரீரக ப்ரவசந வ்ரதம் ஆத்ரியேதா:'

[சரீர முள்ளவரையில் ப்ரஹ்மஸூத்ரத்தையும் அதன் பாஷ்யத்தையும் ப்ரவசநம் செய்யும் வ்ரதத்தை ஆதரிப்பாய்] என்று தமக்கு யதிபதியின் நியமநமென்று ஸங்கல்பஸூர்யோதத்தில் ஸாதிக்கிறார். இப்படிச் செய்தால் மோக்ஷஸங்கல்பம் ஸூர்யோதய மாகிறது திண்ணம் என்ற கருத்தைக் கொண்டு இந்த ச்லோகத்தை அந்த க்ரந்தத்தில் ஸாதித்தார். ஸ்ரீ பாஷ்யம் யோகாநுபவத்திற்கு ஸாதனமாகுமோவென்று சங்கிக்கவேண்டாம். பெருமாள் யோகீச்வர ரென்பது எப்படி ஸத்யமோ, அப்படியே உடையவர் அச்யுதன் திருவடிகளில் அச்யுதயோக முடையவர். அவர் யோகம் எவ்வளவு தூரம் சென்றதென்று கேட்பீரோ? அவருடைய வாக்குகளும் ஸார்வ பௌமம். யதி என்னும் பதமே யதிராஜனைச் சொல்லும். ஸூத்ர மென்னும் தனிப்பதம் மட்டும் ப்ரஹ்ம ஸூத்ரத்தை முக்யமாகச் சொல்லுவது போலவும், ஜயந்தீ என்பது கண்ணன் ஜயந்தியைப் பேசுவது போலவும், யதி என்னும் யதிராஜனுடைய ஸார்வ பௌமமான வாக்குகளின் ஆவ்ருத்திகளால் யௌவநம் பூர்ணபோகமாக அநுபவிக்கப் பட்டது. ஸார்வ பௌம என்பது லோக சாஸ்த்ர ப்ரஸித்த சப்தம். ஸர்வயோக பூமிகளிலும் விதிதமானது; ஏழு உப்பரிகைகளிலும் ஏறியது. யதிராஜன் வசநங்களுக்கும் உத்தமமான யோகாநுபாவத்வ சக்தி உண்டென்றும் ஸூசிக்கிறார். யௌவநம் அநுபவிக்கப்பட்டதென்றால், பின் காலமெல்லாம் என்ன அநுபவம்? யதிராஜன் ஸ்ரீ ஸூக்திகளின் அநுபவத்தால் அந்த ரஸபரத்தால் யௌவநம் கடைசிவரையில் உள்ளதே. யௌவநம் நீங்கி வார்த்திகம் வருவதில்லை. ஸ்ரீ பாஷ்யாநுபவ ரஸத்தோடு கூடிய நாள்கள் முழுவதும் யௌவநமே. 'சேஷாயுஸ்' என்பது யௌவநத்திலேயே சிஷ்டமான ஆயுஸ்; அல்லது விஷயாந்தர ப்ராவண்ய ஹேதுவான யௌவநமே இப்படி ஸ்ரீ பாஷ்யாநுபவ ஐகாந்த்யத்தோடு சென்றால், விஷய வைராக்யாநுகூலமான வார்த்திகம் அப்படியே கழிவதில் தடையென்னவென்று கைமுத்ய விவக்ஷை. உத்திஷ்டமான ஸப்ததி வ்யாக்யாநத்தில் இதனைப் பின்பு விவரிப்போம். ப்ரஸக்தமாகக் கொஞ்சமே பேசுவோம்.

ஸ்ரீநிவாஸன் ரக்ஷக தீக்ஷனாயிருப்பதாக ப்ரதிஜ்ஞை செய்து ஸ்ரீ பாஷ்யம் ஆரம்பிக்கப்பட்டது. இப்படி ஸ்ரீபாஷ்யாநுபவ ஆவ்ருத்தியால் கிடைக்கும் ஸ்ரீநிவாஸ ப்ரஹ்மாநந்த ப்ரத்யய ப்ரவாஹத்தில் மிகுதியும் ஆழ்ந்து போதுபோக்குவார்க்கு ஸ்ரீநிவாஸ ப்ரஹ்மத்தின் தயாதீக்ஷை தவறுமோ? ஸ்ரீபாஷ்யாவ்ருத்தி செய்பவர்க்குத் தயாதீக்ஷா விஷயத்வம் ஸித்தமாகையால் அதை ப்ரதீக்ஷித்துக்கொண்டிருக்கிறோ மென்று கடைசி பாதத்தில் ஸாதித்தார். ஸ்ரீபாஷ்யாவ்ருத்தி விசிஷ்ட ப்ரஹ்மஜ்ஞானத்திற்கு அநாவ்ருத்தி யென்னும் மோக்ஷம் பலம். ஆவ்ருத்தியோடு இந்த பலாத்யாயத்தைத் தொடங்கி அநாவ்ருத்தியோடு ஸூத்ரகாரர் முடிப்பது ஓர் அழகிய ரஸம். விஷயாவ்ருத்திகளுக்குப் புநராவ்ருத்தியே பலம். புநராவ்ருத்தி யென்பது புநர்விஷயாவ்ருத்திவடித ஸம்ஸாரம். அங்கே செய்கைக்கும் பலத்திற்கும், சப்தத்தாலும் அர்த்தத்தாலும் ஆநுரூப்ய முண்டு. ப்ரஹ்ம ஸம்ருத்யாவ்ருத்திக்கும் அநாவ்ருத்தி பலமென்பதில் வஸ்துதத்வத்தால் (அர்த்தத:) ஆநுரூப்யமே உளது; ஆனால் சப்தத்தால் ஆபாதத: விரோதம் தோன்றுகிறதென்கிற வைசித்ர்யம் ஸூத்ரகாரருக்குத் திருவுள்ளமுண்டு. சப்தமாத்ரத்தால் விரோதம் ஸ்பஷ்டம். ப்ரஹ்ம ப்ரத்யயாவ்ருத்திக்கு அநாவ்ருத்தியோடு கூடிய மோக்ஷத்தில் நிரதிசயமான ஸந்தத ப்ரஹ்மாநுபவம் பலம். ப்ரயத்ந பூர்வகமாக ஆவ்ருத்தி செய்ய வேண்டிய ச்ரமமில்லாமல் தானாகவே அவிச்சிந்ந ஜ்ஞாநஸந்தாநமான நித்யாநுபவ தாரை ஸித்தித்து விடுகிறது. இங்கு செய்யும் ஆவ்ருத்தி யென்னும் த்யாநத்திற்கு அவிச்சிந்நதமும் ஸந்நதமும் அகண்டமுமான பரிபூர்ண ப்ரஹ்மாநுபவம் பலம். இங்கே ஆவ்ருத்தி செய்யும் இல்வான விஷயாநுபவத்திற்கு எத்தனையோ மடங்கு அதிகமான புநர்விஷய போக மரீசிகா பரிப்ரமணம் பலம். தேஹத்தோடு ஸம்ஸார மண்டலத்திலிருக்கையில் யோக ஸமாதி அநுபவம் ஸங்கல்பத்தையும் மறக்கச் செய்து அத்புதமான ஆநந்தத்தைக் கொடுப்பதே 'ஸஜ்ஞாநவைத்ருஷ்ய விலாஸம்' என்று சொல்லக்கூடிய ஓர் அநுபவ பூமாதான். ஆயினும் மோக்ஷாநந்தக் கடலை உத்தேசித்து அது ஒரு திவலையே யாகு மென்பர்.

“[illegible]
[illegible]”
“[illegible]
[illegible]”

என்று பரப்ரஹ்மோப ஸம்பத்தியால் ஸ்வஸ்வரூபாவிர்பாவம் வருவதைச் சொல்லும் நான்காம் பாதம் முதலில் ஸாரார்வளியில் ஸாதிக்கப்

பட்டது. யோகிக்கு ஹ்ருதயத்தில் ஹார்த்தப் பெருமாளின் அநுபவம். அது கிணற்று ஜலத்துக்கு ஒப்பிடப்பட்டுள்ளது. கூபகூர்மம் என்பது அதையும் அநுஸரிக்கும். உயர்ந்த அதிகாரியைக் கிணற்றுத் தவளை என்னலாகாது. மௌனி தவளையாகான். இங்கே ப்ரகாசிக்கும் ஸ்வ ஸ்வரூபாகாரத்தைக் காட்டிலும் முக்தியில் ஸ்வ ஸ்வரூபமே அதிக ஸுக மாக ப்ரகாசிக்குமென்றும் ஸாதித்தார். இங்கேயுள்ள ப்ரஹ்ம ஸ்ம்ருதி ஸந்தாநமும் உலகத்தில் கண்டுள்ள ஸுகங்களைக் காட்டில் அத்யந்த விலக்ஷணமாயும் எத்தனையோ மடங்கு அதிகமாயு மிருக்கும். மேலும் மேலும் புதிது புதிதாகவும், இன்பம் பெருகிக் கொண்டும், அபர்யாப்த மாயும், மேன்மேலும் அநுபவ த்ருஷ்ணையை வளர்த்துக்கொண்டே யிருக் கும்.

ப்ரஹ்மத்தின் நினைப்பே ஸுகமாயிருக்குமென்று முதல் ஸூத்ர மாகிய ஜிஜ்ஞாஸா ஸூத்ரத்திலிருந்தே காட்டி வருகிறார். 'பயில வினிய நம் பாற்கடற் சேரும் பரமனை', 'அப்பொழுதைக் கப்பொழுதென் னாரா வமுதமே', 'தூயவமுதைப் பருகிப் பருகி' என்று ஆழ்ந்தவர் அருளிச் செயல்களை நினைக்கவேணும். ஆழ்வாரைப் பட்டர் க்ருஷ்ண த்ருஷ்ணா தத்வத்தின் அவதாரம் என்று வர்ணித்தார். வித்யை என்ற பக்தி (உபாஸந) முறைகளைப்பற்றி விசாரிக்கும் மூன்றும் அத்யாயம் மூன்றும் பாதத்தின் தொடக்கத்தில்:

'த்ருஷ்ணாம் க்ருஷ்ணாம்ருதாஸ்வாதவிஷயிணீம் விராம் யாவதா தாவதாப்தம்'

என்று ஸாராவளியில் ஸூத்ரகாரர் க்ருஷ்ணாம்ருத நிரதிசய த்ருஷ்ணையை முன் பாதத்தில் விளக்கினதாக ஸாதித்தார். ப்ரஹ்மஸூத்ரங்கள் க்ருஷ் ணாம்ருத ஸாகர மஜ்ஜநங்களைக் கொடுப்பதாகப் பலவிடங்களில் ஸாராவளி யில் ஸூசிக்கிறார். ப்ரஹ்ம ஜிஜ்ஞாஸை செய்வதைப்பற்றி ப்ரதிஜ்ஞை செய்த முதல் ஸூத்ரத்திலேயே ப்ரஹ்மத்தின் நினைப்பும் விசாரமும் இன்பம் பயப்பதைக் கூறுகிறார். பண்ணுவது மீமாம்ஸையானாலும் ப்ரஹ்ம மீமாம்ஸை யென்று பேசவில்லை. 'அறிய விரும்புதல்' என்ற பதத்தால் அதன் நினைப்பும் விசாரமும் இன்பமாகவேயிருக்கு மென்பதை ஸூசிக்க ஜிஜ்ஞாஸா பதத்தை ப்ரயோகித்தார். விசாராரம்ப தசை முதலிலிருந்தே இனிப்பைக் கொட்ட இச்சையைக் காட்டும் விகுதியை ப்ரயோகித்ததாக ச்ருதப்ரகாசிகையின் அழகான ப்ரதர்சநம். அந்த ஸூத்ரத்தில் ஜ்ஞாநம் என்பது தர்க்க விசாரம் என்ற ஜ்ஞாநத்தைச் சொல்லுகிறது. அதுதான் ஸூத்ரத்தின் முதற் பொருளாகக் கொள்ளவேண்டும். இனிய ஸாதநமான உபாஸநாத்மகமான ஜ்ஞாநமும் அதனால் ப்ராப்யமான மோக்ஷாநுபவ மென்னும் ஜ்ஞாநமும் மேன்மேல் பல கோடிகளாக ஸூசிக்கப்படுவதாக

வும் சொல்லலாம். முதல் ஸூத்ர பாஷ்யத்தில் சாஸ்த்ரம் முழுவதும் அடங்குவதுபோல், முதல் ஸூத்ரத்தில் சாஸ்த்ரம் முழுவதையும் அடைக்கலாம். 'தந்நிஷ்஠ஸ்ய மோக்ஷோபதேஶாத்' என்கிற ஈக்ஷத் யதிகரண ஸூத்ரத்தில் ப்ரஹ்ம நிஷ்டை மோக்ஷபலத்திற்கு ஸாதந மென்று ஸத்வித்யா ச்ருதியால் உபதேசிக்கப்படுகிறதைக் கூறினார். இந்த ஆவ்ருத்தி ஸூத்ரத்திலும் 'உபதேஶாத்' என்று ஹேது. இரண்டு ஸூத்ரங்களிலும் ஒரே சப்தம். ப்ரத்யயாவ்ருத்தி ரூபமான ப்ரஹ்ம நிஷ்டை மோக்ஷஸாதந மென்று வேதாந்தங்கள் உபதேசிக்கின்றனவென்று ப்ரதர்சநம். 'உபாஸாத்ரைவித்யாத்' முதலிய சில ஸூத்ரங்களில் ப்ரஹ்மோபாஸநம் மோக்ஷஸாதநமென்று முன்பே பேசியுள்ளது. 'அபி ஸம்ராதநே ப்ரத்யக்ஷாநுமாநாப்யாம்' என்னும் ஸூத்ரத்தில் 'ப்ரீதி ரூபாபந்ந ஸ்ம்ருதி ஸந்தாநமான ஸம்ராதந மென்னும் த்யாநத்தில் அவ்யக்தமான ப்ரஹமம் வ்யக்தமாகிறது' என்று ஸாதித்தார். அடுத்த ஸூத்ரத்தில் 'ப்ரகாஶஶ்ச கர்மண்யப்யாஸாத்' என்று 'உபாஸந மென்னும் க்ரியையின் அப்யாஸத்தால் திரும்பத்திரும்ப ஆவ்ருத்தியாய் மேன்மேலும் தெளிவுடன் அத்ருச்ய ப்ரஹ்மம் ப்ரகாசிக்கும்' என்றார். இந்த ஸூத்ரத்தை அடியொற்றி 'அஹரஹரப்யாஸாதேயாதிஶய' என்று ஸ்ரீ பாஷ்யகாரர் அடிக்கடி ஸாதிப்பது. பலவிடங்களில் ஆவ்ருத்தமான ஸ்ம் ருதி ஸந்தாநமாகிய உபாஸநம், த்யாநம், என்பவற்றை மோக்ஷ ஸாதந மென்று ஸூசித்தும் பேசியு மிருந்தாலும், அங்கே சாஸ்த்ர ந்யாயங்களைக் கொண்டும் உபாஸநம் தான் மோக்ஷோபாயமென்று தீர்மானிக்கவில்லை. இந்த அதிகரணத்தில் தான் இரண்டு சிறு ஸூத்ரங்களால் அதை நிர்ண யிக்கிறார். இங்கே நிர்ணயிக்கப் போவதை ஸித்தமாக வைத்துக்கொண்டு முன் ஸூத்ரங்களில் இதைப்பற்றிப் பேசியது. ஆகையால் புநருக்தி தோஷமில்லை. என்னென்ன ந்யாயங்களாலும் ப்ரமாணங்களாலும் அஸக்ரு தாவ்ருத்த வேதநம் ஸாதநமே யல்லாது ஸக்ருத் வேதநம் ஸாதநமல்ல வென்று தீர்மானிக்கப்படுகிற தென்பதைப் பின்னால் விண்ணப்பம் செய் வோம். ஸக்ருத் வேதநம் (ஒரு தரம் அறிதல்) தான் சாஸ்த்ரார்த்தம் (சாஸ்த்ர விஹிதமான ஸாதநம்) என்கிற பூர்வபக்ஷம் வரும் வழியையும் அதன் பரிஹார மார்க்கத்தையும் பின்பு காட்டுவோம்.

(தொடரும்)

ஸ்ரீ: ஸ்ரியை நம:

ஒரு நாள் விவாகமும் தர்ம சாஸ்த்ரங்களும்

[பரவஸ்து ஸ்ரீ. உ.வே. ஸ்ரீநிவாஸாசார்யர்]

ஆரியர்காள்! நம் பாரத நாட்டிற்குப் போற்றற்குரிய பல வேற்றங்களில் முக்கியமானது விவாஹ மென்பது. எப்படி யெனில்: வேறு வேறு இடங்களில் பிறந்த ஆண் பெண்கள் ஒருவரோடொருவர் நேசித்து, "ஸமம் து:கம் ஸுகம் ச நௌ" (நம் இருவருக்கும் ஸுக துக்கங்கள் பொதுவானவை) என்று பாவித்தும், சொத்துக்களிலும் உரிமை அடைந்து, பாலும் நீருமாய் கலந்து, 'பத்நீ என்பவள் பதியின் சரீரத்தில் பாதி' என்று வேதமோதியபடி ஒன்றுகி, தங்கள் வாணுள் முழுவதும் வீணுகாமல், தர்மம் அர்த்தம் காமம் எனும் மூன்றையு மொன்றுக் கொன்று விரோதமில்லாத வகையில் பெற்று, நான்காவதான வீடெனும் பெரும் பயனையும் பெறும் பாக்கியம் இவ்விவாகமெனும் சடங்கினுல் ஏற்படுவதென்றுல், இதன் பெருமை அளவு கடந்ததன்றே? இது நம் தேசத்தில் ப்ராம்மணர்களுக்கு அறம் முதலானவைகட்கு இன்றியமையாத ஸாதனமாயும், மத்தியில் மாற்றமுடியாத நிலேயான ஸம்பந்தமாயும் விளங்குகிறது. இதில் ப்ராஹ்மம் முதலிய பிரிவுகள் உண்டு. இவைகளில் ப்ராஹ்மம் என்பது பிராஹ்மணர்களுக்குரியதென்றும், இது ஐந்து நாட்களில் நிறைவேறும்ஒரு வைதிக கார்ய மென்றும், ஸூத்ரங்களினுலும் அநுஷ்டானங்களினுலும் தெரியவருகிறது. ஆனுல் பாணிக்ரஹணம் முதல் விவாஹ ஹோமம் வரை நடந்த பின், மாப்பிள்ளே பெண்ணே அழைத்துக்கொண்டு தன் ஊருக்குச் சென்று ப்ரவிச்ய ஹோமம் முதல் சேஷ ஹோமம் வரையில் நடத்தி விவாஹத்தைப் பூர்த்தி செய்யவேணுமென்று விதியிருக்க, ப்ரவிச்ய ஹோமம் முதல் எப்பொழுதும் நடத்தவேண்டிய ஔபாஸனுதிகளில் ச்ரத்தை குறைந்த காலத்தில் விவாகம் நடக்கு மிடத்திலேயே மற்றைச் சடங்குகளேயும் ஐந்து நாட்களில் அங்கிலோபத்தைக் காட்டிலும் அங்க லோபம் வரமென்று நடத்த ஆரம்பித்தார்கள். ஐந்து நாட்களிலும் அவ்வாண் பெண்களின் க்ஷேமத்திற்காகப் பந்துக்களுக்கும் இதரர்களுக்கும் அன்னமிட்டு, திருப்தி அடைந்த அவர்களேக்கொண்டு "அமோகா ப்ராஹ்மணாஶிஷ:" (அந்தணர்களின் ஆசிகள் அசைக்க முடியா) என்றபடி ஆசீர்வாதங்களேச் செய்வித்து, அவர்கள் முடியில் சோபனுக்ஷதைகளேப் பெய்வித்து, ஐந்தாவது நாளில் அஹதாசீர்வாதமென்னும் மங்களத்தையும்

நடத்திவந்தார்கள். சில வருஷங்களுக்கு முன் "கலௌ வேங்கட நாயக:" என்று கலியுக தைவமாகிய ஸ்ரீனிவாஸப் பெருமாளுக்கு ஆண் பெண்கள் வ்யாதியினுல் கஷ்டப்படும் ஸமயம் பிரார்த்தித்துக்கொண்டு அது அனுகூலமானபின் திருப்பதி சென்று விவாஹத்தை நடத்தி வந்தார்கள். அங்குச் செல்ல முடியாதவர்கள், வேறு இடங்களிலுள்ள அவ் வெம்பெருமான் ஸன்னிதி யில் ப்ரார்த்தனேயை நிறைவேற்றினுர்கள்.

பின்பு ஐந்து நாட்களில் ஆலயங்களில் செய்ய ச்ரமமா யிருந்ததால், விவாஹத்திற்கு மேலுள்ளதெல்லாம் தங்களூரில் வந்து முடித்துவந்தார்கள். இது சில காலமாகத் தேவாலயங்களில் ஒரே நாளில் முடித்துவிடலாமென்று ஏற்பட்டு நடந்து வந்தது. இதை எந்த ப்ருஹஸ்பதி சொன்னுரோ தெரியவில்லே. ஒருநாளில்எல்லாவற்றையும்முடித்துக்கொண்டுஊர்வந்துசேர்வது வழக்கமாயிற்று. இப்போது தங்கள் க்ருஹங்களிலேயே ஒருநாள் கலியாணத்தை நடத்த ஆரம்பித்து விட்டார்கள். வேகத்துடன் வரும் வெள்ளத்தில் எதிர் நீந்துவதற்கு யாராலாகும்? ஆயினும் நாம் மிக்க வணக்கத்துடன் ஆண்-பெண்களின் பெற்றோர்களேக் கேட்டுக்கொள்வது ஒன்றுண்டு. வரதக்ஷிணே முதலிய சிரமங்களுக்கு உள்ளாவதால், உங்களே முன்போல் ஐந்து நாட்களும் அன்னதானம் செய்து ஆநந்தமாக ஆசீர்வாதம்வரை நடத்தும்படி நாம் சொல்லவில்லே. விவாஹ தினத்தன்றே ஆசீர்வாதத்தை நீங்கள் நடத்திவிடுவதால், பந்துக்கள் ஊர் சென்று விடுவார்கள். ஔபாஸனத்தை மட்டிலும் ஐந்து நாட்கள் நடத்திச் சேஷ ஹோமத்தை முடித்து விடுவதில் செலவும் ச்ரமமும் அதிக மேற்படுவதற்கில்லே. சிறிது செலவு செய்யவும் நாங்கள் அசக்தர்களென்றுல் வாத்தியார் மட்டிலும் வைத்துக்கொண்டும் பூர்த்தி செய்துவிடலாம். பரம ஏழைகளும் பெரும் பணக்காரர்களும் நடத்தும்படியாகவன்றே மந்த்ரங்களோடும் தந்த்ரங்களோடும் நம் வைதிக கார்யங்கள் அமைந்திருக்கின்றன?

தனம் படைத்த சக்தர்கள் தானே பொருள் வழங்குவது வழக்கமாயிருந்தது. அசக்தரான நீங்கள் செய்வதைப் பார்த்துச் சக்தரான தனிகர்களும் கலியாணப் பிள்ளேகளுக்குச் செய்யும் பெருஞ்செலவான வரதக்ஷிணேயைத் தவிர வைதிகர்களுக்கு கொடுக்கும் வேறு தக்ஷிணேயையும் நிறுத்திவிடுகிறுர்களே! இதனுல் நீங்கள் செய்யும் கார்யம் வ்யர்த்த மாவதோடு, இதரர்களும் அவ்வழி செல்லுவதற்கு நீங்களே காரணமாவதால், நம் முன்னுேர்கள் செய்துவந்த வழிகளே அடியொற்றிக் கூடிய வரையில் சாஸ்திர விரோதமும் பழைய பழக்க வழக்கங்களுக்கு விரோதமுமில்லாமலும் நாம் நடந்து கொள்வதால் "வனக்ஷ்மாஸ்யா" என்ற செங்கோலுடைய திருவரங்கச் செல்வன் திருவுள்ளமும் உகப்பதோடு, அதன்

மூலமாக நம் குழந்தைகளான வதூவரர்களுக்குக் கிடைக்கும் க்ஷேமத்தை நாம் இழவாமலிருப்பதும் கூடும். இவ்விஷயத்தை ஓரிடத்தில் த்வேஷத்தினலாவது, ஒன்றில் அபிநிவேசத்தினலாவது எழுதவில்லை என்று உறுதியாய்ச் சொல்லுகிறேன். இக்காலத்தில் சாஸ்திர விருத்தங்களான பல கார்யங்களை நாம் செய்வதில் இதுவும் ஒன்றென்று எதிர்வாதம் சொல்லலாம். அப்படியாகில் நாம் உத்யோகம் பெறுவதற்குத் தடையாயிருக்கும் ப்ராம்மண்யத்திற் குரிய அடையாளங்களில் சிகை முதலியன போனது போக,மீதியிருக்கும் பூணூல் முதலியவற்றையும் அறவே ஒழித்து விடலாம். நெற்றியிலிருக்கும் குறிகளையும் அழித்து விடலாம். இவைகள் எங்களுக்கு இஷ்டமே என்று சொல்பவரிடம் நமக்கொன்றும் சொல்ல இடமில்லை. ஏதோ கூடுமானவரையிலும் நற்செய்கைகளைச் செய்யக்கூடுமென்பவர்களுக்கே இதைத் தெரிவித்தோம். இவ்வேக தின விவாகத்திற்கு ஏதாவது தர்மசாஸ்திரங்களில் ஆதாரமிருப்பதாக எவரேனும் தெரிவிப்பரேல் அவர்களுக்கு யாம் தலையல்லால் கைம்மாறிலம்.

ஸ்ரீ:

ஸ்ரீ வரதராஜ பஞ்சாஶத்

[ஸ்ரீ. உப. ஏ. வி. கோபாலாசார்யர், அட்வோகேட். திருச்சி]

𑌦𑌿𑌕𑍍𑌪𑌾𑌲𑍇𑌷𑍁 𑌗𑌿𑌰𑌿𑌶𑍇𑌷𑍁 𑌚𑌤𑍁𑌰𑍍𑌮𑍁𑌖𑍇𑌷𑍍𑌵-
𑌪𑍍𑌯𑌵𑍍𑌯𑌾𑌹𑌤𑌾 𑌵𑌿𑌧𑌿𑌨𑌿𑌷𑍇𑌧𑌮𑌯𑍀 𑌤𑌵𑌾𑌜𑍍𑌞𑌾 ।
𑌹𑌸𑍍𑌤𑍀𑌶 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌨𑍁𑌪𑌾𑌲𑌨𑌲𑌙𑍍𑌘𑌨𑌾𑌭𑍍𑌯𑌾𑌂
𑌪𑍁𑌂𑌸𑌾𑌂 𑌶𑍁𑌭𑌾𑌶𑍁𑌭𑌮𑌯𑌾𑌨𑌿 𑌫𑌲𑌾𑌨𑌿 𑌸𑍂𑌤𑍇 ॥ 13 ॥

𑌹𑌸𑍍𑌤𑍀𑌶—ஆனைக்கு (திக்கஜங்களுக்கு) ஈசனே!, 𑌦𑌿𑌕𑍍𑌪𑌾𑌲𑍇𑌷𑍁—திக்பாலகர் விஷயத்திலும், 𑌗𑌿𑌰𑌿𑌶𑍇𑌷𑍁—சிவர்களிடத்திலும், 𑌚𑌤𑍁𑌰𑍍𑌮𑍁𑌖𑍇𑌷𑍍𑌵𑌪𑌿—நான்முகர்களிடத்திலும், 𑌅𑌵𑍍𑌯𑌾𑌹𑌤𑌾—தடங்கலில்லாத, 𑌵𑌿𑌧𑌿𑌨𑌿𑌷𑍇𑌧𑌮𑌯𑍀—'இதைச் செய், இதைச் செய்யாதே' யென்று விதிநிஷேத ஸ்வரூபமான, 𑌤𑌵—உம்முடைய, 𑌆𑌜𑍍𑌞𑌾 கட்டளையானது, 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂-எப்பொழுதும், 𑌅𑌨𑍁𑌪𑌾𑌲𑌨𑌲𑌙𑍍𑌘𑌨𑌾𑌭𑍍𑌯𑌾𑌂—அனுஷ்டிப்பதாலும் மீறுவதாலும், 𑌶𑍁𑌭𑌾𑌶𑍁𑌭𑌮𑌯𑌾𑌨𑌿—ஸுகதுக்க ப்ரசுரமான (ஸுகதுக்க ரூபமான), 𑌫𑌲𑌾𑌨𑌿—பலங்களை, 𑌸𑍂𑌤𑍇-விளைவிக்கிறது.

1. வேதங்கள், ஸர்வகாரணப் பொருளென்று உம்மைத் தாத்பர்யத்துடன் விரும்பிப் பேசுகின்றனவென்றார். இதனால் இவர்தான் எல்லாருக்கும் பலன்களைக் கொடுப்பவர் என்றது எப்படி ஏற்படும்? ப்ரஹ்ம சிவாதிகள் பலன்களைக் கொடுக்கும் வரதனாக விருக்கலாகாதோ? இதற்குப் பதில் கூறுகிறார். ஸர்வ காரணமான பொருள், '𑌏𑌕𑌮𑍇𑌵𑌾𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌂' என்றபடி ஒன்றான பொருள். அது ஸ்வயம் ஸ்வரூபத்தால் அநேக மாகாது. ஒவ்வொரு ஸ்ருஷ்டியில் காரணப் பொருள் வேறாக மாறாது. ப்ரஹ்ம சிவாதிகள் மாறுகிறவர்கள்; அநேகர்கள். 'மணல்களை எண்ணலாம்; கடந்துபோன ப்ரஹ்மாக்களை எண்ணமுடியாது' என்று ப்ரமாணம் பேசுகிறது. உம்மை நீண்டகால மறிந்து உம்முடைய ஆஜ்ஞைகளான யஜ்ஞ தாந தபஸ் முதலிய கட்டளைகளை யநுஷ்டித்து, உம்முடைய நிஷேதங்களைக் கௌரவித்து, உம் ஆஜ்ஞையை மீறாமலிருந்து உமது ப்ரீதியைப் பெற்று, உம்மிடமிருந்து ப்ரஹ்மாதி பதங்களைப் பெறுகிறார்கள். அவர்களுக்கும் அவர்கள் அதிகாரங்களை அநுக்ரஹிப்பவர் நீரே. (2) வேதங்கள் என்னை ஆசைப்படுவதற்குக் காரண மென்ன? வேதங்கள் ஆசைப்பட்டதால் நான் வரதனென்று எப்படி யேற்படும்? இதற்குப் பதில் கூறுகிறார். வேதங்கள் ஆயிரம் மாதாபிதாக்களை விட ப்ரஜைகளிடத்தில் வாத்ஸல்ய முடையவை. ப்ராணிகளைத் தங்கள் குழந்தைகளாக நினைத்து, நல்ல குழந்தைகளுக்குப் பயன்களைக் கொடுத்தும், துஷ்ட குழந்தைகளைச் சிக்ஷைகளால் சீர்திருத்தியும், உலக மென்னும் குடும்பத்தைப் பரிபாலித்து வருகின்றன. தங்கள் குழந்தைகளுக்கு நல்ல பயன்களைக் கொடுத்து ஸம்ரக்ஷிக்கவும், குற்றத்துக்குத் தக்க சிக்ஷைகளால் சீர்திருத்தியும், அவர்களுக்கு ஹிதத்தைச் செய்வதில் வாத்ஸல்யம் மிகுந்த வேதங்களுக்கு ஆசையிருப்பது ஸஹஜம். குழந்தைகள் விஷயமான அந்த ஆசை பலன்களைக் கொடுக்கும் ஓர் வரதப்பொருளால் தான் பூர்த்தியாகும். ஸ்ருஷ்டி ஸ்திதிகளுக்குக் காரணந்தான் பலத்தைக் கொடுக்கும் தத்வம். ஆகையால் பரமகாரணமான தத்வத்தில் வேதங்களுக்கு ஆசையிருப்பது ஸஹஜம். (3) வேதங்களுக்கு மஹிமை யெல்லாம் ஜநங்களுக்கு வேண்டிய பலன்களை யடையும் வழியைக் காட்டி, அவைகளை யடையச் செய்வது தான். அந்தப் பலன்களுக்கெல்லாம் வரதனே மூலமாகையால், வரதனிடம் வேதங்களுக்கு நிரதிசயமான ஆசை. பலன்களைக் கொடுத்து ரக்ஷிக்க வேண்டிய தங்கள் மஹிமை வரதன் அதீநம். (4) ச்ருதிகள் காரணப்பொருளின் ஆஜ்ஞை. ஆஜ்ஞையைப் பரிபாலிப்பவருக்கு இன்பங்களையும், மீறினவர்களுக்கு சிக்ஷையையும் கொடுப்பதால் தான், அதன் ஸ்வரூபம் [illegible]கும். பலன்களைக் கொடுக்கும் வரதனால் தான் ஆஜ்ஞாரூபமான வேதத்தின் ஸ்வரூபம் ஸித்திக்கும். தன் ஸ்வரூபமும் மஹிமையும் [illegible]

தற்கு மூலமான வரதனிடத்தில் வேதங்களுக்கு ஆசை ஸஹஜம். இந்த உபகாரத்தையிட்டும் அவரிடம் ஆசை. அடுத்த ச்லோகத்தில் வேதங்களை ஆபத்தில் ரக்ஷிப்பது முதலிய உபகாரங்களைக் கூறப்போகிறார். அந்த உபகாரங்களாலும் வரதனிடம் ஆசை. 'உஶஂதி' என்று கூறியதை யிப்படியெல்லாம் ஸமர்த்திக்கிறார்.

ஹஸ்தீஶ!—திக்கஜங்கள் உம்மை இந்த மலையில் அர்ச்சித்துப் பேறு பெற்றன. திக்கஜங்கள், அருகேயுள்ள திக்பாலர்களை ஆசாதிபரை விட்டுவிட்டு இங்கே வந்து உம்மை அர்ச்சித்தன. இந்தத் திக்பாலர்களில் ஈச்வரனும் சேர்ந்தவர். அவரையும் விட்டு விட்டுத் திக்கஜங்கள் உம்மிடம் வந்தன என்பதை இந்த ஸம்போதநம் அழகாகக் காட்டுகிறது.

ஆஶாதிபெஷு—திக்பாலர்கள் விஷயத்திலும். 'ஆஶா' என்பது திக்கையும் சொல்லும்; ஆசை யென்னும் மனோரதத்தையும் சொல்லும். 'ஆஶாமோதகம்' என்பதற்கு மாநஸக் கொழுக்கட்டை என்று பொருள். அதுபோ லிவர்கள் மனோரதத்தால் (ஆசையால் மட்டும்) அதிபர்களேயொழிய, உண்மையில் அதிபர்களல்ல ரென்றும் இந்த ஆசா பதம் காட்டும். 'ஆசைப் பெருக்கால் சிலர் ஈச்வரனை ஸ்வராஜாவாக அபிமானிக்கிறார்கள்' என்றார் ஸ்ரீ பட்டர். பக்தர்களுடைய ஆசையை நிறைவேற்றும் ஆதிபத்ய மிவர்களுக்கு உண்மையிலிருந்தால், ஏன் அவர்க ளருகாமையிலுள்ள திக்கஜங்கள் (ஆசாகஜங்கள்) உம்மிடம் ஆசைப்பட்டு வந்து உம்மை அர்ச்சிக்க வேணும்? 'ஆஶாஃ ஶ்ரிதிம்' என்கிற தேவநாயக பஞ்சாசத் ச்லோகத்திலும் ஆசா சப்தத்திற்கு இரண்டு பொருளும் விவக்ஷிதம்.

கிரிஶெஷு—பஹுவசநத்தால் அந்தந்த கல்பங்களிலும், அந்தந்த அண்டங்களிலும், வேறு வேறு ஈச்வரர்களும், வேறு வேறு சதுர்முகர்களுமுண்டென்பதை ஸூசிக்கிறார். இங்கே 'கிரிஶ' என்னும் பதத்தால் அருகேயுள்ள கைலாஸகிரியை விட்டுவிட்டு நீர் வஸிக்கும் அத்திகிரிக்கு வந்ததை ஸூசிக்கிறார். கிரிஶரும் ஓர் ஆசாதிபரே. மலையில் ஜடாமண்டலதாரியாய்த் தபஸ் செய்து ஸித்திகளைப் பெறுவதும் ஸூசிக்கப்படுகிறது. 'ஸாதக வேஷம் தலையிலே தோற்ற' என்று ஈடு.

ஶதாங்கெஷ்வபி—"நான்முகனை நாராயணன் படைத்தான், நான்முகனும் தான் முகமாய்ச் சங்கரனைத் தான் படைத்தான்" என்கிற க்ரமத்தில் இவர்களுக்கு ஸ்ருஜ்யத்வம். நான்முகங்களால் நான்மறையைக் கோஷித்துக்கொண்டிருக்கும் ஸாதகர் இவர். இவர் செய்த அச்வமேத க்ருதுவில் இவர் நான்முகங்களாலும் நான்கு வேதங்களையும் கோஷித்து உம்மை ஸாக்ஷாத்கரிக்கப் பெற்றார்.

அவ்யாஹதா—தடுக்கத் தடையில்லாத; ஒருவராலும் மீறக்கூடாது 'ஆப்ரஹ்மகீடமவ்யாஹதஶாஸநோ மே' என்று மேலே ஸாதிக்கப் போகிறார். தேவாதி ராஜனானதால் உம்முடைய ஆஜ்ஞையை மீறக்கூடிய தேவரில்லை.

விதிநிஷெதமயீ—'இன்ன கர்மத்தைச் செய், இன்னதைச் செய்யாதே' என்னும் விதிநிஷேத ஸ்வரூபமான ப்ரவர்த்தகமும் நிவர்த்தகமுமான வேதக் கட்டளைகள். இங்கே 'மயீ' என்னும் விக்ருதிக்கு 'ஸ்வரூபம்' என்பது பொருள். (ஸ்வார்த்தம்) விதி ஸ்வரூபமும் நிஷேத ஸ்வரூபமுமான.

தவ ஆஜ்ஞா—உம்முடைய கட்டளை. த்ரயீ என்றும் த்ரிவேதீ என்றும் சொல்லப்படும் மூன்று வேதங்களும் உம்முடைய ஆஜ்ஞைதான். 'ஶ்ருதிஃஸ்ம்ருதிர்மமைவாஜ்ஞா' என்றார் பெருமாள். முன் ச்லோகத்தில் சொன்ன 'அநபாய வாக்குகள்' உம்முடைய ஆஜ்ஞையே. பெருமாள் 'மமைவாஜ்ஞா' என்று ஸாதித்ததை 'தவாஜ்ஞா' என்று பெருமாளிடம் பேசுகிறார். 'உம்முடைய ஆஜ்ஞை தானென்று சொன்னீரே' என்று ஞாபகப்படுத்துகிறார். உம்முடைய ஆஜ்ஞையான த்ரயீ உம்மைத்தானே ஆசைப்படும். தேவராஜனுடைய ஆஜ்ஞை.

நித்யம்—எப்பொழுதும்; ஸர்வ காலமும். ப்ரஹ்ம ஞானம் வந்த பிறகு ஒருவன் நித்ய கர்மங்களை யநுஷ்டிக்க வேண்டியதில்லையென்றும், அவன் வேதகிங்கர னாகமாட்டா னென்றும் சிலர் சொல்லுவர். உபாயாங்வயத்திற்குப் பிறகு 'ஆஜ்ஞாமேதாமநுவர்த்தேத' என்பது தான் ந்யாயம். நித்ய கர்மம் அநித்யமாகலாமோவென்று ஸூசநம்.

அநுவர்த்தநலங்கநாப்யாம்—விதிக் கட்டளைகளை யநுஷ்டிப்பதாலும், நிஷேதக் கட்டளைகளை மீறாமல் கௌரவிப்பதாலும், விதிக் கட்டளைகளை யநுஷ்டிக்காமல் மீறுவதாலும், நிஷேதக் கட்டளைகளை நிஷித்த கார்யங்களைச் செய்து மீறுவதாலும்.

பும்ஸாம்—சேதநர்களுக்கு.

ஶுபாஶுபமயாநி—நல்லதும் பொல்லாததும் சுப மயமானதும் அசுப மயமானதும் உள்ள ஆஜ்ஞையை அநுபாலனஞ் செய்வதற்கு சுப மயமான பலன்கள். ஆஜ்ஞையை உல்லங்கனம் செய்வதற்கு அசுப மயமான பலங்கள். இங்கே 'மய' என்கிற விக்ருதிக்குப் 'பெரும்பான்மையாய்' 'ப்ரசுரமாய்' என்று ஒரு பொருள். புண்ய பலங்களில் (ஐஹிக பலன்களும் ஸ்வர்க்க போகங்களில்) அசுபமும் கலந்திருக்கும். பெரும்

பான்மையாகச் சுபமென்று சொல்லலாம். முழுவதும் சுபமாகாது. அப்படியே அசுப பலங்கள் பாபத்தைக் கழிப்பதாலும் திருத்துவதாலும் ஹிதமுமாகும். மோக்ஷமென்னும் பலத்தைக் கொள்ளுகையில் 'மய' என்பதற்கு ஸ்வார்த்தத்தைக் கொண்டு சுப ஸ்வரூபம் துக்கம் கலக்காத சுபமே என்று பொருள். ப்ராசுர்யப் பொருளைக் கொண்டு முழுவதிலும் சுபமென்றும் சொல்லலாம். ஆஜ்ஞையை உல்லங்கனம் செய்து 'ஜ்ஜெ ராஹீ' 'த்விஷதஃ க்ரூராந்' என்றபடியில் இருந்தால், 'க்ஷிபாமி ஜஸ்ரம்' என்கிற க்ரமத்தில் சுபம் கலவாத அசுப பலமாகவே யிருக்கும்.

ஸுநிஸ்ருதே—பலங்களைப் பெறுகின்றது. தாயைப்போல் வத்ஸலையான வேதம் நம்மைப் பெறுவிட்டாலும் நமக்காகப் பலங்களைப் பெறுகின்றது. என்றும் பலங்களைப் ப்ரஸவித்துப் பிள்ளைகளுக்குக் கொடுக்கிறது. உம்முடைய ஆஜ்ஞையாகிய வேதம் பலனைக் கொடுக்கிறபடியால் நீர்தான் கொடுக்கும் வரதன் என்பதில் ஐயமுண்டோ? கிரிசர்களும் சதுர்முகர்களும் ஆசைகளுள்ள அதிபர்கள். அவர்கள் ஆசைகள் படும் அதிபர்களேயல்லது, ஆசைப்படுவதைக் கொடுக்கும் அதிபர்களல்லர். ஆசைப்படும் அதிபர்களுக்கு உம்முடைய ஆஜ்ஞையாகிய வேதம் பலங்களைப் பெற்றுக் கொடுக்கிறது.

இந்த ச்லோகத்தில் ஸ்வாமி திருவுள்ளத்திலுள்ள ஸூக்ஷ்ம விஷயங்களைக் கவனிக்கவேண்டும். வரதன், ப்ரணதார்த்திஹரன், பேரருளாளன், தேவராஜன் என்ற திருநாமங்கள் அவனுக்கு அர்வர்த்தமாகும் வழியைக் காட்டவேணும். 'ஸுமூதே உபபத்தேஃ' என்று பலங்களையெல்லாம் கொடுக்கும் ப்ரஹ்ம லக்ஷணமும், 'வைஷம்ய நைர்க்ருண்யே ந ஸாபேக்ஷத்வாத்' என்ற ஸூத்ரப்படி பக்ஷபாதமில்லாமையும், நைர்க்ருண்யம் (நிர்த்தயத்வம்) இல்லாமல் பேரருள் மயமாயிருப்பதையும் இங்கே நிரூபிக்கிறார். 'ஸுமூதேஃ' என்னுமிடத்தில், சுப பலம் அசுப பலம் எல்லாம் ப்ரஹ்மம் கொடுப்பதா? அசுப பலத்தைக் கொடுப்பவர் வரதராவரோ? அசுபம் வரமாகுமோ? கொடுமையான கஷ்டங்களை ஸ்ருஷ்டிப்பவர் நிர்க்ருணர் (தயையில்லாதவர்) ஆகாரோ? பேரருளாளரவரோ? தர்மாதர்மங்கள் தான் பலங்களைக் கொடுக்குமென்று ஜைமினி மகர்ஷி பேசவில்லையோ? அப்பக்ஷத்தையும் ப்ரஹ்மம் பலத்தைக் கொடுக்கிறதென்பதையும் எப்படி ஒன்றுபடுத்துவது? இத்தனைக்கு மிங்கே ஸமாதானம் அற்புதமாகக் காட்டப்படுகிறது.

தர்மாதர்மங்களுக்கு மூலம் வேதம். 'தேஹாச்ரவிணோ யுக்திஸிஷும்' சோதநா ஸூத்ரத்தில்போல் இந்த ஸூத்ரத்திலும் தர்மம் அதர்மம் என்று இரண்டுவிதமாயும் பதம் பிரிக்கலாம். தர்மாதர்மங்களுக்குக் காரண

ணமாகிய வேதம் உம்முடைய ஆஜ்ஞை. நீர் ஆஜ்ஞை செய்யும் ப்ரபு. உம் கட்டளையை யநுஷ்டிப்பதாலும் மீறுவதாலும் முறையே சுபாசுப பலன்கள் உண்டாகின்றன. தர்ம மென்பது வேத சோதனையா லறியப்படுவ தென்றார் ஜைமினி. சோதனையென்பது ஆஜ்ஞை. 'சோதநா' சப்தத்தின் பொருளை யறியவே ஜைமினி பாதராயணர்கள் பக்ஷமொன்றே யென்பதை ஆஜ்ஞா என்னும் பதத்தால் ஸூசிக்கிறார். யாருடைய ஆஜ்ஞை? ஆஜ்ஞை = சோதனை = கட்டளை. இதெல்லாம் ஸஸம்பந்திகம். ஒரு சேதநருடைய ஆக்ஞையாகத்தானே யிருக்கவேண்டும். 'தவ ஆஜ்ஞா' என்பது, ப்ரபுவான ஒரு சேதநனுடைய ஆஜ்ஞையல்லாமல், ஆஜ்ஞை யென்பது தானாகத் தனியாக ஸம்பவியாது என்று ஸூசிக்கிறது. உம்முடைய ஆஜ்ஞை பலங்களைக் கொடுக்கிறதென்பதற்கும், நீர் பலங் கொடுக்கிறீ ரென்பதற்கும் என்ன பேதம்? ஜைமினி பக்ஷமும் உம்மைத்தான் வரதனாக ஆசைப்படுகிறது. வேத மாசைப்படுவதோடு மட்டுமல்ல; நீரீச்வரராக நினைக்கப்படும் ஜைமினியும் உம்மையே வரதனாக ஆசைப்படுகிறார். வரதப்பெருமாள் அசுபங்களைக் கொடுப்பரோ? அசுபங்களைக் கொடுப்பவர் அருளாளராகவேமாட்டார். அதிலும் பேரருளாளராவரோ? இதற்கு அழகான ஸமாதானங்களை ஸூசிக்கிறார். சுபம் என்று பேசும் புண்ய பலன்களைக் கொடுப்பவர்தான் வரதன் ஆவார் என்று சிலர் நினைப்பு. சுபமென்று அவர்கள் நினைப்பது அசுபமிச்ரமே. சுபவிகாரமென்றும் சொல்லலாம். அசுப பலத்தைச் சுபமென்று சொல்லுவது உண்மையாகும். அது சிக்ஷாரூபமாகில் பாபத்தைக் கழித்துச் சுத்தியைக் கொடுக்கும். ஸம்ஸாரத்தி லாசையைக் குறைக்கும். சுபபலன்கள் புண்யத்தைக் கழிக்குமேயல்லாது பாபத்தைக் கழிக்காது. ஹோமத்தால் மேன்மேல் ஹோமத்தி லாசையே அதிகமாகும். ஸம்ஸாரம் நீளும். வைராக்யம் அகலும். ஆகையால் நீங்கள் நினைக்கிறபடி சுபாசுப நிர்ணயம் செய்யலாகாது. 'மய' ப்ரக்ருதியால் இது ஸூசிதம். இன்னுமொரு வழி யுள்ளதையும் ஸூசிக்கிறார். வரதா! நீர் கொடுக்கவில்லை. மோக்ஷமென்னும் வரத்தை (உத்க்ருஷ்டத்தை) நீர் கொடுக்கின்றீர். அதில்லாத சுபாசுப பலங்களை உம்முடைய ஆஜ்ஞை கொடுக்கிறது. நீர் நேராகக் கொடுக்கவில்லை. 'தவ ஆஜ்ஞாஸுதே' நான் கொடுத்தாலென்ன என் ஆஜ்ஞை கொடுத்தாலென்ன என் தலையில் விடியாதோ? விடியாது. ஸ்வாமி! நீர் ஆஜ்ஞை பண்ணினீரே யொழிய ஆஜ்ஞையை மீறச்சொல்லவில்லை. அதை அநுஷ்டிப்பதும் மீறுவதும் புமான்கள் செயல்தான். 'பும்ஸாம் அநுஷ்டாநம் லங்கநம்' என்றும் அர்வயம் திருவுள்ளம். ஆஜ்ஞையைப் பரிபாலிப்பதும் மீறுவதும் அவர்களுடைய க்ருத்யம். உம்முடைய ஆஜ்ஞை தானாக நினைத்தபடி பலம் கொடுப்பதில்லை. பலத்தை யடையும் புமான்களுடைய

அநுபாலநத்தையும் லங்கநத்தையும் அபேக்ஷித்துத் தானே உம்முடைய ஆஜ்ஞை பலங்கொடுக்கிறது. அவரவர்கள் நல்வினை தீவினைகளை யபேக்ஷித்துத் தானே ஆஜ்ஞை பயனளிக்கிறது. நல்ல பலன் கெட்ட பலன் என்றும் பல வைஷம்யம் அவரவர்கள் தலையிலேயே சுமரும். ஸூத்ரத்தில் 'ஸாபெக்ஷத்வாத்' என்று சொன்னதை 'பும்ஸாமாஜ்ஞாநுபாலநாபேக்ஷ்யம்' என்று புமான்களுக்கு சுபாசுப பலன்களைக் கொடுப்பதற்கு த்வாரமான ஹேது புமான்களுடைய ஆஜ்ஞாநுபாலனங்களே என்று மூன்றும் வேற்றுமையால் ஸூசிக்கிறார். இது நடுவேயுள்ள த்வாரமான காரணம். 'பும்ஸாம்' என்பதை அநுபாலனங்களான செய்கைகளுக்கும் சுபாசுப பலங்களுக்கும் நடுவிலே வைத்தது வெகு அழகு. இரண்டோடும் ஒட்ட வேணும். அவர்களுடையும் பலங்கள் அவர்களின் செய்கைகளுக்கே பலம். செய்வினைக்குத் தக்க கூலி கொடுத்துக்கொண்டிருந்தால், அருளெப்படி கூடும்? நைர்க்ருண்யம் எப்படி தள்ளப்படும்? இதற்கு நைர்க்ருண்ய ஸூத்ரத்திலிருந்தே மிக வழகியதொரு ஸமாதான முண்டு. அது புதிதாயிருந்தாலும் எம்பெருமானாருக்குத் திருவுள்ளமே. ஸித்தாந்தத்திற்கு மிக அநுகூலமாம். அதென்ன? நைர்க்ருண்யமில்லை. பேருளே யுள்ளது. எப்படி? 'ஸாபெக்ஷத்வாத்' பலத்தை யநுபவிக்கும் சேதநருடைய அபேக்ஷாஸாபேக்ஷத்வாத். வரதன் ஏன் நிரதிசயாநந்தமான மோக்ஷமென்னும் பலத்தைக் கொடுக்கவில்லை? ஏன் ஸம்ஸாரமெனும் நரகத்தில் வருந்தச் செய்ய வேணும்? பரமாத்மாவின்ஸ்தானமாகிய பரமபதத்தை உத்தேசித்து ஸ்வர்க்காதி போகங்களும் நரகந்தானே? ஏன் தாமாகப்பேருளைக்காட்டக்கூடாது? ஏன் தயாக மோக்ஷத்தை யளிக்கப் போகாது? இதற்குப் பதில்:—மோக்ஷ போக்தாவிற்கு மோக்ஷாபேக்ஷை வேணுமே. அவன் உன் அபேக்ஷையை மட்டும் அபேக்ஷித்துப் பலத்தை யளிக்கக் காத்துக்கொண்டிருக்கிறான். உனக்கே உன்னிடம் தயை உண்டாவதையும், உன் க்ஷேமத்தை நீயே அபேக்ஷிப்பதை மட்டும் அவன் எதிர்பார்க்கிறான். உனக்கே உன்னிடம் தயையில்லாமற் போனால் வரதனை ஏன் 'நிர்த்தயன்' 'நிர்க்குணன்' என்கிறாய்? உன் விஷயத்தில் நீயே அருள் செய்வாயாக. ஸம்ஸாரம் தொலைதலையும் மோக்ஷாந்த ப்ராப்தியையும் அபேக்ஷிப்பாயாக. செய்வினைக் கடலை அருளென்னும் ப்ரளய காலாக்னியால் வற்றடித்து வரத்தைக் கொடுப்பான். 'ஸாபெக்ஷத்வாத்' என்பதற்கு எதன் அபேக்ஷையென்கிற அபேக்ஷை (ஆகாங்க்ஷை) யுண்டு. 'வைஷம்யநைர்க்ருண்யே' என்கிற முதல் பதத்திலிருந்து 'ப்ராணிகள் செய்கைகளின் வைஷம்யத்தால்' என்று ஒருவிதமாக அந்த ஆகாங்க்ஷையைப் பூரணம் செய்து, வைஷம்யத்தைப் பரிஹரித்து நைர்க்ருண்யத்தையும் பரிஹரிக்கலாம். ஆனால் பேருளை ஸாதிக்க முடியாது. நைர்க்ருண்யமில்லை யென்றவிடத்தில் பேருளுண்டென்று அறுதி

யிடுவது அழகாகும். பேருளை யுபபாதித்தால், நைர்க்ருண்யத்தின் நிஷேதம் த்ருடப்படும். நிர்தயஸ்வபாவம் தயாஸ்வபாவமாகும். ஸ்வாபாவிகஸ்வபாவம் நமது. உன்னை ரக்ஷிக்க உனக்கு அபேக்ஷை யுதிப்பதை அவன் ப்ரதீக்ஷித்துக்கொண்டிருக்கிறான். உன் மனதில் உன்னிடம் உனக்கு தயை யுதித்ததும், அவன் தயை உன்னைத்தேடி ஓடிவந்துஉன்னை வரிக்கிறது. பிறகு உன் க்ஷேமத்திற்கு ஆகவேண்டிய க்ருஷிகளை அவனே முதன்மையாயிருந்து செய்விக்கிறான். ஸதா காருணிகனாயிருப்பினும் ரக்ஷாபேக்ஷை பண்ணுகிறான் என்று ப்ரமாண வசனத்தை இங்கு ஸூத்ரகாரர் ஸ்மரித்து 'ஸாபெக்ஷத்வாத்' என்று ஸூத்ர மமைத்தார். 'ரக்ஷாபேக்ஷாப்ரதீக்ஷத்வாத் ரக்ஷாபேக்ஷாஸாபேக்ஷத்வாத்—ப்ராணிரக்ஷாபேக்ஷாஸாபேக்ஷத்வாத்' என்று பொருள். 'ஸாபெக்ஷத்வாத்' என்பதற்கு 'ப்ரதீக்ஷிப்பதாலே' என்று பொருள். எதன் ப்ரதீக்ஷையென்ற ஆகாங்க்ஷையை இந்தப் பதத்திலிருந்தே பூரணம் செய்யக் கூடுமாகில் அது மிக ஸ்வரஸம். இங்குள்ள 'அபேக்ஷா' சப்தமே ப்ரமாண வசநத்தி லுள்ளது. 'ப்ரதீக்ஷ' யென்பதற்கு அபேக்ஷை யென்பது பொருள். 'ப்ரதீக்ஷதே' என்பதும் 'அபேக்ஷதே' என்பதும் ஒன்றே. 'ரக்ஷாபேக்ஷாமபேக்ஷதே' என்றே பொருள். உன் காப்பை—உன் துயர் அறுவதை—நீ அபேக்ஷித்த உடனே ரக்ஷாபாரத்தை ஏற்றுக்கொண்டு என் பாபக் கடலை வற்றடித்து, உன்னை ஸ்வாராஜ்யத்தில் அபிஷேசநம் செய்து, உன்னை ஆநந்திப்பித்துத் தானும் ஆநந்திக்கவன்றோ அவன் காத்துக்கொண்டிருக்கிறது. நீ உன் க்ஷேமத்திற்காகச் செய்யும் இந்த எள்ளத்தனை கிஞ்சித்காரத்திற்கு இத்தனை பேருதவி செய்வதிலும் பேருள் வேறுண்டோ? 'தயாஸிந்துர்யதி' என்று இந்த ஸூத்ரத்தில் ச்ருதியை யன்றோ ப்ரமாணமாகப் பேசி யிருக்கிறது. இந்த ஸ்ம்ருதி வசநத்தை எப்படி உதாஹரிக்கலாமென்று ஆக்ஷேபம் வரலாம். 'யமேவைஷ வ்ருணுதே தேந லப்ய:' என்ற ச்ருதியில், 'வேறு கதியில்லை யென்ற நிச்சயத்துடன் எவனொருவனையே சேதநன் ரக்ஷகனாக வரிக்கிறானோ அந்த (வரிக்கும் ஜீவனால்) அவன் (பரன்) அடையக் கூடியவன்' என்றும் பொருள் கொள்ளலாம். இந்த உபப்ரம்ஹணம் சேர்ந்த அந்த ச்ருதியை உதாஹரித்ததாகக் கொள்ளலாம். இந்த ப்ரமாண வசநத்தை யுதாஹரித்து ஸூத்ராக்ஷரயோஜனையில் ஸ்ரீ பாஷ்யாதிகளில் இப்படிக் காட்டாவிடினும், ரசநாநுபபத்யதிகரணத்தில் வ்யதிரேக ஸூத்ரத்தின் பாஷ்யத்திலும் டீகையிலும் இந்த ப்ரகாரமாக நிர்த்தயத்வ வாரணமும் தயாளுத்வ ஸாதனமும் செய்யப்பட்டிருக்கிறது. பராயத்தாதிகரணத்தில் அநுகம்பா லக்ஷணத்தை ஸாதித்தருளிய ஸாரஸ்வதி ச்லோகத்தின் சிந்தாமணியிலு மிப்படியே உபபாதித்துளது.

ஸூத்ரத்திற்கு இப்படி யோஜனை செய்வதின் சீர்மையை ரஸிகர் ஆராய வேணும். இங்கே பலாதிகரணத்தில் 'ஸம்ராஜ: ஸாநுகம்பஸ்ய வாத்ஸல்ய விதவிஷ: ஸாம்யஹாரிணோ வதாந்யஸ' என்கிற ச்லோகத்தை நினைக்க வேணும். 'ஸம்ராட்' என்று தேவராஜனை 'ஸாநுகம்பஸ' என்று பேரருளாளனை 'வதாந்யஸ' என்று வரதனைப் பேசுகிறார். முதல் ச்லோகத்தின் முடிவில் 'க்ருதார்த்தா:' என்றும் கடைசி ச்லோகத்தில் 'ஸகலஜந்மு:' என்றும் அந்த அதிகரணத்தில் வரதனைப் பேசுகிறார். 'ராம: ஶஸ்த்ரப்ருதாமஹம்' என்று கண்ணன் ராமனைப் பாடுவதுபோல், பெரிய பெருமாள் பாஞ்ச சன்ய க்ரமத்தால் ஸ்வாமி வாக்கைக்கொண்டு வரதனைப் பாடுகிறார்.

ஸ்ரீ:

ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் தனியன்

[திருவரங்கம் ஸ்ரீ உப. திருமலே தாதாசாரியர்.]

ஶ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி ॥

பெரியோர்களுடைய நியமநத்தைச் சிரஸா வஹித்து யதாமதி விஷய விசேஷங்களைப்பற்றி எழுதப்புகும் அடியேன், முதலில் இந்தத் தனியன் ச்லோகத்தைப்பற்றிக் கொஞ்சம் எழுதலாமென்று உத்தேசிக்கிறேன்.

காலக்ஷேபம் செய்யும் கிரந்தங்களில் சேராதபடியால் தனியன் என்ற பேர்பெற்ற போதிலும், இவ்வித ச்லோகங்கள் முதலில் ஆசார்யர்களாலே உபதேசிக்கப்பட்டுத் தினந்தோறும் அப்யஸிக்கப்பட்டு வருவதால், இவைகள் மந்திரங்கள் என்னப் பொருந்தும். திருமந்திரத்தில் திருவக்ஷரங்கள் எட்டாயிருக்க, இந்த ஸ்ரீதேசிகன் தனியனில் பதங்கள் தாம் எட்டாகவிருப்பது விசேஷித்து இந்தத் தனியனுக்குத் திருமந்திரத்திற்குப் போல ஸர்வாதிசாயியான ஒரு விசேஷமுண்டென்று காண்பிக்கிறது போலும். பலர் மற்ற மந்திரங்களை ஆவிருத்தி செய்து அவ்வம்மந்திர ப்ரதிபாத்ய தேவதைகளின் ப்ரஸாதத்தைப் பெறுவதுபோல, ஏதோ ஒரு அக்ரஹாரத்தில் இருந்த மஹான் ஒருவர் இந்த ச்லோகத்தையே மந்திரமாக்கி ஜபம் செய்து, ஸ்ரீதேசிகன் அநுக்ரஹம் பெற்றாரென்று பெரியோர் சொல்லக் கேட்டதுண்டு.

ஸ்ரீமாந்— பகவத் விஷயத்தில் மாத்திரமே பிராட்டி வைசிஷ்ட்யம் கூடுமாதலால், இங்கு இப்பதத்திற்கு உசிதமான வேறு அர்த்தத்தைப் பரிசீலிக்கப் புகும்போது அர்த்த ஸம்பத்தி என்கிற அர்த்தமும் இவ்விடத்தில் சேராதென்பது யாவருமறிந்ததே.

'ந வை ப்ராஹ்மணே ஶ்ரீரமதே'

என்று அச்வமேத ப்ராம்மணத்தில் ஓதினது அப்படியே நம் தேசிக சிகாமணியிடத்தில் காணப்பட்டதன்றோ? 'யமேவைஷ வ்ருணுதே' என்கிறவிடத்தில் ப்ரீதிரூபமான பக்திவிசேஷம் பண்ணவேணுமென்பதில் தாத்பர்யமென்று ஸ்ரீபாஷ்யத்தில் சொல்லப்பட்ட ஸூக்ஷ்மார்த்த ந்யாயத்தை அநுஸரித்து, 'ந வை ப்ராஹ்மணே ஶ்ரீரமதே' என்கிற இந்த வசனத்திற்கு, 'பிராம்மணன் அர்த்தத்தை ஆதரிக்கமாட்டான்; அதை வெறுப்பன்' என்பதில் நோக்கென்று பெரியோர்கள் கொள்வர்.

'க்ஷிதிய நயநஜம் ப்ருஶீதம் யநம் தயநம்'

இத்யாதி ஸாதித்த ஸ்ரீதேசிகனுக்கு அர்த்தத்தில் எவ்வளவு வைராக்யம் என்பது ப்ரஸித்தம். இனி:

'ஜ்யோவா யஜ்ஞப்ரேக்ஷி ஸர்வாநி। ஸா ஹி ஶ்ரீரம்ருதா ஸதாம்'

என்றபடி வித்யாவிசேஷ ஸம்ருத்தியைக் கணிசிக்கிறது இப்பதம் என்னலாம். ஆனால் அதிலும் அவ்வளவு ஔசித்யம் இல்லை என்று தோன்றுகிறது.

'இதி கவிதார்க்கிகஸிம்ஹஸ்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ய ஶ்ரீமத் வேங்கடநாதஸ்ய வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு'

என்று ஸ்ரீதேசிகன் தம் பிருதங்களுக்கும் திருநாமத்திற்கும் ஒரு க்ரமத்தை நியதமாய்க் காண்பித்திருக்க, இந்தத் தனியன் செய்த ஸ்ரீநயினாராசார்யர் தாமே 'கவிதார்க்கிகஸிம்ஹாய' என்கிற உபஸம்ஹார ச்லோகத்திலும், 'ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ராய' என்கிற மங்களாசாஸந ச்லோகத்திலும் வேறு க்ரமத்தை அநுஸரித்திருக்க, இவ்விடத்தில் க்ரமாந்தரத்தை ஆச்ரயித்ததிற்கு ஒரு காரண மிருக்கவேணும். அது திருவவதாரம் முதல் ஸ்வாமியினுடைய சரித்ரத்தை ஸங்க்ரகமாக அநுஸந்திக்கவேணுமென்கிற அபிஸந்தியாயிருக்குமென்று அடியேனுக்குத் தோன்றுகிறது. அப்படியாகில் பிருதுகள் கிடைப்பதற்கு முன்னமே ஜனனாந்தரம் பிதா இட்ட நாமத்தை முதலில் அநுஸந்திக்க ப்ராப்தம். ஆகவே முதலிலேயே 'வேங்கடநாதார்ய:' என்றார். இதற்கும் முன்புள்ளது 'ஸ்ரீமாந்' என்கிற பதம். இந்த 'ஸ்தாந' ப்ரமாணத்திற் கேற்றதான பொருள் கூற

வேணும். வித்யா ஸம்ருத்தி என்றால் அது அவதாரத்திற்கு முன்பு பொருத்தமுடையதன்று. விசேஷணாந்தரங்களாலே புனருக்தியும் ஏற்படும். ஆகையால் ஜ்ஞாநகடாக்ஷ ஸம்பத்தை உடையவர் என்று இவ்விடத்தில் விவக்ஷிதமான அர்த்தம். அதிலும் 'ஸோऽஹமாஜந்மஶுத்தாநாம்' என்று உபக்ரமித்து, ரகுமஹாராஜனுக்குக் கர்ப்பப்ரவேசம் ஏற்படுவதற்கும் முன், அவன் பிதாவான திலீபனுக்கு நந்திநீபரிசரண மூலமாக அதன் அனுக்ரஹத்தையும் ஆசார்யரான வஸிஷ்ட மஹர்ஷியின் அனுக்ரஹத்தையும் வர்ணித்து, 'ஆஜந்மஶுத்தி' என்பது ஜந்மாதாநத்திற்கும் முன்பே பித்ரு தம்பதிகள் பகவத்பாகவதாராதன மூலமாகப் பெறும் அவர்களுடைய பரமானுக்ரஹத்தினால் கிடைக்கக்கூடியதென்று காண்பித்தபடி ஸ்ரீதேசிகனுக்கு அவ்வித ஆஜந்மஶுத்தி உண்டாகுமாறு ஸ்ரீஅநந்தஸூரியும் ஸ்ரீதோதாரம்மையும் பரிபூர்ண பகவத்பாகவதானுக்ரஹம் பெற்றிருந்தமையால் ஜ்ஞாநகடாக்ஷமன்றிக்கே ஜந்மநிஷ்டமான கடாக்ஷமும் ஸம்ருத்தமாயிருந்ததென்று கொள்ளவேணும்.

'ஸ்ரீமத்வேங்கடநாதஸ்ய' என்று ஸ்வாமி தாம் ஸமஸ்தமாகவே ஸாதிப்பதை யநுஸரித்து இந்த விசேஷணம் 'வேங்கடநாதார்ய:' என்பதோடு மாத்திரம் அன்வயிக்கிறதென்று தோற்றுமாகிலும், இங்கு ஸமாஸமில்லாத ஸௌகர்யத்தைக்கொண்டு சில ரஸிகர்கள் 'ஸ்ரீமாந் கவிதார்க்கிககேஸரீ ஸ்ரீமாந் வேதாந்தாசார்யவர்ய:' என்று மற்றவைகளோடும் அன்வயித்து யதோசிதம் அர்த்தவிசேஷ வர்ணனம் செய்வார்கள்.

வேங்கடநாதார்ய:—ஆர்யபதம், இவ்விடத்தில் ஸ்தான ப்ரமாணத்தால் வேதாத்யயநத்திற்கு அதிகாரஸம்பாதகமான உபநயநத்தையும் அதன் பிறகு அநுஷ்டானோபயுக்தமாகச் செய்யப்பட்ட வேதாத்யயநத்தையும் பராமர்சித்து நிற்கிறது. அதில் வேங்கடநாத பதத்தோடு ஸமஸ்தமாய்க் கொண்டு, 'ஶ்வேதகேதுர்ஹாருணேய ஆஸ' [ச்வேதகேது உபநயனம் இல்லாமல் வெகுநாள் (12 வயது வரையில்) வெறுமனே இருந்தான்] என்பது போலன்றிக்கே, நாமகரணம் முதல் ஒவ்வொரு ஸம்ஸ்காரமும் நடந்து, பிறகு யதாகாலம் உபநயனாதிகளும் நடந்ததென்று காண்பிக்கிறது. இது ஸமாஸத்தினாலேற்பட்ட வஸ்து த்வனி.

கவிதார்க்கிககேஸரீ.—ஶப்தகவி அர்த்தகவி ரஸகவி என்று ஒவ்வொன்றிலே விசேஷம் பெற்றிருப்பர் மற்றைக் கவிகள். அவர்கள் எல்லோரையும் விஸ்மிதராக்கித் தோற்பிக்கும் ஸ்வாமி திருவாக்கு. இங்குள்ள ரஸாதி விஶேஷம் லோகோத்தரம் என்றனுபவிப்பதற்கு அதிகாரிவிஶேஷணம் வேதாந்தார்த்த நிஷ்கர்ஷமும், பகவத்பக்தியும். இது இல்லாமல் அநதிகாரி

களாயிருப்பவர் சொல்லும் வார்த்தை ப்ரலாபம். தார்க்கிககேஸரித்வமாவது:

'ஆவாதவீசிஶதவாதிநிதுஶ்ஶகேநேஷ்வபி
ஶாஸநீயபதம் ந விபக்ஷகேதோ:'

என்றபடி த்வைதாதிவாதிவாக்யங்களை ஶமிப்பிக்கவல்ல ஶாஸ்த்ரார்த்த நிஷ்கர்ஷமும், வாதகௌஶலமும், பவிஷ்யத்தான வாதிகதாவாக்யங்களும், ஸ்வாமி ஸ்ரீஸூக்தியைக்கொண்டு பரிஹரணீயங்கள் என்னும் விசேஷத்தை,

"ஆஸாதிதேऽபி ஸமயே ஜநகாதிபக்த்யா
ஸூக்திஸ்த்ருதா ஜநிதம் விஹிதாவஸ்ராந்தே ।
ஆஶாஸிதாஸ்தி தவஸாம் விஜயாய தேவ:
வஸ்த்ராச வதம்ஶ வபுரீதிவ ஸம்வதந்தீ ॥"

என்று வம்ஶோத்தரஸ்வாமி அனுஸந்தித்தார். ஒரு கவி கேஸரியும் ஒரு தார்க்கிககேஸரியும் இந்த அகண்ட பூமண்டலத்தில் ஒரு ஸமயம் இருக்கலாம். கவிதார்க்கிககேஸரீ இவர் ஒருவரே. காலத்ரயத்திலும் மற்றொருவர் இல்லை. இதுவரையில் இருந்த ப்ரஸித்த சாஸ்த்ரகாரர்களில் ஒருவரும் மஹாகவியா யிருந்ததில்லை. மஹாகவிகளா யிருந்தவர்கள் சாஸ்த்ரகாரர்களா யிருந்ததில்லை. கவித்வத்திற்கும் சாஸ்திர பாண்டித்யத்திற்கும் ஸ்வபாவத்திலேயே விரோதம். அந்த விரோதம் இவ்விடத்தில் இல்லை. இதனால் அவிகடிதகடநாஸாமர்த்த்யம் வ்யங்க்யம்.

கவிதார்க்கிகாணாம் கேஸரீ என்று ஷஷ்டீதத்புருஷ ஸமாஸம் இதுவே 'ஸிம்ஹாய கவிவாதிநாம்' என்று மங்களத்தில் பிரித்துக் காட்டப் பட்டது. இங்கு ஸிம்ஹமென்கிற பதம் ஶ்ரேஷ்டார்த்தகமாகக் கொள்ளத் தக்கதன்று.

'கவிதார்க்கிக கலபவ்ரஜகபஞ்ஜகஸிம்ஹோ'

என்கிறவிடத்தில் ஸிம்ஹ பதத்திற்குக் கொள்ளுகிற பொருளே இங்கும் கொள்ளத்தக்கது. ஸிம்ஹ வ்யாக்ர வ்ருஷபாதி ஶப்தங்களும் தகவயார்த்தக ஶப்தங்களும் ஶ்ரேஷ்டார்த்தத்தில் வருமென்று அமர கோசாதிகளில் சொல்லப்பட்டது. 'உபமிதம் வ்யாக்ராதிபி:' 'ஸ்யு: உத்தரபதே வ்யாக்ரபுங்கவர்ஷபகுஞ்ஜரா:' என்ற ஸூத்ரங்களால் விதிக்கப்பட்ட கர்மதாரய ஸமாஸ விஷயம். இங்கு 'கவிவாதிநாம்'

என்று ஷஷ்டீ கண்டோக்தையாகையால் அது ஒன்றுக்கும் இவ்விடத்தில் அவகாசமில்லை. ஆகவே 'ஸௌந்தர்யஸ்ய தரங்கிணீ'

இத்யாதிகள் போல ரூபகம் என்னவேணும். கவிவாதிகள் கலபங்கள் என்பது ஸ்பஷ்டம். 'ஸிம்ஹாய கவிவாதிநாம்' என்பது பாரம்பரித ஸஹ தைஶிகவதில் ரூபகம் என்றதாயிற்று. 'கவி தார்க்கிக ஸிம்ஹ .ஜ' என்றவிடத்தில் ஸ்பஷ்டமாயிராமல் ஸம்கீர்ணமாயிற்றென்று இவ்வளவே பேதம். ஸமாஸமிராத இந்த ஸ்தலத்தில் இப்படி ரூபகம் ஆவச்யகமானு லும், ப்ரக்ருத ஸமாஸ ஸ்தலத்தில் கேஸரிஶப்தம் ஶௌர்யலக்ஷகமாகக்கூடு மென்னில் அது வாஸ்தவமே. ஆகிலும் இதே வக்தாவும் பிறரும் மற்றோ ரிடத்தில் காண்பித்த மார்க்கத்தையே இங்குக் கொள்வது ஸ்வரஸமான படியாலும், அதில் அர்த்தபுஷ்டி அதிகமானபடியாலும், அதையே ஆதரிக்க ப்ராப்தம்.

வேதாந்தாசார்யவர்ய: ஸ்ரீமாந் என்பதால்—அவதாரவைலக்ஷண்ய மும், வேங்கடநாயாய: என்பதால் ஸர்வவித்யாவிஶேஷஸம் பத்தியும் சொல்லப்பட்டது. அதன் பிறகு அவதார ப்ரயோஜனம் அனு ஸந்திக்கவேணும். அவதார ப்ரயோஜனம் 'பரித்ராணாய ஸாதூநாம்' என்கிறபடியே இரண்டு. இங்கே அம்ஶியானபடியால் ப்ராதான்யத்தை முன்னிட்டு பரித்ராணத்திற்கு ப்ரயோஜநிர்தேஶமிருந்தாலும், அர்த்த ந்யாயத்தாலே பாஹ்யவாதியான து³ஷ்டநிக்³ரஹம் ப்ரக்ருத ஶ்லோகத்தில் முன்னம் அனுஸந்திக்கப்பட்டது 'தார்க்கிககேஸரீ' என்று. அதன் பிறகு ஶிஷ்டபரிபாலநார்த்த ஸம்பாதநம் வேதாந்தாசார்யவர்ய: என்று வேதாந்தங்களை ப்ரவசனம் செய்து உலகங்களை உஜ்ஜீவிக்கப்பண்ணும் மஹாந்கள் யாவரும் வேதாந்தாசார்யர் என்ற வ்யவஹாரத்திற் குரித்தாவர் என நினைக்கலாம். ஆயினும் ஸாக்ஷாத் பரமாசார்யரே மனமகிழ்ந்து இவ்வித பிரதானம் செய்தருளும்படி ஸம்ப்ரதாயத்தாலும் ப்ரவசனத்தாலும் வாதிநிரஸனத்தாலும் வேதாந்தபோயார்த்த ஸ்தாபனப்ரவ்ருத்திகளாலும் நம் பண்ணும்படியான ப்ரபாவவிஶேஷம் மற்றெவருக்கும் து³ர்லபமாகை யால் 'வேதாந்தாசார்யவர்ய:' என்றது.

உத—'வித்³யே ஸர்வஜநேத்யாதி.' இத்யாதியால் அனுஸந்திக் கப்பட்ட ஆகாரங்களுக்கெல்லாம் ப்ரதியோகியான ஸர்வாகாரவத்தை யையும் இது பராமர்சிக்கிறது.

ஸந்நிதத்தாம்—ஸ்வாமியே ஸன்னிதானம் செய்யவேணும். அடியேன் எதுவும் செய்ய அஶக்தன். ஸ்வாமி ஸன்னிதானம் செய்து காலுஷ்ய மெல்லாம் கழிந்து உபநிஷத் ஸித்தி பெற்றால் 'ஸ்ரீமதே வேங்கடேஶாய

வேதாந்தகுரவே நம:' என்போம். இந்தத் தசைக்கு முன்பு செய்யவேண் டியதை ஸ்வாமியே செய்யவேணும். ஸதா—பிறகும் நமஸ்காரவ்யாபார ஸந்நிதானம் அபேக்ஷிதமே. மோக்ஷத்திலும் பரப்ரம்ஹம் போலே ஸ்வாமி யும் அனுபாவ்யர்.

ஹ்ருதி—விஹவாவஸ்தாதிரூபத்தாலே ஸந்நிஹிததைவதாந்தர ரூப ஸந்நிதானம் விவக்ஷிதமன்று. த்யானகோசரராய் ஸதா இருக்க வேணும். ப்ரம்ஹ வித்யையன்று நான் விரும்புவது. பின் ஸ்ரீதேஶிக வித்யை. இவ்விடத்தில் முதல் பாதத்தில் 'வேங்கடநாய' என்று நாம நிர்தேஶமாவத்தாலே நாமரூபவ்யாக்ருதர்த்தரூப ஜந்ம காரணமு மும், இரண்டாம் பாதத்தில் வாதிநிரஸனத்வாரா உபாயத்வமும், வேதா ந்தாசார்யேத்யாதிநா வேதாந்தப்ரயோஜனாஸ்வாதநாதி ரூபமோக்ஷ விஶேஷமும், நான்காவது பாதத்தில் ஸதா என்பதால் ஸதைதஶேயும் ஸூசிக்கப்படுவதால், இந்த ச்லோகத்தில் ப்ரஹ்மஸூத்ர சதுரத்யாயார்த்த மும் அடங்கியிருக்கிறதென்பர். அதன் முகமாக ஸ்ரீதேஶிகனுக்கு ப்ரஹ்ம தாதாத்ம்யம் வ்யங்க்³யம். அதற்கும் வ்யங்க்³யம் கவிகதமான தேஶிகவிஷயபாவ ப்ரகர்ஷம். ஆக இங்கு முன் சொன்ன பாரம்பரித ஸக தைஶிகவதில் ரூபகத்தோடு வ்யதிரேகாலங்காரமும் உளதென்க. இவைகளுடன் முதல் பாதம் தவிர மற்ற மூன்று பாதங்களில் தண்டி சொன்ன ஶப்தார்த்த நுப்ராஸம் என்கிற ஶப்³தாலங்காரமும் உண்டு. இதி ஸம்க்ஷேப:

ஸ்ரீ:

மீமாம்ஸா ஸங்க்ரஹம்

[திவான் பஹதூர் ஸ்ரீ. உப. வி. கே. ராமாநுஜாசார்யர்.]

(சென்ற சஞ்சிகையின் தொடர்ச்சி)

எட்டாவது பாதம்.

272. இதுவரையில் இரண்டுவிதமான பாதங்கள் விசாரிக்கப்பட் டன. அதிதேசத்தால் வரும் அங்கம் செய்யும் உதவியை வேண்டாமை யால் ஒருவிதம். வேறொரு அங்கத்தைப் பதிலாக விக்ருதி யாகத்தில் விதிப்பதால் இரண்டாவது விதம். இப்போது மூன்றாவது விதம் விசா ரிக்கப்படுகிறது.

"க்ருஶாவய" முதலான மந்திரங்களைப்படித்து, வேதம் சொல்லுகி றது—" ஸஷ்டெவஸ்ததுஶ: ப்ரஜாவதி: யஜ்ஞநாயத்த: " என்று. இந்த

ஐந்து மந்திரங்களில் பதினேழு எழுத்துக்கள் இருக்கின்றன. பிரஜாபதி என்கிற தேவதைக்கு இந்த ஸங்கியை பிடித்தது. ஆகையால் இந்த பதினேழு எழுத்துக்களுள்ள மந்திரங்களை பிரஜாபதியாகச் சொல்லியிருக்கிறது. அந்த ப்ரஜாபதி யஜ்ஞத்தில் சேர்ந்திருக்கிறார் என்பது இந்த வாக்யத்தின் பொருள். இந்த மந்திரங்களில் "யேயஜாமஹே" என்பது ஒன்று; அதை யாகங்களைச் செய்யும்போது சொல்லவேண்டுமென்பது ஏற்படுகிறது. இன்னுமொரு வாக்யம் — நாநுயாஜேஷு யேயஜாமஹம் கரோதி" என்று. இதின் பொருள்-அநுயாஜ ஹோமங்களில் 'யேயஜாமஹே' என்பதைச் சொல்லக்கூடாது—என்பது. இங்கே அநுயாஜ ஹோமங்கள் விஷயத்தில் ஒரு வாக்யத்தால் இந்த மந்திரத்தைச் சொல்லவேண்டியது என்றும், மற்றொரு வாக்யத்தால் அதைச் சொல்லக்கூடாது என்றும் ஏற்படுகிறது. சொன்ன வாக்யத்தில் "ந" என்கிற பதத்தை "கரோதி" என்கிற க்ரியா பதத்தோடு சேர்த்தால் செய்யவேண்டாம் என்று பொருள். இதை ப்ரதிஷேதம் என்று சொல்லுகிறது. "ந" என்பதை 'அநுயாஜேஷு' என்பதுடன் சேர்த்தால் அநுயாஜங்கள் தவிர மற்றவைகளில் என்று பொருள் கிடைக்கும். இதற்கு பர்யுதாஸம் என்று பெயர். இங்கே யெப்படி அர்த்தம் பண்ணுகிறது—ப்ரதிஷேதமாகவா? அல்லது பர்யுதாஸமாகவா?—என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்—'அநுயாஜேஷு' என்பது ச்ருதி. அநுயாஜங்கள் தவிர மற்றவைகள் என்று பொருள் கொண்டால் லக்ஷணையென்கிற குற்றம் வரும். "அதற்காக ப்ரதிஷேதமாகவே பொருள் கொள்ளவேண்டும். பர்யுதாஸமாயிருந்தால், 'ந அநநுயாஜேஷு' என்கிற இரண்டு பதங்களும் சேர்ந்து ஒரே சொல்லாயிருக்கவேண்டும். இங்கேயப்படியில்லை. ஆகையால் ப்ரதிஷேதம்.

ஸித்தாந்தம்—ப்ரதிஷேதமானால் 274-வது பாராவில் சொல்லப்போகிறபடி விகல்பம் ஏற்படும். அதாவது யே யஜாமஹே என்பதைச்சொல்லலாம்; இல்லாவிட்டால் விட்டுவிடலாம் என்று. அதில் எட்டுக் குற்றங்கள் இருக்கின்றன. இரண்டையும் செய்யமுடியாது. ஆகையால் பர்யுதாஸமாகப் பொருள் கொள்ளவேண்டும். அப்போது விதிவாக்யம் யாகங்களில் 'யே யஜாமஹே' என்பதைச் சொல்லு என்று விதிக்கிறது. எந்த யாகங்களில் என்று ஒரு கேள்வியுண்டாகிறது. விசாரிக்கப்படும் வாக்யம் அநுயாஜங்கள் தவிர மற்ற யாகங்களில் என்று பதில் சொல்லி, அந்த விதிவாக்யத்துக்கு உதவி செய்கிறது. பர்யுதாஸத்துக்குச் சொன்ன லக்ஷணையென்கிற குற்றத்தைப் பொறுத்துக்கொள்ளவேண்டும். அதைக்காட்டிலும் விகல்பம் பெரிய குற்றம். ஒரே சொல்லாக இருக்கவேண்டும் என்கிற விஷயத்தில்

வியாகரண சாஸ்த்ரகாரர்களுக்குள்ளேயே அபிப்ராயபேதமிருப்பதால் அந்த ஆக்ஷேபத்தைக் கவனிக்கவேண்டியதில்லை. (அதி. 1. சா. 771, 772)

273. பசுயாகம் தர்சபூர்ணமாஸத்தின் விக்ருதி, அது விஷயத்தில் ஒரு வாக்யம்—"ந தௌ பசௌ கரோதி" என்று. 'தௌ' என்கிற பதம் ஆஜ்யபாகங்களைச் சொல்லுகிறது. அவைகளைப் பசுயாகத்தில் செய்யக் கூடாது என்று வாக்யத்தின் பொருள். இதன்மேல் இன்னுமொரு வாக்யமிருக்கிறது—"ந ஸோமே" என்று. ஸோமயாகத்தில் அவைகளைச் செய்யவேண்டாம் என்பது அதின் பொருள். இது ப்ரதிஷேதமா? அல்லது பர்யுதாஸமா என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்—இது ப்ரதிஷேதம். ஒரு கேள்வி—ஸோமயாகத்தில் ஆஜ்யபாகங்கள் வருவதாயிருந்தால் ப்ரதிஷேதம் பண்ணலாம். ஸோமயாகம் தர்சபூர்ணமாஸங்களின் விக்ருதியன்றே? அதில் அதிதேசத்தால் ஆஜ்யபாகங்கள் வரமாட்டாதே—என்று. பதில்—ஸோமயாகத்துக்கு அங்கங்களான தீக்ஷணீயேஷ்டி முதலானவைகள் இஷ்டி விக்ருதிகளாகையால் ஆஜ்யபாகங்கள் அதிதேசத்தால் வரும். அதைக்கொண்டு அங்கியான ஸோமயாகத்தில் அவைகள் வருகின்றன என்று சொல்லலாம். இப்படி வருவதை ப்ரதிஷேதம் பண்ணுகிறது. (2) இதைத்தூஷித்து வேறு பூர்வபக்ஷம் ப்ரதிஷேதமானால் விகல்பம் வரும். அதில் எட்டுத்தோஷங்கள் உண்டு என்று சொல்லப்பட்டதே. ஆகையால் கீழ்ப்பாராவில் சொன்னபடி பர்யுதாஸம்.

ஸித்தாந்தம்—பர்யுதாஸமானால், தள்ளப்படுகிற ஸோமயாகத்திலும், மற்ற யாகங்களிலும் ஆஜ்யபாகங்கள், பர்யுதாஸம் செய்வதற்கு முன்னாலே பொதுவாய் வந்திருக்கவேண்டும். ப்ரதிஷேதமானாலும், ஆஜ்ய பாகங்கள் வருவதானால் ப்ரதிஷேதம் பண்ணலாம். ஸோமயாகத்தில் ஆஜ்யபாகங்கள் வருவதற்கு இடமில்லை. அவைகளைத் தர்சபூர்ணமாஸ ப்ரகரணத்தில் படித்திருப்பதனால் அந்த இஷ்டிகளுடன் தான் அவைகளுக்கு ஸம்பந்தமுண்டு. இஷ்டிகளிலிருந்து அதிதேசத்தாலும் வராது. ஏனென்றால், ஸோமயாகம் ஒன்றின் விக்ருதியும் அன்று.

(2) கேள்வி—அங்கங்கள் வழியாய் ஸோமயாகத்துக்கும் ஆஜ்யபாகங்களுக்கும் ஸம்பந்தம் ஏற்படுமென்று சொல்லவில்லையா?—என்று. பதில்—அப்போது "ஸோமே" என்கிற பதத்துக்கு ஸோமத்தின் அங்கத்தில்" என்று பொருள் கொள்ளவேண்டும். இது லக்ஷணை. மேலும் இப்படி அர்த்தம் பண்ணினால், 'ந ஸோமே' என்பதினாலேயே அக்னீஷோமீய பசுயாகத்தில் ஆஜ்யபாகங்களில்லாமல் போகும். "ந தௌ பசௌகரோதி" என்கிற வாக்யத்துக்குப் பிரயோஜனமில்லாமல்

போய்விடும். லக்ஷணைபண்ணுமல் வாஜபேய யூபந்யாயப்படி ஸம்பந்தம் ஏற்படலாமேயென்றால், அதுவும் கூடாது. "வாஜபெயஸ்யயூபஃ" என்கிறவிடத்தில் ஆறுவது விபக்தி ஸம்பந்தத்தைச் சொல்லுகிறது. அது நேரான ஸம்பந்தமாயுமிருக்கலாம்; அங்கத்தின் வழியாய் பரம்பரா ஸம்பந்தமாயுமிருக்கலாம். "ஸொமெ கவ்ரெ" என்கிறவிடத்தில் விபக்தி ஏழாவது. அது நேரான ஸம்பந்தத்தைத்தான் சொல்லும். ஆகையால் ஒரு வழியாலும் ஸோமயாகத்தில் ஆஜ்யபாகங்கள் வர இடமில்லை. ஆகையால் ப்ரதிஷேதமும் கூடாது; பர்யுதாஸமும் கூடாது. "ந ஸொமெZவ்ரெ" என்கிற வாக்யம் 'ந தௌ பஶௌகரோதி" என்கிற வாக்யத்துக்கு உதவியாயிருந்துகொண்டு உதாரணத்தைக் காட்டுகிறது—எப்படி அவைகள் ஸோமயாகத்தில் இல்லையோ, அப்படியே பசு யாகத்திலுமில்லையென்று. விசாரிக்கப்பட்ட வாக்யம் அர்த்தவாதம். (அதி. 2. சா. 774.)

274. கீழ் இரண்டு பாராக்களால் இரண்டு நியாயங்கள் ஏற்பட்டன. (1) விதியானது பொதுவாயும், அதில் அடங்கிய ஒன்றை நிஷேதம் பண்ணும்போது 'ந' (நஞ்) என்கிற பதம்பர்யுதாஸமாயிருந்து, விதிவாக்யத்துக்குச் சேஷமாயிருந்து உதவிசெய்கிறது. (2) நிஷேதிக்கப்படுவது வருவதற்கு இடமில்லாவிட்டால், நஞ் என்கிற சொல்லுடன்சேர்ந்த வாக்யம் அர்த்தவாதம். ப்ரதிஷேதம் என்பது எப்பொழுது என்பது இனி விசாரிக்கப்படுகிறது. (சா. 775.)

அதிராத்ரம் என்கிற ஸோமயாக விஷயமாயிரண்டு வாக்யங்கள்—"அதிராத்ரெ ஷொடஶிநம் க்ருஹ்ணாதி; நாதிராத்ரெ ஷொடஶிநம் க்ருஹ்ணாதி" என்று. இங்கேயிரண்டு வாக்யங்களில் விஷயம் ஒன்று. ஆகையால் பர்யுதாஸம் கூடாது. பர்யுதாஸமானல் வாக்யத்தின் பொருள்—அதிராத்ரம் தவிர அதிராத்ரத்தில் ஷோடசி க்ரஹத்தை க்ரஹிக்கவேண்டும் என்பது. அர்த்தவாதமும் கூடாது. ஸ்தோத்ரம் பண்ணும் வாக்யம் ஒன்றைச் சொல்லவேண்டும். ஸ்தோத்ரம் பண்ணப்பட்டது வேறென்றாயிருக்க வேண்டும். உதாரணம்—'அபஶவொ வா அந்யெ கொ அஶ்வெப்யஃ' (பசுமாடு குதிரை தவிர மற்றவைகள் பசுக்கள் அல்ல) என்கிறவிடத்தில் பசுமாட்டையும், குதிரையையும் ஸ்தோத்ரம் பண்ண மற்றவைகள் தூஷிக்கப்படுகின்றன. இங்கே அப்படியன்று. ஷோடசி க்ரஹத்தை வேண்டாமென்று சொல்லுவதால் எப்படி ஷோடசிக்கு ஸ்தோத்ரமாகும்? இங்கே ப்ரதிஷேதம் தான் ஏற்படுகிறது. இரண்டு வாக்யங்களுக்கும் ப்ரயோஜநம் இருப்பதற்காக விகல்பத்தை ஒப்புக்கொள்ளவேண்டும். அதாவது—ஷோடசி க்ரஹத்தை க்ரஹிக்கலாம்; க்ரஹிக்காமலுமிருக்கலாம். நிஷேத வாக்யத்துக்கு ப்ரயோஜநம் இருப்பதற்காக ஷோடசி க்ரஹத்தை க்ரஹிக்காவிட்

டால் யாகத்துக்குக் குறைவில்லையென்றும், அதை க்ரஹித்தால் அதிக பலன் வரும் என்று கொள்ளவேண்டும். விகல்பத்தில் எட்டு தோஷங்களிருந்தாலும் வேறு வழியில்லை. (அதி. 3. சா. 775)

275. 'ந தௌ பஶௌகரோதி' என்கிற வாக்யத்தில் பர்யுதாஸமா? அல்லது ப்ரதிஷேதமா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்—விகல்பம் கூடாதாகையால் பர்யுதாஸம்.

ஸித்தாந்தம்—இது பிசகு. பர்யுதாஸமானல் இன்னுமொரு வாக்யத்துக்கு இது சேஷமாயிருக்கவேண்டும். அந்த வாக்யம் எது? ஆஜ்யபாகங்களை விதிக்கும் வாக்யம் என்று சொல்லுகிறீரோ, அது அவைகளை தர்ச பூர்ணமாஸ இஷ்டிகளுக்கு அங்கமாக விதிக்கிறது. அந்த வாக்யத்தால் பசு யாகத்துக்கு அங்கமாக அவைகள் ஏற்படமாட்டா. "பசு யாகத்தை ப்ரக்ருதியாகத்தைப்போல் செய்" என்கிற அநுமான வாக்யத்துக்குச் சேஷம் என்று சொல்லுகிறீரோ; அந்த வாக்யம் இங்கேயில்லையே. நீர் சொன்னபடியானலும் 'ந ஸொமெZவ்ரெ' என்கிற வாக்யம் அர்த்தவாதமாக ஆகாதே. பர்யுதாஸமானல் வாக்யத்தின் பொருள்—'அவைகளை (ஆஜ்ய பாகங்களைத்)த் தவிர, மற்ற அங்கங்களைப் பசு யாகத்தில் செய்' என்பது. அதற்கு உதாரணம். எப்படி ஸோமயாகத்தில் ஆஜ்ய பாகங்கள் தவிர மற்ற இஷ்டிகளிலுள்ள அங்கங்கள் செய்யப்படுகின்றனவோ, அப்படியே பசு யாகத்திலும் என்றிருக்கவேண்டும். அப்படியில்லை. ஸோம யாகம் இஷ்டிகளின் விக்ருதியன்று. ப்ரதிஷேதமானல் 'ந ஸொமெZவ்ரெ' என்பது அர்த்தவாதமாகும்—எப்படி ஸோமத்தில் ஆஜ்ய பாகங்களைச் செய்கிறதில்லையோ, அப்படிப் பசு யாகத்திலும் - என்று. (சா - 774).

276. கீழ்ப்பாராவுக்கு முன் பாராவில் தீர்மானிக்கப்பட்டது—ஒன்றை விதித்து, அதைக்கூடாது என்று சொன்னல் நிஷேதம் ப்ரதிஷேதம் ஆகும். என்பது—அதற்கு அபவாதம் (விலக்கு)—"ஜர்திலயவாக்வா ஜுஹுயாத் கவீதுகயவாக்வா ஜுஹுயாத் । ந க்ராம்யாந் பஶூந் ஹிநஸ்தி நாரண்யாந் । அதொ கவ்வாஹுஃ । அநாஹுதி வை ஜர்திலாஶ்ச கவீதுகாஶ்ச । பயஸாக்நிஹொத்ரம் ஜுஹுயாத்" என்பது வாக்யம். இதின்பொருள்—காட்டெள்ளின் கஞ்சியால் ஹோமம் செய்யவேண்டும், காட்டுக் கோதுமைக் கஞ்சியால் ஹோமம் செய்யவேண்டும். கிராமங்களிலிருக்கும் பசுக்களையும் காட்டிலிருக்கும் பசுக்களையும் ஹிம்ஸை செய்யக்கூடாது, பெரியோர்கள் சொல்லுகிறார்கள். காட்டெள்ளினலும் காட்டு கோதுமையாலும் ஹோமம் செய்வது ஹோமம் செய்யாததுபோல்;

பாலாலே அக்னி ஹோத்ர ஹோமத்தைச் செய்யவேண்டியது - என்பது. இங்கே ச்ருதியே ஜர்திலம், கவீதுகம் இவைகள் ஒன்றினால் ஹோமத்தை விதிக்கிறது. "ஜுநாஹுதி:" என்கிற வாக்யத்தால் சொன்ன ஹோமங்களைத் தூஷிப்பதால் ஹோமங்கள் செய்யாதிருப்பது மூன்றாவது பக்ஷமாகிறது. இதைப்பர்யுதாஸம் என்று சொல்லக்கூடாது. "ந" என்னும் பதம் ஆஹுதி என்னும் பதத்துடன் சேர்ந்திருக்கிறது. ஜர்திலகவீதுகா என்கிற சொற்களோடு அன்று. பால் விதியால் நாலாவது பக்ஷம். ஆகையால் விகல்பமா என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்—ஒன்றுக்கொன்று விரோதமாயிருப்பதால் விகல்பம் தான்.

ஸித்தாந்தம்—ஜுநாஹுதி வாக்யம் ப்ரதிஷேதமன்று. ப்ரதிஷேதமானால் விகல்பம் ஏற்படும். அது•பாலை விதிப்பதினாலேயே யேற்படும். ஆகையால் அநாஹுதி வாக்யத்துக்கு பிரயோஜநமில்லை. அது அர்த்த வாதமாயிருந்துகொண்டு பாலால் ஹோமத்தை ஸ்தோத்ரம் பண்ணுகிறது. பசு ஹிம்ஸை யில்லாமையால் ஜர்த்திலத்தினாலும் கவீதுகத்தினாலும் ஹோமம் நல்லதாயிருந்தாலும் அக்னி ஹோத்ரத்துக்குத் தகுந்தவைகள் அல்ல, பாலுக்குத் தகுதி யிருக்கிறது. இங்கே பாலை விதிக்கும் வாக்யத்தோடு ஒரே வாக்யமாய்ச் செய்யலாம்; வெவ்வேறு வாக்யங்களாகக் கொள்ளுவது நியாயம் அன்று. அப்போது ஒரு வாக்யத்தில் ஒரே விதி யிருக்க வேண்டியதால் மற்றவைகள் அர்த்தவாதங்கள். (அதி. 4)

277. இப்படி 'ந' (நஞ்) என்கிற சொல் விஷயமான விசாரத்தை முடித்து, பொதுவான விதியை விசேஷ விதி பாதிக்கும் என்று தீர்மானம் செய்யப்படுகிறது. "யதாஹவநீயெஜுஹொதி" என்பது பொதுவான விதி. "பதெஜுஹொதி" என்பது விசேஷவிதி. இது ஸோமக்ரயணியை கொண்டு போகும்போது அதின் ஏழாவது அடியில் செய்யப்பட்ட ஹோமம். இரண்டு விதிக்கும் பலம் ஸமமாயிருந்தால் விகல்பம் ஏற்படும்; விசேஷவிதி பலமுள்ளதாயிருந்தால் அது பொதுவான விதியை பாதிக்கும். ஆகையால் இரண்டுக்கும் பலம் ஸமமா? இல்லையாவென்பது ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்—இரண்டும் ப்ரத்யக்ஷ வசநங்களாகையால் அவைகளுக்கு பலம் ஸமம். ஒரு கேள்வி. "ஐந்த்ர்யா கார்ஹபத்யமுபதிஷ்டதே" என்கிற விடத்தில் லிங்கம் ச்ருதியால் பாதிக்கப்படுகிறது. விகிருதியில் விதிக்கப்பட்டதால் அதிதேசத்தால் வருவது பாதிக்கப்படுகிறது. அப்படியே பொதுவான விதி விசேஷ விதியால் பாதிக்கப்படவில்லையா?—என்று. பதில்—லிங்கம் துர்பலமாயிருப்பதற்குக் காரணம்

அதைக்கொண்டு ச்ருதியை அநுமானம் செய்வதில் தாமதமுண்டாவது. அதிதேசம். அநுமாநத்தால் செய்யவேண்டியது. இங்கே அப்படித் தாமதத்துக்குக் காரணமில்லை.

ஸித்தாந்தம்—பொதுவான விதி பொதுவாய் ஹோமத்தைச் சொல்லுகிறது. இன்ன ஹோமம் என்பதை லக்ஷணையால் அறியவேண்டும். விசேஷ விதி இன்ன ஹோமம் என்று காட்டுவதால் அதிக பலமுள்ளது. அது பொதுவான விதியைப் பாதிக்கிறது.

ஒரு கேள்வி — விசேஷ விதியும் பொதுவாய் ஹோமத்தைச் சொல்லி இன்ன இடம் என்று விதிக்கவில்லையா? அப்போது இரண்டு விதிக்கும் பலம் ஸமமன்று?—என்று. பதில் - ப்ரகரணத்தில் சொல்லப்பட்டிருப்பதால் பத ஹோமம் என்று விசேஷித்துச் சொல்லப்படுகிறது. ஆகையால் விசேஷவிதி ஹோமத்தைப் பொதுவாய்ச் சொல்லவில்லை. சொன்ன தீர்மானம் நிற்கிறது. (அதி - 8.)

எட்டாவது பாதம் முற்றிற்று.

பத்தாவது அத்யாயம் முற்றிற்று.

பதினோராவது அத்யாயம்

முதல் பாதம்

278. ஏழாவது முதல் நாலு அத்யாயங்களில் விக்ருதியாகங்களில் அதிதேசத்தால் கொண்டு வரவேண்டிய அங்கங்கள் இன்னவை யென்பது தீர்மானிக்கப்பட்டது. இப்போது ப்ரகிருதியாகங்களையும் விக்ருதியாகங்களையும் எப்படிச் செய்கிறது என்று விசாரிக்கப்படுகிறது; அதாவது - அவைகளை ஒரே தடவை செய்கிறதா? அல்லது பலதடவை செய்கிறதா?- என்று.

279. முதலில் அங்கங்கள் ப்ரதானமான யாகத்துக்கு எவ்விதமான உபகாரம் செய்கிறது என்று விசாரிக்கவேண்டும். ஒரு ப்ரதானமான யாகத்தை விதிக்கும்போது இன்னுமொரு ப்ரதான யாகத்தின் ஸம்பந்தமில்லாமலே அது விதிக்கப்படுகிறது. அது செய்யும் கார்யமும் வேறு. அப்படியே ப்ரயாஜம் முதலான அங்கங்களை விதிக்கும்போது ஒன்றுக்கொன்றின் ஸம்பந்தமில்லை. ஆகையால் அவைகள் ப்ரதான யாகத்துக்குச் செய்யும் உதவியும் வெவ்வேறல்லவா என்பது ஸந்தேஹம்.

பதில்—ப்ரதான யாகங்கள் பெறும் உபகாரத்தை அதின் தேட்டத்தைப் பார்த்துச் சொல்லவேண்டும். அது ஒன்றாயிருந்து தன் கார்யத்தைச் செய்ய முடியாமல் தன் சக்தியைப் பிரகாசப்படுத்தும்படி அங்

கங்களைத் தேடுகின்றது. ஆகையால் உபகாரம் ஒன்றே. அப்போது அனேக அங்கங்களைத் தேடுவானேன் என்றால், ஒரே உபகாரமானாலும் அதைச் செய்யும் வழி வெவ்வேறு. உதாரணம், அன்னம் செய்வது ப்ரதானமான கார்யம். அதற்கு அரிசி, பாத்ரம், விரகு முதலானவைகள் வேண்டும். அவைகள் செய்யும் உபகாரம் ஒன்றே, செய்யும் வழி வெவ்வேறு. அப்படிப்போலவே, (அதி - 2)

280. அங்கங்கள் ப்ரதானயாகங்களுக்குத் தனித்தனியாய் உபகாரம் செய்வதானால், இந்த உபகாரத்தை ஒரே அங்கம் செய்யலாமே. அதினால் ப்ரதான யாகத்தின் தேட்டம், தீரலாமே. சர்க்காருக்கு வாய்தாப்பணம் கிராமத்திலிருக்கும் எல்லாரும் கொடுக்க வேண்டும். அதை ஒருவன் கொண்டுபோய் கொடுக்கலாமே, அதினால் சர்க்காருக்கு த்ருப்தி உண்டாகுமே என்பது ஸந்தேஹம்,

ஒரு கேள்வி - எந்த ஒன்றைச் செய்கிறது என்று. எதை வேண்டுமோ அதைச் செய்யலாம் என்று பதில். இங்கே ஒருவன் சொல்லுகிறான் - பலன்களுக்கு யாகங்களைச் செய்யும்போது அதிக பலன் வருவதற்காக அனேக யாகங்களைச் செய்கிறார்கள். அப்படியே அனேக அங்கங்களைச் செய்வதால் அதிக பலன் கிடைக்கும்-என்று.

ஸித்தாந்தம்.—ஒரு வயலில் விதை விதைத்திருக்கும்போது விதையைத் தின்ன பக்ஷிகள் கூட்டமாய் வந்து வயலில் ஒரே தட்டையாய் இறங்குகின்றன. அப்படியே ப்ரதான யாகத்தின் தோட்டத்தைத் தீர்க்க அதற்குத் தகுந்த ப்ரயோக வசநத்தாலே சொல்லப்பட்ட எல்லா அங்கங்களும் ஒரே காலத்தில் வந்து கார்யம் செய்கின்றன. அவைகளில் ஒன்றை விட்டு விடுவதற்குக் காரணமில்லை. ஆகையால் எல்லா அங்கங்களும் சேர்ந்து ப்ரதான யாகத்துக்கு உபகாரம் செய்கின்றன. (அதி—3)

281. ப்ரதாந யாகங்களில் நித்யமானவைகளை உயிரோடிருக்கிற வரையில் செய்யவேண்டும். பலனுக்காகச் செய்யப்படும் யாக விஷயத்தில் ஸந்தேஹம் காம்ய கர்மத்தை ஒரே தடவை செய்தால் போதுமா? அல்லது திருப்பித் திருப்பிச் செய்யவேண்டுமா? என்பது.

பதில்.—ஒரு தடவை காம்ய கர்மத்தைச் செய்தால் அதனாலுண்டாகும் அபூர்வம் பலனைக் கொடுத்துப் போய்விடுகிறது. மறுபடியும் பலன் வேண்டுமானால் அந்த கர்மத்தை மறுபடியும் செய்யவேண்டும்.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீ வேதாந்த தீபிகை

வேதாந்த விசாரம் செய்யும்

ஒரு மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை

[ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபையாரால் ப்ரசுரிக்கப்பட்டது.]

1935—1936

[யுவ—தாது]

ஸம்புடம்—24

ஸம்பாதகர்கள் { 1. ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்
2. வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்

சென்னை
கபீர் அச்சுக்கூடம்
1936

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

(அகராதி)

24-ம் ஸம்புடம் (1935—36).

அத்திகிரி அருளாளனும் ஆழ்வார்களும் 121
அத்யாத்ம ஸ்ரீமத் ராமாயணம் 226
அவதாரங்களின் கருத்து 222
ஆயுர்வேதமும் ஆரோக்ய ஸாதநமான ஆசாரங்களும் ... 170
இதிஹாஸ புராணங்களில் ஸ்த்ரீ சூத்ரர்களின் அதிகாரம் 336, 530, 605
'இன்பமரும் செல்வமும் இவ்வரசும் யான் வேண்டேன்' ... 347
'இக்ஷ்வாகு குலதநம்' என்பதன் அர்த்த விசாரம் ... 573
உபயவேதாந்தங்கள் 321, 424

க்ரந்த விமர்சம்
- அதிகரண ஸாராவளி 602
- அத்யமே ச்லோகார்த்த தத்வ ப்ரதிஷ்டை 603
- அம்ருத வர்ஷிணீ... 374
- ஆசார்ய ஸப்த சதீ 603
- திருவாய்மொழி 273
- யதுநாதகத்யம் 374
- ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தீ 538
- ஸ்ரீ தேசிக ஸ்ரீ ஸூக்தி ஸம்ரக்ஷிணீ 538
- ஸ்ரீ தேசிக ஸூக்தி ஜயத்வஜமாலை 538
- ஸ்ரீ பாஷ்யம் 594

கடிதங்கள்
- காஞ்சீபுரம் ஸ்ரீ வைஷ்ணவ ஸபை 31
- திருவஹீந்த்ரபுரம் ஸ்ரீ தேசிகன் உத்ஸவமும் ஸ்ரீ தேசிக ஸூக்தி ஸம்ரக்ஷண ஸபையும் 250
- திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம் 302
- ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபா, லிமிடெட், சென்னை 30
- ஸ்ரீ வேங்கடேச தேவஸ்தாநம், பம்பாய் 73
- ஸ்ரீ தேசிக ஸ்ரீ ஸூக்தி ஸம்ரக்ஷண ஸபா, ஸ்ரீரங்கம் ... 76, 78
- ஸ்ரீ ஹயக்ரீவ வித்யா மந்திரம்... 300
- ஸ்ரீ வேதாந்த தேசிக பக்த ஸபா, மதுரை 301
- ஸ்ரீ உபய வேதாந்த ப்ரவர்த்தந ஸபா, திருநாராயணபுரம் 595
- கம்பர் மதம் ஸ்ரீ வைஷ்ணவம்... 85

கம்பராமாயண ஆதியந்தப் பாக்கள் 204
கம்பரும் கோதையும் 443
கணிதமாக்கள் 354
கீதா ஸ்வரூபம் 439
சரணாகதியே சரமோபாயம் 25
சாரீரக மீமாம்ஸையில் அபசூத்ராதிகரணம் ... 514, 619
திருவள்ளுவரும் ஸ்ரீ வைஷ்ணவமும் 50
திருவாய்மொழியின் முதலும் முடிவும் 397
திருமடல் 520
தீண்டாமையைத் தீர்க்கும் இயக்கம் 409
தேசிக சித்ரமும் சில்பியும் 236
நவக்ரஹங்களும் மநுஷ்யர்களும் 125
நித்ரையின் தத்வம் 557
நீத்தார் பெருமை 567
பத்ரிகையைப்பற்றி ஒரு விஜ்ஞாபநம் 492
பத்ராதிபரின் அறிக்கைகள் 136, 192
பத்ராதிபரின் விவரண ப்ரத்யுத்தரம் 426
பதிவ்ரதா தர்மத்தின் சிறப்பு 105
பிள்ளையந்தாதி 613
புருஷாயுஸ்ஸின் ப்ரமாணம் 241
புனிதர்களின் வயதளவு 357
மாநமும் மௌநமும் 243
மாதுல ஸுதா பரிணயம் 406
மீமாம்ஸா ஸங்க்ரஹம் ... 10, 41, 114, 183, 289, 361, 427, 469, 584, 647
முப்பாற்றலைக் கடைப்பாக்கள் 508
முதற்குறள் உரைத் துளக்கமும் உவமையணி விளக்கமும் 499
வள்ளுவரும் வர்ணாச்ரம தர்மமும் 165
வான் சிறப்பு 400
வித்யா விஷயத்தில் ஸ்த்ரீகளின் அதிகாரம் 189
வித்யாஸ்தாநங்கள் யாரால் நிறம் பெற்றன 480
விவாஹத்துக்குரிய வயது 465
வீர விவேகம் 550
வேதம் தமிழ் செய்த மாறன் 292
வேத வைபவம் 656
ஸ்ரீ க்ருஷ்ண தாதார்ய மஹாதேசிக சரிதம் ... 20, 60, 117, 160, 248, 277

ஸ்ரீ க்ருஷ்ண தாதாசார்யர்	313
ஸ்ரீ வரதராஜ பஞ்சாசத் ...	33, 63, 96, 152, 214, 268, 385, 456 523, 578, 626.
ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயஸ்தர்களுக்கு ஒரு விஜ்ஞாபனம் ...	81
ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகனுடைய உபகார விசேஷம் ...	137, 193
ஸ்ரீ வேதாந்ததேசிகனுடைய ந்யாய ஸித்தாஞ்ஜநமும் அதன் விஷயங்களும்	146
ஸ்ரீ கீதாசார்யனும் தென்குருகூர் நம்பியும்	283
ஸ்ரீமத் எம்பெருமானார் திருப்பள்ளியெழுச்சி ...	370
ஸ்ரீமத் ராமாயணமும் ஆச்ரய ப்ராதாந்யமும் ...	420
ஸ்ரீவேதாந்த தீபிகையும் பண்டித ஸமாஜங்களும் ...	547
ஸங்கல்பத்தின் தத்வ விசேஷம்	129
ஸம்ஸ்க்ருத பாஷையும் பண்டிதர்களும்	1
ஸம்ஸ்க்ருதத்தின் தற்கால நிலைமை	233
ஸம்வர்க்க வித்யோபாக்யாநத்தில் சில அபூர்வ ரஸங்கள் ...	637
ஸம்பாதகரின் குறிப்புகள் :—	
அத்வைத ஸித்தாந்தமும் பகவத் பக்தியும் ...	540
ஐந்தாவது ஜார்ஜ சக்ரவர்த்தியின் மரணம்	378
கீதா ரஹஸ்யம்	598
டாக்டர் வெஸ்ட் காட் என்பவரின் உபந்யாஸம் ...	252
'நதே ரூபம்' என்பதன் உட்பொருள்	39
நமது மதத்தின் உண்மை	436
பகவானுடைய அபஹதபாப்மத்வம்... ...	494
மடத்து மசோதாவின் பயத்யாகம்	39
மாம்பலம் அத்வைத ஸபை	601
யதீந்த்ர மத தீபிகை	497
ஸர். எஸ். ராதாக்ருஷ்ண வித்வானும் ஹிந்துமதமும் ...	375
ஸர். எஸ். ராதாக்ருஷ்ணன்	496
ஸோவியேட் ரஷ்யாவில் தாம்பத்யத்தின் ஸ்திதி ...	306
ஜந்மாந்தர ஜ்ஞாநம்	309
ஹிந்துமதமும் இக்காலத்திய பெரியோர்களும் ...	381
ஜீவாத்மாவின் ஸ்வேச்சா ப்ரவ்ருத்தி	257, 316
ஜீவாத்ம தத்வ ஸ்வரூப நிரூபணம்	328
ஹரிப்ரீதியும் காளிதாஸரும்	533

மேல்வேறொன் றிலதாகி மிக்கருளத்
தெருண்டவரு மிரண்டை வீட்டி
நூல்வேதங் களிற்றுளங்கா நுண்ணுர்வி
னுண்மையுணர்ந் தொளிர்ந்தா ரன்றே. 53

திருஞானக் கொழுந்துவிட விவ்வணந்
தெருண்டமுனி யோகி யாழ்வா
ரிருமாமை யடிகளையும் பொலிந்து நின்ற
வெம்பெருமான் பதமு நாளும்.
மருவாநன் கருச்சனைசெய் துறைந்திடனு
மந்நகரை மணந்தோ ரெல்லா
மருகாவவ் வுத்தமரி னருங்குணத்திற்
கதிசயித்தாங் கறைய லானார். 54

ஒருமாற னிருவிழிக்குக் கோசரமாய்த்
திருமந்தி ரமுமுயந் தோங்கு
மருமாநற் பொருள்களுமற் றித்தகைய
விராசியமு மறைந்தார் நிற்கிப்
பெருமாபே றுரடைந்தா ரிதுநிற்க
பிறங்கெழிலோய் கலியன் முன்னாண்
மருமாலைத் துளவரங்கன் பதம்பழிச்சி
மற்றவன்ற னருளின் வண்ணம். 55

இச்சடகோ பன்றன்னைத் திருவரங்கத்
தெழுந்தருளப் பண்ணி யாரு
மெச்சவுயர் மார்கழிசுக் கிலவேகா
தசிமுதலீ ரைந்து வைக
லுச்சமுறு மறைத்திருவாய் மொழியோரா
யிரந்தமையு மோது வித்தே
யச்சொலருஞ் சிறப்பினுக்காங் கத்தியய
னோற்சவமென் றறைந்தோர் நாமம், 56

ஆண்டுதொறு மிவ்வண்ண மாகுகவென்
றருளின்னு மர்த வண்ண
மாண்டவெழிற் குணத்தினர்க்கண் டத்தினரா
மன்னுபக லதன்பின் காலம்

பூண்டதொரு வேற்றுமையாம் புகாலவ்
வேற்பாடும் போகி யெங்குந்
தேண்டிடினுங் கிடையாதித் தமிழ்மறையுங்
காந்ததெனத் தெரிக்கக் கேட்டேம். 57

வேறு

என்றியம்ப வந்தயோகி யிதயநன் குவப்புற
நன்றெனைக்கொ டென்னையாளு நாகமீ துறங்குவோ
னென்றிருங்கு றைதணித்த தென்னவின்னு மொன்றையு
மின்றெழுதித்தெ னைப்புரக்க வென்றுதோத் தரித்தரோ. 58

கோயிலேகி யரங்கநாதன் குரைகழல்வ ணங்கவம்
மாயவன்ம கிழ்ந்துயோகி மனத்தின்வண்ண நிகழ்த்திடற்
கேயுமாணை யீயமற்று மெழிற்கலீய னாணையு
நேயமோடு நேரவோலை நகரிசெல்ல விட்டடன். 59

ஆழுவா ரெழுந்தரு வாற்றுவத்து பாங்கமாம்
வாழுமுத லாயிரமுந் திருமொழியும் வாமனன்
சூழுமார்க ழியினடைந்த சுக்கிலத்தி ரைந்துநா
ளாழிநாத னிலயந்தன்னு ளடியரோத வாற்றியும். 60

அந்தவேகா தசிதுடங்கி யையிரண்ட ரும்பகன்
முந்தருந்தி ருவாய்மொழி யும்மறுதி னத்தினிற்
சாந்தமாகி யற்பாவோரா யிரங்களையும் சாற்றுவித்
திந்தவாறு மேழுமெட்டு மாகிரும்ப கல்களில். 61

ஆகரும்சி றப்புமத்தி யயனவுற்ச வம்மென
நாகமும்பு கழுமாறு நல்லநாம மும்புனைந்
தேகியின்கு டந்தைதன்னி லிலகுமாரா வமுதனின்
வாகைசூடு மடிகண்மற்றும் வணங்கியும்ப ழிச்சுறு. 62

அங்குமாற னருச்சைதன்னை யெழுந்தருள மைத்துநீர்
பொங்கரங்கத் திழைத்ததென்னப் பொருவிலாத மார்கழித்
திங்கடோறுந் திருவிழாந டத்துமாற மைத்துவான்
றங்குசார்ங்க பாணிநாதன் றுள்களைப்ப ணிந்துபின். 63

இத்தமிழ்ம றைகளிந்த வெம்பரன்னி லைகொளச்
சித்தநன்கு செய்ததாலா ராவமுதாழ் வானென
வொத்தநாம மினியிவற்கு ரைக்கலாகு மெனவுவந்
தத்தமாம லரிரண்டு மங்குசூட்டி நின்றனர். 64

நின்றநாத முனிகளெங்கு நிகரிலாத தன்மையை
நன்றுவந்து கடைக்கணித்து நாகணைத்தி ருவுர
னென்றுவோர்த மக்கிவற்றை யோதியெங்கும் பரவுறச்
சென்றுசெய்க வெனமிழற்றி விடையளித்து விட்டனன். 65

அப்பரன்பு னைந்தளித்த துளபமாலை யருள்களு
மொப்பொழிந்த வுவரடைந்து மாடவோளி யூர்மிடைந்
தப்பனுமன் னாடியை வணங்கிநின்றெ னையனே
துப்பனேநின் றுணிபுநன்கு நீபுரிந்த கருணையால். 66

தொண்டனேன்மு கத்திளெங்குந் துலங்கலாய தெனமுதங்
கொண்டுதோத்தி ரிக்கமாயன் குளிர்கடைக்க ணேக்குறுக்
கண்டுநம்வி றல்களிந்தக் காசினியு யும்வணம்
வண்டமிழ்ம றைபெருகும் வழிதுலங்க வளைந்தையால். 67

ஆகையாலி னிச்சுகித்திவ் வருந்தலத்தி லுறைதியென்
றாகைமாலை முதலவாய வரிசைக ளளித்தலும்
வாகைகொண்ட வந்தயோகி வரிசையோடு மிறைமிடைந்
தோகைகொண்டு மத்தலத்தி லோகமுற்றி ருந்தனர். 68

வேறு

பின்னரப் பெரிய யோகி மேலைகீ ழகத்தை யாழ்வார்
முன்னுறும் பலர்க்குத் தேவ கானத்தின் முறையி னனே
யின்னறுந் தமிழ்வே தங்க ளிசையுறப் பயிற்று வித்துத்
தென்னரங் கனுக்குப் பாட வவர்களிற் சிலரைப் போக்கி. 69

சிலர்களைத் தமதூர் மன்னார் செஞ்செவிக் கினியப் பாட
நலமுற வமைக்க வந்த நறுஞ்சுவை யொழுகும் பாட
லலைகட லவனி யெங்கு மகலங்கொண் டொளிரக் கேட்போ
ருலைவறு மமுதந் தன்னை யுண்பவர்க் குவமை யானார். 70

பராசரன் மகன்முன் வேதம் பாங்குறத் திருத்தி ஞன்போற்
சராசரம் பிழைக்க விந்தச் சான்றவர் மதுரங் காலும்
மராமரம் துளைத்தான் பாடு மன்னிய தமிழ்வே தத்தை
யராவிடுஞ் செயலே யென்ன மணியைநன் கலங்கச் செய்தார். 7

இப்படி யவனி யெங்கும் பரவிய தேவ கான
மொப்புற வுணர்ந்தா ளான வொருசிறு கணிகை போந்து
தப்பறப் புரக்குஞ் சோழன் றன்னவை யணுகிப் பாட
வப்பொழு தொருத்தி மானு டத்தையு மிசைத்தா ளாங்கே. 7

மன்னவன் மனுட கான மருந்தையே மகிழ்ந்து மாந்தி
யன்னவட் கணிக ளாதி யருஞ்சிறப் பளித்து மற்றைப்
பன்னருந் தேவ கானப் பாவையை யவம தித்தான்
கன்னலுங் கசக்கு மொட்ட கத்தினுக் குமென்ப மாதோ. 73

பரத்தையிற் சிறந்த வந்தப் பைங்கிளி பரந்தா மன்றன்
றரைக்கணுர் தலங்க டோறுந் தகையுறுந் தேவ கானஞ்
சிரத்தற விசைத்துக் கொண்டே சிறந்நநா தமுனி வாழு
முருக்கினர் வீர நாரா யணபுர முவந்து புக்காள். 74

புக்கவண் மன்னுர் மூன்னர்ப் பொருவருந் தேவ கானம்
பக்கமார் கல்லு மாங்கே யுருகிடப் பாடக் கண்ட
வக்கலைக் கிறையா நாத முனிகளு மதிச யித்து
மிக்கதோர் சிறப்புஞ் செய்து மேம்படப் புகழ்ந்தா ரன்றே. 75

முன்னவ மதித்த பொன்னி முதுபொழி லிறைவ னிந்தப்
பன்னரும் புதுமை கேளாப் பரமயோ கியுந்தன் பாங்கர்
மன்னெழி லவைக்குப் போத வொற்றரை மகிழ்ந்து விட்டா
னன்னவ ரணுகோ மென்ரு ரவர்க்கவ னடலு மென்னே. 76

ஆங்கரு குறையுந் தொண்ட ரவனுமக் கிணையின் றேனும்
பாங்குறுந் தேவ கானப் பரத்தையின் பொருட்டா லைய
வீங்கெழுந் தருள்க வென்ன விதுவுமோர் முறைதா னென்று
தாங்குற வவனை மன்னன் றன்னவைக் கெழுந்தா ரன்றே. 77

புரவலன் புனிதர்க் காங்குப் பொள்ளென வெதிர்கொண் டேன்று
மரைமல ரடியில்வீழ்ந்து மண்மிசைப் பணிந்தெ ழுந்தே
யரசவை யடைசிச் சிங்கா தனத்தினி லிருத்தி யாற்றும்
வரிசைகள் பிறழா வண்ணம் வகைபெற விழைத்து மாதோ. 78

வேதியர் குலத்து வேந்தே தேவகா னத்தின் பாடு
மீதென வறியே னென்ன வெழின்முனி வருமங் குள்ள
மேதகும் கற்றாண் மீதோர் கஞ்சத்தை யமைத்து மின்னின்
சோதியார் தேவ கானச் சுந்தரி முகத்தை நோக்கி. 79

ஓமென வவளு மாங்கே யொருகுயி லிசைப்ப தென்னத்
தூமணி முறுவ றோன்றத் தொண்டைவாய் திறந்து பாடக்
கோமகன் கம்ப நீரா யுருகிடக் குறிப்பின் மற்றுந்
தேமொழி விலைமா தோர்ந்து நிறுத்தின டிவிய கானம். 80

நிறுத்தலு முனிவர் சொல்லா னிறுபனு மெடுக்கத் தாளம்
பறித்திடற் கரிதாய்க் கம்ப மிறுகிடப் பரத்தை மற்றுங்
குறிப்பறிந் திசைக்க மீண்டு நெகிழ்வுற வெடுத்துக் கொண்ட
நெறிப்படு வளவ னுள்ள நெகிழ்ந்திறும் பூதுற் றுனல். 81

பின்னறு மொருநா னூறு பிறங்கஞ்ச னங்க டம்மை
யன்னவ ரொருங்கி சைப்பித் தவைகளி னிறையொவ் வொன்று
மின்னதென் றிசைக்க வேந்த னிதயமிக் குவந்தி யோகி
மன்னரின் பதத்த னேகந் தரம்விழுந் தெழுந்து மற்றும். 82

ஆரிய மணியே யுன்ற னருந்திற லறிவு ருத
பூரிய னவைக ளெல்லாம் பொறுத்தியென் றிறைஞ்சிப் போற்றிச்
சீரிய மணிகண் மின்னுஞ் செய்யபொற் பணிக ளாதி
கூரிய சிறப்புப் பல்ல கொடுத்திவை மணக்க வென்றான். 83

மலரவள் கொழுநன் பாத மலரலான் மற்றத் தெய்வ
வுலகிருந் தொருகோ லோச்சு மதனையு மொறுக்கு மந்தக்
கலைவலா ரவற்றை யேற்கா திறைவனைக் கடைக்க ணித்தே
நலமுறு முகமன் கூறி நடந்துதக் கராஞ் சார்ந்தார். 84

காவலன் தன்பின் றேவ கானத்திற் கன்பொ யுள்ள
பாவையின் றிறத்திற் கேற்பப் பைம்பொற் [illegible]
தீவிய மணிக ளாழுந் [illegible]
மேவரும் பொருள்க ளெல்லா [illegible] யளித்து விட்டான். 85

வேறு

மருவி முனியூரை மன்னாரை வணங்கிப்
பெருகு காலையந்தப் பெருமையோர் திறத்திற்
குருகைக் காவலப்பன் குளிர்புண்ட ரீகாக்கன்
றிருநம்பி கருணா கரதாச னென்றும். 86

திருக்கண்ண மங்கை யாண்டா னுருப்பட்டூ
ருருக்கிளரு மாச்சான் பிள்ளையோடு மற்றும்
பெருக்கமுறு வேறு டையான் பத்தி
யிருக்கு ஞானவான் மாதேவி யாண்டானும். 87

சோகத்தூ ராழ்வானு மாகுமிந்தத் தூயோ
ரேகிப்பி ழைத்துய்ப வடைந்தி றைஞ்சியேத்தப்
பாகொக்குந் திருவாய் மொழியு மதன்பண்பு
நாகர்க்கு மரிய மறைகளு நவின்றார். 88

செம்மை பெறுஞாய தத்துவ முஞ்செய்ய
உண்மை பெறுயோக ரகசியமு மென்னு
மம்மை பெறுநூல்க ளமைத்தடி யார்களுக்
கெம்ம கிமைகளுமி யையும்வண நின்றார். 89

வேறு

ஈங்கிவ ரொளிரக் கிள்ளி யொருபக லிவரின் யோகப்
பாங்கினைச் செவியுற் றேகிப் பார்த்திடும் விழைவிற் றன்னின்
மாங்குயி லனைய வாசை மகிடிக ளுடனே போந்து
நீங்கருந் திருமன் னாரை நீள்பதந் தொழுது போற்றி. 90

மற்றரு முனிவர் பாத மண்மிசை விழுந்தி றைஞ்சிப்
பெற்றிடற் கரிய யோகப் பெருமைகண் டதிச யித்துப்
பொற்றதாட் புனலு மன்னார் கருணையும் புகன்று கொண்டு
சிற்றிடைச் சிகளி னாரைச் சேர்தரப் புறப்பட் டானால். 91

திருவுடை மன்னர்க் காணிற் றிருமாலைக் கண்டே னென்னும்
கிரமமா யவனுந் தேவி மார்களுங் கிளருங் கண்ணன்
மருவிய கோபி மார்க ளெனமருண் டவர்பின் போக
வருகினி லுறையுஞ் சீட ராங்கிரு வியப்பிற் காளாய். 92

முனிவரி னடிக ளாகு முளரிமென் மலரைத் தத்தஞ்
செனிகளிற் புனைந்தெ ழுந்து செங்கரங் குவித்தெம் மைய
தனியுறும் பிரம ஞான மென்றிடுந் தழலின் முற்று
நனியுணப் படுகை யாலே யோகியாய் நலத்தின் மிக்கான். 93

ஆரண சிரத்தி னார்ந்தே யடிமையங் கிழைக்கா னென்னுந்
தோரணை மருவி நீயுந் தூவியி னெகின வூர்தி
யோரணி யெருத னாதி யிமையவர் தமக்கு மெட்டா
நாரண னடியின் றொண்டை நனிமறந் தனையோ வென்றார். 94

கேட்டது கிளரு ஞானக் கெடலரும் பெரிய யோகி
மீட்டெழுந் தொக்கு மொக்கு மிழற்றுதற் கரிய தொண்டி
னாட்டமார் நமக்கவ் வாறு நலமுறா தெனவே மீண்டு
தீட்டரும் பரமன் சீரைத் திகழ்தர விளக்கிப் போந்தார். 95

இன்னண நிகழ வோர்கா லெழின்முனி மனைவி யாரை
நன்னயம் பெருக வீன்ற நலமுறுந் தந்தை காண
மன்னிய வொருவன் றன்னை மணக்கழைத் தடைய விட்டா
ரன்னவ னதனை யேகி முனிவரர்க் கறிவித் தானால். 96

கண்டதை யவரு முள்ளக் களிப்புடன் றகைமைக் கில்லாம்
புண்டரீ காக்கர் தம்மைப் பொருந்துறுந் துணையாய்க் கூட்டித்
திண்டிற லரிய கற்பிற் றேவியை விடுக்க வன்னார்
கொண்டுபோ யாச்சி யார்தங் குலவுமா ளிகையிற் சேர்த்தே. 97

அடிதொழு தவரை யைய விடையருள் கென்ன வாச்சி
யடிசிலுண் டெழுக வென்ன வவரதற் கியைய வாங்கே
தடிநிகர் சிலகு றும்பர் புரச்சிகை தரித்த தாலே
விடுவென விழித்தன் னாரை மனைப்புறத் திருக்க வைத்தே. 98

நெருநனீ ரிட்டு வைத்த பழையதை யளிக்க நேர்ந்தே
யரிதிதென் றமுது செய்தே யகங்குளிர்ந் தாச்சி தந்த
திருவிடை மணந்து மீண்டு திருமுனி யகத்தை யண்மி
மருமல ரடியி றைஞ்சி மலர்முகத் தெழுந்து நின்றார். 99

யோகியு மலர்மு கத்தை யுற்றறிந் துளத்தில் விஞ்சு
மோகையை யுணர்ந்தி தற்கே காரண மெனவென் றுன்னி
யோகமா நெறியி லுண்மை யுணர்ந்துகந் தனக்கங் கென்ன
வாகருஞ் சிறப்பு நேர்ந்த தெனவவ ரடங்கிச் சொல்லார். 100

மேனிலை யருளு வென்றன் மிகுபுகழ்க் குரவ ரேறே
யானடைந் துய்ந்த பேறு யாரடைந் துலகி னுய்ந்தார்
போனகஞ் செய்த சேடந் தருவரேற் புனித மென்றே
யானவர் விழுமி யோர்முன் னுவந்துள மறைந்த வண்ணம். 101

தண்ணிய புனலின் முன்னாட் டகைபெறப் பெய்து வைத்த
வொண்ணறும் பழைய வல்சி யூறுமன் புடனே யாக்கி
பண்ணிய நியம னத்தாற் பண்புட னருந்தப் பெற்றேன்
விண்ணவ ரமுது மீதின் விறலினுக் கிணைய துண்டே. 102

எனவவ நிறைஞ்சி நிற்க முனிவரு மிதயம் பொங்கி
யனகனே யெம்மை யுய்யக் கொண்டனை யழகா வென்று
பனிமலர்க் கரங்க ளாலே பரிவுட னிறுகப் புல்லிச்
செனிமிசைத் தமது பாதம் பொலிவுறச் சேர்த்தி னாரால். 103

முழுமதி யெழலு முந்நீர் கிளர்வது கடுப்ப வாங்கே
விழுமிய விவரும் பொங்கி வினையினேன் சிரத்தி னுந்த
மழகுரு மடியாம் பங்க யந்தனை யணியப் பெற்றேன்
விழைவது மினியொன் றுண்டோ விமலவென் றிறைஞ்சி னாரால். 104

வேறு.

இச்செயல றிந்தருகி ருந்தவர்க ளிந்த
வுச்சமுறு மாசிரிய சீடரிரு வோரும்
பச்சைமுகின் மாலொடுநி ராட்டியது பண்பே
யிச்சையொடு மேன்றிலகு கின்றனர்க ளென்றே. 105

பொங்கிமுனி பூவடிவ ணங்கியெம தைய
னிங்கிவர்த மக்கியக்கொண் டாரெனுமெ ழிற்பேர்
தங்கவருள் செய்திடினி னித்தரையி லாரு
மெங்குமிகு கொண்டியுநெ றிப்படுவ ரென்றார். 106

மாமுனியு மற்றவர்மொ ழிந்ததொலு மென்றே
நாமமது தந்தவரை நன்குறம கிழ்த்துத்
தாமரைய ணங்கிறைவன் றன்மையுல கெங்கு
மேமமுற நன்கிலக விழைத்தனரி ருந்தார். 107

எல்லா ஆயுர்வேத வைத்தியர்களும் இங்கிலீஷ்
டாக்டர்களும் பிறரும் கொண்டாடும்

சார்ங்கதர ஸம்ஹிதை

ஆயுர்வேத சாஸ்திரத்தின் ஸகல ஸாராம்சங்களும் அடங்கிய மிகப்
பிராசீன வைத்தியக் கிரந்தம்.

வைத்தியரத்னம்

பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்,

ஆயுர்வேத பூஷணம், ஆயுர்வேதாசார்யர் அவர்களால்
ஸம்ஸ்க்ருதத்திலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது.
சீர்திருத்திய மூன்றும் பதிப்பு

மூன்று கண்டங்களும் 32 அத்தியாயங்களும் அடங்கியது.

வைத்திய பரிபாஷை முதலியவைகள்.

1. பூர்வகண்டத்தில்:—(1) வைத்திய பரிபாஷைகள், (2) ஒஷதி முதலியவற்றின் விவரணம், (3) நாடி பரீக்ஷாதிகள், (4) தீபக-பாசநாதி குண விவரணம், '(5) சரீரதத்வாதிகள், (6) உணவு உட்செல்லும் வகை முதலியன, (7) ரோகவிவரணம் என்னும் ஏழு அத்தியாயங்கள் அடங்கியுள்ளன.

ஔஷத முறைகள்.

2. மத்திம கண்டத்தில் :—(1) ஸ்வரஸ முறைகள், (2) க்வாத-கஷாய முறைகள், (3) பாண்ட கஷாய முறைகள், (4) ஹிமகஷாய முறைகள், (5) கல்க முறைகள், (6) சூர்ண முறைகள், (7) குளிகை-மாத்திரை முறைகள், (8) லேஹ்ய முறைகள், (9) ஸ்நேஹ-தைல-க்ருத-முறைகள், (10) ஸந்தாந ஆஸவாரிஷ்ட-முறைகள், (11) தாது-லோஹ-பாஷாணாதி-சுத்தி பஸ்மாதி முறைகள், (12) ரஸங்கள்-ரஸ-கந்தகாதி முறைகள் என்னும் பன்னிரண்டு அத்தியாயங்கள் அடங்கியுள்ளன.

சிகித்ஸா கிரமங்கள்.

3. உத்தரகண்டத்தில் :—(1) ஸ்நேஹபாநவிதி, (2) ஸ்வேதவிதி, (3) வமநவிதி, (4) விரேசநவிதி, (5) வஸ்திவிதி, (6) நிரூஹவஸ்திவிதி, (7) உத்தரவஸ்திவிதி, (8) நஸ்யவிதி, (9) தூமபாநவிதி, (10) கண்டூஷாதி விதி, (11) லேபநாதி விதி, (12) இரக்த மோக்ஷணவிதி, (13) நேத்திர சிகித்ஸை, ஆகப் பதின்மூன்று அத்தியாயங்கள் அடங்கியுள்ளன.

வேறு விவரம்.

எளிய வசனநடை, விஷயங்கள் ஒழுங்காகவும் தலை யங்கங்களோடும் அமைக்கப்பட்டிருக்கின்றன. விரிவான உரை. விசேஷ அநுபந்தங்கள். ஸகல விஷயங்களுக்கும் விஸ்தாரமான விஷய அகராதிகள்.

உயர்ந்த காலிகோ பைண்டு	ரூ.	5	4	0
இரண்டாந்தர பைண்டு	ரூ.	4	4	0

வைத்திய கலாநிதி ஆபீஸ்,

11, ஆதியப்ப முதலித் தெரு, வேப்பேரி, மதராஸ்.

Registered No. M. 916.

ஓர் ஆச்சர்யமான ஸம்வாதம்

கேளுங்கள்: பாருங்கள்: வாருங்கள்: வாங்குங்கள்:

சாஸ்திரி:—விசுவாச முள்ளோர்க்கன்று சாஸ்திரமே ப்ரமாண மென்கிறார் கீதாசார்யன். "तस्माच्छास्त्रं प्रमाणं ते" என்று கேட்டதில்லையா?

க்ருஹிணீ:—ஆனால் என்ன?

சாஸ்திரி:—ஆசார்ய வாக்படர் கூறுவதைக் கேளம்மா, நீங்கள் சும்மா இருப்பது சரியல்ல.

"सूर्यादिग्रहनिग्रहापहरणं दीर्घायुरारोग्यदम्
सौभाग्योदयभाग्यवश्यविभवोत्साहप्रदं धैर्यकृ
दुश्छायाचलधूलिसङ्गतिभवालक्ष्मीहरं सर्वदा
वज्राणां परिधारणं निगदितं भूतादिनिर्नाशकम् ॥



க்ருஹிணீ:—நீர் சொல்வது எனக்குப் புலப்படவில்லையே.

சாஸ்திரி:—கதிரவன் முதலான கிரகங்களின் சாபங்களைத் தடுக்கும்; நீண்ட ஆயுளையும் சரீர சுகத்தையு மளிக்கும்; ஸௌமங்கல்ய நிலையைத் தந்திடும்; ஸகல பாக்யங்களையும், வசியத்தையும், விபவங்களையும், உத்ஸாஹத்தையும் விளைவிக்கும்; கெட்ட நிழல் பர்வத தூசி இவைகளின் சேர்க்கையினால் உண்டாகும் பிணியை நீக்கும்; பூதம் முதலான பேய் பிசாசுகளை நிர்மூலமாக்கும். எது? வைரமணிகளை 'परिधारणं' நிரம்பத் தரிப்பதேயாம்.



க்ருஹிணீ:—அடடா! என்ன ஆச்சர்யம்! அவைகள் எங்கே கிடைக்கும்?

சாஸ்திரி:—வெகு அழகாயும் மிக்க ஸரஸமாயும் ஒரே ரேட் (விலை) உள்ளதாயும் வைரங்கள் கிடைக்குமிடம்—

ஸூராஜ்மல் லல்லுபாய் அண்டு கம்பெனி,
313, எஸ்பளனேட், மதருஸ்.

SURAJMAL'S
The Jewellers
313 ESPLANADE, MADRAS.

Printed by Kabeer Printing Works, Triplicane, and Published by Vankipuram S. Vasudevachariar, for Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd., Madras.

SRI VEDANTA DIPIKA

. 25] AUGUST 1936 [Part 2

Editors: { S. VASUDEVACHARIAR
V. V. SRINIVASA AIYANGAR }

OFFICE OF THE ... 12 MAR 1937 ... MADRAS

ஸ்ரீ வேதாந்த தீபிகை

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபையாரால்
ப்ரசுரிக்கப்படும் மாதத் தமிழ்ப் பத்ரிகை.

தாது வருஷ

ஆடி மீ.

பத்ராதிபர்கள்:

ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்
வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்

CONDUCTED BY
Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd.,
VANI VILAS, 4, BADRIAH GARDEN ST., PARK TOWN, MADRAS.

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபை
(லிமிடெட்)

வாணிவிலாஸ், 4, பத்திரய்ய கார்டன் தெரு,
பார்க்டவுன், சென்னை.

சந்தாதார்கள் ஸபையின் விலாஸம் மாறியிருப்பதைக் கவனிக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம். சந்தாத் தொகையை ஜெனரல் கார்யதர்சி, ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார சபை, வாணிவிலாஸ், 4, பத்திரய்ய கார்டன் தெரு, பார்க்டவுன், மதிராஸ், என்னும் விலாஸத்திற்கு அனுப்பவேண்டுமென்றும் தீபிகையின் வருடம் ஏற்கனவே முடிந்து விட்டபடியால் சந்தா பாக்கிகளை காலதாமதமன்னியில் அனுப்பவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

T. Rajagopalachari,
ஜெனரல் செக்ரிட்ரி.

அதிர்ஷ்டம்! எப்படி?

L. N. பெப்பர்மெண்டையே வாங்கவேண்டும்.

குழந்தைகளின் சிநேகிதர்கள்! பெற்றோர்களின் களிப்பு!!

விலை மலிவு! சுவை பெரிது!

நன்மை தரும்!

இந்திய முதல்—இந்திய தொழிலாளிகள்.

வாங்க முந்துங்கள்! கொடுக்கும் பணத்திற்கு

நல்ல பெப்பர்மெண்டு!!

For Delicious and wholesome Confectionery made of selected Fruit Essence, and healthy glucose, apply to:—

SRI L. N. CONFECTIONARY,

Sales Depot:—West Chitrai St., Madura.

MADRAS OFFICE:—**Phone No. 3658.**

Y. M. I. A. Buildings, Armenian St., Madras.

हिंगु காயம்

"हृद्यं हिंगु कटूष्णं च क्रिमिवातकफापहम् ।
विबन्धाध्मान शूलघ्नं चक्षुष्य गुल्मनाशनम् ॥"

சுத்தமான பெருங்காயம் ஹ்ருதயத்திற்கு பலம் தரும்; காரமும் உத்ஸாஹமுமளிப்பது; வயிற்று க்ரமிகளையும், வாத தோஷத்தையும், கப தோஷத்தையும் போக்கும்; மலகந்தம், வயிற்று நோய் இவைகளையும் தீர்க்கும்.

இவ்விதம் சாஸ்திரத்திலுள்ள குணங்களைப் பெற்ற சிறந்த பெருங்காயம் **L. G.** குறி உள்ளதுதான்—

லால்ஜி கோது & கம்பெனி

பிரபல பெருங்காய வியாபாரிகள்,

பம்பாய் சென்னை கும்பகோணம்

अमृतांजनम्

அம்ருதாஞ்சனம்

உண்மையில் அம்ருதம் போன்றது. இப்பெயர் அகரத்தில் ஆரம்பிப்பதால் இது அகில மங்களமும் அளிக்கக் கூடியது என்று அடியில் கூறும் ப்ராசீன முது மொழி கூறுகிறது.

"अ इति भगवतो वाचकमकारं
प्रयुञ्जानेन किं नाम मङ्गलं न कृतम् ।"
" अकारोपक्रमश्चास्मिन्मङ्गलत्वाभिसन्धितः ।"

தலைவலி, ஜலதோஷம்,
சுளுக்கு முதலான சகல
நோய்களையும் தீர்க்கவல்ல
ப்ரஸித்தமான லேபனம்—

அம்ருதாஞ்சனம் டிபோ

பம்பாய், மதராஸ், கல்கத்தா.

ஸ்ரீ:

ஸ்ரீமதே நம:

திலாவநக்ஷத்ர தராவணம்
ரவிகரமளரவரா உரம் உயாதே ।
வவாமஜக்காநாவ்ய தாநநாஜெ
விஜயஸவெ ரதிரஷ்ட ஜெடநவஷா ॥

ஸ்ரீ வேதாந்த தீபிகை

பத்ராதிபர்கள் : { ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்
வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்.

ஸம்பு. 25] தாது ௵—ஆடி ௴ [ஸஞ்சிகை. 2

விஷய ஸூசிகை

1.	ஸ்ரீ ஜகத்குரு காதி அநந்தாசார்ய ஸ்வாமி	64
2.	ஸ்ரீமத்ராமாயணம்—பாதுகா பட்டாபிஷேகம் [ஸ்ரீ. உப. சேட்லூர் துரைசாமி அய்யங்கார், சித்தூர்]	66
3.	ஆவ்ருத்த்யதிகரண ரஸங்கள் [ஸ்ரீ. உப. எ. வி. கோபாலாசார்யர், M.A., B.L., அட்வொகேட்]	71
4.	வேத வைபவம் [வித்வான் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸதாதாசார்யர், திருவாதி]	76
5.	மீமாம்ஸா ஸங்க்ரஹம் [திவான் பஹதூர் ஸ்ரீ. உப. வி. கே. ராமாநுஜாசார்யர்]	84
6.	ஸ்ரீ கீதா மஹிமை [ஸ்ரீ. உப. திருக்கோட்டியூர் ஸ்ரீராமதேசிகாசார்யர், ஸ்ரீரங்கம்.]	92
7.	ஸ்ரீவரதராஜ பஞ்சாசத் [ஸ்ரீ. உப. எ. வி. கோபாலாசார்யர்]	99
8.	மநுஷ்ய சரீரமும் சாரீரக சாஸ்த்ரமும் [ஸ்ரீ. உப. வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்]	107
9.	திவ்யஸூரி சரிதம்	249

[வ்யாஸம் எழுதுபவர்கள் வ்யாஸங்களையும் அவை ஸம்பந்தமான மற்றைக் கடிதங்களையும் "ஸம்பாதகர், வேதாந்த தீபிகை, வாணி விலாஸ், போலீஸ் ராகவாசார்யர் தெரு, பார்க் டௌன், மதிராஸ்" அல்லது "ஸம்பாதகர், ராமஸ்வாமி தெரு, ஈஸ்ட் மாம்பலம், தியாகராயநகர், மதிராஸ்" என்னும் விலாஸத்திற்கும் அனுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.]

158960
சென்னை-600 00

காலஞ் சென்று பரமபத மடைந்த
ஸ்ரீமான் உ. வே. ப்ரதிவாதிபயங்கரம் ஜகத்குரு
காதி அநந்தாசார்ய ஸ்வாமி

இம்மஹான் சென்ற ஜுலை மாதம் 21-ம்வ உத்தர தேசத்தில் கங்கா ப்ராந்த்யத்தில் காலஞ் சென்றதாகக் கேட்டு, இந்தப் பரத கண்டத்தில் உள்ள ஸ்ரீ வைஷ்ணவர்கள் அனைவருமே துக்காக்ராந்தர்க ளானார்கள். ஜநித்த யாவையும் மரிக்கவேண்டுவது அநிவார்யமென்று அறிவுடையோர் அனைவரு மறிந்ததே யாயினும், பிரிவாற்றுமையாலும் பறிகொடுத்தது போன்ற வருத்தத்தினாலும் உண்டாகும் தேகத்தையும் க்லேசத்தையும் மநுஷ்யர்கள் ப்ரதிதினமும் அநுபவிக்கவேண்டியதாகவே இருக்கிறது. ஆயினும் சந்த்ர ஸூர்யர்களைப்போல் உந்நத ப்ரதேசங்களில் ஸஞ்சரித்துப் பூலோக ஜனங்களுக்கு ப்ரகாசத்தையும் ஹிதத்தையும் ஆஹ்லாதத்தையும் கொடுத்துக்கொண்டுவந்த உத்தம வியக்திகள் திடீரென்று அஸ்தமநமடைய எவர்தாம் துக்கிக்காமல் இருக்கக்கூடும் ?

ஜகத்குரு என்று ப்ரக்யாதி பெற்று இப்பரத கண்டம் முழுவதிலும் பூஜ்யராய் விளங்கின இந்த ஸ்வாமியைக் குறித்து இந்தத் தீபிகையில், அவருடைய சஷ்ட்யப்த பூர்த்தி மஹோத்ஸவ ஸமயத்தில், அவருடைய சரித்திரத்தைப் பற்றியும், திவ்யதேச தீர்த்தாதி யாத்ரைகளைப் பற்றியும், ஸித்தாந்த ஸ்தாபந ஸம்பந்தமான விஜயங்களைப் பற்றியும், தேவாலயாதி ப்ரதிஷ்டைகளைப் பற்றியும், தர்ம கார்யங்களைப் பற்றியும், அஸங்க்யேய சிஷ்யவர்க்கங்களுக்குச் செய்தருளின ஹிதோபதேச மார்க்கதர்சித்வம் முதலான காருண்ய க்ருத்யங்களைப் பற்றியும், ஆங்காங்கே நடத்தின பண்டித சமாஜ சம்பாவனாதிகளைப் பற்றியும், வைதிக வித்வத் பக்ஷபாத பஹுமாநாதிகளைப் பற்றியும், பகவத்ராமாநுஜ ஸித்தாந்த ப்ரசார அபிவ்ருத்திகளில் உண்டாயிருந்த உத்ஸாக ப்ரயத்நங்களைப் பற்றியும், அச்சிட்டு ப்ரசுரப்படுத்தின ப்ரபந்த பத்ரிகாதிகளைப் பற்றியும், இவையெல்லாவற்றிலும் அதிகரித்த ஆத்ம குணங்களைப் பற்றியும், ஸ்ரீமான் உ. வே. ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமியால் எழுதப்பட்டு ப்ரசுரிக்கப் பட்டிருக்கிறது.

அப்படியிருப்பினும், தத்காலம் ஸ்ரீ வைஷ்ணவ ஸமூஹத்திற்கே நேரிட்டிருக்கும் பரமதுக்கத்தையும் நஷ்டத்தையும் யோசிக்க நமக்கு ஒன்றும் வெளியிட்டுச் சொல்லாம லிருக்கவும் ஸாத்யமில்லை. ப்ரஸித்தி பெற்ற

காலஞ் சென்று பரமபதமடைந்த
ஸ்ரீமான் உ. வே. ப்ரதிவாதிபயங்கரம் ஜகத்குரு
காதி அநந்தாசார்ய ஸ்வாமி

வைதிக வித்வத் வம்சத்தில் ஜனித்து, ப்ரதிவாதி பயங்கரம் என்கிற வம்ச பரம்பரையான பிருது நாமாவை அந்வர்த்த மாக்கியவர்; ஆனால், க்ருச மான திருமேனியோடு கூடிய உபசாந்த மூர்த்தி; மாம்ஸ பூயிஷ்டமான இந்த ப்ராக்ருத தேகம் மெலிந்து பலஹீன மடைய வடையத்தான் ஆத்ம சக்தியும் ஆத்ம குணங்களும் கூட அபிவ்ருத்தி அடையக்கூடும் என்று நம்பி, ஆசார ஆகாராதி நியமங்களாலும் தம் தேஹத்தை ப்ரயத்ந பூர்வகமாய் க்ருசதமமாக்கிக்கொண்டவர்; தபஸ் ஸ்வாத்யாயபரர்: "ஓம் ஶாந்திః ஶாந்திః ஶாந்திః" என்று மும்முறையாய் முறையிடும் ஶ்ருதிக்கு ஒரு நிதர்சன மூர்த்தி போல் விளங்கினவர்; சாஸ்த்ரங்களிலும் வேதாந்தங்களிலும் பரமோத்க்ருஷ்டங்களென்று வழங்கப்பட்டிருக்கும் ஆத்ம குணங்கள் யாவற்றையும் தமதாக்கிக் கொண்டவர்; ஸ்ரீ வைஷ்ணவ குலத்திற்கே குன்றின்மேலிட்ட விளக்குப்போன்றவர்; ஸ்ரீ பகவத் ராமாநுஜ ஸித்தாந்தம் யாவஜ்ஜந ஸமூகத்திற்கும் அபிமத மதமாகி அவர்களுடைய இஹபர ஶ்ரேயஸ்ஸுக்கு ஆகவேண்டுமென்றும் பேராசை கொண்டவர்; எவ்விதமான ஆடம்பரமு மின்றி மஹான்களுக்குரிய அடக்கமும் அமரிக்கையுமே பூஷணங்களாக்கொண்டு இவ்வளவு ப்ரக்யாதி பெற்ற மஹான் இவர்தானோ வென்று ஜநங்கள் ப்ரமிக்குமாறு தன் சிறுமையினாலேயே பெருமை பெற்றவர்; கலாவிஶ்வாஸ மிருப்பினும் கலாவைஷம்யம் சிறிது மில்லாத மஹான். இப்படிப் பட்ட மஹா புருஷனையே நம்முடைய வைஷ்ணவ லோக மிழந்து விட்டது. அவர்க்காகவும் அவருடைய ஜ்ஞாபகார்த்தமாகவும் ஸ்ரீ வைஷ்ணவர்களாகிய நாம் அவருக்குச் செய்யக்கூடிய கைம்மாறு ஒன்றே உளது. 'அதாவது: அவர் எப்படி ஸ்ரீ வைஷ்ணவன் என்கிற பதத்திற்கு அநுரூபகுண சீலாதி அநந்த கல்யாண குணங்களைத் தம்முடைய ஆத்ம ஸ்வரூபத்தில் பயிரிட்டு வளர்த்து வந்தாரோ, அவ்விதமே அனைவரும் அவர் நடந்து காட்டின மார்க்கத்திலேயே அநுஸரித்துப் பெருமையடைவதே!

[வ. வே. ஸ்ரீ.]

ஸ்ரீ:

ஸ்ரீமத்ராமாயணம்—
பாதுகா பட்டாபிஷேகம்

[ஸ்ரீ. உப. சேட்லூர், துரைசாமி ஐயங்கார், அட்வொகெட், சித்தூர்.]

ஸ்ரீ பரதாழ்வான் அயோத்தியினின்றும் ஸகல பரிவாரங்களுடன் ஸ்ரீ ராம ஸந்தர்சநார்த்தம் அரண்யத்துக்கு எழுந்தருளி, ஸ்ரீராமபிரானை அயோத்யா ராஜ்யாபிஷேகம் பண்ணிக்கொள்ளும் பொருட்டுச் சரணாகதி செய்ய, அப்போது ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் பரதனைப் பார்த்து,

"புரா ப்⁴ராத: பிதா ந: ஸ மாதரம் தே ஸமுத்³வஹந் ।
மாதாமஹே ஸமாஶ்ரௌஷீத்³ ராஜ்யஶுல்கமநுத்தமம் ॥"

என்று அருளிச் செய்கிறார். [பூர்வம் நம் பிதாவான சக்ரவர்த்தி உன் தாயாரை விவாஹம் செய்துகொள்ளும்போது, 'உன் மாதாமஹரான கேகயராஜாவினிடம் கைகேயி புத்ரனை உனக்கு ராஜ்யம் கொடுப்பதாக ஓர் உத்தமமான கந்யா சுல்கம் வாக்தாநம் செய்தார்.]

இந்த விஷயத்தை ஸ்ரீ வால்மீகி மஹர்ஷி ஸ்ரீராமன் மூலமாக அப்போது வெளியிட்டாரே தவிர, இதர இடங்களில் வெளியிடவில்லை. இந்த ஸந்தர்ப்பத்தில் சில ஸம்சயங்கள் அடியேற்கு உதிக்கின்றன:—

1. இந்த விஷயம் ஸ்ரீராமபிரானுக்கு எப்போது தெரியும்? இதை யார் தெரியப்படுத்தினது? 2. ஸ்ரீராமனுக்கு யுவ ராஜ்ய பட்டாபிஷேகம் நிச்சயித்த காலத்தில் அவனுக்கு இது தெரிந்திருந்தால், பித்ரு வாக்ய பரிபாலந தீக்ஷை கொண்ட அப்பெருமான் எப்படி பட்டாபிஷேகம் செய்து கொள்ள உடன்பட்டான்? 3. தசரதனுடைய வாக்தாநம் வஸிஷ்ட மஹர்ஷிக்கும் ஸுமந்த்ரனுக்கும் தெரிந்திருக்குமன்றோ? அவர்கள் ராம பட்டாபிஷேகத்துக்கு எப்படி ஸம்மதித்தார்கள்? 4. தன் விவாஹ காலத்

தில் தன்னுடைய பர்த்தா செய்த வாக்தாநம் கைகேயிக்கும் தெரியுமே. ப்ரத்யக்ஷமான வாக்தாநத்தை அவலம்பித்துத் தன் புத்ரனை பரதனுக்கு ராஜ்யாபிஷேகம் செய்யவேண்டுமென்று கேட்காமல், தேவாஸுர யுத்தத்தில் கொடுத்த வரங்களைக் கொண்டு பரதாபிஷேகம் கேட்பானேன்? ஸ்ரீராமனைக் காட்டுக்கு அனுப்புவதற்கு மாத்ரம் வரத்தை உபயோகப் படுத்திப் பரதாபிஷேகத்தில் ப்ரத்யக்ஷ வாக்தாநத்தை ஏன் கேட்கவில்லை? 5. பித்ரு வாக்ய பரிபாலந வ்ரதத்தைக்கொண்டு ஸ்ரீராமன் பாதுகாபட்டாபிஷேகத்துக்கு எப்படி ஸம்மதித்தான்? இந்த விஷயங்கள் யாவும் விமர்சிக்கத் தக்கவை.

'விவாஹ காலத்தில் செய்த வாக்தாநம் ப்ரயோஜந காரியாக ஆக மாட்டாது; அதை நிறைவேற்றக் கடமை இல்லை' என்று சொல்லும் ஸமாதாநம் த்ருப்திகர மாகுமா? விவாஹ காலத்தில் செய்யும் வாக்தாநம் நிஷ்ப்ரயோஜநம் என்பது வாஸ்தவமானல், அது கேகயராஜாவுக்கும் தெரிந்திருக்குமே. அப்படியிருக்க; அதற்கு ஸம்மதித்துக் கேகயராஜர் ஏன் கந்யாதாநம் செய்தார்? மேற்கண்ட ப்ரஶ்நங்களுக்கெல்லாம் ஒருவரையும் தோஷ பாத்ரர்களாக ஆக்காமல் ஸமாதாநம் சொல்வது யுக்தமல்லவா? அடியேனுக்கு அம்மாதிரியான ஸமாதாநம் ஒன்று உதித்தது. ஸ்ரீராம வாக்யத்தில் பொதுவாக ராஜ்ய சுல்கமென்று சொல்லப்பட்டதே தவிர, அயோத்யா ராஜ்யமென்று சொல்லப்படவில்லை. கைகேயியைத் தனக்குக் கொடுத்து விவாஹம் செய்துவைக்கவேணு மென்று தசரதன் கேகய மஹாராஜாவைக் கேட்கும்போது, அக்கேகயராஜன், "என்னுடைய புத்ரி கைகேயியை யாராவது ப்ரபுவான ராஜாவிற்குப் பட்டமஹிஷியாகக் கந்யாதாநம் செய்தால், என்னுடைய பெண் ராஜா வாகலாம், உமக்கு ஏற்கெனவே பட்ட மஹிஷி இருப்பதால், அவளால் ஒரு புத்ரனை அடைந்தால், அந்தப் புத்ரனுக்குத் தானே ராஜ்யாபிஷேகம் ஆகும்; என் பெண் கைகேயியினுடைய புத்ரன் கநிஷ்டனாயிருந்தால் கௌஸல்யா புத்ரனுக்கு அவன் அடிமைதானே செய்யவேண்டும்" என்றிம் மாதிரி சொல்ல அப்போது தசரதன் இம்மாதிரி வாக்தாநம் செய்திருக்கவேணும்.

"நீ கொடுக்க உத்தேசித்திருக்கும் ராஜாவும் சக்ரவர்த்திக்கு உட்பட்ட ஒரு ஸாமந்த ராஜாதான்; உன் பெண் ப்ரத்யேக ராஜ்ய பரிபாலநம்

செய்யவேண்டுவதுதானே உன் அபீஷ்டம்? கைகேயியினிடம் ஜனிக்கும் புத்ரனுக்கு நான் ஒரு ப்ரத்யேக ராஜ்யம் கொடுக்கிறேன்; அந்த ராஜ்யத்தை அவன் பரிபாலநம் செய்யட்டும்; கௌஸல்யையின் புத்ரனிடம் அவன் அடிமை செய்யவேண்டிய ப்ரமேயமில்லை.'' இவ்விதமான வாக்தாநம் செய்து கைகேயியை விவாஹம் செய்துகொண்டார். இது வஸிஷ்டாதிகளுக்கும் மற்றையோர்க்கும் தெரிந்த விஷயம். இதை ஸ்ரீ ராமனுக்குத் தசரதன் தெரிவித்திருக்கவேணும்.

ராஜ ஸபையில், தசரதர், பட்டாபிஷேகம் பண்ணிக்கொள்வதற்கு ராமனை அந்தப்புரத்துக்குச் சென்று வரவழைத்தார். அப்போது தசரதர்,

"𑌵𑌿𑌪𑍍𑌰𑍋𑌷𑌿𑌤𑌶𑍍𑌚 𑌭𑌰𑌤𑍋 𑌯𑌾𑌵𑌦𑍇𑌵 𑌪𑍁𑌰𑌾𑌦𑌿𑌤𑌃 ।
𑌤𑌾𑌵𑌦𑍇𑌵𑌾𑌭𑌿𑌷𑍇𑌕𑌸𑍍𑌤𑍇 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌕𑌾𑌲𑍋 𑌮𑌤𑍋 𑌮𑌮 ॥"

என்று சொன்னார். [பரதன் தூரதேசத்தில் இருக்கும்போதே—அவன் இங்கு வருவதற்கு முன்னமேயே—உனக்குப் பட்டாபிஷேகம் ஆகவேணும்.]

"𑌕𑌾𑌮𑌂 𑌖𑌲𑍁 𑌸𑌤𑌾𑌂 𑌵𑍃𑌤𑍍𑌤𑍇 𑌭𑍍𑌰𑌾𑌤𑌾 𑌤𑍇 𑌭𑌰𑌤𑌃 𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 ।
𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌾𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑍀 𑌧𑌰𑍍𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌸𑌾𑌨𑍁𑌕𑍍𑌰𑍋𑌶𑍋 𑌜𑌿𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌃 ।
𑌕𑌿𑌂 𑌤𑍁 𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌣𑌾𑌮𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌿𑌤𑌿 𑌮𑍇 𑌮𑌤𑌿𑌃 ॥"

[பரதன் உன்னிடம் பக்தி விச்வாஸம் உள்ளவன் தான்; அவன் மிகவும் தர்மாத்மா; ஜிதேந்த்ரியன்; உன்னை அநுஸரித்தே இடக்கிறவன். ஆகிலும், மநுஷ்யர்கள் மநஸ் சஞ்சலமும் அஸ்திரமுமானது.]

இப்படித் தசரதன் சொன்ன ஸமயத்தில்தான் ராஜ்ய சுல்க விஷயமும் வெளிப்பட்டிருக்கவேணும். அதாவது: "பரதனுக்கும் ஒரு ராஜ்யம் கொடுப்பது ஸித்தம். நான் விவாஹகாலத்தில் செய்த வாக்தாநத்தை நிறைவேற்றுகிறேன். ஆனால் அவன் உன் பட்டாபிஷேகத்துக்கு முன் இவ்விடம் வந்தால் அவனாலாவது, அவனுடைய மாதா மஹனாலாவது, மாதா கைகேயியினாலாவது தடங்கல் அல்லது கலஹம் நேரிடலாம். அவன் வருவதற்கு முன்னமே உனக்கு யுவராஜ்ய பட்டாபிஷேகம் செய்துவிட்டால், பிறகு பரதன் வந்தால் என்னுடைய வாக்தாந ப்ரகாரம் அவனுக்கு ப்ரத்யேகமாக ராஜ்யம் ஏற்படுத்தி; அவனை அரசனாகச் செய்தால், முடிந்த கார்யத்துக்குக் கலகம் ஏற்படாது.''

இம்மாதிரி சக்ரவர்த்தி சொல்ல ஸ்ரீராமன், ப்ரீதியோடு பட்டாபிஷேகத்துக்கு ஸம்மதித்தான். இவ்விஷயம், ஸ்ரீராமன் லக்ஷ்மணனிடம் சொல்லும் வாக்யங்களால் ஏற்படுகிறது.

"𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑍇𑌮𑌾𑌂 𑌮𑌯𑌾 𑌸𑌾𑌰𑍍𑌧𑌂 𑌪𑍍𑌰𑌶𑌾𑌧𑌿 𑌤𑍍𑌵𑌂 𑌵𑌸𑍁𑌨𑍍𑌧𑌰𑌾𑌮𑍍 ।
𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌂 𑌮𑍇𑌽𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌤𑍍𑌵𑌾𑌮𑌿𑌯𑌂 𑌶𑍍𑌰𑍀𑌰𑍁𑌪𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 ॥
𑌸𑍌𑌮𑌿𑌤𑍍𑌰𑍇 𑌭𑍁𑌙𑍍𑌕𑍍𑌷𑍍𑌵 𑌭𑍋𑌗𑌾𑌂𑌸𑍍𑌤𑍍𑌵𑌮𑌿𑌷𑍍𑌟𑌾𑌨𑍍 𑌰𑌾𑌜𑍍𑌯𑌫𑌲𑌾𑌨𑌿 𑌚 ।
𑌜𑍀𑌵𑌿𑌤𑌂 𑌚 𑌹𑌿 𑌰𑌾𑌜𑍍𑌯𑌂 𑌚 𑌤𑍍𑌵𑌦𑌰𑍍𑌥𑌮𑌭𑌿𑌕𑌾𑌮𑌯𑍇 ॥"

[என்னுடன் இந்தப் பூமியைப் பரிபாலிக்கவேணும்; நீ என் ப்ராணன்; இந்த ராஜ்ய லக்ஷ்மீ உன்னையும் சேர்ந்தது; ஸமஸ்த போகங்களையும் நீயும் அநுபவிக்கவேணும்; என் ராஜ்யம், என் ஜீவிதம், எல்லாம் உனக்குத் தான்.]

இவ்விதமாகச் சொல்லவே, பரதனும் சத்ருக்நனும், "அண்ணா! இந்த ராஜ்யச் செல்வங்களை லக்ஷ்மணனை அநுபவிக்கச் சொல்லும் காரணமென்ன?" என்றனர். ஸ்ரீராமன் லக்ஷ்மண பக்ஷபாதியா? அவனுக்குப் பரத சத்ருக்நர்களிடம் த்வேஷமா? இவ்விதமான குணங்களை ஸ்ரீராமசந்த்ரன் மேல் ஆரோபிக்கத்தான் தகுமா? தகாது. இதனால், பரதனுக்கு ப்ரத்யேக ராஜ்யம் ஏற்படுத்துவது நிச்சயம்; அந்தப் பரதனோடு அந்த ராஜ்ய போகங்களைச் சத்ருக்நனும் அநுபவிப்பது நிச்சயம். ஆகையால் இந்த அயோத்யா ராஜ்யத்தை நீயும் நானும் பரிபாலநம் செய்யவேணுமென்று ஸ்ரீராமன் லக்ஷ்மணனைப் பார்த்து அருளிச்செய்கிறார் என்று ஏற்படுகிறது. ஆதலால் ஸ்ரீராமனுக்கு யுவ ராஜ்ய பட்டாபிஷேகம் செய்வதில் ஸர்வரும் ஸந்துஷ்டர்கள். இனி, கைகேயியினுடைய விஷயத்தை யோசிப்போம்.

கைகேயி விவாஹ காலத்தில் செய்துள்ள வாக்தாநத்தை அநுஸரித்துக் கேட்டால், தசரதர் ஒரு ப்ரத்யேக ராஜ்யம் கொடுத்து விடுவார். அதிகப்படியாகக் கேட்க அவகாசமிருக்கிறது என்பதை அறிந்தே அதைக் கேட்காமல், தன்னுடைய வரங்களை இவைகளுக்கு ஆதாரமாக்கிக்கொண்

டாள். ஆதலால் கைகேயியின் சர்யையிலிருந்தும் முன் செய்த ஸித்தாந்தமே ஏற்படுகிறது.

ஸ்ரீராமன் பாதுகா பட்டாபிஷேகத்திற்கு என் ஸம்மதித்தார் என்று ஒரு கேள்வி கேட்டோம். ஸ்ரீ ராமபிரான் பித்ருவாக்ய பரிபாலநம் செய்யும் தீக்ஷை கொண்டபோது, தசரதன் ஜீவதசையில் இருந்தார்; பாதுகா பட்டாபிஷேகத்துக்கு ஸம்மதித்தபோது பிதா இல்லை. அயோத்யா ராஜ்யம் ஸ்ரீ ராமனுக்கே தாயாதியாகக் கிடைத்தது. தசரதன் ஜீவித்திருக்கும் போது ஸ்ரீராமனுக்கு லபித்தது யுவராஜ்ய பட்டாபிஷேகமே. கைகேயி தன் வரத்தினால் பரதனுக்குக் கேட்டதும் அந்த யுவராஜ்ய பட்டாபிஷேகம் தான். இப்போது பாதுகைக்குப் பட்டாபிஷேகமானாலும், யுவராஜ்யாதிகாரம் பரதனுக்கே கொடுக்கப்பட்டது. ஆகையால் பித்ரு வாக்ய பரிபாலநத்துக்கு எவ்வித லோபமுமில்லை. மற்றொரு வரத்தால் பதினான்கு வருஷகாலம் வநவாஸம் செய்யவேண்டியிருக்கிறபடியால், ஸ்ரீ ராமன் அந்த ஸங்கல்பத்தை நிறைவேற்றும் பொருட்டு அயோத்திக்குத் திரும்பிப் போகவில்லை.

கந்யா சுல்கங்கள் அநேக விதங்களாக இருக்கலாம். த்ரவ்யத்தாலாவது ஆபரணங்களாலாவது சுல்கம் கொடுக்கலாம். இவைகள் எல்லாவற்றையும் உத்தேசித்து ராஜ்ய சுல்கம் உத்க்ருஷ்டமானபடியால் ராஜ்ய சுல்கம் அநுத்தமம் என்று சொல்லப்பட்டது. அநுத்தமம் என்பதால், அயோத்யா ராஜ்யமென்று அர்த்தமில்லை. ஆகையால் ஸ்ரீ ராமனுடைய குணங்களில் "ஸத்யவாக்யோ த்ருடவ்ரத:" என்பது இந்த ஸந்தர்ப்பத்தில் ஸம்பூர்ணமாக வெளியிடப்பட்டது.

ஸ்ரீ:

ஆவ்ருத்யதிகரண ரஸங்கள்

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. ஏ. வி. கோபாலாசார்யர், M. A. B. L. அட்வொகெட், திருச்சி.]

இந்த அதிகரணம் ஸ்ரீ பாஷ்ய ஸித்தாந்தத்தை அகம்பனீயமாக ஸாதிக்கும். இங்கே ஸூத்ராக்ஷரங்கள் அத்வைத பக்ஷத்திற்கு ஒட்டாதென்பது அத்வைத பாஷ்யத்தாலேயே தெளிவாகிறது. ப்ராசீந வ்ருத்திக்ரந்தத்திற்கு விரோதமாகக் கடைசியில் பொருள் உரைத்தது ஸ்பஷ்டம். ப்ராசீந வ்ருத்திக்கு நேர்விரோதமாகத் தாம் பொருள் உரைக்குமிடங்களில் வ்ருத்தி விரோதமாக வ்யாக்யாநம் செய்வதை ஸ்ரீ சங்கர பகவத் பாதர் மறைப்பதேயில்லை; ப்ராசீந வ்யாக்யாநம் இன்னதென்று விவரணம் செய்யாமலும் இருப்பதில்லை. தவிர, தம் அபிப்ராயம் வேறென்றும் தெளிவாய்ப் பணிப்பர்.

இந்த அதிகரணத்தில் முதலில் அதிகரண அர்த்தத்தை விஸ்தாரமாக உரைத்து முடித்துவிட்டு, அதற்குப் பிறகு 'ஆஹ' என்று ஆரம்பித்து, நிர்க்குண ப்ரஹ்மத்தின் ச்ரவணம் முதலியவற்றில் எப்படி ஆவ்ருத்தி ஒட்டுமென்று தாமாக ஆக்ஷேபித்து விசாரிக்கிறார். எவனுக்கு 'தத்வமஸ்யாதி' மஹா வாக்யங்களைக் கேட்டவுடனே நிஸ்ஸம்சயமான ஐக்யாநுபவம் வந்து விடுகிறதோ, ப்ரபஞ்சமே தோன்றாமல் போகிறதோ, அவனுக்கு ஆவ்ருத்தி வேண்டாம்; யாருக்கு அப்படி உடனே படுகிறதில்லையோ, ஐக்ய வாக்யத்தின் பொருள் ஸம்பாவிதமல்லவென்று சங்கையிருக்கிறதோ, அவனுக்கு அஸம்பாவநா விபரீத பாவனைகள் தொலைந்து ஐக்ய ஸாக்ஷாத்காரம் வரும்வரை, அவன் மஹா வாக்யோச்சாரணத்தோடு அதன் பொருளின் நினைப்பை ஆவ்ருத்தி செய்துகொண்டு வரவேணும்; ப்ரபஞ்ச சூந்யமான ஐக்யாநுபவம் வந்ததும் ஆவ்ருத்தி தானே நின்றுவிடும். பலம் கைக்கு வந்தபிறகு உபாயாபேக்ஷையில்லை; உத்தமாதிகாரிக்கு ஆவ்ருத்தியில்லை; மந்த மத்யமாதிகாரிகளுக்கு ஸாக்ஷாத்கார பர்யந்தம் ஆவ்ருத்தி வேண்டுமென்று பின் பாகத்தில் கூறினார். மந்தாதிகாரிகளுக்கு ஆவ்ருத்தி வேண்டுமென்பதை ஸூத்ர ஹேதுவுக்கு ஒட்டும்படி அங்கே வழிகாட்டினார். 'தத்வமஸி' வாக்யத்தை ஒன்பது தரம் திரும்பவும் திரும்பவும் த்ருஷ்டாந்த பூர்வகம் விவரித்து ஆவ்ருத்தி செய்திருக்கிறது. மறுபடியும் ஜ்ஞாபிக்க வேணுமென்று ஐயனைத் திரும்பவும்

திரும்பவும் ப்ரார்த்திக்க, ஐயனும் அந்த வாக்யத்தை ஆவ்ருத்தி செய்து உபதேசிக்கிறார். '[illegible]' என்று அவனுக்கு விஜ்ஞாநமென்னும் ஸாக்ஷாத்காரம் வந்தவுடன் அதற்குமேல் ஆவ்ருத்தி நின்று போய்விட்டது; ப்ரார்த்தனையும் நின்றது. அந்த இடத்தில் அஸக்ருத் (பலமுறை) உபதேசம் இருப்பதால், எப்பொழுது ஸாக்ஷாத்காரம் ஏற்படுகிறதோ அது பர்யந்தம் ஆவ்ருத்தி செய்யவேண்டுமென்று அறிகிறோம். '[illegible]' என்று அவர் நினைத்த ஹேதுவை அவருடைய பக்ஷத்திற்கு இப்படி யோஜித்தார்.

முதல் இரண்டு ஸூத்ரங்களுக்கும் பாஷ்யம் செய்து முடித்து விட்டு, பிறகு அத்வைதத்திற்கு ஒட்டவேண்டுமென்று தாமாக ஓர் விசாரம் ஆரம்பித்தார். '[illegible]' என்பதற்கு அதிகரணார்த்தம் உரைத்தாய்விட்டதென்றும், அதன்பேரில் பிறகு ஆக்ஷேபிப்பதாகவும் வ்யாக்யாதாக்களும் கூறுகிறார்கள். 'ஸூத்ராக்ஷரங்கள் வ்யாக்யாநம் செய்யப்படும்; பாராசர்யரான வசநாம்ருதம் நிஜாக்ஷரங்களோடு ஒக்கக் கொண்டுவரப்பட்டது' என்று ஸ்ரீ பாஷ்ய வசநங்களின் பொருளுரையில், 'இந்த ஆவ்ருத்யதிகரணத்தின் அத்வைத பாஷ்யம்' ஸூத்ராக்ஷர ஸ்வாரஸ்யத்தைப் புத்தி பூர்வமாக மீறுவதற்கு ஒரு த்ருஷ்டாந்தமாகக் கூறப்பட்டுள்ளது. ஸகுண ப்ரஹ்ம ஸாக்ஷாத்கார மென்னும் பலத்தை யடைய, அந்த ப்ரஹ்மத்தின் ஸ்ம்ருதியின் ஆவ்ருத்தி செய்யவேணும்; ச்ரவண மநந நிதித்யாஸநங்களையும் ஆவ்ருத்தி செய்யவேணும். இதற்கெல்லாம் ஒரு ஹேது, '[illegible]' '[illegible]' என்பது மட்டும் ஸாத்யமென்றும், '[illegible]' என்னும் இரண்டு பதங்களும் சேர்ந்து ஹேது வென்றும் கூறப்பட்டது. ஸூத்ரத்தி லில்லாத வேறு ஹேதுக்களும் அங்கே கூறப்பட்டன. அதில் ஒன்று 'த்ருஷ்டாந்தமாகையாலே' என்பது. மற்றொன்று ஸ்ரீ பாஷ்யத்தில் ஸாதிக்கப்பட்ட ஹேது. ஸ்ரீ பாஷ்யத்தில் அஸக்ருதாவ்ருத்தமான ப்ரஹ்மம் நினைப்பு-மோக்ஷஸாதநமான சாஸ்த்ரார்த்தம். பூர்வபக்ஷி உதாஹரித்த வேதந வாக்யங்களில் கூறப்பட்ட வேதநமென்றும், 'ஸாதநம் அஸக்ருதாவ்ருத்த வேதந வாசகமான உபாஸநம் த்யாநம் முதலிய சப்தங்களோடு ஏகார்த்தமாக (ஒன்றுக்கொன்று அபேதமாய்க் கலந்து) ச்ருதியால் உபதேசிக்கப்படுவதால்' என்று பக்ஷஸாத்ய ஹேது ப்ரதர்சநம். இதனைப் பின்பு விவரிப்போம்.

ஸ்ரீ சங்கர பாஷ்யத்தில் இந்த ஹேதுவைக் கூறும் வாக்யங்கள் :—

"[illegible]"

[illegible] "

கடைசி வாக்யம் தவிர மற்ற வாக்யங்களைச் சிறிது சப்தபேதத்துடன் ஸ்ரீ பாஷ்யத்தில் லகு ஸித்தாந்தாரம்பத்தில் காண்கிறோம். ஸக்ருத் வேதநமென்றால் ச்ருதி ஸாத்யத்வத்தைச் சொல்லும் விதி ஒட்டாது. மோக்ஷஸாதநமான ஜ்ஞாநம் விதிக்கத்தக்கதல்ல என்கிற கக்ஷிக்கு இடமிருக்கலாம். உபாஸந மென்றால் சாஸ்த்ரம் விதிக்கத் தடையில்லை. விதி வந்தால் ஈச்வர ப்ரஸாத மென்னும் அத்ருஷ்டம் வந்து தீரும். அத்ருஷ்டத்தால் ஸம்ஸாரம் தொலைவதாகும். ஆதலால் ஸம்ஸாரத்திற்கு மித்யாத்வம் போய்விடும். ஸூத்ர மதம் நம் மதம் போலவே ஆகும். இதைக்கொண்டே நம் மதத்தின் முக்யாம்சங்களை யெல்லாம் எளிதாய் ஸாதிக்கலாம். இப்படி ஸ்ரீ சங்கரர் நமக்கு அநுகூலமாக ஸ்பஷ்டமாய்ப் பணித்திருப்பதை ஸ்ரீ பாஷ்யகாரர் ப்ராயேண அதே சப்தங்களால் ஜிஜ்ஞாஸாதிகரணத்தில் லகு ஸித்தாந்தத்தில் ஒரு தரமும், இந்த அதிகரணத்தில் ஒரு தரமும் ஆவ்ருத்தி செய்கிறார். இது விஷயமான ஸ்ரீ சங்கர பாஷ்ய பங்க்திகள் ஆவ்ருத்தி ரூபமான உபாஸநத்தை மோக்ஷோபாயமாக அறுதியிடுவதால், அவை ஆவ்ருத்தி செய்யத்தக்கவை யென்று திருவுள்ளம். இந்தப் பங்க்திகளின்படி '[illegible]' என்பது மட்டும் ஹேதுவென்று ஒருவாறு கொள்ளக்கூடும். அஸக்ருதுபதேசம் ஆவ்ருத்திக்கு ஸூசகம் மட்டும் ஆகுமென்ற கடைசி வாக்யத்தினால், 'அஸக்ருத்' என்பதை ஹேதுவோடு அந்வயிப்பதில் உத்கட தாத்பர்யமில்லை யென்பது ஸ்பஷ்டம். ஸூசக ஹேதுவிலும் அஸாதாரணமாக ஸாதிக்கும் ஹேதுவல்லவோ ந்யாய ஸூத்ரத்தில் பொருந்தும். வேதந சப்தத்தை உபாஸந ஸமாநார்த்தமாக ப்ரயோகித்திருப்பதால், இரண்டையும் ஒரே விஷயத்தில் ஒரே பொருளாக உபதேசித்திருப்பதால் என்னும் ஹேது ஸக்ருத்வேதநம் தான் ஸாதநம் என்னும் பூர்வபக்ஷத்தை அடியோடு நிரஸிக்கும். நம் மதத்திற்கு அத்யர்த்தம் அநுகூலமான மற்றோர் விஷயமும் இங்கே ஸ்பஷ்டமாகப் பணிக்கப்பட்டுளது.

"[illegible]

नं, लोके च यथा येन गुरुं राजानं वानुवर्तते स उपास्यते – तथा या पतिप्रोषिता नायावतिष्ठति या निरन्तरस्मरणवती पतिं प्रति सोत्कण्ठा सैव उपदिश्यते ”

என்ற வாக்யங்கள் நம் ஆழ்வாராசார்யர்களுடைய மோக்ஷஸாதநக் கொள்கையையும் அப்யாஸத்தையும் அடியோடு ஸம்வதிப்பதென்பதில் ஐயமுண்டோ? இது இந்த அத்யாயாரம்பத்தில் அறுதி யிடுவது. 'உபாஸநமும் நிதித்யாஸநமும் ஆவ்ருத்தி யென்னும் தர்மத்தை (குணத்தை) உட்கொண்டவை. (வேதநம் என்பதற்கு அவற்றின் பொருளே பொருள்.) உலகத்தில் 'குருவை உபாஸிக்கிறான், அரசனை உபாஸிக்கிறான்' என்று பேசுகையில், எவன் ப்ரீதியோடு தலேக பரனாக அவர்களை அநுவர்த்திக்கிறானே அவன் இப்படிப் பேசப்படுகிறான். அப்படியே 'நாயகனை விட்டுப் பிரிந்த மனைவி கணவனை த்யாநம் செய்கிறாள்' என்று பேசுகையில், 'எவள் நிரந்தர ஸ்மரணமுடையவளாய்ப் பர்த்தாவைக் குறித்துக் கக்ஷா என்று காண ஆசைப்படுகிறாளோ அவள் இப்படிச் சொல்லப்படுகிறாள்' என்று அறுதி யிட்டார். இந்தப் பணிப்புகள் நம் மதத்திற்கு வேண்டிய எல்லா அம்சங்களையும் ஸாதிப்பது ஸ்பஷ்டம். உபாஸந மென்பது அறிவுக்கு நிரந்தராவ்ருத்தியையும், உபாஸிக்கப்படுபவர் பெரியவர் என்பதையும் காட்டுகிறது. த்யாநம் என்பது (நிரதிசய) ப்ரீதி ரூபத்தைக் காட்டும். த்யாந மென்பதே போதும் அன்பின் மிகுதியைக் காட்ட. 'நிதித்யாஸிதவ்ய:' என்று ச்ருதி அதின் இச்சார்த்தகமான 'ஸந்' விகுதியையும் சேர்த்தது. காதலைப் பெருக்கியது. இங்கே பதி பத்நீ த்ருஷ்டாந்தம் எடுத்திருப்பதின் ஸ்வாரஸ்யங்களை ஸோபாந வ்யாக்யாநத்தில் விவரித்துள்ளோம்.

ப்ரஹ்மஸூத்ரத்துக்கு ப்ராசீநமான வ்ருத்திகாரர், வாக்யகாரர், பாஷ்யகாரர்களுடைய க்ரந்தங்கள் உண்டென்பது ஸ்ரீ சங்கர பாஷ்யாதி க்ரந்தங்களில் ஸ்பஷ்டம். பல இடங்களில் வ்ருத்தி க்ருதம் நம் பாஷ்ய ரீதியோடு ஒன்றென்பதும் நிர்விவாதம். சங்கர பாஷ்யம் பஞ்ச பாதிகை முதலிய க்ரந்தங்களில் இவ்வொற்றுமையைக் காண்கிறோம். வாக்யகாரர் எல்லோர்க்கும் ப்ரஹ்ம நந்திதான்; பாஷ்யகாரர் த்ரமிடர்தான். வேதார்த்த ஸங்க்ரஹத்தில் 246 முதல் 248 வரையில் உள்ள பக்கங்களில் உபாஸ்ய ப்ரஹ்மம் ஸகுண மென்று பூர்வாசார்யர்கள் வ்யாக்யாநம் அருளினரென்று ஸாதித்துவிட்டு, அதற்கு ஆதாரமாக 'युक्तं तद्गुणकोपासनात्' என்று வாக்யகாரருடைய ஸூத்ரம் போன்ற வாக்யத்தை உதாஹரித்து அதற்கு,

“यद्यपि सच्चित्तो न निर्भुग्नदैवतं गुणगणं मनसानुधावेत् – तथाप्यन्तर्गुणामेव देवतां भजते ”

என்ற த்ரமிட பாஷ்யகாரர் வ்யாக்யாநத்தையும் ஸாதித்துவிட்டு, அது ஸித்தாந்தத்திற்கே அநுகூலமென்று விவரிக்கப்பட்டது. அங்கே உதாஹரிக்கப்பட்ட இதே பங்க்திகள் வாக்யகாரர் ப்ரஹ்ம நந்தி, பாஷ்யகாரர் த்ரமிடர் ஆகிய ப்ராசீநர்களுடையதே என்பது,

“अन्तर्गुणां भगवतीं परदेवतेति
प्रत्यग्गुणेति भगवानपि भाष्यकारः ।
आह स्म यत्त्रिशिरनिर्गुणवस्तुवादे
सङ्गच्छते न तु वचः सगुणप्रवादे ” ॥ (221)

என்ற ஸம்க்ஷேப சாரீரக ச்லோகத்திலும், அதற்கு முன் ச்லோகத்திலும், கடைசி பாதமான “अप्येतदेव परिरक्षितवाक्यकारः” என்பதாலும், மதுஸூதந ஸரஸ்வதி வ்யாக்யாநத்தாலும் ஸ்பஷ்டம். முன் ச்லோகத்தில் வாக்யகாரரையும், பின் ச்லோகத்தில் பாஷ்யகாரரையும் ப்ரமாணமாக உதாஹரித்துவிட்டு, பாஷ்யகாரரைப் பகவானென்று வர்ணித்தால், அவர் பாஷ்யம் எல்லார்க்கும் தஞ்சமென்பது ஸ்பஷ்டம். 'ப்ரஹ்மநந்தியால் ரசித்மான ஸூத்ரம் போன்ற வாக்யங்களுக்குப் பாஷ்யம் செய்த த்ரமிடாசார்யரும்' என்று ஸரஸ்வதி வ்யாக்யாநம். ஸ்ரீ பாஷ்யகாரர் உதாஹரித்த ஸ்ரீ ஸூக்திகள்தான் த்ரமிட பாஷ்ய வாக்யங்களென்பது இந்த ச்லோகத்தால் ஸ்பஷ்டம். ஸகுண ப்ரஹ்மத்தை அந்த பங்க்திகள் ஸாதிப்பது ஸ்பஷ்டம்; அதின் பதத்திற்கே அநுகூலமென்கிறார்கள். நேர் விரோதமானதை எப்படி திருப்புகிறார்களென்றால்: 'अन्तर्गुणामेव देवताम्' என்ற விடத்தில் 'गुण' சப்தத்திற்கு 'ஸ்வரூபம்' என்பது பொருளென்றும், 'अन्तः' என்பதற்கு 'ப்ரத்யக்' என்பது பொருளென்றும், 'अन्तर्गुणा देवता' என்பதற்கு 'प्रत्यक्स्वरूपा देवता' என்பது பொருளென்றும் பணிக்கப்பட்டது. இது ஸஹ்ருதயஹ்ருதயங்கம மல்லவென்பது ஸ்பஷ்டமாதலாலும், ஸ்ரீ பாஷ்யகாரர் வ்யாக்யாநமே ஸமஞ்ஜஸ மாதலாலும், ப்ராசீந வாக்யகாரரும் பாஷ்யகாரரும் ப்ராசீந வ்ருத்திகாரரைப்போல் நம் பாஷ்யத்திற்கே அநுகூலரென்பது திண்ணம். வ்ருத்தி விஸ்தரமாயிருந்ததைப் பூர்வாசார்யர்கள் சுருக்கியுரைத்தார்கள். அவர்கள் மதத்தை அநுஸரித்து ஸூத்ராக்ஷரங்கள் வ்யாக்யாநம் செய்யப்படும் என்று முதலில் ஸ்ரீ பாஷ்யகாரர் ப்ரதிஜ்ஞை.

'வாக்யகாரரும் த்ரமிடரும் மிகவும் சுருக்கமாக உரைத்துவிட்டார்கள்; விஸ்தாரமான வ்ருத்தியைப் படிக்கவும் போதில்லை; அதன் ஸம்க்ஷேபங்கள் தத்வம் தெளியப் போதுமானதல்ல; ஆகையால் அதிக விஸ்தாரமில்லாமலும், அதிக சுருக்கமில்லாமலும் ஸ்ரீ பாஷ்யம் அருளிச்செய்தது அவச்யமே' என்று வ்யாக்யாநங்கள். இந்த வாக்யங்களைப் போலவே ப்ராசீந வ்ருத்தி, வாக்யம், பாஷ்யம்—இவற்றிலிருந்து ஸ்ரீ பாஷ்யகாரர் உதாஹரித்திருக்கும் மற்ற பங்க்திகளும் ப்ராசீந க்ரந்தபங்க்திகளென்பதை ப்ராமாணிகர் மறுக்கமாட்டார். ஸ்ரீ சங்கர பாஷ்யாதி க்ரந்தங்களைக் கொண்டு அந்தப் பங்க்திகளில் உள்ள விஷயங்கள் ப்ராசீந வ்ருத்திக் கொள்கைகள் என்பதை நிரூபிக்கலாம். இந்த அதிகரணத்தில்

'ஜிஜ்ஞாஸாவ்ருத்தம் ஸங்க்ஷிப்ய ப்ரயோஜநவத்
தாவதா ஶாஸ்த்ரஸ்ய ஸார்த்தகத்வாத்"

என்பது ஸ்ரீ சங்கர பாஷ்ய பங்க்தி. பூர்வாசார்யர் பூர்வ பக்ஷ வாக்யமென்று ஸ்ரீ பாஷ்யத்தில் உதாஹரிக்கப்பட்ட

'ஸக்ருத் ஶ்ருதம் கார்யம் ஶாஸ்த்ரஸ்ய ஸார்த்தகத்வாத் ப்ரயோஜநவத்"

என்ற ஸூக்தியை ஒத்தது இது.

(தொடரும்)

ஸ்ரீ:

வேத வைபவம்

[வித்வான் ஸ்ரீ. உ.வே. ஸ்ரீநிவாஸ தாதாசாரியர், திருவையாறு]

வேதத்தின் ஒவ்வொரு அக்ஷரத்தைச் சொல்லுவதும் பகவானுடைய நாம ஸங்கீர்த்தநமாகும்:

'வேதாக்ஷராணி யாவந்தி படிதாநி த்விஜாதிபி: ।
தாவந்தி ஹரிநாமாநி கீர்த்திதாநி ந ஸம்ஶய: ॥'

தர்மம் அர்த்தம் காமம் மோக்ஷம் என்கிற நான்கு புருஷார்த்தங்கள் அதன் உபாயங்கள்; இவைகளைத் தெரிவிப்பதினாலும், அர்த்தஜ்ஞானமில்லாமல் செய்யும் வேத ஜபம் முதலியவற்றாலும், நான்குவித புருஷார்த்தங்களுக்கு ஸாதநமாயிருப்பதாலும், அத்யயநம் என்கிற ஸம்ஸ்காரம் ஸ்வாத்யாயத்திற்கு உசிதமானது. ஸ்ரீபாஷ்யம் ஜிஜ்ஞாஸாதிகரணம்:

'ஸம்ஸ்காரச்சம் ச ஸ்வாத்யாயஸ்ய யாகதம், யஜ்ஞாயஜ்ஞாதிரோக்ஷ ஏவ அத்யாயஸ்ய தத்ஜ்ஞாநாவபோதிகத்வாத், ஜபாதிநா ஸாதநவிதத்ஜ்ஞாநகத்வாச்ச'

ப்ராஜாபத்ய க்ருச்ரம், பதினாயிரம் காயத்ரீ, ஜலத்தில் வாஸம் செய்வது, ப்ராம்மணனுக்குக் கோதானம் செய்தல், ஆயிரம் திலஹோமம், வேத பாராயணம், பன்னிரண்டு ப்ராம்மணர்களுக்கு அன்னமிடுதல், பாவகேஷ்டி, பாவமாநேஷ்டி இவைகள் ஸம பலன்களுள்ளவை. வைத்யநாத தீக்ஷிதீயம்: சதுர்விம்சதிமதம்—

'க்ருச்ச்ரோ(அ)யுதம் ச காயத்ர்யா உதவாஸஸ்ததைவ ச ।
தேநுப்ரதாநம் விப்ராய ஸமமேதச்சதுஷ்டயம் ॥
திலஹோமஸஹஸ்ரம் து வேதபாராயணம் ததா ।
விப்ரா த்வாதஶ போஜ்யா: பாவகேஷ்டிஸ்ததைவ ச ।
அந்நாவாபாவமாநேஷ்டிஸ்தாந்யாஹுஸ்துல்யதக்ஷிண: ॥'

நம்மாழ்வார் திருவிருத்தம்:

" இருக்கார் மொழியால் நெறியிழுக்காமை யுலகளந்த
திருத்தாளிணை நிலத்தேவர் வணங்குவர் யாமுமவா
ஒருக்கா வினையொடு மெம்மொடும் நொந்து கனியின்மையில்
கருக்காய் கடிப்பவர்போல் திருநாமச்சொல் கற்றனமே."

'வேதாக்ஷராணி' என்று கீழ்ச்சொன்ன ப்ரமாணத்தில் பகவந்நாமாவை உபமாநமாக வைத்து, அதுபோல் வேதாக்ஷரங்கள் பலனைக் கொடுக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு ஆழ்வார் வேதமொழியைக் கனி ஸ்தானத்திலும், பகவந் நாமாக்களைக் கருக்காய் ஸ்தானத்திலும் வைத்து, ஹரிநாமம் வேதாக்ஷரத்தைக் காட்டிலும் மிகவும் அஸாரம் என்று அபிப்ராயப்படுகிறார். எட்டாவது வயதில் ப்ராம்மணனுக்கு உபநயநம் செய்ய வேண்டும்; அத்யயநம் செய்விக்கவேண்டும். சதபத ப்ராம்மணம்:

'அஷ்டவர்ஷம் ப்ராஹ்மணமுபநயீத தமத்யாபயேத்'

தன் க்ருஹ்யஸூத்ரத்தை அநுஸரித்து, ச்ராவண பௌர்ணமியிலோ, பாத்ரபத பௌர்ணமியிலோ உபாகர்மத்தைச் செய்து, ஸாவதாநமாக நாலரை மாஸம் அத்யயநம் செய்யவேண்டும். மநுஸ்ம்ருதி:

'ஶ்ராவண்யாம் ப்ரௌஷ்டபத்யாம் வா உபாக்ருத்ய யதாவிதி ।
யுக்தஶ்சந்தாம்ஸ்யதீயீத மாஸாந்விப்ரோ(அ)ர்த்தபஞ்சமாந் ॥'

பலத்தில் ஆசை வைக்காமல் ப்ராம்மணன் ஆறு அங்கங்களுடன் வேதத்தை அத்யயநம் செய்யவேண்டும்; அர்த்தத்தை யறியவேண்டும். மஹாபாஷ்யம்:

'ப்ராஹ்மணேந நிஷ்காரணோ ஷடங்கோ வேதோऽத்யேயோ ஜ்ஞேயஶ்ச'

அங்கங்களுடன் வேதாத்யயநம் செய்வதால் ஏற்படும் அர்த்த ஞானத்தை 'ஜ்ஞேயஶ்ச' என்கிற விதி அநுவதிக்கிறது. ப்ராம்மணம் என்கிறவிடத்தில் ஏகவசந மிருக்கிறது. சாஸ்த்ரத்தில் சப்தத்திற்கு வ்யக்தியர்த்தமா ஜாத்யர்த்தமா என்று விசாரம் செய்கிறார்கள். இதைப் பாணிநி மஹர்ஷி தமது ஸூத்ரங்களால் ஸூசநம் பண்ணியிருக்கிறார். உதாரணமாக: இரண்டு முதல் அநேக ராம சப்தங்களை அநேக ராமன்களைத் தெரிவிப்பதற்காக உபயோகிக்கும்போது, ஒரே ராம சப்தம் மிச்சப்படுகிறது என்று 'ஸரூபாணாமேகஶேஷ ஏகவிபக்தௌ' என்கிற ஸூத்ரத்தில் சொல்லியிருக்கிறார். இதிலிருந்து சப்தத்திற்கு வ்யக்தி அர்த்தமென்று தெரிகிறது. ஜாதியாயிருந்தால் ஒரு சப்தத்தாலேயே எல்லா ராமன்களும் அறியப்படுவதால், வெகு ராம சப்தங்களை உபயோகிக்க அவகாசமில்லாததால், அவ்விஷயத்தில் ஒரு சொல் மிச்சப்படுகிறது என்று சொல்லுவது அநாவச்யமாகும்.

'ஜாத்யாக்யாயாமேகஸ்மிந் பஹுவசநமந்யதரஸ்யாம்'

என்கிற ஸூத்ரத்தில் சப்தத்துக்கு ஜாதி அர்த்த மென்பதைக் குறிப்பிட்டிருக்கிறார். உதாரணம்:

'ப்ராஹ்மண: பூஜ்ய: ப்ராஹ்மணா: பூஜ்யா:'

ஜாதி யொன்றாயிருப்பதால் ஏகவசநமே வரும்; பகுவசநம் வராது. அந்தப் பகுவசநம் ஒருக்கால் வரவேண்டு மென்பதற்காக இந்த ஸூத்ரம். சப்தத்திற்கு வ்யக்தியர்த்தமானால், ஒரு வ்யக்தியர்த்தமானால் ஏகவசநமும் பகு வ்யக்திகள் அர்த்தமானால் பகுவசநமும் ஸித்தமாயிருக்க, இந்த ஸூத்ரம வ்யர்த்தமாகும். 'ப்ராம்மணம்', என்கிற இடத்தில் வ்யக்தியர்த்தமானால், ஒரு வ்யக்தியைக் குறிப்பிடும் பக்ஷத்தில், மற்ற வ்யக்திகளுக்கு உபநயநம் அத்யயந மில்லாமற் போய்விடும். 'ந ப்ராஹ்மணம் ஹந்யாத்' என்கிற இடத்தில் இப்படியே அர்த்தம் சொல்லவேண்டியிருப்பதால், 'ஒரு ப்ராம்மணனைக் கொல்லக்கூடாது, பல ப்ராம்மணர்களைக் கொல்லலாம்' என்று அர்த்தமாகும். அதற்காக எல்லா வ்யக்திகளும் அர்த்தம் என்று சொல்லும் பக்ஷத்தில், ஒவ்வொரு வ்யக்திக்கும் சப்தத்துக்கும் சக்தியென்னும் ஸம்பந்தம் ஒப்புக்கொண்டால் கௌரவம் வருகிறது. ஆகையால்

சப்தத்துக்கு ஜாதி அர்த்தமென்று சொல்லி, அதிலிருந்து வ்யக்தியின் அறிவு லக்ஷணை என்னும் வ்யாபாரத்தால் ஏற்படுகிற தென்று சொல்லவேண்டியிருக்கிறது. ஆகையால் எல்லா ப்ராம்மணர்களுக்கும் உபநயநம், அத்யயநம், இவை உண்டு என்று ஏற்படுகிறது. 'உபநீய' என்கிற இடத்தில் உபநயநம் என்கிற வ்யாபாரத்தா லேற்படும் மாணக்கனுடைய ஸம்ஸ்காரம், அதன் கர்த்தாவான ஆசார்யனைக்காட்டிலும் வேறுபட்ட மாணக்கனிடத்தி லிருப்பதால், பரஸ்மைபதம் என்ற ப்ரத்யயம் ப்ராப்தமாக,

'ஸம்மாநநோத்ஸஞ்ஜநாசார்யகரண ஜ்ஞாநப்ருதிவிகணந வ்யயேஷு நிய:'

என்கிற ஸூத்ரத்தால் ஆத்மநேபதம் விதிக்கப்படுகிறது. இந்த ஸம்ஸ்காரமானது ஆசாரியனிடமிருக்கும் அத்யாபநத்துக்கு அங்கமா, அல்லது தன்னிடமிருக்கும் அத்யயநத்துக்கு அங்கமா என்று விசாரித்து, அந்தரங்கம் பகிரங்கம் என்கிற ந்யாயத்தைக்கொண்டு தன்னிடத்திலிருக்கும் அத்யயநத்திற்கே அங்கம் என்று ஸ்ரீச்ருதப்ரகாசிகாசார்யர் நிஷ்கர்ஷித்திருக்கிறார். ஆகையால் உபநயநஸம்ஸ்காரம் அத்யயநத்திற்காகவே என்று ஏற்படுகிறது. மிகவும் அழுக்கான துணி அல்பமான ஜலத்தால் அலம்பப்படும்பொழுது, துணியின் அழுக்கெல்லாம் ஜலத்தில் சேர்ந்துவிடுவதுபோல், பரிசுத்தி செய்யவேண்டிய பாபிகளின் பாபம் ஸ்ருஷ்டிகாலத்தில் சிறிதாயிருக்கிற அக்நியைப் பிடித்துக்கொண்டது. தேவர்கள் ஆஹுதிகளால் அந்த அக்னியின் பாபத்தையும், ஆஹுதிகளின் அந்தப் பாபத்தை யாகத்தினாலும், யாகத்தின் பாபத்தைத் தக்ஷிணைகளாலும், தக்ஷிணைகளின் பாபத்தைப் பெற்றுக்கொள்ளுகிற ப்ராம்மணனாலும், ப்ராம்மணனின் பாபத்தைக் காயத்ரீ முதலிய சந்தஸ்ஸுக்களாலும், சந்தஸ்ஸுக்களின் பாபத்தைத் தன் சாகையாகிற ஸ்வாத்யாயத்தினாலும் நாசம் செய்தார்கள். ஒரு பாபமும் ஸ்வாத்யாயத்தில் ஸம்பந்திக்க ஸாமர்த்ய மற்றது. வேதம் தேவதைகளையும் சுத்திபண்ணுகிறது. அப்படிப்பட்ட வேதத்தை யாரம்பித்து எவன் விடுகிறானோ, அவனுக்குச் சிரமமில்லாததும் மிகுந்த பலனுள்ளதுமான வேதாத்யயநரூபமான வாக்கிலும் பாக்யமில்லை. ஸ்வர்க்கத்தில் பாக்யமில்லை யென்பது சொல்லவேண்டியதில்லை. இவ்விஷயத்தில் ஒரு ரிக் சொல்லப்பட்டது. வாக்கினால் மாத்ரம் ஸாதிக்கக்கூடிய வேதாத்யயநத்தைச் செய்பவனுக்கு எல்லாப் பாபங்களையும் போக்கி மோக்ஷம் வரையிலுள்ள நல்ல லோகங்களைக் கொடுப்பதால், அவனைச் சிறந்த தோழனைப் போல் வேதம் காப்பாற்றுகிறது. ஆகையால் அத்யயநம் செய்பவனைத் தோழனாக அறிவதும், எப்பொழுதும் உருச் சொல்லுவதால் அவனை விட்டுப் பிரியாத தோழனுமான் வேதத்தை விட்டவனுக்கு ஸ்வல்ப ச்ரமத்

தால் ஸாதிக்கக்கூடியதும் மிகுந்த பலனுள்ளதுமான வேதபடநத்திலும் பாக்யமில்லை. வேதத்தை விட்டவன், வெகு சாஸ்த்ரங்களை ச்ரவணம் பண்ணினாலும் புண்யாநுஷ்டாந மார்க்கத்தின் அறிவை அளிக்காததால், அவனுடைய சாஸ்த்ரங்களின் ச்ரவணம் பொய் (வீணே) யாகும். புண்யமார்க்கத்தின் அறிவு இல்லாதது மாத்ரமில்லை. அதிக பாபமும் ஸம்பவிக்கிறது. தைத்திரீய ஆரண்யகம்: இரண்டாவது ப்ரச்நம்:

'[illegible] ॥'

வேதாத்யயநம் செய்யாதவர்கள் வ்ராத்ய ராவார்கள். 'அநத்யயநா வ்ராத்யா பவந்தி'. த்ரைவர்ணிகன் வேதாத்யயநம் செய்யாமல் வேறு விஷயத்தில் பாடுபடுவனேயானால், பிழைத்திருக்கும்போதே தன் புத்ரபௌத்ராதிகளோடு கூட சீக்கிரமாக அப்ராம்மணனாவான். மநு ஸ்ம்ருதி:

'யோऽநதீத்ய த்விஜோ வேதம் அந்யத்ர குருதே ச்ரமம் ।
ஸ ஜீவந்நேவ சூத்ரத்வம் ஆசு கச்சதி ஸாந்வய: ॥'

கீழ்ச்சொன்னபடி ஐஹிகம் ஆமுஷ்மிகம் என்கிற பலன்களுக்கு ஸாதநமாயு மிருக்கிறது. பணக்காரன் பணத்தாசையினால் அயாஜ்யனுக்கு யாகம் செய்வித்தாலும், அயோக்யனிடத்திலிருந்து ப்ரதிக்ரஹம் செய்தாலும், கீர்த்தி இல்லாதவன் போலவும், புண்யலோகம் இல்லாதவன் போலவும் ஆகிறான். ஆதலால் அவன் சாப்பிடாமல் மூன்று தடவை ப்ராயச்சித்த ரூபமாக வேதத்தைச் சொல்லவேண்டும். தைத்திரீய ஆரண்யகம்: இரண்டாவது ப்ரச்நம்:

'[illegible] ஸ்வாத்யாயம் வேதமதீயீத'

ஆகவே வேதாத்யயநமானது நித்யமாயும் காம்யமாயும் நைமித்திகமாயும் ஆகிறது. ஸந்த்யாவந்தநம் செய்யாதவன் எப்பொழுதும் அபரிசுத்தன்-

ஒரு கர்மாவையும் அநுஷ்டிப்பதற்கு அவன் யோக்யனல்லன். '[illegible] ।' தன் சாகையை அத்யயநம் செய்வதாகிற ப்ரம்மயஜ்ஞம் செய்யாதவன் ப்ரம்மஹத்தியைச் செய்தவனாக வித்வான்களால் சொல்லப்படுகிறான். '[illegible] ।' ச்ராத்த திதியில் ச்ராத்தம் செய்யாதவன் கோடி ஜந்மங்கள் சண்டாளனாகிறான். '[illegible] ।' இம்மாதிரி அந்தந்த க்ரியை செய்யாவிடில் ப்ரத்யவாயம் வருமென்று சொல்லியிருக்கிறது. வைதிக க்ரியைகளை வேத மந்த்ரங்களைக்கொண்டே செய்யவேண்டும். ஸ்வரப்பிழை எழுத்துப்பிழை இவைகளுடன் மந்த்ரத்தை உச்சரித்தால் ப்ரத்யவாயம், உண்டென்பது முன்பே சொல்லப்பட்டது. ஆகையால் வேதாத்யயநம் அவச்யம் செய்யவேண்டும். வேதாத்யயநம் செய்தபிறகு கர்மவிசாரம் செய்யவேண்டும். ஜைமினிஸூத்ரம்: 'அதாதோ தர்மஜிஜ்ஞாஸா' என்பது. வேதாத்யயநம் செய்து கர்மவிசாரம் செய்தபிறகு, ப்ரம்மவிசாரம் செய்யவேண்டும். ப்ரம்ம ஸூத்ரம்: 'அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா' என்பது. விதிப்படி வேதங்களை (பலசாகைகளை அத்யயநம் செய்தல் சக்த விஷயம்) அத்யயநம் செய்த பிறகு அவ்வளவோடு 'ஸ்வாத்யாயோऽத்யேதவ்ய:' என்கிற விதி, க்ருதார்த்தமாக ஸாங்க வேதாத்யயநம் செய்திருப்பதால், கர்மபாகம் ப்ரம்மபாகம் இரண்டிலும் மேல்வாரியாக அர்த்த ஞானம் ஏற்பட்டு, அத்யயந க்ரமம் முதலியவற்றை அநுஸரித்துப் பூர்வம் கர்மபாகத்தை விசாரித்து, கர்மாவானது அல்பமாயும் அஸ்திரமாயு மிருக்கும்படியான பலனைத் தரக்கூடியது என்று தெரிந்து ப்ரம்ம விசாரம் செய்கிறார்கள். இக்கலியுகத்தில் பலம் புத்தி ஆயுஸ் இவை குறைவா யிருப்பதாலும், இடையூறுகள் அதிகமாயிருப்பதாலும், காலவிளம்பத்தை ஸகியாமல் சில ஸமர்த்தர்கள் வேதாத்யயநம் செய்து கர்ம விசாரம் பண்ணாமல் ப்ரம்ம விசாரம் செய்கிறார்கள். அதிகரண ஸாராவளி:

'[illegible] ।
[illegible] ॥'

வேதாத்யயநம் செய்யாதவன் அதிகாரமில்லாமையால் ப்ரம்மவிசாரம் செய்வது சரியன்று. கர்மபாகம், ப்ரம்மபாகம், இரண்டையுமே அத்யயநம் பண்ணவேண்டுமென்று விதியிருப்பதாலும், உபநிஷத்தை மாத்ரம் அத்யயநம் பண்ணவேண்டும் என்கிற விதி இல்லாமையாலும், உபநிஷத்தை மாத்ரம் அத்யயநம் செய்வது எந்த மதத்திலும் சாஸ்த்ரார்த்தமாகாது. சததூஷணீ: எட்டாவது வாதம்:

'ந ஜாது [illegible] சாகாரண்ட: ந [illegible] பரித்யஜ்ய [illegible] ஸ உச்யதே'

பிதா, பிதாமகன் முதலியோர்களிடமிருந்து பரம்பரையாக வந்து அவிவாதத்தில் சொல்லப்படும் சாகையை அத்யயனம் செய்யவேண்டும். ஸ்வசாகையை விட்டு மற்றவர் சாகையை அத்யயனம் செய்பவன் சாகாரண்டன்.

'யஃ ஸ்வசாகாம் பரித்யஜ்ய பரசாகாம் நிஷேவதே। சாகாரண்ட: ஸவிஜ்ஞேய:' மநுஸ்ம்ருதியில்: 'வேதாநதீத்ய வேதௌ வா வேதம் வாபி யதாக்ரமம்। அவிப்லுதப்ரஹ்மசர்யோ க்ருஹஸ்தாச்ரமமாவிசேத்॥'

என்கிற ச்லோகத்திலிருக்கும் வேதபதம் தன் சாகையைக் காட்டிலும் வேறுபட்ட சாகையைச் சொல்லுகிறது. ப்ரம்மசர்யம் கெடாமல் தன் சக்தியை அநுஸரித்துத் தன் சாகையுடன் மற்ற சாகைகள் மூன்று இரண்டு அல்லது ஒன்றை, முதலில் மந்த்ரம் பிறகு ப்ராம்மணம் என்கிற க்ரமமாக அத்யயனம் செய்து விசாரம் செய்துகொண்டு, க்ருஹஸ்தனுக்குச் சொல்லப்பட்ட கர்மாவை அநுஷ்டிக்கவேண்டும். இதை அநுஸரித்தே க்ருஷ்ண யஜுர்வேதிகள், தம் தைத்திரீய சாகையுடன் கட சாகையான காடகத்தையும் அத்யயனம் செய்து வருவதாகச் சொல்கிறார்கள். பித்ருக்கள் தேவதைகள் மநுஷ்யர்கள் இவர்களுக்கு வேதம் பழைய கண் என்றும், அபௌருஷேயமென்றும், மீமாம்ஸை முதலிய ந்யாயத்தை அபேக்ஷிக்காமல் அதனுடைய விஷயத்தை அறியமுடியாதென்றும், மநுஸ்ம்ருதியில்,

'பித்ருதேவமநுஷ்யாணாம் வேதஶ்சக்ஷுஸ்ஸநாதநம்।
அசக்யம் சாப்ரமேயஞ்ச வேதசாஸ்த்ரமிதி ஸ்திதி:॥'

என்கிற ச்லோகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. 'ஓ! அஹிர்புத்ந்ய தேவதையே! எந்த மந்த்ரத்தை மூன்று வேதங்களை அறிந்தவரும், வெளி இந்த்ரியங்களுக்குப் புலப்படாத பதார்த்தங்களைப் பார்ப்பவர்களுமான பெரியோர்கள் அறிவார்களோ, அம்மந்த்ரத்தைக் காப்பாற்று.' ரிக் முதலியவை மூன்று வேதங்களில் சொல்லப்பட்ட மந்த்ர விசேஷங்கள். வீடு நிலம் முதலியவற்றைக் காப்பதை ப்ரார்த்திப்பதைவிட்டு, மந்த்ரத்தை ரக்ஷிப்பதை ப்ரார்த்திப்பதில் காரணம் சொல்லப்படுகிறது. நல்ல மார்க்கத்திலிருப்பவர்களுக்கு ரிக் முதலியவை அழிவில்லாத ஸம்பத்து. தனம் முதலிய ஸம்பத்துக்குப் பல வழியில் நாசம் ஏற்படக்கூடும். ரிக் முதலிய

ஸம்பத்துக்கு அடிக்கடி பரிக்ஷியால் வ்ருத்தியே தவிர குறைவு கிடையாது. தைத்திரீய ப்ராம்மணம் முதல் அஷ்டகம்: இரண்டாவது ப்ரச்நம்:

'[illegible] விதாவிதாந:, [illegible] ஸ்ரீ [illegible]'

'பரமாத்மாவின் பொருட்டு நமஸ்காரம். நான் அத்யயனம் செய்வது மறக்காமலிருக்கட்டும்; அதை மறக்காமல் தரிக்கக்கடவேன். நான் காதால் கேட்ட வேதம் என்னை விட்டகலவேண்டாம்.' தைத்திரீய உபநிஷத்: இரண்டாவது ப்ரச்நம்:

'நமோ ப்ரஹ்மணே தாரணம் மே அஸ்த்வநிராகரணம் தாரயிதா பூயாஸம் கர்ணயோ: ஶ்ருதம் மாச்யோட்வம் மமாமுஷ்ய'

நூற்றொரு யஜுஸ் சாகைகள், ஆயிரம் ஸாம சாகைகள், இருபத்தொரு ரிக் சாகைகள், ஒன்பது அதர்வ சாகைகள். மஹாபாஷ்யம்:

'ஏகஶதமத்வர்யுஶாகா: ஸஹஸ்ரவர்த்மா ஸாமவேத: ஏகவிம்ஶதிதா பாஹ்வ்ருச்யம் நவதா ஆதர்வணோ வேத:'

ஒருவருக்கொருவர் அபிப்ராய பேதமிருப்பதால் வேதத்திற்குக் கால நிர்ணயம் செய்வது அஸாத்யமென்று தெரிகிறது. வேதத்திற்கு ஒவ்வொருவர் ஒவ்வொரு விதமாக அர்த்தம் சொல்வதும் அதன் காம்பீர்யத்தையே வெளிப்படுத்துகிறது. இவ்வளவு மஹிமையுள்ளதாயிருப்பதால் தான் பகவதவதாரமான வேதவ்யாஸர், வேதத்தைக்காட்டிலும் மேற்பட்ட சாஸ்த்ரம் கிடையாதென்று சபதம் பண்ணினார். தற்காலத்தில் ப்ராம்மண ஸமூஹத்தில் வேதாத்யயனம் குறைவாயிருப்பதோடு, அதில் கௌரவமும் குறைந்திருக்கிறது. இக்குறை நீங்கும்படி செய்ய வித்வான்களையும் ப்ரபுக்களையும் ப்ரார்த்திக்கிறேன்.

ஸ்ரீ:

மீமாம்ஸா ஸங்க்ரஹம்

[திவான் பஹதூர் ஸ்ரீ. உப. வி. கே. ராமானுஜாசார்யர்.]

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

281. ஒரு கேள்வி—அபூர்வம் ஒன்று இருப்பதாக ப்ரமாணமில்லை; அதைக் கல்பிக்கிறோம். கல்பிக்கும்போது அது ஒன்று என்றும் நிலையாயிருக்கும் என்றும் ஏன் கல்பிக்கக்கூடாது-என்று. பதில்—அப்படிக் கல்பித்தால் உண்டாகும் பலன் நிலையாயிருக்கவேண்டுமே; அது அப்படியில்லையே. ஆகையால் பலனைக் கொடுத்து அபூர்வம் போய் விடுகிறது என்றுதான் கல்பிக்க வேண்டும் (அதி 4—சா—798).

282. மேலே அங்கங்களைப்பற்றி விசாரம். "வ்ரீஹீநவஹந்தி" என்று ஓர் அங்கம் விதிக்கப்படுகிறது. அவஹநநம் என்கிற சொல்லின் பொருள் : உலக்கையைத் தூக்கி நெல்லின்மேல் போடுகிறது என்பது. இதை யொரேதடவை செய்தால் விதிப்படி நடந்ததாக ஆகாதா என்பது ஸந்தேஹம்.

பதில்.—சொல்லுவதை ஒப்புக்கொள்ளலாம் அவஹநநத்தைச் செய் என்று பொருளாயிருந்தால். பின்னைப் பொருள் என்னவென்றால்—அவஹநநத்தால் ஆகவேண்டிய வேலையைச் செய்கிறது-என்று. வேண்டியது நெல்லை அரிசியாகப் பண்ணுவது. இந்த த்ருஷ்டமான ப்ரயோஜனமிருக்க, அத்ருஷ்டமான ப்ரயோஜனத்தைக் கல்பிக்கக் கூடாது. இந்த த்ருஷ்டமான ப்ரயோஜனம் உலக்கையை அடிக்கடித் தூக்கிப் போடாவிட்டால் கிடைக்காது. ஆகையால் ஆவ்ருத்தி சொல்லப்படாவிட்டாலும், நெல் அரிசியாகிற வரையில் அவஹநநத்தைச் செய்யவேண்டும். இப்படியே கல்பிக்க வேண்டும்.

மஹா சயநத்தில் ஒரு வாக்யம்-"ஔதும்பர்யா: ஸம்மிதம் ஸர்வேஷாம் ஸர்வதோ ரயிகா அவஹந்தி। அவதேய யோர்தம் ப்ரஜாயை" என்று. இதன் பொருள்—அத்திமரத்தால் செய்யப்பட்ட உரலில் எல்லா தான்யங்களையும் நிறையப்போட்டு அவைகளைக் குத்துகிறது. அதை உபகாரம் செய்கிறது-என்பது. இங்கே ப்ரயோஜனம் அத்ருஷ்டம் தவிர வேறொன்றுமில்லை. அவஹநநத்தை ஒரே தடவை செய்கிறது. (அதி-5, 6)

283. ஒரு யாகத்தில் ப்ரயாஜம் முதலான அங்கங்களை அதிக பலன் வேண்டுமானால் ஆவ்ருத்தி பண்ணலாமா என்று ஸந்தேஹம். மழை வேண்டும் என்று காரீரிஷ்டி முதலான காம்ய கர்மங்கள் அடிக்கடி பண்ணுவதால் பலன் அதிகமாவதை யெல்லாரும் பார்க்கிறோமே-என்று.

பதில்.—அங்கங்களோடு கூடின ப்ரதானமான யாகத்தாலே கிடைக்கும் பலனைக்காட்டிலும் அதிகமான பலனில்லை. அதிக பலன் வேண்டுமானால் அங்கத்தோடு கூடிய ப்ரதான யாகத்தை ஆவ்ருத்தி பண்ண வேண்டும். அங்கத்தை மாத்திரம் ஆவ்ருத்தி பண்ணுவதால் அது கிடைக்காது.

ஒரு கேள்வி.—உலகத்தில் பயிர் செய்கிறவர்கள் பலதடவை வயலை யுழுது அதிக பலனையடைய வில்லையா ? அப்படியே யிங்கும் ஆகாதோ ? என்று.

பதில்.—சொன்ன உதாரணத்தில் ப்ரயோஜனம் த்ருஷ்டமானது. இங்கே அது அத்ருஷ்டமான வேலையை வேதத்தைக்கொண்டே அறிய வேண்டும். அதிக உபகாரம் உண்டாவதற்காக வேதம் ஆவிருத்தியைச் சொல்லவில்லை. ஆகையால் ஒரு யாகத்தில் அங்கங்களை ஒரே தடவை செய்கிறது. (அதி-7)

284. இந்த இடத்தில் ஒரு கேள்வி தோன்றுகிறது. விதி வாக்யங்களில் சொற்களிலிருக்கும் பஹு வசனத்தின் பொருள் என்ன?—என்று. அச்வமேதத்தைச் சொல்லுமிடத்தில் "வஸந்தாய கபிஞ்ஜலாநாலபேத" என்று ஒரு வாக்யமிருக்கிறது. இதன் பொருள்—வஸந்தருதுவின் அபிமானி தேவதைக்குக் கபிஞ்ஜலம் என்கிற பக்ஷிகளை உபாகரணம் பண்ணவேண்டியது—என்பது. இங்கே 'கபிஞ்ஜலாந்' என்று பொதுவாய்ச் சொல்லியிருக்கிறது. மூன்றை உபாகரணம் பண்ணினாலும் நான்கை உபாகரணம் பண்ணினாலும் விதிப்படி நடந்ததாக ஆகும். ஆகையால் தோன்றினபடி மூன்றையோ நான்கையோ உபாகரணம் பண்ணலாமா ?

கூடாது ; மூன்றை உபாகரணம் பண்ணுவதாலேயே விதிப்படி நடந்ததாக ஆகும். நான்கை உபாகரணம் பண்ணுகிறவனும் நாலுக்குள் அடங்கிய மூன்றைவிட முடியாது ; மூன்றை உபாகரணம் பண்ணுகிறவன் நாலை விட்டு விடலாம். அது மூன்றுக்குள் அடங்கவில்லை. ஆகையால் மூன்று என்னும் ஸங்க்யை கட்டாயம் வேண்டும் ; அது முதலிலிருக்கிறது. மூன்றை உபாகரணம் பண்ணுவதில் காரியங்கள் குறையும். மூன்றைக் கொண்டே விதியைத் திருப்தி பண்ணும்படி யிருக்க, அதிக பக்ஷிகளை ஹிம்ஸை செய்வது கூடாது. (அ-தி-8)

285. மேலே அத்யாயத்தின் முக்யமான விஷயம் விசாரிக்கப்படுகிறது. பூர்ணமாஸம் என்கிற இஷ்டி மூன்று யாகங்கள். அவைகளுக்கு ப்ரயாஜம் முதலான அங்கங்கள் உபகாரம் செய்கின்றன. ஒவ்வொரு யாகத்துக்கு அங்கங்களின் உதவி வேண்டியிருப்பதால், ஒவ்வொரு ப்ரதானத்துக்கும் அங்கத்தைச் செய்யவேண்டும் என்கிற நியாயப்படி அங்கங்களைத் தனித் தனியாய்ச் செய்யவேண்டியதா என்பது ஸந்தேஹம்.

பதில்:—வேண்டியதில்லை 'ஸமிதோ யஜதி' என்பது முதலான விதிகள் ஒரே தடவை விதிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு யாகத்துக்கும் தனித்தனியாய் விதியில்லை. அப்படியே அவைகளைச் செய்வதும் ஒரே தடவைதான். ஒரே தடவை செய்தாலும் மூன்று யாகங்களின் தேட்டத்தை அவைகள் தீர்க்கின்றன. உதாரணம்—அனேகம்பேர் கூடியிருக்குமிடத்தில் அவர்களுக்கு முன்னாலே ஒருவன் நர்த்தனம் பண்ணுகிறான். அதனால் எல்லாருக்கும் ஒரே காலத்தில் ஸுகத்தை யுண்டுபண்ணுகிறான்; அதுபோல. ஆகையால் இந்த யாகங்களை ஒரே இடத்தில் ஒரே காலத்தில் ஒரே அத்வர்யு செய்வதால், அங்கங்களையொரே தடவை செய்ய வேண்டும். இப்படி அனேகங்களுக்கு வியாபாரத்தை ஒரே தடவை செய்து உபகரிப்பதற்குத் தந்த்ரம் என்று பெயர். (அதி—10)

முதல்பாதம் முற்றிற்று.

இரண்டாவது பாதம்.

286. முன் பாராவில் விசாரித்த மூன்றும் மூன்று ப்ரதான யாகங்களை ஒரே இடத்திலும் ஒரே காலத்திலும் செய்யவேண்டியதா? ருத்து விக்குகளும் மூன்றுக்கும் பொதுவாக இருக்கவேண்டுமா? என்பது ஸந்தேஹம். இதற்காக விசாரிக்கவேண்டியது—இடத்தையும், காலத்தையும், ருத்து விக்குக்களையும் விதிக்கும் வாக்யங்கள் யாகங்களை விதிப்பதற்கு உதவி செய்கின்றனவா? அல்லது அவைகளைச் செய்யும் விதத்துக்குச் சேஷமா?— என்று. 'தர்சபூர்ணமாஸாப்யாம் ஸ்வர்க்ககாமோ யஜேத' என்கிற வாக்யத்தால் தனித்தனியாக விதிக்கப்பட்ட ஆறு யாகங்களும் சேர்ந்தே பலனைக் கொடுக்கின்றன என்றும், அவைகளின் ப்ரயோகம் ஒன்று என்றும் தெரிகிறது. "தர்சபூர்ணமாஸாப்யாம்" என்று ஒரே சொல் இருக்கிறது. அந்தச் சொல்லை கொண்டு இடம் காலம் ருத்துவிக்குக்கள் விதிக்கப்படுவதால் அவைகள் ப்ரயோகத்துக்குச் சேஷம்; யாகத்தை விதிப்பதற்குச் சேஷமன்று. ஆகையால் ஒரே ப்ரயோகத்தில் எல்லா யாகங்களுக்கும் ஒரே இடம், ஒரே காலம். ருத்துவிக்குக்களும் எல்லாவற்றுக்கும் பொது. (அதி—1)

287. சாஸ்த்திரதீபிகை.—இடம் முதலானவைகளுக்குப் பாவனையுடன் ஸம்பந்தம். அவைகளுக்குள்ளே ஒன்றுக்கு ஒன்றின் ஸம்பந்தமில்லை. ஆனாலும், யாகத்தை விதிக்கும் காலத்தில் பாவனைக்கும் ஸம்பந்தமில்லை. ஏனென்றால் பாவனை முதலில் எந்தப் பலனை உண்டு பண்டுகிறது என்று தேடுகிறது. அந்தத் தேட்டத்தைப் பல(ஃபல)வாக்யம் போக்குகிறது. உத்பத்திவாக்யம் (யாகத்தை விதிப்பது) ஃபல வாக்யத்துடன் சேர்ந்திருக்கிறது. அதற்கு அங்கங்களுடன் ஸம்பந்தமில்லை. ஃபலவாக்யத்தில் எல்லா யாகங்களும் சேர்ந்து பலனுக்குச் சேஷம் என்று சொல்லியிருப்பதால், பலனை ஆசைப்படுகிறவன் புத்தியில் செய்யவேண்டியதாக ஒரு யாகம் தோன்றும்போதே மற்றவைகளும்செய்ய வேண்டுவதாகத் தோன்றுகிறது. இப்படித் தோன்றுகிற யாகங்களுக்குப் பௌர்ணமியானகாலம் விதிக்கப்படுகிறது. ஆகையால் இப்படி விதிக்கப்பட்ட ஒரே பௌர்ணமி எல்லாவற்றுக்கும் காலம். அப்படியே இடமும், ருத்து விக்குக்களும். 8(09)

(288) ஸௌரிய தேவதையின் யாகம் முதலான விக்ருதி யாகங்கள் தனித்தனி பலன்களுக்கு ஸாதனமாக விதிக்கப்பட்டால், அவைகளைத் தனித் தனியிடங்களிலும் காலங்களிலும் தனித்தனி ருத்துவிக்குக்களைக் கொண்டும் செய்யவேண்டும். ஒருவன் இரண்டு பலன்களை ஒரே காலத்தில் அடைந்து, அவைகளுக்கு ஸாதநமான யாகங்களைத் தந்த்ரேண செய்யலாமா? அதாவது: ஒரே இடத்திலும் காலத்திலும் ஒரே ருத்துவிக்குக் கூட்டத்தாலும் செய்யலாமா? பதில்-கூடாது. எந்த யாகங்களை விதிக்கும்போது அவைகளுக்குச் சேர்க்கை தோன்றவில்லையோ, அவைகளைச் செய்யும்போது சேர்க்கை ஏற்படாது. (சாஸ்—805)

(289) இப்படி இடம் முதலானவைகள் ப்ரயோகசேஷம் என்று ஏற்பட்ட பிறகு, அவைகள் அங்கங்களுக்கும் தந்த்ரமாக ஏற்படும். அதாவது—ப்ரதான யாகங்களுக்கு எவை இடம் முதலானவைகளோ, அவைகளே அவைகளின் அங்கங்களுக்கும். இடம் முதலானவைகளுக்குப் பாவனையுடன் ஸம்பந்தம். ஸாத்யம், ஸாதநம் இவைகள் மாத்திரம் சேர்ந்த பாவனையுடன் அன்று. அப்போது பாவனையின் ஸ்வரூபம் முழுவதும் தெரியாது: ஸ்வரூபத்தை முழுவதும் தெரியப்படுத்த, அங்கங்கள் தேடப்படுகின்றன. ஆகையால் முதலில் அங்கங்களுடன் பாவனை சேருகிறது. பிறகு அங்கங்களுடன் கூடப் பாவனை இடம் முதலானவைகளுடன் சேருகிறது. (அதி—2; சாஸ் 806).

(290) தர்சபூர்ணமாஸ இஷ்டிகளில் யாகங்கள் இரண்டு கூறுகளாக இருக்கின்றன. தர்சம் என்கிற மூன்று யாகங்கள் ஒரு கூறு; பூர்ணமாஸம்

என்கிற மூன்று யாகங்கள் ஒரு கூறு. இரண்டு கூறுகளுக்கும் அங்கங்களைத் தந்த்ரமாய்ச் செய்கிறதா? அல்லது ஒவ்வொரு கூறுக்குத் தனியாகவா? என்பது ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:—தந்த்ரேண; அதாவது: சேர்த்துக் கர்மம் ஒன்றானதால் அதைச் செய்வதும் ஒன்று. இரண்டு கூறுகளுக்கும் காலம் வெவ்வேறாயிற்றே என்று ஸந்தேஹப்படவேண்டாம். பசுயாகத்தில் காலைவேளை ஸவநத்தில் வபாயாகம்; மூன்றாவது ஸவநத்தில் அங்கயாகம். இப்படிக் காலம் வேறுபட்டாலும் ப்ரயாஜம் முதலான அங்கங்களுக்கு ஆவ்ருத்தியில்லை. அப்படியே யிங்கேயும் கூடும்.

ஸித்தாந்தம்:—தர்சமும் பூர்ணமாஸமும் ஒரே பலனை உண்டுபண்ணுவதால், ஸ்வரூபத்தில் ஒன்றானாலும் ஒவ்வொன்றின் ப்ரயோகம் வேறு. அதாவது: தர்சபிரயோகத்தைக் காட்டிலும் பூர்ண மாஸப்ரயோகம் வேறு. அவைகளுக்கு வெவ்வேறு காலம் விதிக்கப்படுவதால் இது ஏற்படுகிறது. பசு யாக உதாரணம் ஸரியன்று. ப்ரயாஜங்களைக் காட்டிலும் வபாயாகமும் அங்கயாகமும் முக்யமானாலும் அவைகளைக்காட்டிலும் பசு முக்யம். இங்கேயும் ப்ரயாஜம் முதலானவைகளைக்காட்டிலும் மூன்று யாகங்கள் முக்கியமானவைகள். அவைகளைக்காட்டிலும் தர்சம் என்கிற கூறோ, பூர்ணமாஸம் என்கிற கூறோ முக்கியமானது. தர்சம்போல் பசு யாகம். பசு யாகத்திற்கு வெவ்வேறு காலங்கள் விதிக்கப்படவில்லை. விதிக்கப்படுவது அதின் அவயவங்களான ஹோமங்களைச் செய்யும் காலம். அவைகள் தனித்தனி முக்யமான பசுயாகமன்று. ஆதலால் ஒவ்வொரு கூறுக்கும் அங்கங்களை ஆவ்ருத்தி பண்ணவேண்டும். (அதி—3)

இரண்டாவது பாதம் முற்றிற்று.

மூன்றாவது பாதம்

291. அங்கங்களைப் பிரதான யாகங்களைச் செய்யுமிடத்திலும், காலத்திலும், அவைகளைச் செய்யும் ருத்துவிக்குகளாலும் செய்யவேண்டியது என்று கீழே சொல்லப்பட்டது. இதற்கு விலக்கு (அபவாதம்) சிலவிடங்களில் வசனத்தால் ஏற்படுகிறது. வேதி, வேதம், பர்ஹிஸ், இத்மம்-இவைகள் விஷயத்தில் தர்சபூர்ணமாஸ இஷ்டிகளில் வேறு காலமும், அவப்ருதம் விஷயத்தில் வேறு இடமும், சயநத்துக்கு அங்கமான ஸௌத்ராமணியில் ருத்துவிக்கு பேதமும் விதிக்கப்படுகின்றன. ருத்துவிக்கு பேதம் வேறு தக்ஷிணையை விதிப்பதால் ஏற்படுகிறது. (அதி - 1)

292. ஆதானம் என்கிற கர்மத்தை ப்ரயாஜம் முதலான அங்கங்களைப் போல ஒவ்வொரு யாகத்திலும் செய்கிறதா என்று ஸந்தேஹம்.

பதில்—செய்கிறதில்லை. ஆதானம் ஒன்றுக்கும் அங்கமன்று; அதை ஸ்வதந்த்ரமான கர்மமாக வேதம் விதிக்கிறது. ஆகையால் ஒவ்வொரு யாகத்திலும் அதைச் செய்யவேண்டியதில்லை. அது அநாரப்ய விதிக்கப்படுவதால் எல்லாக் கர்மங்களுக்கும் பொது.

கேள்வி - இந்த ஸந்தேஹமே உண்டாகாதே, ஏன் விசாரம் செய்யப்படுகிறது—என்று. பதில் - ஆஹவனீயம் முதலான அக்கினிகளால் யாகங்களுக்கு உபகார முண்டாவதால் ஸந்தேஹம் வரக்கூடும். (அதி - 2)

293. அக்னிஷ்டோமத்தில் மூன்று பசு யாகங்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றிலும் யூபம் தனியாக வேண்டுமா என்பது ஸந்தேஹம்.

பதில்—வேண்டியதில்லை. அக்னீஷோமீய பசு யாகத்தைச் சொல்லுமிடத்தில் யூபத்தைச் சொல்லவில்லை. அதற்குக் காலம் முன்னாலேயே விதிக்கப்படுகிறது.

‘ தீக்ஷாவஸாநே யூபம் சிந்தி । க்ரீதே ஸோமே வா ’

(தீக்ஷா காலத்தில் யூபத்தை வெட்டவேண்டும்; அல்லது ஸோமத்தை வாங்கின பிறகு) என்று.

ஆகையால் ஆதானம்போல் அது எல்லா யாகங்களுக்கும் பொது. அக்னீஷோமீய பசு யாகத்தில் ப்ரத்யக்ஷமான வசனத்தாலும் மற்றவைகளில் அதிதேசத்தாலும் யூபம் வருகிறது. (அதி - 3)

294. கீழே சொன்னபடி யூபம் பொதுவானதால் அதின் ஸம்ஸ்காரங்களும் பொது; அதே காரணத்தால், யூபம் என்று ஒரு பதார்த்தம் உலகத்திலில்லை. அப்படி யிருந்தால் மரத்தை வெட்டினவுடன் யூபத்தைச் செய்தாய் விடும். அப்படியில்லை. ஸம்ஸ்காரங்களை யடைந்த பிறகுதான் யூபம் என்கிற பெயர் வருகிறது. இந்தப் பெயரைக்கொண்டு ‘ யூபம் சிந்தி ’ என்று விதிக்கப்படுகிறது. எந்த ஸம்ஸ்காரங்களால் வெட்டின மரம் யூபமாகிறதோ, அவைகளை யெல்லாம் மரத்தை வெட்டும் காலத்திலேயே செய்யவேண்டும். (அதி - 4)

யூபத்தின் ஸம்ஸ்காரங்களைப்போல, ஸ்வருவும் மூன்று யாகங்களுக்கும் பொது. ஏனென்றால், ‘ யঃ ப்ரதமঃ சகலঃ பராபதேத், ஸ ஸ்வரুঃ கார்யঃ ’ [எந்தத் துண்டு முதலில் விழுகிறதோ, அதை ஸ்வருவாகச் செய்கிறது] என்று விதிஇருக்கிறது. முதலில் விழுவது யூபத்தை வெட்டும் போது நேரிடும். ஸ்வருவுக்குப் பசு யாகத்தோடு நேராக ஸம்பந்தத்துக்குக் காரணமில்லை. (அதி - 5)

295. யாகம் செய்கிற இடமும், அதில் உபயோகப்பட்ட ஜுஹூ முதலான பாத்திரங்களும், அதைச் செய்த ருத்விக்குக்களும் வேறு யாகங்களுக்குத் தகுந்தவர்களா? சாப்பாட்டுக்கு உபயோகப்பட்ட இலையை எறிந்து விடுகிறோமே - என்பது ஸந்தேஹம்.

பதில்—தகுந்தவர்கள்தான். நீர் ஓர் உதாரணம் கொடுத்தீர். நான் ஓர் உதாரணம் கொடுக்கிறேன். ஒரு நாள் உடுத்துக்கொண்ட துணியை மறுநாள் கட்டிக்கொள்ளுகிறோம். ஆகையால் உபயோகத்தால் இன்னது கெட்டுப் போகும், இன்னது கெடாது என்று பெரியவர்கள் அநுஷ்டானத்தால் அறியவேண்டும். (அதி - 12)

296. கீழே சொன்ன நிர்மானப்படி ஜுஹூ முதலான பாத்திரங்களை ஒரு யாகத்தில் உபயோகப்பட்ட பிறகு வேறு யாகத்தில் வைத்துக் கொள்ளலாம் என்று ஏற்பட்டது. ஒரு யஜமானனுடைய எல்லா யாகங்களிலும் அவைகளைத் தான் வைத்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால், "ஆஹிதாக்நிமக்நிபிர் தஹந்தி யஜ்ஞபாத்ரைஶ்ச." [ஆதானம் செய்தவனை அக்னிகளால் தஹனம் செய்யவேண்டும், யஜ்ஞத்தில் உபயோகப்பட்ட பாத்ரங்களுடன்] என்று ஒரு விதி இருப்பதால், யஜமானன் இறந்து போகும் வரையில் பாத்திரங்களை வைத்துக்கொண்டிருக்க வேண்டும். யஜமானனுடன் பாத்திரங்களைத் தஹனம் செய்வது ப்ரதிபத்தி கர்மம்.

'பாத்ரை:' என்ற பதத்தில் மூன்றாவது விபக்தி. அதனால் பாத்திரங்கள் தஹனத்துக்கு அங்கம் என்று ஏற்படுகிறது. அவைகளைச் செலவழிப்பது ப்ரதிபத்தி யன்று; அர்த்த கர்மம். அப்போது வேறு பாத்ரங்களைக் கொண்டும் தஹநத்தைச் செய்யலாம். ஆகையால் கட்டாயம் ஒரே பாத்திரங்களை வைத்துக் கொண்டு இருக்கவேண்டுமென்பதில்லை - இப்படி ஸந்தேஹம்.

பதில் – "ப்ரஸ்தரேண வாஜுஹூமாஸாதயதி" என்று இன்னுமொரு வாக்யமிருக்கிறது. இதில் 'ஜுஹூம்' என்னும் பதத்தின் இரண்டாவது விபக்தியால் ப்ரதிபத்தியாகிய ஸம்ஸ்காரம் சொல்லப்படுகிறது. (அ - 13)

எது முதல் பாத்திரங்களை வைத்துக்கொண்டிருக்கிறது என்று ஸந்தேஹம். தர்சபூர்ணமாஸ இஷ்டிகள் பிரகிருதிகளானதால் அவைகளை ஆரம்பித்தது முதலா - என்று.

பதில்—ஆதானத்தைப் பண்ணும்போது பவமானேஷ்டிகளையும் செய்யவேண்டும். அவைகளைச் செய்தது முதல். இல்லாவிட்டால் ஆதானம் செய்த பிறகு தர்சபூர்ண மாஸங்களை ஆரம்பிப்பதற்கு முன்னாலே யஜமானன் இறந்துபோனால் பாத்திரங்கள் இல்லாமையால் தஹநமில்லாமல் போகும். (அதி - 14)

மூன்றாவது பாதம் முற்றிற்று.

நான்காம் பாதம்

297. கர்மங்களைச் செய்யும்போது மந்திரங்களைச் சொல்லவேண்டும். அவைகளை ஒரு தடவை சொல்லுகிறதா அல்லது பல தடவைகளா என்பது விசாரிக்கப்படுகிறது.

(1) அவஹநநம் செய்யும்போது, உலக்கையைத் தூக்கிப்போடுகையில் ஒவ்வொரு தடவையிலும் மந்த்ரம் சொல்லவேண்டுமா என்பது ஸந்தேஹம். ஒரே தடவைதான் மந்திரத்தைச் சொல்லவேண்டும். அரிசியாகப் பண்ணுகிற வரையில் உலக்கையைப் பலதடவை தூக்கிப் போடவேண்டுமாயினும், அவஹனனம் என்னும் கார்யமானது ஒன்றுதான். ஆகையால் அதை ஆரம்பிக்கும்போது மந்திரத்தை ஒரே தடவை சொல்லவேண்டும். (அதி - 13)

'வ்ரீஹீந் அவஹந்தி' என்று தண்டுலபாவனை [அரிசியைச் செய்வது] விதிக்கப்படுகிறது. அதற்குக் காரணம் அவஹநநம். அதற்கு அங்கம் மந்த்ரம். ஒவ்வொரு தடவை உலக்கையைத் தூக்கிப் போடுவதால் அரிசி உண்டாகவில்லை. பலதடவை செய்தால்தான் அரிசியாகிறது. ஆகையால் அவஹனனம் ஒன்று. (சா - 838)

(2) ஓர் இஷ்டியில் வெவ்வேறு ஜாதியான தான்யங்களை அவஹநநம் பண்ணவேண்டுமானால், ஒவ்வொன்றின் அவஹனனம் வேறானபடியால், அதற்கு மந்த்ரம் வேண்டும். மந்த்ரத்தை ஒவ்வொரு அவஹனனத்துக்கும் சொல்ல வேண்டும். (அதி - 14)

அதிதேசத்தால் அவஹனனம் வரும்போது மந்திரத்துடன் வருகிறது. எந்தத் தான்யத்துக்கு மந்திரம் சொல்லப்படுகிறதோ, அதற்குத் தான் மந்திரத்தால் ஸம்ஸ்காரம் செய்யப்படும். மற்றவைகளுக்குச் செய்யப்படாது. மற்ற தான்யங்களுக்கு மந்த்ரத்தை மறுபடியும் சொல்ல வேண்டும். (சா - 838)

"சதுரோ முஷ்டீந் நிர்வபதி" என்று நிர்வாபம் நாலு தடவை விதிக்கப்படுகிறது. எல்லா நிர்வாபங்களுக்கும் ஒரே தடவை மந்திரமா என்று ஸந்தேஹம்.

பதில்—மந்திரத்தைச் சொல்லி முதல் முஷ்டியை யெடுப்பதனால் அந்த முஷ்டிக்கு ஸம்ஸ்கார முண்டாகும். மற்ற முஷ்டிகளால் எடுக்கிறவைகளுக்கும் ஸம்ஸ்காரம் வேண்டும். அது கிடைப்பதற்காக மந்த்ரத்தை ஆவ்ருத்தி செய்யவேண்டும். இது அவஹநநம் போலன்று. அங்கே ஒரே நெல்லைத்தான் பலதடவை குத்துகிறது. ஒரே தடவை ஸம்ஸ்காரம் செய்தால் போதும்.

'இப்படியே ஸ்ஹி-லூ-லவ நூ' [தர்ப்பத்தை அறுப்பது], 'வெதீ ஸூரணம்' [வேதியில் தர்ப்பத்தைப் பரப்புதல்], 'ஆஜ்ய ஸூரணம்' [நெய்யை ஜுஹூ முதலானவைகளில் நிரப்புதல்] முதலான வியாபாரங்களிலும். (அதி - 15; சா - 839)

வேதி முதலியவைகளை மூன்று தடவை ப்ரோக்ஷிக்கிறது. ஒவ்வொரு தடவைக்கும் மந்த்ரமுண்டா என்று ஸந்தேஹம்.

பதில்—ஸம்ஸ்காரத்தைப் பெறும் வேதி யொன்றானதால் மந்த்ரத்துடன் செய்த முதல் ப்ரோக்ஷணத்தால் ஸம்ஸ்காரமாகிவிட்டது. மறுபடியும் மந்த்ரம் சொல்லுவதில் ப்ரயோஜனமில்லை. ப்ரோக்ஷணத்தின் ஆவ்ருத்தி விதிக்கப்படுகிறது. அதைச் செய்யவேண்டும். (அதி - 16)

நான்காம் பாதம் முற்றிற்று.

பதினோராவது அத்தியாயம் முற்றிற்று.

ஸ்ரீ:

ஸ்ரீமதே நம:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

*ஸ்ரீ கீதா மஹிமை

"வசையில் நான்மறை கெடுத்தவம் மலரயற் கருளிமுன் பரிமுகமாய்
இசைகொள் வேதநூ லென்றிவை பயந்தவ னேயெனக் கருள்புரியே
உயர்கொள் மாதவிப் போதொடு லாவியமாருதம் வீதியின்வாய்
திசையெல் லாங்கம ழும்பொழில் சூழ்திருவெள்ளறை நின்றானே."

* இது, ஸ்ரீரங்கம் வடக்குச் சித்திர வீதி ஸ்ரீ தேசிகன் ஸந்நிதியில் ஸ்ரீ ஹயக்ரீவ வித்யா மந்திரத்தின் சார்பில் திருக்கோட்டியூர் ஸ்ரீ. உ.வே. ஸ்ரீராம தேசிகாசார்ய ஸ்வாமியால் செய்யப்பட்ட உபந்யாஸத்தின் ஸங்க்ரஹம்.

இப்பாசுரத்தில் தோஷமில்லாத என்று பொருள் கொண்ட 'வசையில்' என்னும் சொல்லானது, நான்மறையோடும் மலரோடும் அயனோடும் பரிமுகனோடும் நூலோடும் சேர்கிறது. அங்கங்கு தக்கபடி தோஷங்கள் வேறு வேறாகும்.

நான்மறையோடு சேரும் பொழுது, சப்தங்களுக்குக் காரணமான புருஷன் மூலமாக வரக்கூடிய ப்ரமம் வஞ்சனை இவை முதலிய தோஷங்களடியாக வந்ததென்றும், இது காரணமாகப் பொய்யான பொருளை வெளியிடுமென்றும், தோஷங்களில்லாதது என்றும் வரும்.

மலரோடு சேரும்போது, பயனைத் தராமல் வெறிதாவதென்றும், விபரீதமான பலனைத் தருவதென்றும்; தோஷங்களில்லாதது என்றுமாகும்.

அயனோடு சேரும்போது, தத்காலத்தில் பிறந்தவரான ப்ராஹ்மா மதுகைடபன் என்றிவருள், இவர் ஸத்வ மூர்த்தியென்று புராணங்களில் சொல்லுகையாலும், முதலில் பிறந்த புதல்வராகையாலும், விஷய விரக்தராகையாலே ப்ரஜ்ஞத்ய னெனப்படும் சிஷ்ய ராகையாலும், நாமங்கை பிரிவின்றி வாழும் நாவீறனாகையாலும், மறை பொருளை வெளியிட விரோதியான தோஷங்கள் யாவுமில்லை எனவரும்.

பரிமுகனோடு சேரும்போது, ஆசார்யனுக்குத் தோஷமாக எண்ணப்பட்ட அறிவின்மை, இரக்க மின்மை, சினம், மறைகளையும் அவற்றின் பொருள்களையும் உரியோருக்கும் வெளியிட நினைவின்மை, என்கிற லோபம் முதலான தோஷங்கள் எல்லாம் இல்லாமை கிடைக்கும்.

நூல்களோடு சேரும்போது, முன் போல் ப்ரமம் வஞ்சனை முதலான தோஷங்களடியாக வந்ததென்கிற தோஷமில்லை என்றேற்படும். புருஷர்களால் செய்யப்படாமையாலே தோஷ லேசமுமில்லாத நான்மறைகளைப் பறிகொடுத்த அம்மலரயற்கு ச்ருதி ஸ்ம்ருதி புராணங்களில் ப்ரஸித்தி பெற்றவனும், பூவிற் பிறந்தவனும், ஸத்வ ப்ரக்ருதியும், தலைமகனும், ஸரஸ்வதி வல்லபனும், அவதாந முள்ளவனுமான பிரமனுக்கு, ஸ்வத: ஸர்வஜ்ஞனாய்ப் பரம காருணிகனான பகவானும் ப்ரமாணங்களுக்குள் வேதங்களின் பரிசுத்தியைத் தெரிவிக்கத் திருவுள்ளங்கொண்டு,

"ஸுசிராவபுஷ ஸமேதாச் வியாஸஹி திஷஷேு தஷ ।
ஸுஷ்யதல்வலீ ஸவதி வல்லிவாவ ந வாவ நஃ ॥"

[கொடிய பாபங்களை ஆவலுடன் செய்தானே யாகிலும், அவன் ஸ்வல்ப

காலம் அச்யுதனை த்யானிப்பனே யாகில், அதிகமான தவம் செய்தவனும் பங்க்தி பாவந பாவநனுமாகிறான்.]

" [illegible] ।
[illegible] " ॥

[திருவடி முதலாகத் திருமுடியளவும் பெருமாள் திருமேனியை ஸேவிக்குமவர்களுக்குப் பஞ்ச மஹா பாபங்களும் மற்றும் உபபாதகங்களும் உடனே நசித்து விடும்] என்கிற ப்ரமாண வசநங்களின்படியே தாமும் தம் திருமேனியும் அத்யந்த பாவநமாய் இருக்கச் செய்தேயும், " [illegible] " என்கிறபடியே முகத்தில் பாவநமான அச்வ ஜாதியின் முகத்தைத் தாம் இப்போது முகமாகக் கொண்டு ஹயக்ரீவ ரூபியாக அவதரித்தருளி, முன் சொன்னபடி ஒரு வித தோஷமுமில்லாத வேதங்களையும் அவற்றிற்கு வ்யாக்யாநங்களாக ஸ்ரீ பாஞ்சராத்ரம் முதலான ப்ரபந்தங்களையும் அருளின பரமோபகாரகனே அடியேனுக்கும் அப்படியே அருள்புரியவேணும். வேதங்களைப் பறிகொடுத்துச் சோகித்து நிற்கும் இவ்வயனுக்கு மீளவும் வேதங்களைப் பறிகொடுத்தல் ஓர் ஆச்சர்யமே.

'உயர்கொள்' என்பது மாதவியோடும், மாருதத்தோடும், வீதியோடும், பொழிலோடும், திருவெள்ளறையோடும் சேர்கிறது. அதில், மாதவியோடு சேரும்போது, அம்மாதவி லதை ஆகாச அவகாசமெல்லாம் இடமடையும்படியான வளர்த்தியைச் சொல்லுகிறது.

மாருதத்தோடு சேரும்போது, குளிர்ச்சி பரிமளம் மாந்த்யம் என்கிற மேன்மையையும்,

" [illegible] ।
[illegible] ।
[illegible] "

இத்யாதிகளின் கணக்கிலே திருமலைமேல் நிலையான நிலைகொண்ட புண்டரீகாக்ஷனுடைய ஸம்பந்தத்தால் அகில துர்வாஸநா விநாசியான அளவில்லா ஆநந்த வாஸனையுடைமை என்னும் உயர்வையும் கொண்டதென்று காட்டுகிறது.

வீதியோடு சேரும்போது, அருகிரண்டிலும் மாடமாளிகைகளினுடையவும், ஆகாயத்தில் மேல்விதாநம் தோரணங்களினுடையவும், பூமியில் சந்தன நீர் தெளித்தல், புஷ்பம் பொரிகள் இறைத்தல், பரிமள தூபம் படைத்தல் முதலான பரிஷ்காரங்களினுடையவும் சேர்த்தியையும்,

அவாப்த ஸமஸ்தகாமனான பகவானையும், அந்தப்புரமல்லது அறியாத அமுதில் வரும் பெண்ணுடன் அநவரதம் உலாவும்படி ஆழங்கால் ப்படுத்தும் பெருமையையும் சொல்லுகிறது.

பொழிலோடு சேரும்போது, அவகேசிகளான மரம் செடிகளின்றிப் பூவில் காயில் பழங்களில் புகழ் பெற்ற மரம் செடி கொடிகள் ஆகாயம் அடங்க ஓங்கி வளர்ந்தமையும், ப்ரணவ கீத பர மாதுகர த்விஜ பிகைக்ஷயை ஸ்வரஸமாகவே ஸ்வாஸங்களால் அளிக்கும் பூக்களும் காய்களும் பழங்களும் நிறைந்த பல்லவ பாணிகளால் பத்நீ புத்ர பரிஜநங்களோடு ப்ராப்தர்க்குப் புரையறப் பரிமாறும் பரம சாகிகள் நிறைந்தமையும் சொல்லப்படுகின்றன.

திருவெள்ளறையோடு சேரும்போது, தவளில் தூய மாமணி மாடங்கள் முதலியன ஓங்கினமையும், வைகுந்த வானாட்டை விட்டு வாரிதி மக ளான வாரிஜாக்ஷியின் கீழ்ப் புண்டரீகாக்ஷனையும் ப்ரஜையாக ஆக்கி இதுவே காரணமாக அரைக்ஷணம் 'அகலகில்லேன்' என்னும்படி பண்ணும் பெருமையும் கிடைக்கிறது. ஆகவே, உசித ஸமயங்களில் ஆகாசம் அடங்க ஓங்கி வளர்ந்த மாதவி லதைகளோடு சேர்ந்து, குளிர்ச்சி கந்தம் முதலியவைகளோடு கூடிய காற்றானது பரிஷ்காரம் பெற்ற வீதிகளில் உலாவித் திசைகளெல்லாம் கமழும்படி செய்யப் பெற்றும், பூவில் காயில் பழங்களில் புகழ் பெற்ற மரம் செடி கொடிகள் ஓங்கும் பொழில் சூழ்ந்துமுள்ள திருவெள்ளறை என்னும் திருநகரியில் நிலை நின்றருளினவனே! அடியேற்கு அருள் புரியவேணும் என்று பொருளிருக்க, முன்னடிகளில் பகவத் கீதையை அருளின பொருளும் பின்னடிகளில் திருவெள்ளறை மாஹாத்ம்யத்தில் ப்ரதாநமான பொருளும் கிடைக்கின்றன. எங்ஙனே யென்னில்: இவை யென்னும் பொய் முதலிய தோஷங்கள் ஸம்பவியாத நான்மறைகளை, த கள் ஜாதிக்குரிய தர்மங்களில் இவை அதர்மங்க ளென்னும் எண்ண தாலும், வேதங்களால் நித்யராகச் சொல்லப்பட்ட ஜீவாத்மாக்களுள் சில காளான அங்கு அப்போதமர்ந்த ஆசார்யர்கள் பந்துக்கள் முதலாயுள் ஆத்மாக்களைக் கொல்லுகிறோமென்னும் நினைவினாலும், பொய் சொல்வதா எண்ணிக் கெடுத்தானென்கிறது 'வசையில் நான்மறை கெடுத்த' என்பது அம்மலரயற்கு-ப்ரஸித்தமாயும் மலருகின்றதாயுமுள்ள அயத்தையுடை வருக்கு. அயம் என்பது ஸம்ஸ்க்ருத பதமாய், சுபத்தைத் தாவல்ல மத்தைச் சொல்லுகிறது. "[illegible]" என்பது அமர இப்படிப் பொதுவிலே சொன்னாலும், அவைகள் எல்லா விதத்தாலும் உயர்ந்தவை யென்று தாத்பர்யம்.

" [illegible] । "
" [illegible] ॥ "

மறுபடி ஸம்ஸாரத்தில் போகாதபடி காப்பதும், முன் சொன்ன ஸத்ய வசநம் முதலான தர்மங்கள் எல்லாவற்றையும் காட்டிலும் ந்யாஸ மெனப் படும் இந்த சரணாகதியே மிக உயர்ந்ததாக ப்ரஹ்ம வித்துக்கள் சொல்லு கிறார்கள். கர்மயோகம் ஜ்ஞாநயோகம் பக்தி யோகம் இவைகளில் நிஷ்டை பெற்றவர்களும் கூட, சரணாகதியால் நிஷ்டை உடையவர்களின் மஹிமை யில் கோடியில் ஒரு அம்சத்தைக் கூடப் பெறார்கள் என்று ச்ருதி ஸம்ருதி களால் சொல்லப்பட்ட ஹிததமமான சரணாகதி யென்னும் தர்மத்தையே

"[illegible] ।
[illegible] ॥"

என்று அஹிர்ப்புத்ந்யன் சொன்ன ஜ்யாய: சப்த ந்யாயத்தாலே இன்ன சுபத்தை இவ்விதமாக இக்கர்மம் தருமென்று உபாதியில்லாமல் சொல்லப் பட்டதே தவிர, மற்றவை அப்படிச் சொல்லப்படவில்லையே யெனில்,

"[illegible] ।
[illegible]"

என்று சொல்லப்பட்ட ப்ரபத்தியும் அக்கீதையில் கடைசியில் சொல்லிய படி ஸர்வபாப மோக்ஷ பர்யந்தமாக வளருமதாகையாலே, நிஸ்சித ச்ரேயஸ்ஸின் அறிவுக்காகப் பண்ணின இப்ரபத்தியும் உயர்ந்ததென்று சொல்லக் குறையில்லை. மற்றும் வழிகளுமுண்டு. இதைக் காண்பிப்பதற்கே இங்கு 'மலர்' என்று 'அய' பதத்திற்கு விசேஷணம் கொடுத்தது. அநுஷ் டாந மளவாகவும், அன்றிக்கே பயனை மோக்ஷமளவாகவும் வளருமதான என்று இதன் பொருள். 'அ' என்னும் பதம் முன் சொன்ன ச்ருதி ஸ்ம்ருதி முதலியவற்றின் ப்ரஸித்தியைச் சொல்லுகிறது. அன்றிக்கே, 'அம்' என்று பதமாய், அது அஜ்ஞாநம் அசக்தி தாமஸம் பொறுமை இவையுள்ளவர்களுக்கு அநுரூபமாகையாலே அழகியதாம் என்று 'அய' பதார்த்தத்தைக் காட்டுகிறது. ஆக, ச்ருத்யாதிகளில் ப்ரஸித்தமாயும் ஆத்மாநுரூபமாகையாலே அழகியதாயும், மோக்ஷபர்யந்தமாய் வளரும தாயுமுள்ள சரணாகதியைப் பண்ணினவர்க்கு என்பது தேறின பொருள். இங்கு இன்னானென்று விசேஷியாமல், ச்ருதிகளைக் கொடுத்தவரும் சரணா கதி செய்தவருமானவர்க்கு என்று பொதுவிலே சொன்னாலும், மேல், ஸாரதியாகிய பகவான் கீதை அருளினதாகச் சொல்லப்போகிறபடியாலும், வேதங்களைக் கொடுத்தல் சரணாகதி என்றிவை அர்ஜுனனிடத்திலேயே இருக்கிறபடியாலும், சொன்னபடியுள்ள அர்ஜுநனுக்கு என்று விசேஷித்

துக் கிடைக்கிறது. "பார்த்தற்குத் தேரொன்றை யூர்ந்தாற்கோர் கோல் கொண்டுவா" என்கிற இடத்தில் போல் இங்கும் பகு வசநம் கிடக்கிறது.

அருளி—க்ருபை செய்து, முன்—பாரதப்போர் புரியுங்காலத்து, பரி முகமாய்—குதிரைகளுக்கு முகமாய் (ப்ரதாநனாய்) ஸாரதியாகி, இசை கொள் வேத நூல் என்றிவை—கீதோபநிஷத் என்னப்படுவதும் ப்ரமா ணோத்தம மென்று ஸர்வ ஜநங்களாலும் புகழப்பட்டதாக ப்ரத்யக்ஷீகரிக் கப்பட்டதுமான சாஸ்த்ரத்தை, பயந்தவனே!—அநுக்ரஹித்தருளின கண்ணனே! எனக்கு உன் திருவடிகளாலன்றிக் காப்பரியனாகி, உன்னருளே புரிந்திருந்து, உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்த அடியேனுக்கு அருள் புரிய வேணும். ப்ரபந்நனான பார்த்தனுக்குப் போல் ப்ரபந்நனான அடியேனுக்கும் கீதையையும் அதன் அர்த்தத்தின் உண்மை அறிவையும், அதன் ஸாரார்த் தமான சரணாகதியின் அநுஷ்டாநத்தையும், அதன் பயனான ஸர்வ பாப நிவ்ருத்தி பூர்வக நித்ய கைங்கர்யத்தையும் தந்துகந்தருளவேணும் என் பது இந்தக் கீதை அருளும் பொருள். இது முன்னிரண்டடியில் கிடைத்த படி. பின்னடிகளில் திருவெள்ளறை மாஹாத்ம்யம் ஸூசிதமானபடி எவ்வாறெனில்:

"[illegible] ।
[illegible] ।
[illegible] ।
[illegible] ॥"

உம்முடைய கருணை யல்லது வேறு ப்ரார்த்திக்கவேண்டியதாக இல்லையே யாகிலும், இப்போது தேவரீர் 'வரம் வாங்கிக்கொள்' என்று நியமிக்கிறபடி யாலும், எல்லா ஜந்துக்களுக்கும் மோக்ஷாந்தமாக ஸகல புருஷார்த்தங் களையும் அளிக்கை முன்னமே யுள்ளபடியால் முன்னில்லாத விஷயத் தையே அபேக்ஷிக்கவேண்டு மாகையாலும், உமக்கும் ஸ்வாமிநியாகி உம்மை நியமிக்கும் தன்மை ப்ரார்த்திக்கப்படுகிறது. வரம் கொடுக்கத் திருவுள்ள முண்டாகில் தந்தருளவேணும். இப்படி மஹா லக்ஷ்மியால் வேண்டப் பட்ட பங்கஜாக்ஷனும் 'அப்படியே' என்று புன்சிரிப்போடு அநுமதித்து மேலும் ஒரு வார்த்தை அருளினார்.

"[illegible]"

லக்ஷ்மீ! நீ பூமியில் சென்று ஒருவராலும் செய்ய முடியாத தவம்புரிந் திடுவாய்

"[illegible]"

இப்படிப் பெருமாளால் அருளப்பட்ட லக்ஷ்மி தேவியும் பூமியில் ஸ்வேதாத்ரி க்ஷேத்ரம் எழுந்தருளி, இந்த்ரியங்களை அடக்கி, ஒருவராலும் செய்ய முடியாத தவத்தை ஸாதித்தாள் என்றிவை முதலியன ஸ்வேதாத்ரி மாஹாத்ம்ய வசநங்கள்.

உயர்கொள்—பகவானுக்கும் ஆதிபத்யத்தை அடைந்த, மாதவி—அருந்தவம் செய்த மஹா லக்ஷ்மியோடு, போது—உசித ஸமயங்களில், வீதியின் வாய் உலாவிய—திருவீதிகளில் எழுந்தருளுமவரான, மாருதம்—அகிலஜகத் தாரகனுகையாலே ப்ராணன் எனப்பட்ட பகவானால், திசை எல்லாம் மெழும்—எல்லாத் திக்குகளிலும் ஆச்ரிதர் திறத்தில் பகவானுடைய பாரதந்த்ர்யம் வாத்ஸல்யம் என்றித்தகைய குணங்கள் பரிமளிக்கும்படி செய்யப் பெற்றதும், பொழில்கள் சூழ்ந்துமுள்ள திருவெள்ளறை நின்றான் என்று பொருள் தேறுகிறது. இத்தால் ஆச்ரிதபாரதந்த்ர்யம் நிறம் பெற்ற நிலத்தில் நின்றருளினுகையாலே நிக்ஷிப்தபரரால் நிலையாக அபேக்ஷிக்கப்பட்ட நித்ய கைங்கர்யமும் நிஷ்ப்ரதிபந்தகமாகத் தலைக்கட்டுமென்றும் வ்யஞ்ஜிதமாயிற்று. நினைக்க நிலமல்லாத ஆச்ரித பாரதந்த்ர்யம் முதலான அகில கல்யாண குணங்களையும் எல்லா ஜநங்களும் கண்டு மகிழ்ந்து புகழும்படி திருவெள்ளறை நின்றருளிய திருமால் திருவடிமலரின் கீழ் வேறு புகலில்லாமல் அடைக்கலம் புகுந்த அடியோங்களுக்கும், தம்மையல்லது புகலறியாத அர்ஜுநனுக்குப்போல் கீதையையும் அதன் அறிவு முதலானவைகளையும் அருளவேணுமென்பது இவற்றினின்றும் திரண்ட பொருள். இத்தால் அபேக்ஷிதம் ப்ரார்த்திக்கப்பட்டது. நித்ய கைங்கர்ய பர்யந்தமான புருஷார்த்தம் ஸ்ரீ கீதையால் கிடைக்குமென்று கீதையின் மாஹாத்ம்யமும் சுருக்கமாகக் காண்பிக்கப்பட்டது. இனி இவ் விஷயத்தை நன்கு விவரிப்போம்.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீ வரதராஜ பஞ்சாசத்

[ஸ்ரீ. உ.வே. A. V. கோபாலாசார்யர் M.A. B.L., அட்வொகேட், திருச்சி]

த்ராதா ஆபதி ஸம்ச்ரிதவதாம் சரணம் ப்ரரோஹ:
சாயா கரீச ஸரஸாநி பலாநி ச த்வம் ।
சாகாமதி ச்ரித ச்ரேணிவிசேஷ சாகிநாம்
கிம் நாம நாஸி மஹதாம் நிகமத்ருமாணாம் ॥ 14.

கரீச! - ஆனைமலை அரசனே! சாகாமதி ச்ரித பக்ஷி ஸங்க சாகிநாம் - கிளைகளில் (வேத சாகைகளில்) ஆச்ரயித்திருக்கும் தேவர் கூட்டமென்னும் பக்ஷிகளுடைய, மஹதாம் - பெரிதான, நிகமத்ருமாணாம் - வேத வ்ருக்ஷங்களுக்கு, ஆபதி - ஆபத் காலத்தில், த்ராதா - காப்பாற்றுகிறவராயும், ஸம்ச்ரிதவதாம் - ஆச்ரயித்து நிற்கு மிடமாயும், சரணம் - போஷகனுயும், ப்ரரோஹ: - விழுதாயும், சாயா - நிழலாயும், ஸரஸாநி பலாநி ச - ரஸமுள்ள பழங்களாயும், த்வம் அஸி - நீ இருக்கிறாய்; (இத்தனையுமா யிருக்கிற நீ) கிம் நாம நாஸி - நீ எதுதான் ஆகவில்லை?

அவ: (1) முன் ச்லோகத்தில் வரதனுடைய ஆஜ்ஞையாகிய ச்ருதி நலம் தீங்கான பலங்களைப் பயக்கின்றதென்றார். வேதத்தில் சொல்லப்படும் தேவதைகளைப் பேசும் சப்தங்களே தேவதை யென்றும், அந்த வேத சப்தங்களான தேவதைகளே பலங்களைக் கொடுக்கின்றதாகவும் சிலர் சொல்லுவர். விதிகளும் நிஷேதங்களுமான வேத சப்தம் பலம் கொடுக்கிறதென்றால், தேவதாவாசியான சப்தங்களே தேவதையாயிருந்து பலங்களைக் கொடுக்கின்றனவென்று சொல்லலாமே. பலங்களைக் கொடுக்கக் கரிவரதனிடம் போக வேண்டாமே. இப்படி ஆக்ஷேபம். இங்கே வேத வ்ருக்ஷத்தின் கிளைகளை ஆச்ரயித்திருக்கும் சேதநர்களான பக்ஷிகள் தேவதைகள். அவர்களுக்குப் பலன் கொடுக்கும் சக்தி பெருமாள் ஆஜ்ஞையிலிருந்து வருகிறது. பெருமாள் ஆஜ்ஞையான வேத சப்தத்திற்கு ஸகலமும் பெருமாளால் நிர்வஹிக்கப்படுகிறதென்று ஸாதிக்கிறார்.

(2) பெருமாளுடைய ஆஜ்ஞையான வேத சப்தம் பலன்களை அளிக்கிறதென்று முன் ச்லோகத்தின் முடிவில் ஸாதித்தார். பழங்களை அளிப்பது வ்ருக்ஷத்திற்குப் பொருந்துமாதலால், இங்கே வேதங்களை வ்ருக்ஷங்களாக வர்ணிக்கிறார்.

(3) 12-ம் ச்லோகத்தின் முடிவில் வேத வாக்குகள் அநபாயம் (ஆபத்தில் அழியாதவை) என்றார். வேதமென்பது சப்தம். சப்தத்திற்கு ஆச்ரயம் வேண்டும்; தனிமையில் ஸ்வதந்த்ரமாய் நிற்கக்கூடியதல்ல. சப்தத்திற்கு வாச்யப் பொருளான ஆச்ரயம் வேணும். ஒரு சேதநனுடைய ஜ்ஞாநத்துக்குள்ளிருந்து அவனால் உச்சரிக்கப்படவேண்டும். ப்ரளய காலத்தில் வாச்யப் பொருள்களென்றும் ரூபங்கள் வேறுபாடோடு இல்லை. எல்லாம் இல்லாததுபோல் இருக்கிறது. ஒரு காலத்தில் தமோ மூர்த்திகளான மாயாவி அஸுரர்கள் வேத சப்தங்களையே அபஹரிக்கிறார்கள். இந்த ஆபத்துக்களில் வரதன் வேதங்களை அபாயமடையாமல் ரக்ஷிக்கிறார்.

(4) வேதத்தைக் கல்ப வ்ருக்ஷமென்று பாகவதாரம்பத்தில் 'நிகமகல்பதரோர் கலிதம் பலம்'' என்கிற ச்லோகத்தில் ரூபணம் செய்துள்ளது. வேதத்தைக் கல்ப வ்ருக்ஷமாக மஹர்ஷிகள் ரூபணம் செய்யக் காரணம் என்னவெனில்: அந்த வேத வ்ருக்ஷத்திற்கு ஸகல சக்திகளையும் இந்த வரத கல்ப வ்ருக்ஷமே நிர்வஹிப்பராயிருப்பதுதான். 'நிகமகல்பதரோ:' என்கிற ச்லோகம் இங்கே ஸ்வாமி திருவுள்ளத்திலே ஓடுகிறது. வேத வ்ருக்ஷங்களை நிகமத்ருமங்களென்று இங்கே வர்ணிக்கிறார். பாகவத ச்லோகத்தில் போல் வேதங்களைக் கல்ப வ்ருக்ஷங்களென்று பேசத் திருவுள்ளமில்லாமையையும் ஸூசிக்கிறார். பாகவத ச்லோகத்தில் பலம் ரஸம் பேசியிருப்பது போல், இங்கே ஸரஸமான பலங்களின் பேச்சு. அங்கே சாகையில் உட்கார்ந்திருப்பது சுகரென்னும் ரிஷிக் கிளி. இங்கே தேவக் கிளிகள்.

த்ராதா—இந்த வரதப் பெருமாளுக்கு 'ஜகத்த்ராதா' என்று பெயர். உலகத்தாரைத் தாங்குவது தர்மம். தர்மத்திற்கு மூலம் வேதம்; வேதத்திற்கு மூலமும் ஸர்வமும் வரதப் பெருமாள். 'ஆதிமத்யந்த் ரக்ஷாஸாவஸீது' என்று வர்ணிக்கப்பட்ட ஆதிமூலம் ஜகத்த்ராதா.

ஆபதி—ஆபத்காலத்தில். வேதங்களை நான்கு முகங்களால் ஸர்வகாலமும் உத்கோஷிக்கும் ப்ரஹ்மாவினிடமிருந்து அஸுரர்கள் அபஹரித்த ஆபத்தில். 'வேதாபஹார' என்னும் ச்லோகத்தில் அதை ஒரு ஆபத்தென்றும், அதிலிருந்து பெருமாள் விமோசநம் செய்வித்தாரென்றும் ஸாதிக்கப்பட்டது. அதைக் காட்ட அதே ஆபத் என்னும் பதத்தை இங்கே ப்ரயோகித்தது. ஆபத்தில் த்ராதா என்று ஸாதிக்காமல் 'த்ராதாபதி' என்று ப்ரயோகித்தது ரஸம். ஆபத்து வருவருவதற்கு முன்பே ரக்ஷண ஸம்ப்ரமம் ஆரம்பித்து விடுகிறது. ரக்ஷணம் முந்தியும் ஆபத்தின் அறிவு பிந்தியுமென்றும் சொல்லும்படி அத்தனை வேகமாக ரக்ஷணம். நடுவேயுள்ள இந்த 'ஆபத்தில்' என்னும் பதம் அடுத்த பதத்துடனும் அந்வயிக்க வேணும்.

வேதங்களென்னு மாச்ரயமும் சதுர்முக புத்தியாகிய ஆச்ரயமுமில்லாத ப்ரளய ஆபத்திலும் இவர்தான் ஸ்திதி பதமாயிருக்கிறார்.

பரணம்—பரிப்பவர்: போஷிப்பவர். வேதத்தை நம்பி அது சொல்லும் பலங்களைக் கோரி எத்தனையோ காலம் எத்தனையோ ஆயாஸத்துடன் யாகங்களைச் செய்கிறார்கள். வரதன் அந்தந்த கர்மங்களுக்குப் பலன்களைக் கொடாவிட்டால் வேதத்தை யார் நம்புவார்? யார் ஆதரிப்பார்?

ப்ரரோஹ:—ஆலமரத்துக்கு விழுதிருப்பது போல், வேத மரத்தின் விழுது நீரே. வாழையடிவாழை போல் உம்மாலேயே வேத மஹிமை சாச்வதமாய் வளரும்.

சாயா— வேத வ்ருக்ஷங்களுக்கு நிழலும் நீரே. வேத வ்ருக்ஷம் எமக்கு நிழலைக் கொடுக்கும். அதற்கு நிழலாவீர் நீர்.

ஈச—ஜகத்த்ராதாவான மூலப்பொருளான வரதனே!

ரஸவாந்தி ஸ்வாதூநி ச—அம்ருதரஸ மொழுகும் பலங்களும் நீரே.

ஸ்வர்வாமதத்ரிதசஸன்னத ஸகுந்தகானாம்—வேதங்களில் தேவர் குழாங்கள் பக்ஷியைப்போல் வஸிக்கின்றன. அவர்கள் வஸிக்கும் ஸ்வர்க்கம் வேதத்தின் ஓர் கிளையின் பலம். வேதசாகையை ஆச்ரயித்திருக்கிறார் தேவர்கள். வேதங்களுக்கு ஸர்வத்தையும் நிர்வஹிக்கும் வரதன் வேத சாகைகளை ஆச்ரயித்திருக்கும் தேவர்களுக்கு அதிராஜன். நானொருவன் மட்டும் வரதன் கிளிப்பிள்ளையல்ல; தேவர்களும் அவர் கிளிப்பிள்ளைகள்.

ஏவம் ஏவாஸி—நீரே வேத வ்ருக்ஷங்களுக்கு இத்தனையுமாகிறீர். 'இத்தம்விதம் ஏவாஸி.' நீரே இத்தனை விதமான ரக்ஷகருமாகிறீர். உம்மைத் தவிர வேறு ரக்ஷகருமுளரோ?

நிகமத்ருமாணாம்—வேத வ்ருக்ஷங்களுக்கு வேதங்கள் அநந்தங்கள். அநந்த வேத வ்ருக்ஷங்களுக்கும் அநந்தனாகிய நீரே எல்லாமாவீர்.

கிம் நாம நாஸி—இன்னின்னது ஆவீர் என்று குறித்துப் பேசினால் எண்ணிக்கையிலடங்காது. ரக்ஷண ப்ரகாரங்களைக் குறிப்பிடப் பார்த்தது ஸாஹஸம். அந்த யத்நத்திலிருந்து கைவாங்கி 'எதுதான் ஆகமாட்டீர்'? என்று பேசிவிட்டால், ஒன்றுகூட எண்ணவேண்டிய ச்ரமமில்லை. 'ஸஹாவா-தேவ தேதா:'

மஹதாம் நிகமத்ருமாணாம்—மஹாமஹிமையுடைய வேத வ்ருக்ஷங்களுக்கு. மஹிமைக்கெல்லாம் மூலம் நீரே. மஹாநாராயணோபநிஷத்தையும் 'மஹதாம்' என்பதால் முக்யமாகக் கொள்ளவேணும். அடுத்த ச்லோகத்

தில் 'நாராயணே த்வயி கரீஶ' என்று இந்த பரத்வ நிர்ணய ப்ரகரணத்தை நிகமநம் செய்யப்போகிறார். 'ப்ருஹ்வே ஶாகேஷு மஹத்யா உப-நிஷதீயயா ச' என்று தத்வமுக்தாகலாபத்தில் பரத்வ நிர்ணயத்திற்கு முக்யமான ஆதாரமாக மஹோபநிஷத்தை ஸாதித்தார். 'மஹதீ உப நி-ஷத்' என்று அங்கே வ்யஸ்தமான (பிரித்த) ப்ரயோகம். இம்மஹா புருஷன் ஜகத்காரண மென்று உண்மையாக வெளியிட்டதால் அவ்வுபநிஷத்து மஹத்தாயிற்று.

ஸாமாந்யபுத்திஜநகாஶ்ச ஸதாதி ஶப்தா:
தத்த்வாந்தர ப்ரமக்ருதஶ்ச ஶிவாதி வாச: ।
நாராயணே த்வயி கரீஶ வஹந்த்யநந்ய
மந்வய வ்யுத்பத்தி பரிகல்பித மைககண்ட்யம் ॥ 15.

கரீஶ—ஆனைமலை யீசனே!, ஸாமாந்யபுத்திஜநகா: - பொதுவான (இன்னது தானென்று நிச்சயித்துக் கூறமுடியாத) பொருளைப் பற்றிய புத்தியை உண்டு பண்ணுவதான, ஸதாதிஶப்தாஶ்ச—ஸத் முதலிய சப்தங்களும், தத்த்வாந்தரப்ரமக்ருத:-(உண்மையில் காரணப் பொருளல்லாத) வேறு பொருளோவென்று ப்ரமத்தை உண்டுபண்ணக்கூடிய, ஶிவாதிவாசஶ்ச சிவன் முதலிய சப்தங்களும், நாராயணே த்வயி - நாராயணனாகிய உம்மிடத்தில், அந்வய வ்யுத்பத்தி பரிகல்பிதம்—சப்தத்தின் பொருளுக்கு முழுவதும் ஏற்பதால் ஏற்படும், ஐககண்ட்யம்—ஒரேவிதமான ஒற்றுமையை, (ஒன்றுக்கொன்று தாத்பர்ய பேத மில்லாமல் ஒரே காரணப் பொருளில் ஏகோபித்த தாத்பர்யத்தை); அநந்யம் - மற்றோரிடத்தில் தாத்பர்ய மில்லாமல், வஹந்தி - சுமக்கின்றன ; அறிவிக்கின்றன ; நிரம்பிய பாவத்தைச் சுமந்து நாயகனை நமக்கு அறிவிக்கின்றன : (சேர்க்கின்றன.)

அவ:—(1) வேதவாக்குகளைக்கொண்டு தத்வம் தெளியவேணும். ச்ருதிகள் ஜகத் காரணமான புருஷனுக்குத் தேவிமாரென்பர். நாயகன் நாமத்தை ஸாக்ஷாத்தாக உடனே சொல்லத் தேவிகள் வெட்கப்படுவர். பொதுவாக, அது இது அவர் இவரென்றும், பெயரைச் சொல்லாமல் குணங்கள் செய்கைகள் ஜாதி முதலியவற்றைச் சொல்லும் பொது சப்தங்களால் சொல்லுவர். இப்படிப் பேசுவதில் குணங்களைச் சொல்லும் சிவாதி சப்தங்களைக்கொண்டு வேறு வ்யக்தியைத் தங்கள் நாயகனென்று வேதம் படிப்பவர் பேச ஆரம்பிக்கவே, இதென்ன விபரீதமென்று, 'அவரல்ல அவரல்ல எங்கள் நாயகன், பிறரொருவருக்குப் பொதுவல்ல; இன்ன பெயருடையவன்' என்றுபேசுவர். அதுபோலவே ச்ருதிகளும் பொதுவாகப் பேசி, பிறகு யாதொரு ஸம்சயத்திற்கு மிடமில்லாமல் தங்கள் நாயகனு மவனுக்கே ப்ரஸித்தமான நாராயணன் என்னும் திருநாமத்தைச் சொல்லி 'அவனே மூல காரணம்; ப்ரஹ்மேசாநர்களல்ல; அவர்களுக்கும் அவன் தகப்பன் பாட்டனான காரண' மென்று ஸ்பஷ்டமாக (லஜ்ஜையை உதறிவிட்டுப்) பேசுகிறார்கள். பிள்ளையையும் பேரனையும் தங்கள் கணவனான காரணப் பொருளென்று பேசவே, வெட்கத்தை யுதறியெறிந்து, 'அல்ல அல்ல; எங்கள் நாயகன் நாராயணன்' என்று வாய் திறந்து மஹதா கண்டேந மஹோபநிஷத்தில் மஹாரஹஸ்யத்தைப் பேசுகிறார்கள். இப்படி ரஸமாகப் பொருள் கொள்ளும் மார்க்கத்தை 'உஶதீர் வாச:' என்று முன்பே இந்த ப்ரகரணத்தில் ஸூசித்தார். வேத வாக்தேவிகள் ச்ருதி ஸரஸ்வதிகள்; சதுர்முக ப்ரஹ்ம பத்நியான ஸரஸ்வதியல்ல. 'அந்த ஸரஸ்வதிக்கு அபாயமுண்டு; இந்த வேத ஸரஸ்வதிகளுக்கு அபாயமே கிடையாது' என்று காட்டுவதற்காக அங்கே 'வாச:' (வாக்தேவிகள்) என்று ஸாதித்து, அநபாய ரென்னும் விசேஷணத்தையும் ஸாதித்தார்.

(2) மஹத்தான வேதவ்ருக்ஷமென்று பேசியதும் மஹோபநிஷத்தில் காட்டின நாராயண திருநாமத்தைக் குறித்துக் காட்டிப் பரத்வ நிர்ணயத்தை இங்கே நிகமநம் செய்கிறார்.

(3) விஸ்தாரமாகப் பரதேவதா பாரமார்த்ய நிஷ்கர்ஷத்தை இவ்வரதராஜன் ஸ்தோத்ரத்தில் தான் காண்கிறோம். 'ஒன்றுந் தேவும்' திருவாய்மொழி பொலிந்து நின்ற பிரான் விஷயத்தில் அமைந்ததுபோல, இப்பெருமாள் ஸ்தோத்ரத்தில் பரத்வ நிர்ணயம் செய்யப்படுவதைக் கவனிக்கவேணும். பிறந்த கோவிலில் அபிமாநம் ந்யாயமே.

ஸதாதிஶப்தா:—ஸத் முதலிய சப்தங்கள். ஸத் என்னும் பொருள் ஜகத்துக்குக் காரணமென்று ஸத்வித்யை பேசுகிறது. ஸத் என்பது சேதநம் அசேதநம் எல்லாப் பொருளுக்கும் பொதுவான சப்தம். ஜடம் அஜடம் ஆகிய எல்லாப் பொருளுக்கும் பொதுவான ஒரு சப்தத்தைக்கொண்டு ச்ருதி தேவிகள் தம் நாயகனைக் குறிப்பிட்டதற்குப் பல காரணங்களுண்டு. ஜடத்தையும் சொல்லும் இந்த ஸத் சப்தம் எப்படி ஜடப் பொருள் ஜகத் காரணமென்று காட்டாதோ, அப்படியே அஸாதாரண ரூடியில்லாததும் ஜாதி குணம் க்ரியை முதலியவற்றை நிமித்தமாகக்கொண்டு ஒருவஸ்துவைப் பேசுவதுமான சப்தங்களைக் கொண்டு காரணப் பொருள் இன்னதென்று தீர்மானிக்க முடியாதென்று நமக்குக் காட்டுவது ஒரு கருத்து. தம் நாய எப்பொழுதும் பரமாத்மாவானதால், அவன் ஜடம் அஜடமாகிய எல்லாப் பொருளுமாவான் என்று வஸ்து பரிச்சேத மில்லாதவனென்று காட்டுவதிலும் நோக்கம். வேத சப்தங்கள் எல்லாப் பொருள்களுக்கும் வாசகமாகி, 'அவற்றோடு ஒட்டியிருக்கும் இன்ன வஸ்துவைத்தான் வேதவாக்குகள்

சொல்லும், இன்னதைத் தழுவாது' என்கிற வஸ்து பரிச்சேதம் வேத வாக்யங்களுக்கு இல்லை. வாச்யத்திற்கும் வாசகத்திற்கும் ஒருவிதமான அபேதமும் சொல்லுவதுண்டு. வேதங்கள் அநந்தம். தங்களைப்போல் தங்கள் நாயகனும் ஸர்வாத்மகன் அநந்தன் என்று காட்டுவதிலும் கருத்து. ஸதாத்மக மல்லாத பொருள் அஸத் என்பது எப்படி ஸ்பஷ்டமோ, அப்படி ப்ரஹ்மாத்மக மல்லாத பொருள் என்று தெளிவாகக் காட்டுவதிலும் நோக்கு. சூந்யத்திலிருந்து (அஸத்திலிருந்து) ஜகத் உண்டாவதாகப் புக்தி மாத்ர சரணரான சிலர் பேசுவதைத் தள்ளுவதற்காகவும் காரணம் ஸத்தே என்று பேசினர். ஸத் முதலிய என்பதில் முதலிய என்பதற்கு ப்ரஹ்மம் ஆத்மா முதலிய சப்தங்களைக் கொள்ளவேணும். ப்ரஹ்ம சப்தம் முக்யமாக நிருபாதிகமாக ப்ரஹ்மத்தைச் சொல்லுவதே யாயினும், ஜீவன் விஷயத்திலும் ப்ரக்ருதி விஷயத்திலும் ஓரோர் பெருமையைக்கொண்டு ப்ரயோகிப்பது உண்டு. அப்படி ஆத்ம சப்தத்தையும் ஜீவாத்மா விஷயத்திலும் ப்ரயோகிப்பதுண்டு.

ஸாமாந்யவாசிஜநகாஶ்ச—பொதுவாய்ப் பல பொருள்களைப் பற்றி அறிவை உத்பத்தி செய்யக்கூடியவை. அங்கே ஜநக சப்தத்தில் ஓர் ஸ்வாரஸ்ய முண்டு. ஜகத்துக்கு ஜநகமான பொருள் யாதென்ற விசேஷ ஜ்ஞாநத்தை ஜநிப்பிக்க ஸமர்த்தமல்ல. ஸம்சயத்திற்கு ஜநகமான காரண வாக்யம், காரண விசேஷ நிச்சய ஜநகமான காரண வாக்யமல்ல. காரண வாக்யம் ஜகஜ்ஜநக பாக்ய வாக்யம். ச - என்பதற்கு து என்றும், ஸமுச்சயம் என்றும் பொருள் கொள்ளலாம். ஸத் முதலிய சப்தங்களோ வென்றால்ஸத் முதலிய சப்தங்களும்.

தத்வாசகாஶ் ச்ருதயஶ் ஶிவாதிவாசஃ—ஸத் முதலிய சப்தங்கள் ஜடந்தான் என்கிற விபரீத புத்தியை உண்டாக்க வில்லை. ஸத் என்று பொதுவாகப் பேசினதற்கு, எப்படி தங்கள் நாயகனுடைய ஸர்வ சரீரத்தைக் காட்டுவதில் நோக்கோ, அப்படியே சிவாதி சப்தங்களைக் காரண வாக்யங்களில் ப்ரயோகித்ததற்குச் சிவாதி சரீரகத்வத்தைக் காட்டுவதிலும் நோக்குண்டு. மங்களத்வ குணத்தை முன்னிட்ட சிவ சம்பு சங்கர சப்தங்கள் நிருபாதிகமாக அநந்யாதீநமாக ஸம்பூர்ணமாக அந்தக் குணம் நிரதிசயமாய்த் தம் நாயகனை நாராயணனுக்கே யுளதென்று காட்டுவதிலும் நோக்குண்டு. அந்வர்த்தமாக (உண்மையாக) அந்தக் குணவாசி சப்தங்கள் பெருமாளிடமே பொருந்து மென்று காட்டுவதிலும் நோக்கு. நாராயணநுவாகத்தில் 'விஶ்வஶம்பவம், ஶாஶ்வதம்ஶிவம்' என்று மங்களகரத்வ வாசியான ஶம்புஶிவஶப்த வாசியான சம்பு சிவ சப்தங்கள் பெருமாளிடமே நிரவதிகமாகவும் நிருபாதிகமாகவும் ஸ்வதந்த்ரமாகவும் உள்ள குண பௌஷ்

கல்யத்தைப் பேசுகின்றனவென்று ஸர்வார்த்தஸித்தியில் காட்டியருளினார். 'ஶாஶ்வதம்ஶிவமச்யுதம்' என்று அச்யுதனை சாச்வத சிவராகப் பேசிற்று. 'ஶம்பூஃ' என்று முன் பேசியதிலும் ஒரு தாத்பர்யமுண்டு. வேத சப்தங்களைக் கொண்டும், வேத சப்தங்களைச் சொல்லிக்கொண்டும் ஸ்ருஷ்டி யேற்பட்டதென்பர். 'வேதஶப்தேப்ய ஏவாதௌ' 'ஶம்பூ இதி வேநாதஃ ப்ரஹ்வாஸ ப்ரத்யக்ஷாநாம் ஶாநாஸ்யம்' என்றும் ப்ரமாணங்களை ஸ்மாரணம் செய்கிறார். ப்ரளயத்திலும் பிராட்டி கூட இருந்ததுபோல் ச்ருதி தேவிமாரும் கூட இருந்தவர்கள். ஸ்ருஷ்டி வ்யாபாரத்தில் அவர்களுக்குக்கூட அந்வயமுண்டு. கூட இருந்து நேரில் பார்த்த ஸாக்ஷிகள் அவர்கள். இந்த ப்ரத்யக்ஷ ஸாக்ஷிகளை ப்ரத்யக்ஷமென்றே ஸூத்ரகாரர் அழகாக அழைப்பது; கேள்விப்பட்ட ஸாக்ஷியல்ல; நேர் ஸாக்ஷிகள். 'பஶ்யந்தீஷ ஶ்ருதிஷ'.

நாராயணே த்வயி—நாராயணன் என்னும் திருநாமம் பெருமாளோடு வருவதற்கே உரியது. அது குணவாசியான யோக சப்தமல்ல. மஹோபநிஷத்தில் 'நாராயணன் ஒருவனே யிருந்தான். அப்பொழுது ப்ரஹ்மாவுமில்லை; ஈச்வரனுமில்லை; த்யாவா ப்ருதிவிகளுமில்லை' என்று ஸந்தேஹமில்லாத வாக்யத்தைக் கொண்டு பொதுவான ஸதாதி சப்தங்களையும் ஜாதி குண க்ரியோபாதியான சிவாதி சப்தங்களையும் அவனிடம் ஓட்டி அவனே காரணமென்று நிர்ணயிக்கப்பட்டது. தத்வமுக்தாகலாபத்தில்,

> "நிஷ்காரணோ நாராயண பவவிஷயே நிஶ்சயம் யாஜ்ஞவல்க்யே
> ஸ்ரஷ்டாரோ ஸஹ ப்ரஹ்மகரணபதிதாஃ ஶம்கிதாந்யாயஶப்தாஃ ।
> ஏகோ ஹ வை நாராயண இதி கதிதஃ காரணம் வாசகாத்வைஃ
> த்ருஷ்டாதேவ்யே கக்ஷ்யம் பவதி நிரவயிஷ்டஶம்ஶ்வாதிஶப்தஃ ॥"

என்கிற ச்லோகத்திலுள்ள சப்தங்களையும் யுக்திகளையுங் கொண்டு இந்த ச்லோகம் அமைந்துள்ளது.

கரீஶ!—ஆதிமூல வஸ்து வென்று ஆனை கூப்பிட்டதற்கு, 'நாராயணன் என்னும் பொருள் நான்தான்' என்று எழுந்தருளியது. அங்கும் பெருமாள் எழுந்தருளியபொழுது, தாமரையோடு கூடிய துதிக்கையைத் தூக்கி, 'நாராயணாகிலகுரோ பகவந்நமஸ்தே' என்று மூன்று சப்தங்களைக் கொண்டு கூப்பிட்டு நமஸ்கரித்தது. அதிலும் முதலில் நாராயண சப்தம்; நாராயண சப்தத்தைப் புரோவாதமாக முதலில் அதிசதுரமாகக் குறித்தது, பிறகு நீயே அகில காரணமான அகிலகுரு வென்றது. அதற்குப் பிறகு ஷாட்குண்ய பூர்த்தியைச் சொல்லும் பக சப்தத்தை உபயோகித்தது.

கஜேந்த்ராழ்வானின் சாதுர்யம், 'நாராயணன் முழுவேழுலகுக்கு நாதன்' என்று நம்மாழ்வார் அருளிச்செயலை அநுஸரித்தது. இங்கே உதாஹரித்த தத்வமுக்தாகலாப ச்லோக வ்யாக்யாநத்தில் 'ஸாரோவாதேவ-நாராயணத்வ நிர்ணயே' என்று நாராயணத்வ நிச்சயம் புரோவாதத்தில் (முதலிலேயே) உள்ளதாக ஸாதித்தார். முதலிலேயே இன்னாரென்று ஸம்சயத்திற் கிடமில்லாமலேயே குறிப்பிட்டுப் பேசுவதில் நோக்கு.

ஸஹந்தி—ஒரே தாத்பர்யத்தை (ஏக கண்டத்வத்தை) ஸஹிக்கின்றார்கள். பதிவ்ரதைகளான தேவிமார் பதியினிடம் ஹாவத்தைக் கனக்கச் சுமக்கின்றார்கள். 'ஸஹப்ராபணே'—நம்மை அடையச் செய்கிறார்கள்; நமக்கு அறிவிக்கிறார்கள்.

அநந்யம்—மற்றொருவரை நோக்கார்.

அநவதி வ்ருத்தி வரிவஸ்யிதம்—சப்தத்திற்கு அதனால் சொல்லப்படும் குணம் க்ரியை முதலியவை எங்கே நிரவதியாயிருக்குமோ, எங்கே ஸ்வதந்த்ரமாக அநந்யாபேக்ஷமாக இருக்குமோ, அந்தப் பொருளைத்தான் பூர்ணமான ஆசையோடு தழுவும். ஸத் என்பது நிருபாதிகமான ஸ்வதந்த்ரமான ஸார்வத்ரிகமான ஸார்வகாலிகமான ஸர்வப்ரகாரமான ஸத்வத்தைச் சொன்னால்தான் அந்த சப்தத்திற்குப் பூர்ண ஸந்தோஷமிருக்கும். அதன் சக்தியைக் குறைத்து அதை ஒடித்தால் சப்தம் ஒருபோது மூளியாகும். அர்த்தத்தைக் குறைத்தால் முழுப்பேச்சும் பேசாமல், அந்த சப்தத்தின் தொண்டையைப் பிடிப்பதாகும். பேசுவதையே வ்யாபாரமாகவுடைய சப்த தேவிகளின் மிடற்றைப் பிடித்து அரை குறைப்பேச்சாக்கினால் வாக் தேவிகள் த்ருப்தியடைவரோ? அவர்கள் நெஞ்சு ஒடியும். 'வசோமாக்ஷணிகம்-ஊமநிः'. என்பர் பெரியோர். ஔபசாரிகமான பொருளைச் சொல்லுகையில் ப்ரயோகித்த பதம் பேசாத ஊமை யென்பர். எப்பொருளைப் பேசச் சக்தியுண்டோ அப்பொருளைப் பேசாததால் ஊமை (ஊமநி) மௌநமுடையது. நாராயணனிடத்தில் 'நிரவதிகாவயவாய ... தத்ர ப்ரவ்ருத்தி ... வைஷ்ணவா' என்று ஸர்வார்த்தஸித்தி பதத்திற்கு உண்மையான பொருள். ஸிதமானஸம்பூர்ணப்பொருள்தான் அதற்கு உண்மையான அஸங்கு வாக்யப் பொருள்கள் உள்ளதுபோல அதற்கு வாசகமு மிருந்தால் முழு வர்த்தமென்று சொல்லலாம். எப்பொருளும் ப்ரஹ்மாத்மாக விருப்பதால் அந் எந்த சப்தமும் பரம சரீரியான ப்ரஹ்ம பர்யந்தம் பேசினால்தான் அந்வர்த்தமாகும். இல்லாவிடில் அரை குறையே. உள்ளபடி (அந்வர்த்தம்) அல்லாமல் அயதார்த்தமேயாம்.

வைகண்ட்யம்—தேவிமார் அநந்தர்கள். இத்தனை தேவிகளுக்கும் ஒரே கழுத்து (கண்டம்). சரீரமேயில்லாத தேவிகள் அநந்தராயிருந்தும் கண்டமொன்றெனலாம். எல்லாரும் ஒரு குரலால் ஏகமதியாய்ப் பேசுகிறார்கள். ஸபத்நிகளாயிருந்து வேறு வேறாய்ப் பேசாமல் ஏககண்டமாய்ப் பேசுகிறார்கள். அந்யனுடைய தேவிகளென்றால் உடனே எல்லாரு மொருமிக்க நாயகன் இன்னாரென்று பேசாரோ?

ஸ்ரீ:

மநுஷ்ய சரீரமும் சாரீரக சாஸ்த்ரமும்

[ஸ்ரீ. உப. வி. வீ. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்]

சாரீரக சாஸ்த்ரம் என்பது அஸாதாரணமாய் நம்முடைய விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கு இடப்பட்ட பெயர். எல்லாம் ப்ரஹ்மமென்றும், ப்ரஹ்மம் தவிர வேறொன்றில்லை யென்றும், பலவிதமாகக் கோஷிக்கும் ச்ருதிகளுக்கும், 'ஆத்மா வேறு, பரமாத்மா வேறு, ப்ரக்ருதி வேறு' என்று பேதத்தை முக்யமாகக் கொண்டாடும் ச்ருதிகளுக்கும், ஸ்ருஷ்டியில் உள்ள எல்லாப் பூதங்களிலும் ப்ரஹ்மம் அநுப்ரவேசித்து அவை அவைகளைத் தரித்துக்கொண்டிருக்கிறதென்று ஸித்தாந்தஞ் செய்யும் ச்ருதிகளுக்கும் ஸமந்வயப்படுத்தி ஐககண்ட்ய சாஸ்த்ர ரீதியாய்ச் செய்தருளினது ஸ்ரீ பகவத் ராமாநுஜன். இவ்விதமான அர்த்தங்களும் அர்த்த புஷ்டிகளும் ப்ரபந்நஜந கூடஸ்தரான ஆழ்வார்கள் முதல் அநேகரால் வ்யக்தமாய்த் தெரிவிக்கப்பட்டிருந்தும், ஸ்ரீ பகவத் ராமாநுஜனாலேயே அது ஒரு சாஸ்த்ர ரீதியில் ஸித்தாந்தமாய் ஸ்தாபிக்கப்பட்டது.

ச்ருதி முழுவதும் நமக்கு ப்ரமாணமாக ஏற்பட்டிருக்க, அதில் சில வாக்யங்களை அப்ரமாண மென்றும் வ்யாவஹாரிகமென்றும் தள்ளிவிடுவது தத்வத்திற்கும் தர்க்கத்திற்கும் ஒப்புக்கொள்ளப்படாதது. அபேத ச்ருதிகளுக்கும் பேதச்ருதிகளுக்கும் ஸமந்வய ரூபமாய் ஐககண்ட்யம் பண்ணி, ச்ருதி ப்ராமாண்யம் ஒரு பக்கலிலும் வேதாந்த சாஸ்த்ரத்தின் க்ராஹ்யமும் பெருமையும் மற்றொரு பக்கலிலும் நிர்த்தாரணம் செய்யப்பட்டது.

ஸ்ரீ பகவத் ராமானுஜனுடைய திவ்யநாமாவினால் நிர்த்தேசிக்கப்பட்டிருக்கிற தர்சநத்தினாலேதான்.

இந்தத் தர்சநத்திற்குத்தான் சாரீரக சாஸ்த்ர மென்னும் பெயர் அநந்ய ஸாதாரணமாய் அமைந்துள்ளது. அதெப்படி யெனில்: பகவத் ஸ்ருஷ்டியில் இந்தப் பூலோகத்தில் நமக்குத் தெரிந்தவரையில் ஒன்று இரண்டாகவும் இரண்டு ஒன்றாகவும் அழகாய் அமைந்துள்ளது மநுஷ்ய சரீரமே. இதைக் கொண்டே உதாஹரண ரூபமாயும் உபமாந ரூபமாயும் ஆத்ம பரமாத்ம பேதாபேத தத்வ நிர்ணயம் செய்த விசிஷ்டாத்வைத சாஸ்த்ரத்திற்குச் சாரீரக சாஸ்த்ரமென்று பெயரிடப்பட்டது. தேஹமும் ஆத்மாவும் கூடியதற்குத்தான் மநுஷ்யன் என்று பெயர். மநுஷ்யன் ஒருவன்தான் தேஹத்தை வேறாகவும் ஆத்மாவை வேறாகவும் சொல்லக் கூடும். ஆனால் தேஹ மில்லாவிட்டால் மநுஷ்ய னில்லை. அவ்விதமே ஆத்மா போய் விடுமானால் மநுஷ்யனில்லை. தேஹம் ப்ரேதமாய் விடுகிறது. ஆதலால் மநுஷ்யனை ஒன்றாயும் இரண்டாயும், இரண்டு சேர்ந்த ஒன்றாயும். ஒன்றான இரண்டாயும், இப்படியெல்லாம் பலவிதமாய் விவரிக்கக் கூடும், இவ்விதமாய் ஏற்படும் ஸம்பந்தத்தையே தமிழில் 'இன்றியமையாதது' என்னும் பதத்தினாலும், ஸம்ஸ்க்ருதத்தில் 'அவிநாபாவம்' என்கிற பதத்தினாலும் குறிக்கிறார்கள்.

மநுஷ்யன் விஷயத்தில் சரீரமும் ஆத்மாவும் அடைந்திருக்கும் ஸம்பந்தத்தையே கொண்டு, நம்முடைய ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கு முள்ள ஸம்பந்தத்தை நிரூபித்திருக்கிறார்கள். அதாவது: எப்படி தேஹத்திற்கு ஜீவாத்மாவோ அவ்விதமே ஆத்மாவிற்குப் பரமாத்மா வென்றும், ஆத்மா தேஹமாயும் அதற்கு ஜீவாதாரமான ஆத்மா பரமாத்மாவாயும் வ்யவஹரிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் உதாஹரணமாயும் உபமாநமாயும் நிர்த்தேசிக்கப்பட்ட ஸம்பந்தமாகிற தத்வத்திற்கு அவ்வுபமாநத்தைக் கொண்டே சாரீரக சாஸ்த்ரமென்று பெயர் ஏற்பட்டு வழங்கி வருகிறது.

இப்பொழுது இந்த உபமாந நாமாவினால் நாம் அறியக்கூடிய சில தத்வங்களையும் ரஹஸ்யங்களையும் விசாரிப்போம். நம்முடைய ஆத்மாவானது எண்ணிறந்த பூர்வ ஜந்மங்களில் புழு பக்ஷி பசு முதலான ஜீவ

கோடிகளில் பிறந்து, பிறகு அநேக புண்ய கர்மாக்களின் பலனாக மநுஷ்ய ஜாதியில் மநுஷ்ய தேஹத்துடன் பிறக்கிறதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதனாலேயே இந்த மநுஷ்ய தேஹமானது அநேக விலையுயர்ந்த புண்யங்களாகிற வாணிஜ்யங்களைக் கொண்டு விலைக்கு வாங்கப்பட்டதாகவும் அழகான உதாஹரண ரூபமாய்த் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படிச் சொல்லியிருப்பதில் ஏதேனும் தத்வம் உளதாயின், அவ்வளவு உயர்ந்த விலைக்கு வாங்கப்பட்டிருக்கும் மநுஷ்ய தேஹத்தை நாம் எவ்வளவு அருமையாயும் ஜாக்ரதையோடும் கொண்டாடிப் போஷித்துப் பரிபாலிக்க வேண்டும்? அது அப்படியிருக்க, மற்றொருபால் மநுஷ்ய தேஹம் துச்சமென்றும், அது மல மூத்ராதிகள் நிரம்பியதென்றும், எலும்பு நரம்பு இரத்தம் மாம்ஸம் முதலியவற்றால் ஆனதென்றும், ஜுகுப்ஸித மென்றும், இப்படியெல்லாம் பலவிதமாய் ஹேயமாக எழுதியும் சொல்லியும் இருக்கிறார்கள். இப்படி முற்றும் விரோதமான இரண்டு அபிப்ராயங்களும் சரியாகமாட்டாதாகையால், இவ்விரண்டில் ஒன்றுதான் தத்வமா? அப்படியானால் எந்த அபிப்ராயம் ஸரி? அல்லது இவ்விரண்டபிப்ராயங்களையும் ஸமந்வயப்படுத்திப் பொதுவாயிருக்கிற தத்வத்தைக் கண்டறியக்கூடுமா என்று விசாரிப்பது அத்யாவச்யகமாகும். இவ்விரண்டு அபிப்ராயங்களிலும் கூட அநேக நிஜமான தத்வங்களுண்டு. இந்த மநுஷ்ய ஜந்மமானது நமக்குப் பகவதநுக்ரஹத்தால் கிடைத்ததென்றாலும், அல்லது பூர்வ கர்மாக்களின் பலனாகக் கிடைத்ததென்றாலும், முக்யமாய் எவ்விதத்திலும் இதனால் கிடைத்திருக்கும் தருவாயும் அவகாசமுமான ஜீவகாலமானது மிகவும் போற்றத்தக்கதென்பதில் சிறிதும் ஸந்தேஹமில்லை. ஆனாலோ அதுபற்றி இந்தத் தேஹத்தையே ப்ரதாநமாக எண்ணி, அதைப் போஷித்து வளர்ப்பதையே புருஷார்த்தமாகக் கொண்டு, அதனுடைய ஸுக துக்கங்களையே நிஜமான ஸுக துக்கங்களாக ப்ரமித்து நாம் நடந்தாலோ, அதைவிட பசுப்ராயமான ஹீநஸ்திதி வேறில்லை யென்றே நிச்சயமாகச் சொல்லாம். இவ்வித இரண்டு சுத்த விரோதமான அபிப்ராயங்களை ஸமந்வயப்படுத்துங்காலத்தில், நமக்குக் கிடைக்கக்கூடிய தத்வந்தான் முக்யமாய்ப் போற்றத்தக்கது. அதாவது: ஒவ்வொரு மதத்திலும் நம்முடைய ஜீவாத்மாவுக்கு ஒரு புருஷார்த்தம் உண்டென்று ஏற்பட்டிருக்கிறதல்லவா? அவ்வித புருஷார்த்தங்கள் ஒவ்வொரு மதத்திலும் பேதப்பட்டிருப்பினும், அவைகளிலெல்லாம் முக்யமாகப் பொதுவாய்ப் பகவானை

அடைவதென்பது பரம புருஷார்த்தமாகக் கருதப்பட்டிருக்கிறது. அதைத்தான் நம்மவர்களும் ஸாரூப்யம் ஸாலோக்யம் ஸாயுஜ்யம் முதலான பதங்களால் வர்ணித்திருக்கிறார்கள். அவ்வித புருஷார்த்தத்தை மநுஷ்யன் அடையவேண்டுமானால், ஒருவன் இந்த மநுஷ்ய ஜந்மாவில் இந்த மநுஷ்ய தேகத்தைப் பெற்று, அதையே கொண்டு புருஷார்த்தத்தைப் பெறவேண்டியவனாயிருக்கிறான். அதைச் சில உதாஹரணங்களால் விவரிக் கூடும். ஒரு கார்யத்தைச் செய்து முடிப்பதற்கு அளிக்கப்பட்ட கருவியாகக் கருதலாம். ஸம்ஸார மென்னும் ஸாகரத்தைத் தாண்டி அக்கரை சேர உபகரிக்கப்பட்ட படகாகச் சொல்லலாம். அல்லது நாம் போய்ச் சேரவேண்டிய இடத்திற்குக் கூடிய சீக்ரத்தில் விரைவாய்ப் போய்ச் சேருவதற்காக அளிக்கப்பட்ட ஒரு பந்தயக் குதிரையாகச் சொல்லலாம். அல்லது நாம் சரிவரப் பயிரிட்டு ஜீவநோபாயத்திற்குரிய பலன் அடையுமாறு நமக்குக் குடிக்கூலிக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பயிர் நிலமாகச் சொல்லாம். இன்னும் பலவிதமாக வ்யவஹரிக்கவும் கூடும். ஆதலால் நாம் இந்த மநுஷ்ய சரீரத்தை உத்தமமான பலனாகவாவது கேவலம் துச்சமாகவாவது கருதி நடத்துவது புத்தியீனம். நமது ஸித்தாந்தத்தினுடைய தத்வத்திற்கிணங்க, மநுஷ்யர்களாகிய நாம், நமது சரீரத்தைச் சரிவர உபயோகித்து, அதைக் கொண்டே மேலான தசையை அடைவதற்காக அநுக்ரஹிக்கப்பட்ட ஓர் உபகரணமாகவாவது உபாயமாகவாவது கொள்ளவேண்டும். அவ்வாறு கொள்வதே ஜ்ஞாதாக்களுடைய மநோபாவமும் க்ருத்யமுமாகும்.

அங்குநறு பரியுடிதம் போச்சியமென் றைய
சங்கையற வுணர்ந்தவர்கள் சாற்றுவதின் முன்னா
டங்கியச லத்தசனந் தக்கதென வின்றே
யெங்கருநெ றிக்கியைய மென்றுசில ரோத. 108

உம்பருமு வந்துதொழு மோகமுனி யாபத்
தம்பதரு மத்தரிய தன்மையுண ராதார்
வம்புரைவ ழங்கிவின வன்மறையு ணர்ந்த
நம்பெரிய நல்வழியை யென்புரியு மென்றார். 109

இத்தகையி னத்தகைய ரொழுகுதலு மிந்த
வித்தகமெ லாமவரின் வீழரிய மாமன்
சித்தமுற நன்குசெவி யுற்றுமகிழ் செறியா
வத்தகைந மக்கிலதென் றெண்ணலுமிஃ தானார். 110

ஓர்குடியின் றன்புதல்வ னொருவனுள னாகி
னோர்பெறுமீ ரைந்துதலை நேர்ந்திடினோர் கன்னி
யேர் பெறுமீ ரைம்பதென வின்னறமு ணர்ந்தோ
ரார்கலியி னுடையவ னிக்கனுரை செய்வார். 111

ஆகையினெம் பெண்மணியி னத்திருவ டைந்தே
நாகமுந மக்குநிக ரன்றெனம கிழ்ந்தே
யேகிமரு கன்மனையி ரும்புகழ்ப டைத்த
வாகறிவி னுய்யமுனங் கொண்டவரை யண்டி. 112

ஐயவுண ராதுனத ருந்திறலி ழைத்த
வெய்யபிழை யுண்டதுபொ றுத்தருள்க வேதந்
துய்யவறி வாளரகந் தோன்றிடுவ தென்றும்
பொய்யெனவு ஞானியபு கன்றிடுவ ரன்றோ. 113

என்னவவ ராச்சிகளி னின்னடிவ ணங்கி
நின்னருளி னாரிய நேர்மைபெரு குற்றேன்
முன்னவவெ னக்கரைய மூதறிவி னன்னார்
மன்னியொரு மைப்படம கிழ்ந்துளமி ருந்தார். 114

வேறு

சிலபக லிவ்வணஞ் செறிய யோகியுங்
குலவுறு குருகையங் காவ லப்பனுக்
கிலகுறு யோகசாத் திரத்தை யேன்றதி
னலமுற நவின்றுபி னடத்திக் காட்டியே. 115

மற்றுயக் கொண்டவர் முதல மாதவர்க்
குற்றநற் றமிழ்மறை யோதி யெங்கணும்
பொற்றவே தாந்தமே பொலிய வாற்றுமா
றிற்றிதென் றெழிலுற விசைத்து மற்றரோ. 116

நந்திருக் குமரனுக் கரிய நன்மக
வுய்ந்திட வுதித்திடு மவற்கு நாமமுஞ்
சுந்தர யமுனையின் றுறைவ னென்றளித்
தந்தமார் மறைரக சியங்கள் யாவையும். 117

புண்டரீ காக்கரே புகட்டற் பாலரா
மண்டரு மறிவுறு யோகத் தற்றினைக்
கண்டருங் குருகையங் காவ லப்பனே
கொண்டிடக் குறிப்பறிந் துரைத்து கென்றரோ. 118

உரைத்தருள் புரிந்துபின் யோகத் தார்ந்தனர்
தரைத்தலை தரிசனுர்த் தங்கள் யாவையு
நிரப்பினர் நிகரறு முய்யக் கொண்டவ
ரிருக்கையி னிகழ்ந்தவி யம்பு வாமரோ. 119

சேட்டலூர் செண்டலங் காரத் தாசருந்
தீட்டருந் திகழ்புகழ் மணக்கா னம்பியுங்
கூட்டறுங் கொமடவிண் ணகரத் தப்பனுங்
காட்டரும் புண்டரீ காக்க தாசரும். 120

அல்லியங் கேணியி னமர்ந்து வாழ்தருஞ்
சொல்லுறும் பாண்பெரு மாள ரையரு
நல்லுல கப்பெரு மாணங் கையொடு
மெல்லுறு மிவரெலா மிணைந்தங் காங்கரோ. 121

அவ்வுயக் கொண்டன ரடிம ணந்தனர்
திவ்விய ஞானமே தெருண்ட டைந்துற
வொவ்வறு முவர்களின் மணக்கா னம்பியே
கவ்வையின் றீரறு வருட காலமே. 122

பணிவிடை புரிந்தனர் படரும் போழ்தினின்
மணியெனு மாரியர் மனைவி துஞ்சவே
யணிபெறு மனைப்பணி யதுவு மாற்றுருக்
கணிலிமை யெனநிதங் காத்து வந்தனர். 123

நிகழ்கையி லிவ்வண நிலவு மோர்பக
லுகவொடு மோதன வகைகள் காவிரி
யகமுண வந்நகர்க் கன்னிமா ரெலாஞ்
சிகிகளின் குலமெனத் திரண்டு சென்றனர். 124

தங்குரு புதல்விய ரிருவர் தங்களை
யங்கவ ருடன்கொடு படர வாற்றினைச்
செங்கயல் புரைவிழிச் சிறுமி யார்களும்
பொங்கிய மனத்தராய்ப் புசித்து மீள்கையில். 125

சென்னெறி தவறியே யோர்கா லவ்வழி
தன்னிலா ழமுகிய வன்று தாண்டுதற்
குன்னியே திகைத்தவ ணுறுதல் கண்டிவர்
வென்னிடைப் படர்கெனக் கவிழ வீழ்ந்ததில். 126

சிறுமிய ரகன்றதுங் குளிக்கச் சென்றனர்
நறுநுத னங்கைமார் நடந்த செய்தியைக்
குறுகினர் தந்தைபா லுவந்து கூறினர்
பிறகுசென் னம்பியு மீண்டு பெட்புடன். 127

ஆரிய ரடிகளி லங்க மெட்டுடன்
பார்மிடைப் படிதாப் பணியுங் காலவர்
சீருறுந் தமத்தாள் சீடன் சென்னிமே
ரேர்பெற வமைத்தன ரிதுமொ ழிந்தனர். 128

குரவரி னுயர்ந்திடுங் குரவன் யானெனச்
சிரமிசைக் கரமெடுத் தெழுந்துஞ் செப்புவேன்
புரையறும் புகழுறுந் தொண்ட ருகவே
வரைநிகர் குணத்தநீ வாய்ந்த தன்மையால். 129

இதுவெனக் கெனகுரு வுவந்து முன்னருள்
கதிதரும் வெகுமதி களங்க மற்றதா
மதுநினக் கற்பினீங் களித்தேன் காணென
மதுவழி யருள்சிறக் கணிப்பு மாடினர். 130

நம்பியு நனிமகிழ் தைய நாடொறு
நம்பணி யிழைத்துநந் நோன்மை யார்பத
வம்புய மடைந்தன னரிய பேறிதற்
கிம்பரு மும்பரு மியைவ தெங்ஙனே. 131

உபயவே தங்களுக் குறையு ளாயெனக்
கபயதா னம்புரிந் தளித்த வையனே
விபவமெற் கிதுவென வளம்ப வாரியர்
சுபமுனக் கெனவருள் சுரந்து வந்தனர். 132

ஆளவந்தார் வைபவம்

21-வது சருக்கம்

கண்ணுவுயர் குருவின்றிருக் கருணைதனை மணந்தே
னெண்ணுவுன தடிநாண்மல ரிகவாதென்று மிருந்து
நண்ணுநெறி யடியேன்மன நாடாநடு நடுங்கப்
பண்ணுவருள் புரிவாயிது பண்பேகின தெழிற்கே. 1

பின்னையுயக் கொண்டாரெழில் பெருகுந்திரு வரங்கந்
தன்னைமணந் துறைபோழ்தினிற் றமதாரிய மணியா
முன்னையுணர் முனிநாதரு மொழியும்பணி புரியற்
கென்னைபடைத் திலனேயென விதயந்தளர் வெய்தி. 2

குமுதாக்களி னஞ்சந்தனிற் குதலத்தெழுந் தொளிரு
மமுதேயெனு மணக்காநம்பி தமையண்டையி னழையா
எமதாரியர் பணியாற்றிடற் கின்றேமுது மையினே
யுமதாடலி னதுநேர்பெற வுனிணுமென லோடும். 3

திருநம்பியு மவர்தாடொழு தெனையாண்டரு டேவே
யொருநாதமு னிகள்போனுக் யடியேன்வழி யுளுற்றும்
பெருநன்மைகள் பெருகுந்நும தருநன்மைக ளலவோ
வருள்கொண்டடீ தடியேற்கருள் கென்றங்கரங் குவித்தான். 4

கோளாரவ ரதுகொண்டுளங் குளிர்கொண்டுறை தந்தார்
வாளாரறி வினர்நம்பியும் வனமாலியின் விறலைத்
தாளானனி தரணித்தலை முழுதுந்தயங் குறவே
கேளாவனை வருமுய்ந்திடக் கிளந்தேகிளர்ந் தனரால். 5

பின்னேரெழி லாடித்திங்கள் பெருகுத்திரா டத்திற்
கொன்னுருமீச் சுரமாமுனி குளிரும்வகை யொருசேய்
மன்னேயுதித் தொளிர்கின்றனன் மணக்காநம்பி முனியே
யென்னுவொரு திருவைணவ ரெழுந்தன்னவர்க் கிசைத்தார். 6

சுருதிக்கிடை சுருதிக்கிணை யெனுமம்மொழி யுறனு
மருகிக்குழ வியினையணி னத்தங்கொடு சாத
கருமத்தொடு நனியாவையுங் கருதிப்புரி வித்தே
மருவுற்றிடு மெழுனைத்துறை வன்னென்பெயர் வைத்தார். 7

அந்தத்திரு மகனைந்தரு வடியின்முளைத் தோங்குஞ்
சந்தச்சிறு குழவிக்கிணை சார்ந்தேவளர் தானும்
பிந்தித்தரும் வயதின்மறை பயிலும்படி பெற்றோர்
தந்துப்புனை தருகன்மமுந் தகவிற்புனை தரவே. 8

மகியுய்ந்திட வுதிதந்திடு மணக்காநம்பி மற்று
மகியிந்திர னெனநுண்ணிய வறிவப்புதல் வற்கு
நகுசங்கொடு திகிரிப்பொறி யிருதோளினு நாட்டி
மிகுமந்திர ராசந்தனை மேவச்செவி சேர்த்தார். 9

வேறு

பின்னங் ககலச் சிலவைகல் பெருகு யோகந்
தன்னின் னெழுந்த முனிநாதருந் தம்புதல்வன்
மன்னும் மகனை மகிழ்கொண்டு சிறக்கணித்தே
மின்னுங் குரவன் மிளிர்சேயு மவன்றன் சேயும். 10

தாங்கற்ற கல்விகளை யீந்திடத் தக்கா ரென்றும்
பாங்குற்ற ஞானத் துயர்ந்தோர்களும் பண்பினென்றற
காங்கொற்ற வாசிரிய ராகுவ ரென்று மெல்லா
மோங்குற்ற நீதிநெறி தன்னி னுரைத் தொளிர்ந்தார். 11

ஆங்குற்ற காலை யொருவைகறை யாட நன்னீர்
வாங்குற்ற தீரத் தடமேகி மனைக்கு மீளப்
பாங்குற்ற தம்பொற் பதுமைக்கிணை பாவைமார்க
ளோங்குற்ற தாதையுயர் பொற்பதம் போற்றிநின்றே. 12

அம்பொற் கரத்தி னமர்வில்லுட னுட னண்ணும்
வம்புற்ற குஞ்சி யிருவில்லியர் வல்லி யொன்றி
னம்பிப்பொ ருந்துங் குரங் கொன்றுட னுடியைய
னெங்குப்ப டார்ந்த தெனவேகிய தீங்கிசைத்தேம். 13

மற்றந்த வெய்ய மதுகைக் கிடமான மைந்தர்
பொற்றந்தை நுந்தம் பொருக்கென்றெமை நண்ணும் வண்ணஞ்
சொற்றந்து காண்மி னெனவின்புறச் சொல்லி யாங்கே
குற்றந்த விர்க்குந் திசை தென்புறங் கொண்டு சென்றார். 14

என்றே யவர்க ளிசைத்திட்டதை யேன்ற வையன்
பொன்றே யுமுள்ளம் புழுங்கிப்புகு தந்த சேயார்
மின்றே யயில்வேற் றயர்தன்றிரு மேவுமக்க
ளன்றே சனகி யனுமானுட னாளவந்தார். 15

பண்டே யிழைத்த தவமுண்டதிற் பார்த் தகந்தீர்
கண்டே பிழைக்க வினையேன்லங் கண்டதின்றே
தண்டேன் றுளிக்குங் குழலீரென நைந்து தாழார்
கொண்டே நமன்றன் றிசையின்றடங் கூர்ந்து சென்றார். 16

காகுத்த வெற்கிங் கருள்செய்திடு கான நின்னைப்
பாகுற்ற சொல்லி யுடனென்று பரிந் திரங்கி
யேகுற்ற காலை யெதிர்கங்கை காள் சோழனூரிற்
போகிக்கு மைந்திங் கிருவில்லியர் போயதுண்டே. 17

என்றங்கெ திர்ந்த வரையெய்தி வினையவெல்லை
கொன்றங்கு மிந்த வழிச்சென்றன ரென்றுகூறச்
சென்றங்கு பின்னர் செறிதீப்பிழம் பென்னவோங்கு
மின்றங்கு தந்த நரசிங்கனின் மேனிகண்டார். 18

முன்னந் தமாலை முருகார்தொடைப் பீதகன்சேய்
மன்னுந் தகவிற் றொழுதென்ன வணங்கிமற்றுங்
கன்னங் கரிய மணிமானு மிராம னென்றன்
முன்னங் குறுக விலையென்ன நன்மூர்ச்சை யானார். 19

எற்றேடி வந்து மிரவிக்குலத் தெந்தைதன்னை
யெற்றே யிருகண் களிகூர்தர வெய்துகில்லேன்
பெற்றே காத்தி லமிழ்திங்ஙனம் பெய்திலேன்வா
யற்றே னருந்தனமு மென்றகஞ் சாம்பிவீழ்ந்தார். 20

தாயைப் பிழைத்த கொடிதன்னையுந் தாங்குமையன்
வேயைப் பழித்து விளங்கும்புய மானும் பின்னு
நேயத் தருகு நிலவத்தனைப் பின்றி நின்று
சேயர்க் கெதிர்வந் தனுமானுடன் சேவைதந்தான். 21

ஆரா வமுதம் பருகும்மவர் மானுமன்னார்
காரா ரெழிலன் கருணைக்கட லாடிமற்றுஞ்
சீரா ரிவன்ற னழகுண்டவென் செய்யகண்கள்
பாரா வினியிங் கெவையேனும் பரிவினென்றே. 22

வீறு ரவன் றாரகநாமம் விளம்புவாயி
னேறு விறங்காத் திருநாடு மலங்கரித்தார்
பேறாக முந்நூற் றொருநாற்பதும் பெற்றவாறு
ளேறாக விங்கெம் மெழிறாத முனிகளன்றே. 23

வேறு

குருகையங் காவ லப்பனே முதலோர்
கொடுந்துய ருழந்திதைக் குறியா
விருகணீர் வார வீச்சுர முனியை
யிரங்கலீ ரெனமனந் தேற்றிப்
பிரமமே தத்துத் தீக்கடன் முழுதும்
பிழைபடா தவர்காத் தியற்றி
மருமலர்ப் படப்பை வீரநா ராய
ணன்புர மெழுந்தனர் மற்றும். 24

ஆங்கருஞ் சரம கைங்கரி யங்க
ளளவறும் பொருட்செல வயரா
வோங்கிரு மறைமந் திரப்புரை யனுகா
தும்பரின் விழவென வுஞற்றிப்
பாங்குட னெவரு மகன்றபின் குருகைக்
காவலப்ப னும்முனம் பகர்ந்த
வீங்கரும் குருவி னியமனப் படியோ
கந்தனை மணந்தனர் நின்றார். 25

உரைப்பரு முய்யக் கொண்டவர் முனிக
ளுயர்பத மிடைந்ததை யுணராக்
கரைப்புறு மனத்திற் கலங்கினர் தேறிச்
சுணப்பரி பாலனம் புரியா
விரைத்தெழுங் கரிய கடல்வணன் பகட்டை
யெழின்மறை முறைதரு வழியிற்
பரப்புறு முலக முணர்ந்துயும் வண்ணம்
பகர்ந்தன ரொளிர்ந்தனர் பரிவின். 26

இன்னண மிருப்ப விவரொரு பகலி
னெழிற்கண மங்கையாண் டானும்
பன்னரு மறைசேர் மந்திர செபஞ்செய்
துறைகையின் முகத்தெதிர் பரிய

மன்னிய சினத்தீ ரெகினம ரிழைக்க
வவற்றினுக் குரியபுன் மறவர்
துன்னிய பிரகி ருதிபுணர்ப் பதினே
தொலேவறுஞ் சமர்தொடங் கினரால். 27

ஒருவரோ டொருவ ருரத்தினி லிடித்து
முறுப்பெலா மொன்றெடொன் றுறுத்தக்
கரிகளோ ரிரண்டிற் கனற்பொறி சிதறக்
கண்களிற் பொருதுபின் மடியப்
பரிவுடன் கண்டப் பகுதியின் புணர்ப்பிற்
குரியனப் பைந்துழாய் முகிலே
தெரிதலி லவன்றன் சேடரா நமக்கத்
தெறுநசை புரிவதுந் தீதே. 28

பிறப்பினுக் கொருவா வித்தெனு மதனிற்
பெருகுறும் விழைவினே யறுத்தே
யிறப்பெதிர் விகந்த லவன்பதத் தெமது
பரந்தனே யிறுத்தபி னென்று
மறப்பினும் புரியே மெனத்துணிந் துணவு
நித்திய கருமமும் வரைந்தே
வெறித்துள வெழிலி வண்ணனே யகத்து
ணிறுத்திய நினேவுடன் விளங்கி. 29

அப்பரஞ் சோதி யரும்பத மதன்பி
னடைந்தன ரெனச்செவி யுணரா
விப்பெரும் புவியி லுணவுறக் குளர்க்கே
சந்தியே முதலவா மெவையுந்
தப்பற விழைத்த றகுமென வருளித்
திருக்கண மங்கையாண் டானம்
மொப்பறு நாத முனியினு முயர்ந்தா
ரெனவுவந் துயர்பதம் புக்கார். 30

பின்மணக் கானம் பியுமுளம் வெம்பிப்
பெருந்தன மிழந்தன னுறழப்
பொன்மலர்க் கிணேயா மாரியர்க் ககலம்
பொலிதரச் சரமங்கை கரியந்

எல்லா ஆயுர்வேத வைத்தியர்களும் இங்கிலீஷ்
டாக்டர்களும் பிறரும் கொண்டாடும்

சார்ங்கதர ஸம்ஹிதை

ஆயுர்வேத சாஸ்திரத்தின் ஸகல ஸாராம்சங்களும் அடங்கிய மிகப் பிராசீன வைத்தியக் கிரந்தம்.

வைத்தியரத்னம்

பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்,

ஆயுர்வேத பூஷணம், ஆயுர்வேதாசார்யர் அவர்களால்

ஸம்ஸ்க்ருதத்திலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது.

சீர்திருத்திய மூன்றாம் பதிப்பு

மூன்று கண்டங்களும் 32 அத்தியாயங்களும் அடங்கியது.

வைத்திய பரிபாஷை முதலியவைகள்.

1. பூர்வகண்டத்தில்:—(1) வைத்திய பரிபாஷைகள், (2) ஒஷதி முதலியவற்றின் விவரணம், (3) நாடீ பரீக்ஷாதிகள், (4) தீபந-பாசநாதி குண விவரணம், (5) சரீரதத்வாதிகள், (6) உணவு உட்செல்லும் வகை முதலியன, (7) ரோகவிவரணம் என்னும் ஏழு அத்தியாயங்கள் அடங்கியுள்ளன.

ஔஷத முறைகள்.

2. மத்திம கண்டத்தில்:—(1) ஸ்வரஸ முறைகள், (2) க்வாத-கஷாய முறைகள், (3) பாண்ட கஷாய முறைகள், (4) ஹிமகஷாய முறைகள், (5) கல்க முறைகள், (6) சூர்ண முறைகள், (7) குளிகை-மாத்திரை முறைகள், (8) லேஹ்ய முறைகள், (9) ஸ்நேஹ-தைல-க்ருத-முறைகள், (10) ஸந்தாந ஆஸவாரிஷ்ட-முறைகள், (11) தாது-லோஹ-பாஷாணாதி-சுத்தி பஸ்மாதி முறைகள், (12) ரஸங்கள்-ரஸ-கந்தகாதி முறைகள் என்னும் பன்னிரண்டு அத்தியாயங்கள் அடங்கியுள்ளன.

சிகித்ஸா கிரமங்கள்.

3. உத்தரகண்டத்தில்:—(1) ஸ்நேஹபாநவிதி, (2) ஸ்வேதவிதி, (3) வமநவிதி, (4) விரேசநவிதி, (5) வஸ்திவிதி, (6) நிரூஹவஸ்திவிதி, (7) உத்தரவஸ்திவிதி, (8) நஸ்யவிதி, (9) தூமபாநவிதி, (10) கண்டூஷாதி விதி, (11) லேபநாதி விதி, (12) இரக்த மோக்ஷணவிதி, (13) நேத்திர சிகித்ஸை, ஆகப் பதின்மூன்று அத்தியாயங்கள் அடங்கியுள்ளன.

வேறு விவரம்.

எளிய வசனநடை, விஷயங்கள் ஒழுங்காகவும் தலை யங்கங்களோடும் அமைக்கப்பட்டிருக்கின்றன. விரிவான உரை. விசேஷ அநுபந்தங்கள். ஸகல விஷயங்களுக்கும் விஸ்தாரமான விஷய அகராதிகள்.

உயர்ந்த காலிகோ பைண்டு	ரூ.	5	4	0
இரண்டாந்தர பைண்டு	ரூ.	4	4	0

வைத்திய கலாநிதி ஆபீஸ்,

11, ஆதியப்ப முதலித் தெரு, வேப்பேரி, மதராஸ்.

Registered No. M. 916.

ஓர் ஆச்சர்யமான ஸம்வாதம்

கேளுங்கள்: பாருங்கள்: வாருங்கள்: வாங்குங்கள்:

சாஸ்திரி:—விசேஷமாக முன்னோர்க்கன்று சாஸ்திரமே ப்ரமாண மென கிறார் கீதாசார்யன். "तस्माच्छास्त्रं प्रमाणं ते" என்று கேட்டதில்லையா?

க்ருஹிணீ:—ஆனால் என்ன?

சாஸ்திரி:—ஆசார்ய வாக்பட்டர் கூறுவதைக் கேளம்மா. நீங்கள் சும்மா இருப்பது சரியல்ல.

"सूर्यादिग्रहनिग्रहापहरणं दीर्घायुरारोग्यदम्
सौभाग्योदयभाग्यवश्यविभवोत्साहप्रदं धैर्यकृत्
दुश्छायाचलधूलिसङ्गतिभवालक्ष्मीहरं सर्वदा
वज्राणां परिधारणं निगदितं भूतादिनिर्नाशकम् ॥



க்ருஹிணி:—நீர் சொல்வது எனக்குப் புலப்படவில்லையே.

சாஸ்திரி:—கதிரவன் முதலான கிரகங்களின் சாபங்களைத் தடுக்கும்; நீண்ட ஆயுளையும் சரீர சுகத்தையு மளிக்கும்; ஸௌமங்கல்ய நிலையைத் தந்திடும்; ஸகல பாக்யங்களையும், வசியத்தையும், விபவங்களையும், உத்ஸாஹத்தையும் விளைவிக்கும்; கெட்ட நிழல்பர்வத தூசி இவைகளின் சேர்க்கையினல் உண்டாகும் பிணியை நீக்கும்; பூதம் முதலான பேய் பிசாசுகளை நிர்மூலமாக்கும். எது? வைரமணிகளை 'परिधारणं' நிரம்பத் தரிப்பதேயாம்.



க்ருஹிணீ:—அடடா! என்ன ஆச்சர்யம்! அவைகள் எங்கே கிடைக்கும்?

சாஸ்திரி:—வெகு அழகாயும் மிக்க ஸரஸமாயும் ஒரே ரேட் (விலை) உள்ளதாயும் வைரங்கள் கிடைக்குமிடம்—

ஸூராஜ்மல் லல்லுபாய் அண்டு கம்பெனி,

313, எஸ்பளனேட், மதராஸ்.

SURAJMAL'S

The Jewellers

313 ESPLANADE, MADRAS.

Printed by Kabeer Printing Works, Triplicane, and Published by Vankipuram S. Vasudevachariar, for Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd., Madras.

SRI VEDANTA DIPIKA

Vol. 25] SEPTEMBER 1936 [Part 3

Editors: { S. VASUDEVACHARIAR / V. V. SRINIVASA AIYANGAR

ஸ்ரீ
வேதாந்த தீபிகை

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபையாரால் ப்ரசுரிக்கப்படும் மாதத் தமிழ்ப் பத்ரிகை.

தாது ஹு ஆவணி மீ

பத்ராதிபர்கள்:

ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்

CONDUCTED BY

Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd.,

VANI VILAS, 4, BADRIAH GARDEN ST., PARK TOWN, MADRAS.

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபை.
(லிமிடெட்)

வாணிவிலாஸ், 4, பத்திரய்ய கார்டன் தெரு,
பார்க்டவுன், சென்னை.

விசேஷ விளம்பரம்

நாளது செப்டம்பர் மீ 27 உ சிரவண நக்ஷத்திரம் ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகனுடைய வர்ஷ மஹோத்ஸவம் எல்லா திவ்ய தேசங்களிலேயும் வெகு சிறப்புடன் நடைபெறுவது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. அம் மஹோத்ஸவத்தின் பெருமையைக் கொண்டாட நம் சபையார் சித்திரப் படமடங்கிய ஒரு விசேஷ மலர் வெளியிடத் தீர்யானித்திருக்கிறார்கள். நம் தேசத்தை அலங்கரிக்கும் அநேக வித்வத் சிகாமணிகளைக்கொண்டு ஸ்ரீ தேசிகன் சரித்திரத்தையும், அவர் செய்த க்ரந்தங்களுடையவும் அனுஷ்டானங்களுடையவும் பெருமைகளையும் அருமைகளையும் காட்ட நவீன பத்ததியில், வ்யாஸங்கள் சேர்ந்த ஓர் மலர் ப்ரசுரிக்கப்படும். குதூஹலத்துடன் எதிர் பார்த்து வாங்கி வாசித்து ஆனந்திக்க வேணுமென்று ப்ரார்த்திக்கப் படுகிறது.

T. Rajagopalachari,
ஜெனரல் செக்ரெடெரி.

अमृतांजनम्

அம்ருதாஞ்சனம்

உண்மையில் அம்ருதம் போன்றது. இப்பெயர் அகரத்தில் ஆரம்பிப்பதால் இது அகில மங்களமும் அளிக்கக் கூடியது என்று அடியில் கூறும் ப்ராசீன முதுமொழி கூறுகிறது.

"अ इति भगवतो वाचकमकारं
प्रयुञ्जानेन किं नाम मङ्गलं न कृतम् ।"
" अकारोपक्रमश्चास्मिन्मङ्गलत्वाभिसन्धितः ।"

தலைவலி, ஜலதோஷம்,
சுளுக்கு முதலான சகல
நோய்களையும் தீர்க்கவல்ல
ப்ரஸித்தமான லேபனம்—

அம்ருதாஞ்சனம் டிபோ

பம்பாய், மதராஸ், கல்கத்தா.

ஸ்ரீ:

ஶ்ரீ வெங்கடேச...

திஸ்வ... தார்வணை...
...விக... வா... உயா...
வ... தா...
விஜய... ஜேத...ர ॥

ஸ்ரீ வேதாந்த தீபிகை

பத்ராதிபர்கள் : { ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்
வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்.

ஸம்பு. 25] தாது ஹூ—ஆவணி மீ [ஸஞ்சிகை. 3

விஷய ஸூசிகை

1.	ஸம்பாதகரின் குறிப்புகள்	112
2.	ஸ்ரீமத்ராமாயண ரஸாஸ்வாதம் [ஸ்ரீ. உப. தி. வீரராகவாசார்யர்]	121
3.	விபரீதம் போலும் சில அநுபவங்கள் [ஸ்ரீ. உப. தி. ராமஸ்வாமி ஐய்யங்கார் அட்வொகேட், சென்னை]	129
4.	ஸ்ரீ கீதா மஹிமை [ஸ்ரீ. உப. திருக்கோட்டியூர் ஸ்ரீராமதேசிகாசார்யர், ஸ்ரீரங்கம்.]	132
5.	ஸ்வப்நங்களின் தத்வ விசாரம் [ஸ்ரீ. உப. வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்]	138
6.	கம்பனும் கண்ணனும் [ஸ்ரீ. உப. ரெ. திருமலை அய்யங்கார்]	142
7.	மீமாம்ஸா ஸங்க்ரஹம் [திவான் பஹதூர் ஸ்ரீ. உப. வி. கே. ராமாநுஜாசார்யர்]	146
8.	விவாத பாகம்	152
9.	நிருபங்கள்	159
10.	புத்தகவிமர்சம்	164
11.	ஸ்ரீவரதராஜ பஞ்சாசத் [ஸ்ரீ. உப. எ. வி. கோபாலாசார்யர்]	165
12.	மஹாவீர வைபவம் [ஸ்ரீமான் உ. வே. வித்வான் வி. அநந்தாசார்யர்,]	171
13.	திவ்யஸூரி சரிதம்	257

[சந்தாதாரர்கள், சந்தாத் தொகையை, "ஜெனரல் காரியதரிசி, 'ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த பிரசார ஸபை, வாணிவிலாஸ், 4, பத்திரய்ய கார்டன் தெரு, பார்க்டவுன், சென்னை' என்னும் விலாசத்திற்கும், வ்யாஸம் எழுதுபவர்கள் வ்யாஸங்களையும் அவை ஸம்பந்தங்களான மற்றைக் கடிதங்களையும் "ஸம்பாதகர், வேதாந்த தீபிகை, வாணி விலாஸ், 4, பத்திரய்ய கார்டன் தெரு, பார்க் டௌன், மதிராஸ்" அல்லது "ஸம்பாதகர், ராமஸ்வாமி தெரு, ஈஸ்டு மாம்பலம், தியாகராயநகர், மதிராஸ்" என்னும் விலாஸத்திற்கும் அனுப்பவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.]

... ஆவணக்காப்பக ... சென்னை-600 00...

ஶ்ரீ:

ஶ்ரியை நம:

ஸம்பாதகரின் குறிப்புகள்

[illegible] ॥

[illegible] ॥

ஒரு பாச்சாத்யருடைய க்ரந்தம்.

Edward Carpenter என்னும் பாச்சாத்ய வித்வாந்ஒருவர் 'The Drama of Love and Death' என்னும் பெயருள்ள க்ரந்தமொன்றை எழுதி இருக்கிறார். 'அநுராகம் மரணம், இவைகளின் விசித்ர சேஷ்டிதங்கள்' என்பது அந்தப் பெயரின் பொருள் ஆகும். இந்த ஜகத்திலுள்ள ஸகல ஜந்துக்களும் அநுராகம் மரணம் இவை வழியாகவே உத்பத்தி ஸ்திதி ஸம்ஹாரங்களைப் பெறுகின்றன என்பதை உணர்த்துவதே அந்த க்ரந்தத்தின் நோக்கமென்று தெரிய வருகின்றது. எவ்வித ஸம்பந்தமும் இராமல் ப்ரத்யுத பரஸ்பரம் விருத்தங்கள் போலத் தோன்றும் அநுராகமும் மரணமும் எவ்விதம் ஒரே கார்யத்திற்கு ஸாதகங்களாகக் கூடும் என்னும் சங்கை இந்த க்ரந்தத்தின் பெயரைப் பார்த்தவுடன் எல்லாருடைய மநஸ்ஸிலும் ஜநிக்கலாம். அந்த ஶங்கையைச் செய்து கொண்டே, இந்த க்ரந்த கர்த்தா அதற்குத் தகுந்த ஸமாதாநத்தை பஹு ப்ரகாரமாக இந்த க்ரந்தத்தில் உபபாதித்திருக்கிறார். இவ்விதம் விசித்ரமாக அவருக்குத் தோன்றியுள்ள எண்ணத்தின் உட்கருத்து என்னவென்பதையும் அவர் எவ்விதம் அதை ஸ்தாபிக்கிறார் என்பதையும் விசாரிப்பதற்கு நாம் உத்ஸுகராக இருக்கையிலும், அந்த விசாரம் இவ்விடத்தில் அப்ராப்தம் என்னும் காரணத்தால் அதில் நாம் ப்ரவர்த்தியாமல் ஒழிகின்றோம். ஆனால், அவர் இந்த க்ரந்தத்தில் ப்ரஸக்தாநுப்ரஸக்தமாக ஆத்ம ஸம்பந்தங்களான பல விஷயங்களைப் பற்றி ப்ரஸ்தாவித்து, அவைகளின் நிர்ணயங்களைக் கேவலம் யுக்தியையும் அநுபவத்தையும் ஆதாரமாகக் கொண்டு ஒரு விதமாகச் செய்திருக்கிறார். அந்த நிர்ணயங்களின் ஸாதுத்வத்தையும் விஷய விசாரங்களின் ரஸவத்தையையும் பார்க்கும் நமக்கு அவைகளைப்பற்றி இவ்விடத்தில் கொஞ்சம் ப்ரஸ்தாவிக்கலாம் என்று தோன்றுகின்றது. ப்ரத்யக்ஷ ஸித்தங்களான வஸ்துக்களைத் தவிர்த்து வேறொன்றும் இல்லையென்று ஜகத் விச்ராந்தமாகும்படி உத்கோஷிக்கும் பௌதிக சாஸ்த்ர வாதிகளின் மத்யத்திலிருந்தே ஒருவர், அந்த வாதிகளால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ப்ரமாணங்களையே ஆதாரமாகக் கொண்டு அப்ரத்யக்ஷமான வஸ்துக்கள் சிலவுண்டென்றும் அவைகளின் ஸ்திதி ப்ரவ்ருத்தி முதலியவையெல்லாம் பரோக்ஷமான சேதந விசேஷத்தின் கார்யங்களென்றும் இத்யாதியான பல நிர்ணயங்களை, அந்தப் பூத சாஸ்த்ரவாதிகள் மறுக்க வொண்ணாதபடி ஸ்தாபிக்கிறார் என்றால், அது மிகவும் ஆதரணீயமன்றோ? நிற்க, இவரால் செய்யப்பட்டுள்ள நிர்ணயங்கள் நமது சாஸ்த்ரங்களுக்கு மிகவும் ஒத்திருக்கின்றன. இதுவும் நமது உத்ஸாஹத்திற்கு ஒரு காரணம்.

அவருடைய நிர்ணயங்களாவன:—ஜகத் வ்யாபியாக சேதந தத்வமொன்று எல்லாவற்றுக்கும் ஆதாரமாக நிற்கின்றது. 'நாம்' என்று நாம் வ்யவஹரிக்கும் சேதநர்களெல்லாரும் ஸர்வ வ்யாபியான அந்தச் சேதந தத்வத்தின் அம்சங்கள். இந்த 'நாம்' என்பது நமது தேஹம் இந்த்ரியம் மநஸ் முதலியவைகளைக் காட்டிலும் அத்யந்தம் விலக்ஷணம் இவை நச்வரங்கள், அது, தேஹம் முதலியவை நஷ்டங்களான பிறகும் அநுவர்த்தித்து நிற்கின்றது. மரணம் என்பது தேஹ வியோகமே தவிர்த்து வஸ்து நாசமன்று. இந்த ஸ்தூல தேஹத்தின் வியோகம் நேரும்பொழுது, வேறொரு ஸூக்ஷ்மமான தேஹத்துடன் சேதநன் சேர்ந்திருக்கின்றான். இந்தத் தேஹங்கள் இருக்கும் பர்யந்தமே நமக்கு அஸ்வாதந்த்ர்ய ரூபமான பந்தம் உண்டு; தேஹ வியோகமாகி விட்டால், பிறகு நமக்கு ஆவிர்ப்பவிக்கும் ஸ்வாதந்த்ர்யம் வாக்குக்கும் மநஸ்ஸுக்கும் எட்டாததே.

"Growing silently within, there emerges at last something which has its home in the great space, which dives under and through Death and is the companion of Titanic and Cosmic beings..........With the overpassing of the local and terrestrial self we are liberated into a new region where a thousand personalities yield their secrets and their co-operation into our hands. With the releasing of our attention from personal objects and terrestrial gains, materials and people correspondingly cease to obstruct...... Life ceases to be the 'obstacle race' and the queer perpetual vista of barricades which it mostly now is; and *a fortiori* the soul moves freely, because truly for the redeemed soul it is possible to feel that all things and creatures are friendly, all beings a part of itself. These and many other such realisations are indeed possible now—even in our present terrestrial state—under those rare conditions when the divine creature which is within the mortal body achieves a momentary deliverance, and under which we sometimes pass out of our little mundane dream into that other land where the great voices sound and great visions dwell."

நிற்க, ஜநங்களால் பயந்து வெறுக்கப்படும் மரணம் என்பது எவ்வித பயத்திற்கும் காரணமாகக்கூடியதன்று என்றும், விவேகிகள் விஷயத்தில் அது அத்யந்தம் ப்ரீதிகரமென்றும், பலவத்தான ஆசா பாசங்களை உடையவர்களும் அதன் ஸ்வரூபத்தை நன்கு உணர்ந்தால் அதை ப்ரீதி புரஸ்ஸரமாக எதிர் பார்ப்பார்களென்றும், அப்யாஸத்தால் இந்த்ரியங்களைச் சரி

யானபடி ஸ்வாதீநம் செய்திருப்பவர்களெல்லாரும் தமது சரீரத்தை, க்லிந்நமான வஸ்த்ரத்தை த்யஜிப்பது போல, ஸுலபமாக பரித்யஜிக்க சக்தர்களென்றும் அவர் நிர்ணயித்திருக்கிறார்.

"Of all the hard facts of science, as that fire will burn, water will freeze, the earth spins on its axis, and so forth, I know of none more solid and fundamental than the fact that if you inhibit thought (and persevere) you come at length to a region of consciousness below or behind thought, and different from ordinary thought in its nature and character—a concious-ness of quasi-universal quality and a realisation of an altogether vaster self than that to which we are accustomed. This passing out of what may be called self-consciousness in the little local sense, is to die to the ordinary self and the ordinary world."

விஷய வ்யாகுலமான சித்தத்தை உடையவர்களைப் ப்ரஸ்தாவித்து வருகையில், மரண காலத்தில் அவர்கள் தம்மால் இயன்றமட்டும் மநஸ்ஸை ஐஹிக விஷயங்களிலிருந்து உபஸம்ஹரித்துக் கொள்வதே அதி மாத்ரம் உசிதமான உபாயமாகும் என்பதை ஒரு விசித்ரமான த்ருஷ்டாந்தத்தை முன்னிட்டு உபபாதிக்கிறார். ஸிரியா தேசத்தைச் சேர்ந்த பாலைவநத்தில் ஒருவித ரோஜாச் செடி உளதாம். அது, நிலத்தில் ஈரம் இருக்கும் காலமெல்லாம் வ்ருத்தி அடைந்து புஷ்பித்து விட்டு, பிறகு அநாவ்ருஷ்டியால் பூமி தக்தமாகும்பொழுது அது தனது சரீரத்தைச் சுருட்டி வேரையும் ஆகர்ஷித்துக்கொண்டு பந்துபோலக் கிடக்குமாம். காற்றுக்கு வசமாகித் திக் விதிக்காகப் பிறகு உருண்டு ஓடும் காலத்தில் எவ்விடத்திலாவது பூமி குளிர்ந்திருப்பதைக் கண்டால் உடனே அவ்விடத்தில் வேர் ஊன்றித் தனது தேஹத்தைப் பிரித்து மறுபடியும் வளரத் தொடங்குமாம். அதுபோல போகங்களில் அதிகமான ஆஸக்தி உள்ளவர்கள், மரணகாலத்தில் தமது ஆசா பாசங்களை உபஸம்ஹரித்துக் கொண்டு மரணத்திற்கு இணங்கி, அந்த மரணத்திற்குப் பிறகு தமக்கு ஸம்பவிக்கப் போகும் விசேஷித்த போகாந்தரங்களை எதிர்பார்த்துப் போவதே அவர்களுக்கு ச்ரேயஸ்கரமாகும்.

"Happy the man who has so far consciously taken refuge and identified himself with the great life that the onset of death fails to disturb or dislodge him. For him a wonderful passage is prepared—amazing indeed and bewildering, yet by no means dismaying or terrifying. But for the ordinary mortal who has not yet arrived at this stage it would seem best and most natural simply to gather and compact himself together as firmly as possible, and detaching his mind as well as he can from its earthly entanglements and hindrances to launch forth boldly, and with such faith

and confidence as he can muster, on his strange journey. There is a plant of the Syrian deserts—the Rose of Jericho—which in dry seasons, when the earth about its roots is turned into mere sand, has the presence of mind to detach itself from its hold altogether and to roll itself into a mere ball—flower, root and all. It is then blown along the plains by the wind and travels away until it reaches some moist and sheltered spot, when it expands again, takes hold on the ground, uplifts its head, and merrily blooms once more. Like this little Rose, the human soul has at times to draw in its roots and separate them from their earthly entanglement and compacting itself for the nonce into a sturdy ball start gaily on its far adventure."

ப்ரியனை அதிதியைப் போல எதிர்பார்க்க வேண்டிய ம்ருத்யுவை அவ்விதம் பார்க்க வொட்டாமல் பலவித உபத்ரவங்களைச் செய்யும் டாக்டர்களையும் பந்துக்களையும் இவர் வெறுப்பதும் அத்யாச்சர்யகரமாக இருக்கின்றது.

"Above all, may we have a truce to the so common and unworthy conspiracies between doctors, nurses and relatives, by which for the sake of keeping the patient a few hours longer alive, the unfortunate one,—instead of being let alone and allowed to die peacefully as far as may be—is on the contrary tormented (defenceless as he is) with operations, inoculations and medical insults of all kinds up to the very last? The thing has become a positive scandal; and though the ignorant importunities of lay relatives may sometimes be deplorable, yet the prospect in one's last moments of falling into the hands of professionals is even worse, and adds a new terror to dissolution............There is a certain sacredness in Death, which should surely be respected."

'ஜகத் முழுவதும் சேதநாதிஷ்டிதமாகவே இருக்கின்றது; சேதநாநதிஷ்டிதமான பொருள் இந்த ஸ்ருஷ்டியில் ஒன்றுமில்லை' என்னும் உண்மையை பஹுவாக விசாரித்து கடைசியாக அந்த சர்ச்சையை உபஸம்ஹரிக்குமிடத்தில் பின் வருமாறு எழுதுகிறார்.

"I am convinced that science will never yield any very fruitful understanding of this world, until it recognises that *life* and *intelligence* (of course in the broadest signification) pervade all the phenomena of Nature. It is perfectly useless to try to explain human development, human destiny, mental activity, the forces of Nature and so forth, in terms of dead matter. No explanation of such a kind could possibly be satisfying.............We shall never arrive at any harmonious view of the whole question until we

are persuaded that life and intelligence are characteristic of all that we call matter as well as of all we call mind and pervade the whole structure of the universe. We shall then see that the forces, for instance, which organise and direct the human body, even down to its minutest parts, are probably just as individual and intelligent in their action as those which organise and direct an army-corps."

இம்மாதிரியான தத்வ நிர்ணயங்கள், தேசாந்தரத்தில் பிறந்தும் பால்யம் முதலாக நாஸ்திக்ய ஸம்ஸ்காரத்தையே பெற்றும் ஐஹிக போகங்களையே ப்ரதாநங்களாக பாவித்து வரும் ஜநங்களின் மத்யத்தில் வளர்ந்தும் நிற்கும் ஒரு ஹம்ஸ ஜாதியருக்கும் ஸம்பவிக்குமோ வென்று சங்கிக்கக் கூடும். கர்ம பரிபாகங்கள் யார் பக்கம் எவ்வித மாக நேருமென் பதை யார் அறியக்கூடும்?

" கஜ‍ௌவிஜ்யாஜிவகெ . வெ திவெ ஈஷ ஜிஹா நாஜி
ஜி ந்ருவாஹெ தத்த்காமெ விவக்தி ஜவதி ஹி விவியா "

[அநாதியாக ப்ரவஹிக்கும் கர்மகதி அதி விசித்திரங்களான பரிபாகங் களை வ்யக்தி தோறும் பற்பல விதமாக அந்தந்தக் காலம் நேரும் பொழுது ஜநிப்பிக்கின்றது] என்று உலகவாழ்க்கையை உள்ளபடி அறிந்த மஹாந் அநுக்ரஹித்திருக்கிறார். அதிமாத்ரம் கஹந கோசநர்களான வேடர்க ளிடத்திலும் பசு பக்ஷிகளிடத்திலும் அத்யாச்சர்யகரமான தர்ம சிந்தை யையும் விலக்ஷணமான பக்தி விசேஷத்தையும் நாம் காண வில்லையோ?

" Take no thought for your life, what ye shall eat, what ye shall put on"

" Seek ye the kingdom of God; and all these things shall be added unto you,"

என்று கதறியிருக்கும் தேசாந்தரத்தவர்கள் மஹாங்களல்லவோ? ஆத்மகுண விசேஷங்கள் ஆவிர்ப்பவிப்பதற்கு நமக்குப் புலப்படும் பாஹ்ய சிஹ்நங்கள் நிபந்தநமாக மாட்டுமோ?

இவ்விடத்தில் ப்ரஸ்தாவிக்கப் பட்டுள்ள விஷயங்களைக் காட்டிலும் மிக அருமையான வேறு விஷயங்களும் இந்த க்ரந்தத்தில் தென்படு கின்றன. அவைகளை அவகாசம் நேரும் பொழுது விமர்சிக்கலாம் என்பது நமது அபிஸந்தி. நமது ஆசார்யர்களுடைய திவ்ய ஸூக்திகளை அநு ஸந்திக்குமவர்களுக்கு இம்மாதிரியான பாச்சாத்ய க்ரந்தங்களிலிருந்து புதிதாக அறிந்துகொள்ளவேண்டிய விஷயமொன்று மிராவிடினும், நமது

ஆசார்ய கடாக்ஷத்திற்குப் பாத்ரமாகாமல், பாஷாந்தர க்ரந்தங்களில் எழுதப்பட்டுள்ள விஷயங்களே விச்வஸநீயங்களென்று ப்ரமித்திருக்கும் நமது பாலர்களுக்கு இது அஜ்ஞாந நிவர்த்தகமாகு மாதலால், இதைப் பற்றி நாம் இவ்விடத்தில் இவ்வளவு விஸ்தாரமாக ப்ரஸ்தாவிக்கத் துணிந்தோம்.

* * *

டாக்டர் ஜி. எச். மீஸ் என்னும் பெயருடைய ஒரு பாச்சாத்ய நிரூபகர், 'வர்ண ஸாங்கர்யம்' என்னும் விஷயத்தைப் பற்றி ஸ்வல்ப கால மாகச் சில உபந்யாஸங்களைச் செய்து வருகிறார் வர்ண ஸாங்கர்யம் என்பதை நமது ஸஹ்ருதயர்கள் அறிந்திருக்கலாம். திருவநந்தபுரம் ஸம்ஸ்தாநத்தின் அதிகாரிகளின்வேண்டு கோளுக்கு இணங்கி, இவர் இந்த உபந்யாஸங்களைச் செய்து வருவதாக நாம் அறிகின்றோம். இவர் இந்த விஷயத்தைப் பற்றி பெரியதொரு க்ரந்த மும் எழுதி இருக்கிறார். விஷயங்களுடைய குண தோஷங்களை உள்ள படி எடுத்து உரைக்கும் திறமையை இவர் விசேஷித்துப் பெற்றிருக்கிற படியால், வர்ண ஸாங்கர்யத்தைப்பற்றி இவர் சொல்வது என்னவென்பதை நாம் இவ்விடத்தில் கொஞ்சம் விசாரிக்க ப்ராப்தமாகின்றது.

'வர்ணம்' என்னும் சப்தத்திற்கு 'பிறவியால் ஏற்படும் ஜாதி' என்பது பொருள் என்றும், ஒரு ஜாதியில் பிறவியைப் பெற்றவர்கள் தமக்கு ஏற் பட்டுள்ள நியமங்களைக் கடந்து வேறு ஜாதியில் விவாஹம் முதலிய வைகளைச் செய்து கொண்டு ப்ரஜைகளை ஜநிப்பிக்கும் பக்ஷத்தில் அதனால் 'வர்ண ஸாங்கர்யம்' [அதாவது, வர்ணங்களின் கலப்பு] ஸம்பவிக்கின்றது என்றும் நமது சாஸ்த்ரங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றன. விவாஹம் செய்து கொள்ளாமல் பாதிவ்ரத்ய பங்கம் வழியாக ப்ரஜைகள் ஜநித் தாலும், அதுவும் வர்ண ஸாங்கர்யத்திற்கு ஹேதுவாகுமென்றே நமது சாஸ்த்ர கர்த்தாக்களின் அபிப்ராயம்.

" ஸ்த்ரீஷு துஷ்டாஸு வார்ஷ்ணேய ஜாயதே வர்ணஸங்கர: "

[ஸ்த்ரீகள் பாதிவ்ரத்யத்தை விட்டு விலகினால் வர்ண ஸாங்கர்யம் உண்டா கின்றது] என்பது ஸ்ரீ பகவத் கீதா வாக்யம். இவ்விடத்தில் 'ஸ்த்ரீகள் பாதிவ்ரத்யத்தை விட்டு விலகுவது' என்பது, புமான்கள் ஏகதாரவ்ரதத் தைவிட்டு விலகுவதற்கும் உபலக்ஷணம். இந்த வர்ண ஸாங்கர்யத்தை நமது தர்ம சாஸ்த்ரங்கள் நிஷேதிக்கின்றன.

டாக்டர் மீஸ் என்பவர் 'வர்ணம்' என்பதற்கு கீழ்க்குறிக்கப்பட்டுள்ள பொருளை ஒத்துக் கொள்ளவில்லை. 'வர்ணம்' என்பது கர்மத்தால் [அதாவது

தொழிலால்] ஏற்படும் விபாகத்தை மாத்ரம் குறிக்கின்றதென்றும், 'ஜாதி' என்பது அதைக் காட்டிலும் வேறு, அது பிறவியால் ஏற்படும் விபாகத் தைக் குறிக்கின்றதென்றும் அவர் வாதிக்கிறார். ப்ராஹ்மண க்ஷத்ரிய வைச்ய சூத்ரர்கள் என்று சாஸ்த்ரங்களில் பேசப்பட்டுள்ள விபாகங்க ளெல்லாம் தொழிலால் ஏற்பட்டவைகளே என்று ஸித்தவத்கரித்துக் கொண்டு, அம்மாதிரியான விபாகமே ஜகத்தின் ச்ரேயஸ்ஸுக்கு அபேக்ஷித மென்றும், மற்றொரு விபாகம் அபேக்ஷிதமில்லை யென்றும் அவர் அபிப் ராயப்படுவதாக அவருடைய உபந்யாஸங்களிலிருந்து ஏற்படுகின்றது. படிப்பில் தேர்ச்சியைப் பெற்று மஹா ஜநங்களுக்கு ஹிதத்தை உபதேசிக் கும் திறமையைப் பெற்றிருப்பவர்களெல்லாரும் ப்ராஹ்மணவர்ணத்தைச் சேர்ந்தவர்களாம்; சண்டையில் திறமை பெற்றவர்கள் க்ஷத்ரியர்களாம்; வ்யாபாரம் செய்பவர்கள் வைச்யர்களாம்; தேஹத்தால் உழைத்து ஜீவிப் பவர்கள் சூத்ரர்களாம். இம்மாதிரியான விபாகம் இந்த உலகத்தில் எல்லா தேசங்களிலும் காணப்படுகிறபடியால், இது நமது தேசத்திற்கு அஸாதாரணமென்று சொல்வது உசிதமன்றாம். இவ்விபாகங்களுள், ஒரு வகுப்பைச் சேர்ந்தவர் மற்றொரு வகுப்பினரின் தொழிலில் ப்ரவர்த்திக்கும் பொழுதே வர்ண ஸாங்கர்யம் ஏற்படுகின்றதாம். அப்படி ஆக்ரமிப்பது துராக்ரமம் ஆகுமென்றும் அதுதான் நிஷித்தமென்றும் அவர் பேசுகிறார். ஸ்வல்ப காலமாக மேல் நாடுகளில் நடை பெற்றுவரும் நடவடிக்கைகளை இந்த விபாக புரஸ்ஸரமாக விசாரித்து, சில தேசங்களில் நான்காவது வர்ணத்தார் [Labour] மற்றை எல்லாரையும் ஆக்ரமித்து நிற்பதையும், மற்றும் சில தேசங்களில் வ்யாபாரிகளும் வேறு சில தேசங்களில் சண்டைக் காரர்களும் ஆக்ரமித்து நிற்பதையும் பார்த்து, இவையெல்லாம் க்ரம விருத் தங்களென்றும் இவைகளால் ஜகத்திற்கு நன்மை ஏற்படமாட்டாதென்றும் சொல்லி, ஆனால் இந்த ஸ்திதி சீக்கிரத்தில் மாறிவிடுமென்று தாம் நம்பிக்கை கொண்டிருப்பதாகவும் சொல்லுகிறார். எல்லாவிடங்களிலும் முதல் வர்ணத்தாருக்கே ஆதிக்யம் வரக்கூடிய ஸம்பவங்கள் காணப்படுகின்றன வாம். ஆகையால் ஜகத்தின் க்ஷேமத்திற்குக் குறைவு வராமலே சீக்கிரத்தில் ச்ரேயஸ்ஸே ஸம்பவிக்குமென்று உபஸம்ஹாரத்தைச் செய்திருக்கிறார்.

இது விஷயமாக நாம் விசாரிக்க வேண்டிய அம்சங்கள் சில இருக்கின்றன. அவையாவன:—முதலாவது, 'வர்ணம்' என்பதற்கு இவர் சொல்லும் அர்த்தமே பொருள் என்றும் 'வர்ணம்' வேறு 'ஜாதி' வேறு என்றும் இவர் எந்த ப்ரமாணத்தை ஆதாரமாகக் கொண்டு சொல்லுகிறார் என்பது நமக்கு புலப்படவில்லை. தர்ம சாஸ்த்ரங்களிலும் அவை போன்ற மற்றை க்ரந்தங்களிலும் செய்யப்பட்டுள்ள ப்ரயோகம் சரியான ப்ரமாண மானால், 'வர்ணம்' என்பது பிறவியால் ஏற்படும் விபாகத்தையே குறிக்கும்

என்பது ஸித்தம். இரண்டாவது, ஜாதியின் ஸாங்கர்யத்தால் ஜகத்தின் ச்ரேயஸ் குறைவு படமாட்டாது என்று இவர் என்ன ஹேதுக்களைக் கொண்டு ஸாதிக்கிறார் என்பதும் விளங்கவில்லை. ஜாதிஸாங்கர்யத்தை ஸர்வதா கூடாதென்று பலாத்காரமாக நிஷேதிக்கும் ஜர்மன் கவர்ன்மென் டாருடைய ஆஜ்ஞைகளை இவர் அறியாரோ? ஜ்யூ ஜாதியார் தம் ஜாதி யாரில்லை என்னும் காரணத்தால் அவர்களுடன் விவாஹம் கூடாதென்று நிஷேதித்திருப்பதுடன் மாத்ரம் நிற்காமல், அந்த கவர்ன்மென்டார் ஜ்யூ ஜாதியார்களைத் தமது தேசத்திலேயே வஸிக்ககூடாதென்று அவர்களை அவ்விடத்திலிருந்து துறத்திவிட்டார்களன்றோ? மூன்றாவது, ஸாங்கர்யம் என்பது ஒரு வித வ்யவஸ்தையை மீறி நடப்பதால் உண்டாகும் குழப் பத்தையே குறிக்குமன்றோ? இவர் எவ்வித வ்யவஸ்தையைஒத்துக்கொண்டு வர்ண ஸாங்கர்யம் கூடாதென்று நிஷேதிக்கிறார்? ஜாதி வ்யத்யாஸமின்றி ஜநங்கள் எவ்வித தொழில்களையும் ஏற்றுக்கொள்ள அர்ஹர்கள் என் பதன்றோ இவருடைய கொள்கை? இவருக்கு ஸாங்கர்யம் என்பது எப் படி ஸம்பவிக்கும்? ஒரு தொழிலாளி மற்றொருவனுடைய தொழிலில் ப்ரவேசிக்கக்கூடாது என்று நிஷேதிப்பதற்கு, ஜாதி வ்யவஸ்தையை ஒத்துக் கொள்ளாமல்வேறு என்ன வ்யவஸ்தையைக்கொண்டு உபபத்தி சொல்லக் கூடும்? இம்மாதிரியான சங்கைகள் பல ஜநிக்கின்றன.

நிற்க, ஜகத்திற்கு சீக்கிரத்தில் க்ஷேமம் ஸம்பவிக்கக்கூடிய குறிகள் சில காணப்படுகின்றன வென்று இவர் சொல்வது சுபமான வாக்யமாக இருக்கையிலும் நமக்கு அதில் நம்பிக்கை ஜநிக்கவில்லை. அபிஸீனியா முதலான இடங்களில் நடைபெறும் அக்ரமங்களும், மற்றை தேசத் தாரொருவரும் அந்த அக்ரமங்களைத் தடுக்க முயலாமல் எல்லாரும் அவைகளை உபேக்ஷித்திருப்பதும் சுபக் குறிகளாகுமோ? தர்மம் தலை சாய்ந்து கேவலம் பராக்ரமமே தலை எடுத்திருக்கும் காலம் நேர்ந்து விட்டதோ என்று ஸந்தேஹிக்கும் படியன்றோ ஸம்பவங்கள் காணப்படு கின்றன? ஸர்வேச்வரன் எல்லாருக்கும் தர்ம சிந்தையைக் கொடுத்து அநுக்ரஹிக்க ஸங்கல்பித்தாலின்றி வேறு எவ்விதம் சுபம் ஜநிக்கும் என்பது நமக்கு தெரியவில்லை.

"[illegible]
.......................[illegible] ।"

யதீந்த்ர மத தீபிகை.

இதன் இரண்டாவது ஸஞ்சிகையை நாம் வரப்பெற்றோம். ஏற்கெனவே முதல் ஸஞ்சிகையைப்பற்றி நாம் மதிப்புரை எழுதி இருப்பதை நமது ஸஹ்ருதக்கள் அறிவார்கள். முதல் ஸஞ்சிகையிற் போலவே, இதிலும் தீபிகையின் உரையும் அதை விளக்குவதற்காக ந்யாய பரிசுத்தி, ந்யாய ஸித்தாஞ்ஜநம். தத்வ முக்தா கலபாம் முதலிய க்ரந்தங்களிலிருந்து குறிப்புக்களும் தெளிவாய் எழுதப்பட்டிருக்கின்றன. அநுபந்தங்களும் தொடர்ந்தே வருகின்றன. இந்த ஸஞ்சிகையில், கால நிரூபணத்திற்குப் பிறகு நித்ய விபூதி நிரூபிக்கப்பட்டு தர்ம பூதஜ்ஞாநத்தின் நிரூபணம் உபக்ரமிக்கப்பட்டிருக்கின்றது. ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தின் உண்மையை ஸமர்மகமாக அறிய விரும்புவோரெல்லாருக்கும் இந்த க்ரந்தம் மிகவும் உபகாரமாகும் என்பதில் ஆக்ஷேபமில்லை. சீக்கிரத்தில் இது ஸமக்ரமாக வெளி வருமென்று நாம் நம்புகிறோம். இதன் க்ரயம் ரூ 1—0—0 "54, பெரியதெரு, கும்பகோணம்" என்னுமிடத்தில் இது கிடைக்கும்.

* * * *

ஒரு பிழை திருத்தம்

சென்ற ஸஞ்சிகையில் 'ஸ்ரீமத் ராமாயணம்—பாதுகா பட்டாபிஷேகம்' என்னும் வ்யாஸத்தில் 69-வது பக்கத்தில், "இவ்விதமாகச் சொல்லவே பரதனும் சத்ருக்நனும் "அண்ணா! இந்த ராஜ்யச் செல்வங்களை லக்ஷ்மணனை அநுபவிக்கச் சொல்லும் காரணமென்ன?" என்றனர்." என்னும் வாக்யம்—இவ்விதமாகப் பரதனும் சத்ருக்நனும் நீங்கலாக லக்ஷ்மணனை அநுபவிக்கச் சொல்லும் காரணமென்ன? என்றிருக்க வேண்டும்.

நமது ஆபீஸ் லேககருடைய ப்ரமாதத்தால் இப்பிழை நேர்ந்து விட்டதைக் குறித்து நாம் சோகிக்கிறோம். [ஸ்ரீ. வே. தீ. பத்]

* * * *

ஸ்ரீ:.

ஸ்ரீமான் ப்ரதிவாதி பயங்கரம் கிருஷ்ணமாசாரிய ஸ்வாமி

ஸ்ரீ. உப. ப்ரதிவாதி பயங்கரம் ஜகத்குரு காதி அநந்தாசார்ய ஸ்வாமியின் புத்திரரான ஸ்ரீமான் கிருஷ்ணமாசாரிய ஸ்வாமி, அவருடைய சிஷ்யர்களாலும், இன்னும் அநேக கன தனவான்களாலும், பண்டிதர்களாலும் ஏகோபித்து ஸ்ரீ. உ. வே. கோவில்கந்தாடை அண்ணன் (ஸ்ரீரங்கம் கோயில் ட்ரஸ்டி) ஸ்ரீ. உ. வே. கோவர்த்தனம் இரங்காசார், வித்வான் P. B. அண்ணங்கராசார், ஸ்ரீமதி சப்ரா மகாணராணி இவர்கள் முன்னிலையில், சென்ற 1936 ஸூ, ஆகஸ்ட் ஸ்ரீ, 12௳, ப்ரதிவாதி பயங்கர மடத்தின் மடாதிபதியாக நியமிக்கப்பட்டு அபிஷிக்தரானாரென்று கேள்விப்பட்டு ஸந்தோஷிக்கிறோம்.

வி. வி. ஸ்ரீ.

ஸ்ரீ:

[illegible]

[illegible] நம:

ஸ்ரீமத்ராமாயண ரஸாஸ்வாதம்

[சிரோமணி, தர்க்கார்ணவ, பண்டிதரத்ந உத்தமூர் ஸ்ரீ. உ.ப. தி. வீரராகவாசார்யர், திருப்பதி.]

[illegible] ।
[illegible] ॥

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

[illegible] ।
ஸ்ரீ[illegible] ॥

உபோத்காதம்

'[illegible]' என்று ப்ரமாத்ரு ப்ரமேயங்களோடே சேர்த்து ப்ரமாணமாக ப்ரதம நிர்த்திஷ்டமான வேதமே, பரதத்வமான ஸ்ரிய:பதியையும் தத்ஆராதநமாயுள்ள தர்மங்களையும் உள்ளபடி யுணர்ந்து முன்னடி பார்த்து நடக்கவேண்டிய நமக்கு நிரபாயமான சக்ஷுஸ் என்பது நிராபாய நிர்ணீதமே. இதனை,

"[illegible]"

என்று மஹாகவியும் சொன்னான்.

இவ்விடத்தில் 'ஶாஸ்த்ர' சப்தத்தையும் 'கார்ய' பதத்தையும் ப்ரயோகித்திருப்பதாலே, 'ஶாஸநாத் ஶாஸ்த்ரம்' என்கிற வ்யுத்பத்தியை அநுஸரித்து, 'இதம் குரு' (இதைச் செய்) 'இதம் மா குரு' (இதைச்செய்ய வேண்டாம்) என்கிற விதிநிஷேதங்களே 'ஶாஸ்த்ர' சப்தத்திற்கு முக்யார்த்தமாகையாலும், 'வேதாத் ஶாஸ்த்ரம் பரம் நாஸ்தி' என்கிறபடியே வேதமே இப்படி முக்ய சாஸ்த்ர மாகையாலும், வேதம் முழுவதும் கார்யரூபார்த்த-

பரமாகவே யிருக்குமென்கிற ப்ராபாகரமதத்தை மஹாகவி ஆதரித்திருப்பதாகக் கொள்ளலாம். இவ்விடத்தில், ‘ காமாநய ’ ‘ க்ஷீரம் பிப ’, இத்யாதி லௌகிக வாக்யங்களிலே க்ரியாரூப கார்யமே அர்த்தமானாலும், வேதத்திலே யாகாதிகளைச் செய்த மாத்ரத்திலே ஸ்வர்க்காதி பலங்கள் வரக் காணாமையாலே, நாம் செய்யும் யாகாதி கார்யங்களுக்கும் அவற்றின் பலன்களுக்கும் நடுவிலே புண்யமென்றும் அத்ருஷ்டமென்றும் அபூர்வமென்றும் சொல்லப்படுகிற ஒரு சக்தியை அங்கீகரிக்கவேண்டு மாகையால், அதன் மூலமாகவே யாகாதிகள் பலத்திற்குக் காரணமாகவேண்டி யிருப்பதாலே, ப்ரத்யக்ஷமான யாகாதிகளுக்கு மேற்பட்ட அந்த அபூர்வ மென்பதே வேதத்திலே முக்ய கார்யமாம் என்கிற ப்ராபாகராபிப்ராயத்தை ‘ ஸூக்ஷ்ம ’ பதத்தாலே வெளியிட்டதாக விளங்குகிறது. இப்படி ப்ராபாகரமீமாம்ஸக மதத்தை அநுஸரித்து ச்லோகார்த்தம். பாட்ட மீமாம்ஸக மதத்தை அநுஸரித்தால், ‘ தர்மஸ்ய தத்வம் நிஹிதம் குஹாயாம் ’ ‘ ஸூக்ஷ்ம: பரம துர்ஜ்ஞேய: ஸதாம் தர்ம: ’ இத்யாதிகளின்படியே அபிஜ்ஞர்களுக்கும் அறிய அசக்யமாய், ப்ரமாணாந்தராகோசரமான தர்மரூபார்த்தத்தை சாஸ்த்ரம் காண்பிக்கிறதென்று அர்த்தம் கொள்ளவேணும். வேதம் கர்மகாண்டத்தாலே அநுஷ்டேயமான தர்மங்களையும், ஜ்ஞாந காண்டத்தாலே பரமபுருஷார்த்தமான ப்ரஹ்மத்தையும் சொல்லுகிறதென்று வேதாந்திகளின் ஸித்தாந்தம். அதை அநுஸரித்தபோது, ‘ ஸூக்ஷ்மமாய்க் கார்ய (அநுஷ்டேய) ரூபமான தர்மத்தையும், அர்த்த (புருஷார்த்த) ரூபமான ப்ரஹ்மத்தையும் காண்பிக்கிறது சாஸ்த்ரம் என்று ச்லோகத்திற்கு அர்த்தம் சொல்லத்தக்கது.

இப்படி மஹர்ஷி முதலாக மஹாகவி பர்யந்தமாக அசேஷ விவேகிகளாலும் அத்புதக் கண்ணுக ஆதரிக்கப்பட்ட இவ்வேதம் தனக்கு ஒருவித உபத்ரவமும் நேராதபடி நிரந்தரம் பாதுகாத்து வருவதற்காகவே பிறந்தவை ஸகல வித்யா ஸ்தாநங்களும். அவ்வோ வித்யாஸ்தாநங்களுக்கு அஸாதாரணமான விஷயங்கள் போலே இதிஹாஸ புராணங்களுக்கும் வகுத்த விஷயம் தத்வநிரூபணம். அநந்த சாகமான வேதத்திற்கு அபிமதமான தத்வார்த்தத்தை அதன் ஏகதேச மாத்ரத்தைக் கொண்டு ஸம்சய விபர்யயங்க ளற நாம் அறியமுடியாதென்று பரமக்ருபையாலே ப்ரத்யக்ஷித பூர்ணவேத ததர்த்தர்களான மஹர்ஷிகள் இவ்விதிஹாஸ புராணங்களை இயற்றியுள்ளனர். அவற்றில் புராணமென்பது ஜகத்தின் ஸ்ருஷ்டி ப்ரளய க்ரமங்களையும், சிற்சில மஹாபுருஷ மஹநீய சரித்ராம்சங்களையும் சொல்லி, அம்முகத்தாலே ஸர்வ ப்ரபஞ்ச தத்வபரமாய் நிற்கிறது. இதிஹாஸமென்பது அடியிலிருந்து முடிவுவரையில் ஒரு நாயகனுடைய சரித்ர நிரூபணத்திலே இதம்பரமாய் நின்று, அவர்களின் ஆசாரத்தை அறிவிக்கும் முறையிலே தர்மாநுஷ்டாந பத்ததியை உணர்த்தி, முக்யமாகத் தத்வநிரூபணம் செய்யும். அவ்வித இதிஹாஸத்தில் உட்பட்டவை ஸ்ரீமஹாபாரதமும் ப்ரக்ருதமான ஸ்ரீமத்ராமாயணமும். அவற்றில் ஸ்ரீமஹாபாரதம் பாண்டவ கதாப்ரதாநமா யிருந்தாலும், அக்கதா ஸ்திதி ப்ரகாரத்தாலும் அநேக சாகோபாக்யாநமுகத்தாலும் பாண்டவ ப்ராணனான ஸ்ரீக்ருஷ்ணனே பரதத்வ மென்பதை ஸ்பஷ்டமாக விளக்குவதாலே தத்வநிரூபணபர மாயிற்று. ஆனாலும் பரதத்வாவதாரமான ஸ்ரீக்ருஷ்ணனுடைய சரித்ரத்தை ஆநுபூர்வியாக அது சொல்லவில்லை. இப்படி தத்வநிரூபணத்திற்காகவே ப்ரவ்ருத்தர்களான வ்யாஸ சுக வால்மீகி பராசர மஹர்ஷிகள் நால்வரும் அருளிச்செய்த உபப்ரும்ஹணங்களில் ப்ரதாநமாயுள்ள பாரதம், பாகவதம், ராமாயணம், விஷ்ணுபுராணம் என்கிற ரத்நங்களில் பாரதம் போலே பாகவதம் விஷ்ணுபுராணம் என்கிற இரண்டுங்கூட ஸ்பஷ்டமாய் விஷ்ணுவே பரதத்வ மென்பதை ஸ்தாபிப்பதாயிருந்தாலும், புராண லக்ஷணங்களை அநுஸரித்து ஆநுபூர்வியாக ஏகபகவத்கதாபரமாக இராததால் ஸாக்ஷாத் பரதத்வபூதனை ஸ்ரீராமனை ப்ரதாந விஷயமாகக் கொண்டு ஆநுபூர்வியாக அவனுடைய சரித்ர வர்ணநமும் செய்து, அவனுடைய பரத்வத்தை அழகாய் நிரூபிக்கிற ஸ்ரீமத்ராமாயணமே ஸர்வ ச்ரேஷ்டமானது. ஸரள மதுர சப்த ஸந்தர்ப்ப ரூபமாய், ஸமயோசித ஸ்வரஸார்த்த ஸஹஸ்ர சோபிதமாய், ஸஹ்ருதய மந:ப்ரீதிகரமுமான இந்த ஸ்ரீமத்ராமாயணத்தின் பெருமை வாசாமகோசரமானது. எவ்வளவு கடிந ஹ்ருதயனாயிருப்பவனுக்கும் இதை ஸேவிக்கும் ஸமயத்திலே மனமுருகிக் கண்ணீர் பெருகி மயிர் சிலிர்த்துப் பெருமாளிடத்திலே ப்ராவண்யம் பிறப்பது ப்ரத்யக்ஷ ஸித்தம். ஐஹிகாமுஷ்மிக புருஷார்த்தங்களிலே ஸ்ரீமத்ராமாயண பாராயணத்தாலே ஸித்தியாதது ஒன்றுமில்லை.

இப்படி இவ்விதிஹாஸத்திற்கு ஸர்வாதிசாயியான ப்ரபாவமுண்டென்பதை நம் ஸ்ரீபாஷ்யகாரர் திருமலை நம்பிகள் பக்கலிலே பதினெட்டுதரம் இதன் அர்த்தம் கேட்டருளினதைக் கொண்டே நாம் நிச்சயிக்கலாம். ஸமஸ்த பாஹ்ய குத்ருஷ்டி மதங்களையும் ஸமூலோந்மூலநம்செய்து, ஸதாசார்ய ரக்ஷிதமான வைதிக விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை அநேக ஸத்தர்க்க ப்ரமாணங்களைக்கொண்டு அசஞ்சலமாக ஸ்தாபித்து, ஸர்வவர்ண க்ஷேமங்கரமான ஸந்மார்க்கத்தை யுணர்த்திவைத்த அபார ப்ரபாவசாலியான ஸ்ரீபாஷ்யகாரர் தாமே பதினெட்டுதரம் ஸ்ரீமத்ராமாயணார்த்தத்தைக் கேட்டருளினாரென்றால் அதன் ப்ரபாவத்திற்குப் பரிச்சேத முண்டோ? ‘ எவ்வளவு மேதாவியா யிருப்பவனுக்கும் ஆசார்ய ஸம்பந்த மிராதபோது ஸம்ப்ரதாயார்த்தம் சரிவர ஜ்ஞாதமாகாது; ஜ்ஞாதமான அம்சமும் பலவத்தாகாது. ஸதாசார்யாச்ரயண மிராதே ஸஹஸா க்ரந்தங்களைப்

பார்ப்பவனுக்கு அர்த்த நிஷ்கர்ஷம் பிறவாது. ஆகவே தத்தத் ஸமய ப்ரதிஷ்டிதமான தர்க்காபாஸங்களைக்கொண்டு அவ்யவஸ்திதமாய்ப் பூர்வாபர விருத்தமாய்ச் சிலவற்றைத் தானே தீர்மானித்துக்கொண்டு, சாஸ்த்ர மெல்லாம் வ்யாகுலமாகும்படி ஸ்வைர ப்ரவ்ருத்தி பண்ணும்படியே அவச்யம் நேரிடும். ஆகையால் 'ஆசார்யாத்தைவ வித்யா விதிதா ஸாதிஷ்டம் ப்ராபத்' 'ஆசார்யவாந் புருஷோ வேத', 'யஸ்ய தேவே பரா பக்தி: யதா தேவே ததா குரௌ। தஸ்யைதே கதிதா ஹ்யர்தா: ப்ரகாசந்தே மஹாத்மந:' இத்யாதி ச்ருத்யர்த்தத்தை அநுஷ்டித்துக் காட்ட ஸ்ரீபாஷ்யகாரரும் ஆசார்யாச்ரயணம் செய்யவேண்டியது ஆவச்யகமானாலும், ஸ்ரீமத் ராமாயணத்திற்காகத் தனியே ஆச்ரயித்ததும், அதிலும் பதினெட்டுதரம் அர்த்தங்களைக் கேட்டருளினதும் இதன் மஹத்வத்தையே குறிப்பிடுகிறது. அப்படி அவர் கேட்டருளின அர்த்தங்களை ஒரு ச்லோகம் எழுதி இங்கே ஸங்க்ரஹிக்கிறோம்.

பாஹ்யேக்ஷவ: க்ஷமாயோர்த்தா: ஸவஸயவசி ஸத்வ்ருத்த சாஸ்த்ரவேத்தா
மாயத்ராணே உபாயே ஹிதஸஹிதமயம் தத்ஸயோர்த்தவஸ்து।
கார்ண்யம் மோக்ஷஸாதோ பவிக்ஷிவ்யவர பாரதந்த்ர்யம் ததா
தத்வார்த்தா காமவ்ருத்தீக்ஷா வஸதிவ்ருத்தி ப்ராஹ ராமாயணார்த்தாந் ॥

பாஹ்யேக்ஷவ:—அயோத்யா காண்டாதிகளிலே 'விக்லவோ வீர்யஹீநோ ய: ஸ தைவமநுவர்த்ததே' என்றிப்படி இளையபெருமாள் செய்த நாஸ்திக வாதங்களையும், ஜாபாலி மஹர்ஷி செய்த சார்வாக மதோபந்யாஸத்தையும் நிராஸம் செய்த ப்ரக்ரியையாலே பாஹ்யமத நிராஸமென்றொரு அர்த்தம் ஸ்ரீமத்ராமாயணப்ரமத மாகிறது.

(2) க்ஷமாயோர்த்தா:—தசரதருடைய அச்வமேதாநுஷ்டாந ப்ரகரணத்திலே கல்பஸூத்ரார்த்தங்களையும், ஸ்ரீராமாவதார வர்ணந ப்ரகரணத்திலும் ஆங்காங்கு முஹூர்த்த நிர்ணயாதி ஸ்தலங்களிலும் ஜ்யோதிஶ்சாஸ்த்ரார்த்தத்தையும், ஹநுமானுடைய வைதுஷ்ய வர்ணநாதி ப்ரகரணங்களிலே வேத சிக்ஷாவ்யாகரணாதி விஷயங்களையும், 'நாவேத விதுஷ:, ருக்ஷிணோ ருக்ஷிஸம்பவா:' இத்யாதிகளிலே நிருக்த விஷயங்களையும், 'ஸர்வாக்ஷரோத்த ஹிதயோ: பாதௌ, உதாரவ்ருத்தார்தபதை:' இத்யாதிகளிலே ஸாஹித்யையையும், யுத்தகாண்டத்திலுள்ள லக்ஷ்மண ஹேதுவாதாதி பட்டங்களிலே ந்யாய மீமாம்ஸாதி சாஸ்த்ரபத்ததிகளையும், இப்படி அவ்வோ ப்ரகரணங்களிலிருக்கும் அர்த்த விசேஷங்களையும் ஆராய்ந்தபோது சதுஷ்ஷஷ்டி கலார்த்தமும் இந்த இதிஹாஸத்திலே ஸங்க்ருஹீத மென்று அறியலாம்.

(3) பஞ்ச க்ரஹங்களும் உச்சமாயிருந்து ஸர்வோத்க்ருஷ்டனை ஸ்ரீராமனுக்கே ராஜ்யப்ரம்சம், வநவாஸம், ஸீதாவியோகம், நாகபாசபந்தநம் முதலிய நாநாவித துக்கங்கள் நேர்ந்தபோது, அநாதி கர்ம ப்ரவாஹத்தில் அகப்பட்ட நமக்கு எங்ஙனே ப்ரக்ருதி மண்டலத்திலே ஸுகத்திற்கு அவகாசமென்று பயம் பிறந்து, ஸம்ஸ்ருதி ஜிஹாஸை இவ்விதிஹாஸந் தன்னாலே விவேகிகளுக்கு உண்டாகிறது.

(4) ஆக அமார்க்கங்களிலே புகுந்தால் அரக்கரைப்போலே அநர்த்தத்திற்கு ஆளாகவேணுமென்று அஞ்சி, 'நாஹம் ஜீவிதுமுத்ஸஹே, ந நமேயம்' என்று ஸத்வ்ருத்தத்திலே நிலை இதனால் ஏற்படுகிறது.

(5) அசோக வநத்திலே துஸ்ஸஹ துக்க ஸமுத்ரத்திலே மூழ்கியிருந்த ஸீதாதேவிக்கு அந்தத் துக்கம் தீர்ந்து ஸ்ரீராம ஸம்ச்லேஷம் உண்டானதற்கு ஹநுமத்ஸம்பந்தம் காரணமானது போலே, ஸம்ஸார துக்க நிவ்ருத்தி பூர்வகமான பகவத் ஸாயுஜ்யத்திற்கு ஆசார்ய ஸம்பந்தமே முக்யோபாய மென்றும் இங்கே தெளிய ப்ராப்தம்.

(6) இவ்வதிகாரி, 'ஸந்த்யாஹீநோ சுசிர் நித்யம் அநர்ஹ: ஸர்வகர்மஸு' என்கிறபடியே ஸந்த்யோபாஸநாதி முக்ய கர்மங்களை அநுஷ்டிக்காம லிருந்தால் ஸத்வ்ருத்த ஸ்திதி ஏற்படாதாகையாலே அந்த ஸந்த்யோபாஸநம் முக்யமான தாகையாலும்,

"த்ரிப்ய ஏவ து வேதேப்ய: பாதம் பாதமதூதுஹத்।
ததித்ய்ருசோऽஸ்யா: ஸாவித்ர்யா: பரமேஷ்டீ ப்ரஜாபதி: ॥
ஏததக்ஷரமேதாஞ்ச ஜபந் வ்யாஹ்ருதி பூர்விகாம்।
ஸந்த்யயோர் வேதவித் விப்ரோ வேதபுண்யேந யுஜ்யதே ॥"

என்று மநுஸ்ம்ருதியில் (2-ம் அத்.) சொல்லியபடி காயத்ரியானது ஸர்வ வேத ஸாரமானபடியாலும், அதற்கு அர்த்தம் சொன்னபோது வேதார்த்தம் பூர்ணமாகச் சொன்னபடியா மாகையாலே இருபத்துநாலு அக்ஷரங்களுள்ள காயத்ரியின் அர்த்தத்தை இருபத்து நாலாயிரம் ச்லோகங்கள் கொண்ட இந்த ஸ்ரீமத்ராமாயணத்திலே வெளியிட்டிருப்பது.

(7) இப்படி ஸதாசார சீலனா யிருப்பவனுக்குப் புருஷார்த்தோபாயாநுஷ்டாநத்திற்கு த்வயமென்கிற மந்த்ர ரத்நமே முக்ய மென்பதைக் கருதி, த்வயத்தின் ப்ரதம கண்டத்திலிருக்கும் ஆறு பாகங்களின் அர்த்தத்தை க்ரமேண ஆறு காண்டங்களால் ஜ்ஞாபித்து, உத்தர காண்டார்த்தமான

பகவத் ஸாயுஜ்யரூப புருஷார்த்த ப்ராப்தியை உத்தரகாண்டத்தாலே வெளியிட்டிருப்பதால் இது த்வயார்த்தபரமு மாகிறது.

(8) இதற்குத் தீர்க்க சரணாகதி யென்றும் சரணாகதி சாஸ்த்ர மென்றும் பெயர் வழங்கிவருவது ப்ரஸித்தமாகையாலே, இதற்கு ஹிதபரத்வம் நிஸ்ஸம்சயம்.

(9) “ந தேவலோகாக்ரமணம் நாமரத்வமஹம் வ்ருணே ।
ஐஶ்வர்யம் வாபி லோகாநாம் காமயே ந த்வயா விநா ॥
பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா கிரிஸாநுஷு ரம்ஸ்யதே ।
அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரத: ஸ்வபதஶ்ச தே ॥(2-31)

இத்யேவம் லக்ஷ்மணோக்த்யாதிகளாலே ஐச்வர்ய கைவல்ய விலக்ஷணமான கைங்கர்ய ஸாம்ராஜ்யமே ஸமுசித புருஷார்த்தமென்று வ்யக்தீக்ருதம்.

(10) அபயப்ரதாந ஸாராதிகளில் அருளிச்செய்தபடி ஸாக்ஷாத் விஷ்ணுவின் அவதாரமான ஸ்ரீராமனே பரதத்வமென்று ஒவ்வொரு காண்டத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

(11) “ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம் ப்ராப்துஶ்ச ப்ரத்யகாத்மந: ।
ப்ராப்த்யுபாயம் பலம் சைவ ததா ப்ராப்திவிரோதி ச ।
வதந்தி ஸகலா வேதா: ஸேதிஹாஸபுராணகா: ।”

என்கிற ப்ரமாணத்தை யொட்டி இதிஹாஸ ச்ரேஷ்டமான இதற்கு அர்த்த பஞ்சக பரத்வமும் சொல்லலாம்.

(12) ஸ்ரீராமன் செய்தருளின ஸமுத்ரராஜ சரணாகதி பலிக்காமல் போனதினாலும், ‘ஸ பித்ரா ச பரித்யக்த:......ஶரணம் கத:’ என்றிப்படி காகாதி வ்ருத்தாந்தங்களாலும் ஆகிஞ்சந்யாதி ரூபமான கார்ப்பண்யம் சரணாகதி செய்யுமவனுக்கு ஆவச்யகமென்று அறிவிக்கப்பட்டது.

(13) ஸர்வதா பகவத் ஸந்நிதியில் இருந்து தத்தாஸ்ய வ்ருத்தியிலே இழிந்த இளைய பெருமாளுடைய வ்ருத்தாந்தத்தாலே சேஷத்வம் ஸ்வரூபமென்று சொல்லப்பட்டது.

(14) ராம ஸுக்ரீவர்களுக்கு ஹநுமான் கடகராக இருந்தமையையும், விபீஷணர் சரணாகதி அநுஷ்டிக்கும்போது வாநர வீரர்களை முன்னிட்டமையையும், பிராட்டி ஸந்நிதியாலே காகம் தலைப்பெற்றமையும், அதில்லாமையாலே ராவணன் முடிந்ததையும் சொல்லுவதாலே புருஷகார புரஸ்காரம் வேண்டுமென்று சொன்னதாகிறது.

(15) பகவத் கைங்கர்ய பரராக இருந்த பரதன் அவர் சொன்னபடியே நடந்து வந்ததாலே பாரதந்த்ர்ய மென்கிற ஜீவஸ்வரூபம் ப்ரகாசிதமாயிற்று.

(16) இந்த சேஷத்வ பாரதந்த்ர்யங்களுக்கு எல்லை நிலமான பாகவத சேஷத்வபாரதந்த்ர்யங்கள் பரத ப்ருத்ய சத்ருக்ந வ்ருத்தத்தாலே வ்யக்தம்.

(17) லங்கையில் அசோக வநத்திலே அகப்பட்ட ஸீதைக்கு ராவண கும்பகர்ண இந்த்ரஜித் ப்ரஹஸ்தாதிகள் அழிந்த பிறகே ஸ்ரீராம ஸம்ச்லேஷத்தைச் சொல்லுகையாலே, சரீரத்திலே ஹ்ருதய குஹரத்திலே வஸிக்கு மிந்த ஜீவாத்மாவுக்கு அஹங்கார மமகார காம க்ரோதாதி கர்ம பந்தம் கழிந்தவாறே பகவல்லாப முண்டாகுமென்று கால விசேஷ ப்ரதீக்ஷை காண்பிக்கப்பட்டது.

(18) விஷயவாஸ மாத்ரத்தாலே அயோத்யா நகரத்திலிருந்த சராசரங்கள் முற்றும் மோக்ஷத்தை அடைந்ததாகச் சொன்னதினால் பகவத் க்ஷேத்ரமே ஸமுசித வாஸஸ்தாந மென்றதாயிற்று.

இப்படி இங்கு ஸங்க்ருஹீதமான பதினெட்டு அர்த்தங்களும் ஸ்ரீ பாஷ்யகாரராலே திருமலை நம்பிகள் பக்கலிலே விசேஷமாக விஸ்தரேண கேட்கப்பட்டவையாம். இவ்விடத்தில் ராவணனை அஹங்காரமாகச் சொன்னதுபோலே, அவனை மநஸ்ஸாகவும் அவனுடைய பத்துத் தலைகளைப் பத்து இந்த்ரியங்களாகவும் (ஜ்ஞாநேந்த்ரியங்கள் 5 கர்மேந்த்ரியங்கள் 5) ஸம்ப்ரதாயஜ்ஞர் சொல்வதுண்டு.

“இந்த்ரியாணாம் [illegible] ।
விவேகஶரஜாலேந ஶமம் நயதி யோகிநாம் ॥”

என்கிற ஸ்ம்ருதியிலே இவ்விஷயமும் ராமபாணங்களே இவ்விந்த்ரியங்களையும் மநஸ்ஸையும் அடக்கும்படியான விவேக விசேஷங்களென்பதும் சொல்லப்பட்டது. இதை அநுஸரித்து ஸங்கல்ப ஸூர்யோதயத்திலே,

“[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥”

என்று ஸ்ரீதேசிகன் அருளிச்செய்தார். இவ்விஷயங்களை யெல்லாம் மேலே யதாவஸரம் விசதமாகச் சொல்ல உத்தேசித்து இங்கே உபோத்காதத்திலே ஸங்க்ரஹேண குறித்த தத்தனை. இப்படி ஒவ்வொரு அதிகாரிக்கும் விசேஷமாக முமுக்ஷுவுக்கு ஜ்ஞாதவ்யங்களான அநேக அர்த்தங்கள் அடங்கியிருப்பதாலும், பகவத்விஷயம் தவிர அதிக கிளைக்கதைகளால் ஏற்படும் விஸ்தர மில்லாம லிருப்பதாலும், உத்தம காவ்யமாகையாலும், ஆழ்வார்கள் அருளிச்செயல்கள்போலே மானத்திற் கிணங்கி செவிக்கினிதாயிருப்ப தொன்றுகையாலும், இவ்விதிஹாஸோத்தமத்தை ஆசார்யர்கள் அதிசயேந ஆதரித்தார்கள்.

இதற்கு ராமாயணமென்றும், ஸீதாசரிதமென்றும், பௌலஸ்த்ய வதமென்றும் மூன்று பெயர் உண்டென்று,

'காவ்யம் ராமாயணம் க்ருத்ஸ்நம் ஸீதாயாஶ்சரிதம் மஹத் ।
பௌலஸ்த்யவதமித்யேவ சகார சரிதவ்ரத: ॥ (1-4-7)

என்கிற ச்லோகத்திலே சொல்லப்பட்டது. இது ராமனுக்கு அயநமாய் (அதாவது ப்ரதிபாதகமாய்) இருப்பதாலே ராமாயணமெனப்படுகிறது. இப்படி 'ராமாயா ஐநம்ராமாக:' அதாவது, பிராட்டியினுடையதான அயநம். கதி ஆக ஸீதாசரிதம் என்று அர்த்தமும் சொல்லலாம். இப்படியும் அர்த்தமுண்டென்பதை அறிவிக்கவும் 'ஸீதாயாஶ்சரிதம் மஹத்' என்று மேலே சொன்னது. ஆரம்பம் முதல் அவஸாநம் வரையில் 'நஹ்யேந்ய: ஹர்தி காவ்யாநாம் யஶோபாக் ராகவாத்ருதே' (7-98-18) என்று புகழப்பட்ட ஸ்ரீராமனையே ப்ரதாநமாகவுடைய இதற்கு ஸீதா சரிதமெனப் பெயர் பொருந்ாது என்று இங்கே ஆசங்கை வரக்கூடும். ஆனாலும் இந்தக் கதையின் விருத்திக்கு ஸீதாபஹாரமே முக்ய காரணமாகையாலும், பதினோராயிரம் வர்ஷங்கள் எழுந்தருளியிருந்த ராமன் அநேகமாய் ஸீதாதேவியை விட்டுப் பிரிந்து ராஜ்ய பரிபாலநம் செய்திருக்க, அந்த வ்ருத்தாந்தங்களை வெகு ஸங்க்ரஹமாக்கி, ஸீதா விவாஹத்திற்கு முன் பன்னிரண்டு வயது வளர்ந்திருந்த அவருடைய சரித்ரத்தைச் சொல்லாமல் விட்டிருப்பதாலும், ஸீதா ஸம்பந்த முள்ளவரையிலே சொல்லவேண்டுமென்று மஹர்ஷியின் திருவுள்ள மென்று ஏற்படுகிறது. ஆக ஸீதாசரிதம் என்கிற பெயர் உசிதமே. இதை 'ஸீதாயாஶ்சரிதம்மஹத்' என்று மஹத் பத ப்ரயோகம் செய்து ஸீதா ஸம்பந்த மில்லாத பாகத்தை விஸ்தரிக்கப் போவதில்லை யென்று ஸூசிப்பித்து மஹர்ஷி அறிவித்தார்.

(தொடரும்)

ஸ்ரீ:

விபரீதம் போலும் சில அநுபவங்கள்

[ஸ்ரீ. உப. தி. ராமஸ்வாமி ஐயங்கார், அட்வொகேட், சென்னை]

இன்ப துன்பம், மெய் பொய், இளமை முதுமை, புதுமை பழமை, முதலிய பல சேராச் சேர்த்திகளைத் தம்மிடத்தே தோற்றுவிக்கும் ஸர்வேச்வரனை அநுபவிக்கப் புகுவோரும், விசித்ரங்களாயும் விருத்தங்களாயும் காணும் சில அநுபவங்களை அடைகிறார்கள். பகவத் விஷயத்தில் பேராசையை வஹிப்பவர்களாதலால், இயற்கையில் ஏற்பட்டிருக்கும் சில வரம்புகள் கடந்து அநுபவித்தாலன்றி அவர்கள் ஆசை அடங்குவதில்லை. ஆசை வைக்காதவர்களுக்குள் எத்தனை காடமான பரிஷ்வங்கம் ஸம்பவிக்கினும், அது உடம்பில் எல்லாப் பக்கங்களும் சேர அணைய இயற்கையில் இயலாது போம். அத்தகைய புலவி ஆழ்வாருக்கு த்ருப்தி யளிப்பதில்லை. பகவதாலிங்கநம் ஆழ்வாருடைய திருமேனி உள்ளெல்லாம் வியாபித்துப் புறமெல்லாம் சூழ்ந்து நின்றாலன்றி ஆழ்வாருக்கு விச்லேஷம் மாறுவதில்லை. "ஒரு விட மொன்றின்றி என்னுள் கலந்தான்" என்று அவர் பேசும்படி எம்பெருமான் தனது ஸர்வாங்கத்தாலும் இவருடைய ஸர்வாங்கத்தையும் தழுவி நின்றால்தான் இவருக்குப் பூர்ண இன்பம். இன்றேல் 'நீர்மைகண் டிரங்கல்' வேண்டும்.

இப்படியே இந்த்ரிய வ்யாபாரங்கள் இயற்கையில் அமைந்தபடியை அதிக்ரமித்து அநுபவிக்கப் பாரிக்கிறார்கள் பகவதநுபவசாலிகள். ஸ்ருஷ்டி கர்த்தா இந்த்ரியங்களை வெளிப்போக்குடையவைகளாய் அமைத்தான். சில தீரர்கள் அம்ருதத்வத்தை இச்சித்தவர்களாய் இந்தப் போக்கை மாற்றி, இந்த்ரியங்களை உட்புறமாகத் திருப்பி, உள்ளே விளங்கும் அந்தர்யாமியை அநுபவிக்கிறார்களென்று ஒரு உபநிஷத் பேசுகிறது. நம்மாழ்வாரும் கூரத்தாழ்வானும் இதற்குமேலும் போகத் துணிந்து, ஒவ்வொரு இந்த்ரியமும் தனக்கு ஏற்பட்ட வ்யாபாரத்தைச் செய்வதோடு நில்லாமல், மற்றைய இந்த்ரிய வ்யாபாரங்களையும் ஏறிட்டுக்கொண்டு பகவதநுபவத்தில் இழியவேண்டும்படி மநோரதிக்கிறார்கள்.

" வாயவனை யல்லது வாழ்த்தாது கையுலகம்
தாயவனை யல்லது தான்தொழா—பேய்முலைநஞ்
சூணாக வுண்டா னுருவொடு பேரல்லால்
காணாகண் கேளா செவி. "

என்று பொய்கை யாழ்வாரும்,

"ஜிஹ்வே கீர்த்தய கேசவம் முரரிபும் சேதோ பஜ ஸ்ரீதரம்
பாணித்வந்த்வ ஸமர்ச்சயாச்யுதகதாः ஸ்ரோத்ரத்வய த்வம் ஸ்ருணு ।
க்ருஷ்ணம் லோகய லோசநத்வய ஹரேர் கச்சாங்க்ரியுக்மாலயம்
ஜிக்ர க்ராண முகுந்தபாத துலஸீம் மூர்தந் நமாதோக்ஷஜம் ॥"

என்று ஸ்ரீ குலசேகரரும், இப்படியே இன்னும் பல பெரியோர்களும் அவ்வோ இந்த்ரியங்களுக்கு வகுத்த துறைகளில் பகவத் விஷயத்தில் அவகாஹிக்கிருர்கள். துறைமாறி முறைமாறி "ஸர்வ கரணங்களாலும் ஸர்வ ப்ரகாரத்தாலும் எம்பெருமானை அநுபவிக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டு கூப்பிடுகிருர் நம்மாழ்வார். இது "முடியானே" என்று தொடங்கும் திருவாய்மொழிப் பதிகத்திற்கு (3-8) திருக்குருகைப்பிரான் பிள்ளான் வைத்தருளிய அவதாரிகை. இந்தத் திருவாய்மொழியில் ஆழ்வார் தமது கைகள் வாய்வெருவுவதாகவும், கண்கள் கைதொழுவதாகவும், செவிகள் கண்கொண்டு காண்பதாகவும், இப்படியெல்லாம் அநுபவித்துப் பேசுகிருர். ஒவ்வொரு இந்த்ரியமும் தனக்குள்ள வ்யாபாரத்தை மட்டும் எம்பெருமான் பக்கல் செய்து நிற்பது போதாமல், ஏனைய இந்த்ரியத்தின் வ்யாபாரத்தைத் தானடைந்து நிற்கிறது. ஆழ்வாருடைய இந்நிலையைப் பெரிய ஜீயரும் "முடியாத ஆசை மிக முற்று கரணங்கள்......ஒன்றொன்றின் செயல் விரும்ப உள்ளதெல்லாம் தாம் விரும்பி" என்று அழகாய் அருளிச் செய்கிருர். பஹுகுடும்பியான தரித்ர னொருவன் தர்ம சிந்தையுள்ள தநிகனிடம் போய், முன்பு தன் ப்ரஜைகளின் பசியையும் பின்பு தன் பசியையும் சொல்லி அலற்றுமாபோலே, பெருமாளிடத்தில் ஆழ்வார் தாம் படும் விடாயைக் காட்டிலும் தம்முடைய கரணங்கள் பெருவிடாய்ப் பட்டு நிற்பதை முன்னே விண்ணப்பித்துக்கொள்ளுகிருராகவுமாம்.

ஆழ்வாருக்குப் போல் ஆழ்வானுக்கும் இந்த உயர்நிலை ப்ராப்தமாகிறது.

"சக்ஷுஷீ ச்ருணுத: விபாவஸு; ஜிஹ்வா
ஜிக்ரதாஸ்ய வணவஸ்பார்யத்ந ।
நாஸிகா ஸ்வயி கரீஸ ததேதி ।"

என்றிப்படி உடலும் கண்ணும் எம்பெருமானைப் பருகுகின்றனவாம்; பருகவேண்டிய நாக்கு இந்த்ரியாந்தர வ்ருத்தியை அவலம்பித்து நிற்கின்றதாம்; செவியும் நாசியும் அவ்வண்ணமேயாம். இப்படி ஒன்று மற்ருென்றின் வ்யாபாரத்தை அடைந்து அநுபவிக்கச் சபலிக்கிறதாம். இந்தத் தசையை உற்று நோக்கின், ஒவ்வொரு இந்த்ரியமும்

சைதந்யத்தை அடைந்து, வேறு கரணங்கள் அமைத்துக்கொண்டு விட்டனபோல் தோன்றுகின்றது. இயற்கைக்கும் இந்நிலைக்கும் எவ்வளவு தூரம்?

அநுபவிப்பவர்கள் இவ்வண்ணம் நிற்பதற்கேற்ப, அநுபாவ்ய விஷயமாய் நிற்கும் ஸர்வேச்வரனும் மிகுந்த மாயனுதல் பற்றி, "தன் செய்கோலத் தூதுசெய் கண்கள் கொண்டொன்று பேசி, தூமொழி இசைகள் கொண்டொன்று நோக்கி" என்றபடி, கண்களால் பேசியும் மொழிகளால் கண்டும் விபரீத வ்ருத்திகளைச் செய்து காட்டுகிருன். அது மட்டுமா? பால்ய கௌமார யௌவநாதி அவஸ்தைகளுக்குள்ள ஒரு பரம்பரையான ஸோபாநத்தை மாற்றி, ஒரே வேளையில் பாலனுயும் யுவாவாயும் அநுபவத்தை விளைவிக்கிருன். இது பூர்வர்கள் அநுபவித்த மாதிரியிலிருந்து வெளியாகிறது. ஏக காலத்தில் பல பேருக்குப் பல மாதிரியாகத் தோன்றுவது இங்கே பொருளில்லை. ஒரே காலத்தில் ஒரே வ்யக்திக்கு இரு பருவத்தனைக் காண்பது தான் இங்கே பேசப்படுவது.

"உன்னையு மொக்கலையிற் கொண்டு தமில்மருவி
உன்னொடு தங்கள்கருத் தாயின செய்துவரும்
கன்னிய ரும்மகிழ........"

என்று அருளிய பெரியாழ்வார் இந்த ரஸத்தை உணர்ந்தே பாடியிருக்கிருர். ஒக்கலையில் (இடுப்பில்) கொள்ளும்படியான குழந்தை கன்னியர் கருத்தை யழிக்கும்படியான யௌவநத்துக்கும் அதிகாரியாயிருக்கிருர். "சிற்றிலோடு எங்கள் சிந்தையும் சிதைக்கக்கடவையோ கோவிந்தா" என்று ஆண்டாள் மநஸ்தாபப் படுவதும் இவ்வநுபவத்தை யொட்டியே 'முற்ரு இளையார் விளையாட்டொடு காதல் வெள்ளம் விளைவிக்கும் அம்மா' னுதல் பற்றி, இப்பெருமானை நிரந்தரமாக ஸமீபத்தில் தர்சிக்கப் பாக்யம் புரிந்த பெரியோர் பால்யமும் யௌவநமும் ஒருங்கே தோற்ற

["திகட்டுஷ்டநிஸா உபாதி நித்யம் நிஸமாலொக்யாய நாவிர்ப்ரஹ்மாணி।
யலோஜாக்ஷ நத்ருஷ்டபாலகேஸம் யஸ்நாஸாக்ஷிக யௌவநம்யவாநம் ॥"]

கண்டு களி கூருகிருர்கள். ஒரு தசையும் காணமாட்டாமல் நான்மறைகள் தேடியோடும் செல்வனை இருதசையிலும் முப்பொழுதும் காணக் கொடுத்து வைத்த மஹா புருஷர்கள் அநுபவித்ததே வரம்பு கடந்த அநுபவத்திற்குச் சரியான ஸாக்ஷ்யம்.

ஸ்ரீ:

[illegible]

[illegible]

*ஸ்ரீ கீதா மஹிமை

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

ஒரு வஸ்துவுக்கு மாஹாத்ம்யம் என்பது, மற்றவைகளுக் கில்லாமல் அவ்வஸ்துவுக்கே ஏற்படும் பெருமை. ப்ரக்ருதத்தில் பகவத் கீதைக்கு அத்தகைய மஹிமை இரண்டு வகையாயிருக்கும். கேட்பது சொல்வதால் மட்டுமே அளவிறந்த பாவங்களை அடியோடு அழிப்பது ஒருவகை.

"[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥"

[தர்மத்தில் வழுவாத நம் ஸம்வாதமான இக்கீதையை யாவனொருவன் அத்யயநம் செய்கிறானோ, அவனால் ஜ்ஞாந யஜ்ஞத்தால் நான் ஆராதிக்கப்பட்டவனாவேன் என்பது ஸர்வஜ்ஞனான என்னுடைய எண்ணம். அஸூயையின்றியும் ச்ரத்தையுடனும் எவன் கேட்பதையாவது செய்கிறானோ, அவனும் ப்ரதிபந்தக பாபங்களால் விடுபட்டுப் புண்யம் செய்தவர் பெற

*இது, ஸ்ரீரங்கம் வடக்குச் சித்திர வீதி ஸ்ரீ தேசிகன் ஸந்நிதியில் ஸ்ரீ ஹயக்ரீய வித்யா மந்திரத்தின் சார்பில் திருக்கோட்டியூர் ஸ்ரீ. உ.வே. ஸ்ரீராம தேசிகாசார்ய ஸ்வாமியால் செய்யப்பட்ட உபந்யாஸத்தின் ஸங்க்ரஹம்.

வேண்டிய லோகங்களை அடைவான். கீதாத்யயநம் செய்பவனுக்கும் ப்ராணாயாமம் செய்பவனுக்கும் ஜந்மாந்தரங்களில் செய்த பாபங்களுமில்லையாகும். மற்றும் எல்லாவித பாபங்களும் பகவத்கீதா பாடத்தால் அந்த க்ஷணமே நசித்துவிடும்.] என்று கீதா வசநங்களாலும் தந்மாஹாத்ம்யத்தின் வசநங்களாலும் ப்ரஸித்தம்.

"[illegible]
[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥"

என்று கேந்த்ரம் த்ரிகோணம் முதலிய ஸ்தாநங்களில் இருக்கும் குரு சுக்ரர்கள் எல்லா தோஷங்களையும் போக்குவர் என்பதற்குப் பகவத் கீதையை த்ருஷ்டாந்தமாக ஸ்ரீதேசிகாதிகளாலும் ப்ரமாணமாகக் காண்பிக்கப்பட்ட ப்ராசீந ஜ்யோதிஷ க்ரந்தங்களில் சொல்லுகையாலும், கீழே சொல்லிய ஒருவகையான பெருமையை ஒருவராலும் ஆக்ஷேபிக்கவே முடியாது. பகவத் ஜ்ஞாந பக்தி விஷய வைராக்யாதிகளை உண்டு பண்ணி, பகவானுடைய பரிபூர்ணாநுபவ காரித நித்ய கைங்கர்ய பர்யந்தமான பயனளித்தல் மற்றொரு வகையான பெருமை. இதுவும்,

'[illegible] ।
[illegible] ॥'

இத்யாதி வசநங்களால் ஸ்ரீ கீதையில் ஆக்ஷேபமில்லாதது. இந்த ஸ்ரீ கீதையின் பெருமையை ஸ்ரீ தேசிகன்:

"[illegible]-
[illegible] ।
[illegible]
[illegible] ॥

[illegible]-
[illegible] ।
[illegible]
[illegible] ॥"

என்கிற ச்லோகங்களாலும்,

"வன்பற் றறுக்கு மருந்தொன்று மாயவன் றானுரைத்த
இன்பக் கடலமு தாமென நின்றவிக் கீதைதன்னை

"அன்பர்க் குரைப்பவர் கேட்பவ ராதரித் தோதுமவர்
துன்பக் கடலுட் டுளங்குகை நீங்கித் துலங்குவரே."

என்னும் பாசுரத்தாலும் அநுக்ரஹித்தருளினார்.

உலகத்தில் ஒருபுருஷன், மற்றொரு கஷ்டப்படும் புருஷனைக் காப்பாற்றுவது அறிவளித்தல் என்பதாலேயே. இது அநுபவத்தாலும், வேறு உபாயங்களால் எக்காலும் காப்பாற்றுவது அசக்யமாகையாலும் விவாதமில்லாத விஷயம்.

"ந தேவா யஷ்டிமாதாய ரக்ஷந்தி பஶுபாலவத் ।
யம் ஹி ரக்ஷிதுமிச்சந்தி புத்த்யா ஸம்யோஜயந்தி தம் ॥
யஸ்மை தேவா: ப்ரயச்சந்தி புருஷாய பராபவம் ।
புத்திம் தஸ்யாபகர்ஷந்தி ஸோ(அ)வாசீநாநி பஶ்யதி ॥"

என்கிறபடி தேவதைகளும், அளிப்பதும் அழிப்பதும் அறிவைக் கொடுத்தும் கெடுத்துமே தான் செய்வது. பகவான் தானும், 'ததாமி புத்தியோகம் தம்' என்றும்,

"தாநஹம் த்விஷத: க்ரூராந் ஸம்ஸாரேஷு நராதமாந் ।
க்ஷிபாம்யஜஸ்ரமஶுபாநாஸுரீஷ்வேவ யோநிஷு ॥"

என்றும்,

"ப்ரவ்ருத்திம் ச நிவ்ருத்திம் ச ஜநா ந விதுராஸுரா:"

என்றும் அருளிச்செய்தான். ஆகையால் ரக்ஷை செய்யவேண்டுமானால் அறிவளித்தலாலேயே அது நிறைவேறவேண்டியதாயிற்று.

ஸ்ரிய: பதியான பகவான் ப்ரக்ருதியாகிற பெரும்பாழிலே அகில ஸத்வங்களையும் இழந்து, மெழுகிலொட்டி ஒளி இழந்திருக்கும் தங்கத்தின் தூசிபோலே கிடக்கும் எல்லா ஜீவர்களையும் அளிக்கத் திருவுள்ளங்கொண்டு, கரண களேபரங்களையும் வேதங்களையும் ஆசார்யர்களையும் மற்றும் வேண்டியவற்றையும் அநுக்ரஹித்தும், ஜீவர்களின் க்ஷேமகாரணமான விவேகம் வ்ருத்தியாகாமையைக் கண்டருளி, இனிமேல் தாமே நேராக எழுந்தருளித் தம் சுபாஶ்ரயமான திருமேனியை இவர்கள் கண்ணுக் கிலக்காக்கி,

"பாபம் ஹரதி யத் பும்ஸாம் ஸ்ம்ருதம் ஸங்கல்பநாமயம் ।"
[எந்தத் திருமுகமானது மநஸ்ஸால் பாவித்து நினைக்கப்பட்டால், போனபடி தெரியாமல் போகும்படி பாபங்களை ஆக்குமோ] என்றுள்ள

ப்ரமாணங்களின்படி விவேகத்தை அழிக்கும் விரோதிகளை விலக்கி, இவர்களை விபஶ்சித்துக்களாக்கத் திருவுள்ளங்கொண்டு, மத்ஸ்ய கூர்மாதி அவதாரங்களைப் பண்ணி வேதங்களை மீட்டுக் கொடுத்தும், அவைகளின் அர்த்தத்தின் விரிவுக்காக

"கீதநாதஸ்ம் நாவி நியாய ஷ்நரவாரவாபிகாசநா சாநாஹமவது ।
வேதஸநாஹிவேலாத்தி விநோதௌக வீதமய ஸமஸ்தாஸவஹ: ॥"

என்றும்,

"வக்யத்ர ஸ்ரீரங்கிணவியஜமஹாயாரகஸோ ஸயது யஸ்ராது ।"

என்றும்,

"பன்றியாம்
தேசுடைய தேவர் திருவரங்கச் செல்வனார்
பேசியிருப்பனகள் பேர்க்கவும் பேராவே."

என்னும் இத்தியாதிகளின்படி மாத்ஸ்ய கௌர்ம வாராஹாதி சாஸ்த்ரங்களை வெளியிட்டும், தமக்கு மிகவும் ப்ரியதமர்களாயும், இந்த ஜீவர்களுக்கு ஸஜாதீயராயுமுள்ள சில ஜீவர்களை அநுப்ரவேசித்து, நாரஸிம்ஹ வாமநாதி சாஸ்த்ரங்களை வெளியிட்டும்,

"கஸ்மை வாவயதி ப்ரஹ்மஜநஸ்தே த
தக்ஷம் ஸதி ஹ்ருத் பரம் வ்யாவ்யாம் தம் ।"

என்கிறபடியே பதினோராயிரமாண்டு உபநிஷத் வ்யாக்யாநம் செய்தருளியும் விவேகம் வ்ருத்தியடையாமை கண்டு, முக்தரைப்போலே முக்தராகராகி, மேல்முயற்சியை விட்டு மௌந மடைந்திருக்கும்போது துக்காகுல ஜீவ தர்சநத்தாலே கருணா தேவியானவள் ஓடிவந்து ஒருகால் பயிர்செய்து ஊழியெல்லாம் வாழும்படி பயனெடுப்பது தமக்கு யுக்தமாயிருக்க ஒன்பதின்கால் பயிர்செய்தும், ஒருவிளைவு மில்லாமை கண்டு, 'போனது மாத்ரம் கொண்டு உபேக்ஷை செய்யலாமோ ? 'ப்ராப்யஸ்தே ஶரணா ந வாசித்யஜந்தி' இல்லையோ ?' என்று பலதடவை விஜ்ஞாபித்தும் அவர் நிர்விண்ணரா யிருக்கக்கண்டு, அவரை அநுஸரித்தே, 'தேவரீர் இனிமேல் அறிவளிக்க முயலவேண்டா ; அகில உலகுகளையும் தாங்க அமைத்த அம்பு விஜ்ஞானிகளுக்கும் தேவதைகளுக்கும் விரோதிகளான அளவிறந்த அஸுரர்களைத் தாங்கத் திறமையின்றி ஆழ்கடலில் அமுங்குவதாகவும், அது நிமித்தம் அச்சுமையை விரைவாகவே போக்கியருளவேணும்' என்று மிதை ஒரு வ்யாஜமாகக் காட்டி, திருமாலைக் கண்ணனாக அவதரிப்பித்து,

இவரும் தாழுமாகச் சேர்ந்து ஸ்ரீகீதா தீபலக்ஷ்மியை ப்ரவர்த்திப்பித்து பெருமாள் நித்யவாஸம் கொண்டருளும் திருக்கோயிலான நெஞ்சகத்தி லுள்ள அந்தகாரத்தை முடிய முடியச் செய்தாள் என்கிறது.

'ப்ரஹ்மத்விஸாஸுரவ்யதிஷக்தப்ராதி' இங்கு அதிகவாசியான 'ப்ரஹ்மத' சப்தம் விபுதர்களோடும், த்விஷியாக்ஷயத்தோடும், த்வேஷம் செய்யும் அஸுரர்களோடும், வ்யதிஷக்தத்தோடும் விஶ்வம்பரையோடும், பாரத் தோடும், அபநயத்தோடும், ஃபலத்தோடும் சேர்கிறது.

விபுதர்களோடு சேரும்போது, 'விஷ்ணுஹஸ்தோவரோ தைவ:' என்கிற படியே பகவத் பக்தியுள்ள ஒருவரோடு விரோதமே கொடிய அளவிறந்த பாகவத விரோதம் அளவில்லாத கொடிய பாபமுள்ளமை தோற்றுகிறது. 'ப்ரஹ்மதம் யா தயா விஶ்வயாது த்விஷ இதி' வ்யுத்பத்தியால் த்விஷியாக்ஷயமான த்வேஷத்தில் அந்வயிக்கும்போது ஒவ்வொருவரிடத்திலும் த்வேஷம் அல்பமான நிலையின்றி அளவிறந்து நிற்கும் நிலை சொல்லிற்றும். த்வேஷிகளான அஸுரர்களோடு சேரும்போது, பாகவதர் திறத்தில் அதிக த்வேஷமுள்ள அஸுரர் அளவிறந்தவரெனவரும். வ்யதிஷக்தத்தோடும் சேரும்போது, க்ஷணம் விளம்பித்தால் ஆஶ்ரயமான பூமி அழியும்படியான கொடுமையும்

'தாவந்நவைஷ்ணவ ஸைமஹாவலி ஸாஜ்ஞயா
ஸக்யம் க்ஷயாவதி ந ஹி வாரயிதும் க்ஷமீஶ ।'

என்கிற கணக்கிலே பகவானாலும் போக்கத் தகாததாகுமென ஸம்பாவனை யின் கொடுமையும் வரும். விஶ்வம்பரையோடு சேரும்போது, விஶ்வம்பரை என்பது கேவல ரூடமான பெயரன்றிக்கே, பெருமைதாங்கின விஶ்வம்பரை என்பதினால் யோகார்த்தமான அகில ஜகத்பரண ஸாமர்த்யம் புஷ்கலமாய் அளவிறந்து நின்றமையும், அகில ஜகத்பரணத்துக்குத் தன் பர்த்தாவான புருஷோத்தமனுடைய நியமந நிர்வாஹத்துக்காகத் தக்க பெருமுயற்சி யுள்ளமையும் காட்டப்படும். பாரத்தோடு சேரும்போது, பாகவத த்வேஷி களெனும் பாரத்தின் கொடுமை ஏற்படும். அபநயநத்தோடு சேரும் போது, 'அஜ்ஞாநஹாந்தோ ஜ்ஞாநதாந ஹஸ்த்ரம்' என்கிறவனுக்கும் அற்பமான முயற்சியின்றி, த்ரோணாசார்யனை விழுங்கின ஒளியை வெல்வதற்குத் தகையின் கணக்கிலே அளவிறந்த முயற்சியுளதெனவரும். ஃபலத்தோடு சேரும்போது, 'அல்லிமலர் மகள் போகமயக்குக்கள்' என்றும், 'நீலா தாமஸந்நிஹித தீபஸாத்ம்யம்' என்னும் கணக்கிலே நித்ய ஸர்வஜ்ஞனை யும் நித்யப்ரபோதம் நிலைநின்ற விடம் தெரியாதபடி பண்ணி, இக்

கார்யத்தை உசிதமாக எண்ணி ப்ரவ்ருத்யுந்முகனாக ஆக்கவல்ல பெருமை யைச் சொல்லுகிறது.

ஆகஅநேக பாகவதர்களுக்கு அளவிறந்த வித்வேஷத்தைச் செய்யும் அளவில்லா அஸுரராகிற சுமையைத் தாங்குவதால், பொறுக்கவும் போக்கவும் முடியாத துக்கமடைந்தவளும், பரந்த பாரத்தை வஹிக்கப் பெரிய பாரிப்புடையவளுமான பூமிதேவியினுடைய கொடிய பெரும் பாரத்தினுடைய பெருமுயற்சியுள்ள போக்கடித்தல் எனப்பட்ட ஃபலம் காட்டினபடி ப்ரவ்ருத்தி வைபல்யத்தைக் கண்டு விமுகனானவனையும் ப்ரவ் ருத்யுந்முகனாக ஆக்கவல்ல வ்யாபாரத்தினாலென்றதாயிற்று. அபநயந மென்கிற துஷ்க்ருதவிநாசம் இருந்த இடத்தில் இருக்கச் செய்தேயே ஸங்கல்பத்தினாலே ஸாதிக்கலாமாகையாலே, லக்ஷ்மீதரனை அழைத்து வருவதற்கு இந்தப் பாராபநயநம் பர்யாப்த காரணமாகமாட்டா தாகையால், இதைச் ஃபலமென்று சொல்லவேண்டிற்று. மேல் உண்டாக்க வேண்டியதாக எண்ணப்பட்ட 'ஸா ஹி ஸ்ரீரம்ருதா ஸதாம்' எனப்படும் ஜீவேஶ்வர விஷய மான வெளிச்சிறப்பும், அதற்காக அந்தகார நிரஸந ஸமர்த்தையான தீப ஸ்ரீயும் நிஸ்ரீகனால் நிறைவேறாதாகையாலே லக்ஷ்மீதரனையே அவதரிப்பிக்க வேண்டினபடி. இப்படிஅவதரித்த ஸ்ரீதரனும் ஓர் பாரதமாப் பெரும்போர் புணர்த்த வளவிலே பூபாரம் நீங்கப் பெரிய ஸாதநமாகக் கொள்ளப்பட்ட அர்ஜுநன் புண்யமான போர் புணர்த்தலைப் பாபமாக எண்ணியதில் முயற்சியை இழந்து, உண்மையறியப் புகலற்று, தம்மேல் பரிவாளரான பகவானுடைய பொன்னடிக் கீழ் ப்ரபந்நனாகப் புக, ஓடிந்த உபகரணங்களை உருப்படுத்தி ஒளி உண்டுபண்ணி வைப்பாரைப்போல, பாரம் நீக்கப் பெரிய ஸாதநமாகக் கொண்ட பாண்டவனுக்கு உண்மையறிவை அளித் தாலல்லது ஒளியுள்ள உபகாரணமாக்க முடியாதாகையாலே பகவானை உண்மையறி வளித்தல், என்னும் பழைய கார்யத்திலே பெரிய பாரிப்புடன் ப்ரவர்த்திக்கச்செய்து அப்பாண்டவனை முன்னிட்டு பாரோர்களெல்லாரும் மகிழப் பகவத்கீதை யென்னும் பெரிய தீப ஸ்ரீயால் பொல்லாத இருளை நீக்கிப் பெரிய வெளிச்சிறப்பை உண்டுபண்ணினாள் தயாதேவி.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்வப்நங்களின் தத்வ விசாரம்.

[ஸ்ரீ. உப. வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்]

புருஷாயுஸ்ஸில், 'பாதியும் உறங்கிப்போகும்' என்று ஆழ்வார் அருளிச்செய்திருப்பினும், சரிபாதி யில்லாவிடினும், மூன்றில் ஒரு பாகமாகிலும் சராசரியில் ஸாதாரண புருஷர்கள் யாவர்க்கும் தூக்கத்தில் கழிக்கப்படுகிறது. நித்ரையைப் பற்றியாவது, அதனுடைய ஆவஶ்யகதையைப் பற்றியாவது இங்கு எழுத உத்தேசிக்கவில்லை. ஆனால், நாம் தூங்கும் பொழுது நம்மால் கண்டும் அநுபவிக்கப்படுபவையுமான ஸ்வப்நங்கள் (கனவுகள்) எனப்படும் ஸ்திதிகளைக் குறித்துத் தத்வ விசாரம் செய்வது மிகவும் அவஶ்யமென்று தோன்றுகிறது. ஸ்வப்நங்களைக் குறித்துப் பாஶ்சாத்யர்களும் நம்மவர்களுங்கூட அநேக விடங்களில் அநேக விதமாய் எழுதியிருந்த போதிலும், நாளது வரையில் அவைகளைப் பற்றிய தத்வ விசாரணை த்ருப்திகரமாகவாவது பூர்ணமாகவாவது செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால், ஸ்வப்நங்களின் தத்வத்தைச் சரிவர விசாரித்தறிவது மிகவும் அவஶ்யம் என்பதிலும் ஸந்தேஹமில்லை. ஏனெனில், புருஷாயுஸ்ஸில் மூன்றில் ஒரு பாகமாவது கழிந்துவிடும் 'தூக்கம்' என்கிற ஸ்திதியில் ஒவ்வொரு ராத்ரியிலும் பகலிலுங்கூட நமக்கு உண்டாகிக் கொண்டு நம்மால் அநுபவித்துக்கொண்டு வரப்படும் ஸுகதுக்காதிகளின் தத்வத்தை விசாரித்தறியாவிட்டால், நாம் நம்முடைய ஜீவதசையின் தத்வத்தை விசாரித் தறிந்தவர்கள் ஆவோமா?

எது விஷயத்திலும் தத்வ விசாரத்திற்கு முடிவு கிடையாதென்பதே சரியான கொள்கை. பூர்வகாலத்தில் அநேக மஹான்கள், இத்தேசத்திலும், இதர தேசங்களிலுங்கூட, ஸ்வப்நங்களின் தத்வத்தைப் பற்றி விசாரித்து யோசித்து எழுதியிருக்கிறார்களென்றால், அது, மேலும் விசாரிப்பதற்குக் காரணமாகுமே யொழிய, விசாரித்தறிய விஷயம் மிகுதியில்லை யென்று சொல்வதற் காதாரமாகாது. 'முன்னவர்கள் விசாரித் தெழுதியிருக்கிறார்கள்; அதுவே போதுமானது' என்பது சரியான கொள்கையாயிருப்பின், அவ்வப்பொழுது ப்ரக்ருதி ஶாஸ்த்ரம், வேதாந்த ஶாஸ்த்ரம், இன்னும் மற்றுமுள்ள ஶாஸ்த்ரங்கள், கலைகள் எல்லாவற்றிலும் அவ்வப்பொழுது பரிஶ்ரமப்பட்டுப் புதிது புதிதாகக் கண்டும் ஸ்தாபிக்கப்பட்டும் வந்தவையெல்லாம் நிரர்த்தகமாகவன்றோ கருதவேண்டி வரும்? அதுவுமன்றி, ஒவ்வொரு மநுஷ்யனுடைய உள்ளிலும் ஸர்வஜ்ஞனான பரமாத்மா கோயில்

கொண்டிருக்கிறான் என்பதை ஒப்புக்கொள்ளும் பக்ஷத்தில், இனிமேல் எதுவிஷயத்திலும் கண்டறியக் கூடியது இல்லை யென்பது அந்த ஸர்வஜ்ஞத்வத்திற்கே குறைவும் தோஷமு மல்லவாக வன்றோ முடியும்?

ப்ரக்ருதி ஶாஸ்த்ரத்தில் நாம் தத்வ விசாரம் மேலும் மேலும் செய்ய வேண்டியது அவஶ்யமாயினும், அவைகளில் பெரும்பான்மையாய் விலையுயர்ந்த உபகரணங்களும் கருவிகளும் ஏற்பாடு செய்து வைத்துக்கொண்டே நடத்தவேண்டியதாயிருக்கிறது. ஆதலால் தான் தற்காலத்தில் நம்மவர்களில் அநேகர் தீமான்களாயும் ஶக்திமான்களாயு மிருந்தபோதிலும், ப்ரக்ருதி ஶாஸ்த்ர தத்வ விசாரத்தில் விஶேஷமாய் மேன்மேலும் முயற்சிசெய்ய முடியாதவர்களா யிருக்கிறார்கள். ஆனால், ஸ்வப்நம் முதலான மநுஷ்யர்களுடைய மனதில் உண்டாகும் இயற்கையான ரீதிகளையும், விகாரங்களையும், தோற்றங்களையும் தீர விசாரித்துப் பரீக்ஷித்து அறியும் விஷயத்தில் விலையுயர்ந்த உபகரணங்களாவது கருவிகளாவது வேண்டியதில்லை.

அதுவுமன்றி, ப்ரக்ருதி ஶாஸ்த்ர விசாரத்திற்கும் வேதாந்த ஶாஸ்த்ரத்திற்கும் விசேஷமான ஸம்பந்தம் ஏற்படாமலிருப்பினும், ஸ்வப்நங்களின் தத்வத்திற்கும் வேதாந்தத்திற்கும் விசேஷமான ஸம்பந்தங்கள் உண்டு. இது விஷயம் ஸ்ரீ. சங்கராசார்யர், ஸ்ரீமத் ராமநுஜன், இவர்கள் ஸ்வப்நங்களைப் பற்றி எங்கெங்கே எவ்வெவ்விதம் சொல்லியிருக்கிறார்களென்று பார்க்கத் தெரியும்.

ஸ்வப்நங்களைப் பற்றி முதலில் நாம் நிர்த்தாரணம் செய்துகொள்ள வேண்டிய அம்ஶம் ஒன்று உண்டு. அதாவது, ஸ்வப்நம் கண்டுகொண்டிருக்கும்பொழுது, அது நமக்கு நிஶ்சயமாகவே தோன்றுவது. கண் விழித்த பிறகுதான் அது கனவு என்றும், நடவாதது என்றும், வெறும் தோற்றமென்றும், நாம் நிஶ்சயித்துக் கொள்ளுகிறோம். லோகமே மித்யையென்றும், நாம் காண்பது கேட்பது முதலானவைகளெல்லாம் வெறும் ப்ரமமென்றும் சொல்லும் ஸித்தாந்தங்களில் அந்தர் நாடிகையைப் போல் ஏற்படும் கனவுகளைப் பற்றி விசாரம் செய்யவேண்டிய அவஶ்யமே இல்லை. ஆதலால், இதர ஸித்தாந்தங்களிலும் மநுஷ்யனுடைய முழு தத்வத்தையும் கண்டறியவேண்டிய விஷயத்திலும், ஸ்வப்நங்களுடைய தத்வத்தைத் தீர விசாரித் தறிவது அத்யாவஶ்யகமாகும்.

ஸ்வப்நங்களில் அநேக விதமுண்டு. சில ஸ்வப்நங்கள் தேஹ ஸ்திதியினாலும் வ்யாதியினாலும் உண்டாகின்றன. மல ஜலாதிகள் ஸம்பந்தமாய் உண்டாகும் கனவுகள் இவ்வகைப் பட்டவை. ஒருவனுக்கு மூச்சு விடும் குழாய் அடைப்பினால் மூச்சு விடுவது கஷ்டமானால், எவனோ ஒருவன் தன்னைப் பிடிப்பதாகக் கனவு காணக்கூடும். அஜீர்

ணத்தால் மார்பின் அடியிலிருக்கும் வாயுப்பைகளும் இதயமும் அமுக்
கப்படுமாகில், யாரோ ஒருவர் மேலே உட்கார்ந்து அமுக்குவதாகக்
கனவு காணக்கூடும். இவ்வித கனவுகளைக் குறித்து அதிகமாய் விசாரஞ்
செய்யவேண்டிய அவஶ்யமில்லை. வேறு விதமான கனவுகள் வெளியில்
நடந்தேறுகிற விஷயங்களால் உண்டாக்கப்படக்கூடும். மின்சார விசிறி
ஓசைப்பட்டுக்கொண்டிருக்க, ஒருவன் மழை பெய்வதாகவும் கனவு காண
லாம். ஸமுத்ரத்தின் அருகில் அலையோசைகளைக் கேட்பதாகவும் கனவு
காணலாம். ஏதாவது ஒரு வஸ்து கீழேவிழ, இடி இடிப்பதாகக் கனவு
காணலாம். இவ்வித கனவுகளைப் பற்றியும் விசேஷமாய் ஆராய்ச்சி செய்ய
வேண்டிய அவசியமில்லை. மற்றொரு விதமான கனவுகள் ஒவ்வொருவ
னுடைய மனத்தின் யோசனைகள், எண்ணங்கள், ஸுக துக்கங்கள், ஆசை
கள், பயங்கள், கஷ்ட நஷ்டங்கள் முதலானவைகளால் உண்டாகக் கூடியன.
பரீக்ஷைக்குப் போயிருக்கிற ஒரு சிறுவன், (பரீக்ஷையில் ஜயம் உண்டா
குமோ உண்டாகாதோ வென்று ஸந்தேஹங்கொண்டிருப்பவன்)
அப்பரீக்ஷை தப்பிப் போனதாகக் கனவு காணக்கூடும். வர்த்தகனொருவன்
நஷ்டங்களைக் குறித்துச் சஞ்சலமடைந்திருக்குங் காலத்தில், தான் எல்லா
வற்றையு மிழந்து அதோகதி யடைந்ததாகக் கனவு காணக்கூடும். அவ்
விதமே, பேராசையே மிகுந்த ஒருவன், புதையல் கிடைத்ததாகக் கனவு
காணக்கூடும். இவ்வித கனவுகளெல்லாம் மனோபாவங்கள் காரணமாக
உண்டாகின்றனவாகையால், அவைகளைப் பற்றியும் நாம் விசேஷமாய்
விசாரிக்க இடமில்லை.

ஆனால் நாம் முக்யமாய் ஆராய்ச்சி செய்து அறியவேண்டிய கனவுகள்
இருவகையாகும். சில கனவுகள் ஒரு விதமான காரணமும் ஏற்படாமல்—
வெகு தூரத்தில் நடந்தவையோ, நடை பெறுகின்றவையோ, நடக்கப்
போகின்றவையோ—நிகழ்ச்சிகளை அதே விதமாய்க் கனவில் காண்பது.
மற்றொரு வகையான கனவுகள் நிகழ்ச்சி போலவே தென்படாவிட்டாலும்
சுபங்களையும் அசுபங்களையும் ஒரு விதமாய் ஸூசிப்பிக்கின்ற கனவுகள்.
கடைசியில் சொல்லப்பட்ட இந்தக் கனவுகளே ஸ்வப்ந ஶாஸ்த்ரமென்று
அநேக தேசங்களில் வெவ்வேறு விதமாய் வழங்கப்பட்டு வருகின்றன.
'எப்படிக்கனவு கண்டால் எது ஸூசிக்கப் படுகிறது?' என்று நிர்ணயிப்பது
அநேகருடைய ஒரே மாதிரியான அநுபவத்தால் ஏற்படுத்திக்கொள்ளக்
கூடும். அநேக கவிகளும் இம்மாதிரி கனவுகளை ஸூசகங்களாகத் தெரி
வித்து, தாங்களெழுதிய காவ்யங்களில் அவற்றைப் பாராட்டிக் கூறியுள்
ளார்.

ஒவ்வொரு பாஷையிலுங் கூட இவ்வித கனவுகளைப் பற்றி எழுதப்
பட்ட புத்தகங்கள் அநேகமுண்டு. அவைகளெல்லாவற்றையுமே சரியென்று

ஒப்புக்கொள்ள முடியாது. இது விஷயத்தில் அநேகமாய்ப் பொய்யும்
மோசமுங்கூட நேரிட இடமுண்டு. ஒரு விதமான கனவு கண்டால் ஒரு
விதமான நிகழ்ச்சி உண்டாகிறதாவென்று தீர்மானிக்கும் விஷயத்தில்,
ஏதோ ஒரு காலத்தில் அவ்விதமாய்க் கனவு கண்டு நிகழ்ச்சியும் சொன்ன
வாறே உண்டாகிறதென்பது போதாது. ஏனெனில், கார்ய காரண ஸம்
பந்தம் ஏற்படவேண்டுமே யானால், ஒரு விதமாய்க் கனவு கண்ட ஒவ்வொரு
தரமும் நிகழ்ச்சியும் சொன்னவாறே நடந்தாலல்லவோ நாம் அதை நம்
பக்கூடும். ஸாதாரணமாய் ஜனங்கள் கனவு கண்டு நிகழ்ச்சி உண்டாகாத
தடவைகளை யெல்லாம் ஞாபகத்தில் வைக்கிறதில்லை; மறந்தே விடுகிறார்
கள். இவற்றை யெல்லாம் யோசிக்கும் பொழுது, காணும் கனவுகளுக்கும்
பிறகு உண்டாகும் நிகழ்ச்சிகளுக்கும் ஏதாவது நிஜமான ஸம்பந்தம்
உண்டா இல்லையா? ஸம்பந்தம் உண்டாயின் அது எவ்விதமானது? எவ்
வித கனவுக்கு எவ்வித நிகழ்ச்சி உண்டு? அது ஏன் அப்படி உண்டாக
வேண்டும்? காரணமென்ன? என்னும் இவைகளை யெல்லாம் ஆராய்ச்சி
செய்து கண்டறிவது மிகவும் உபயோகமாகக் கூடும். ஆனால், இவ்வித விஷ
யங்களைக் குறித்து ஆராய்ச்சி செய்யவேண்டுமானால், அதற்காகச் சங்கங்
கள் ஏற்பாடு செய்து, சங்கத்தில் சேரும் ஒவ்வொருவரும் சரியாயும்
ஸத்யமாயும் தங்கள் தங்கள் அநுபவங்களைத் தெரிவித்து, அநேக அநுப
வங்களை ஒன்று சேர்த்து, அவைகளிலிருந்து தத்வத்தை ஊகித்தறிய
வேண்டும். இது விஷயமாக நம்முடைய தேசத்தில் ஒரு சங்கமாவது ஏற்
பட்டிருப்பதாகத் தெரியவில்லை. இது ஒரு பெரிய குறையென்றே சொல்
லக்கூடும்.

இது நிற்க, முக்காலங்களிலும் நிகழக்கூடிய நிகழ்ச்சிகளை ஒருவன்
அகஸ்மாத்தாய்க் கனவில் காண்பானாகில், பிறகு அவன் கனவு கண்ட
விதமே நிகழ்ந்ததாகத் தெரியவருமாகில், இதில் ஓர் பெரிய தத்வம்
இருக்கவேண்டு மல்லவா? ஆயிரம் மைல் தூரத்தில் ஸுகமாயிருந்த ஒரு
வன் இறந்ததாகக் கனவு காண, அவன் உண்மையாகவே இறந்து விட்ட
தாக மறுநாளோ இரண்டொரு நாட்களிலோ இறந்த ஸமாசாரம் வரு
வது ஆஶ்சர்ய மல்லவா? இவ்வித கனவுகள் அநேகருக்கு உண்டாயிருக்கக்
கூடுமென்று நம்ப இடமிருக்கின்றது. நிகழ்ந்ததும், நிகழுகின்றதும், ஸர்வ
ஜ்ஞனான பரமாத்மா அந்தர்யாமியாயிருக்கிற காரணத்தால் நமக்கு
ஏதோ ஒரு விதத்தில் கனவாய்த் தென்படுகிறதென்றாலும், இன்னும் சில
நாளோ அநேக நாட்களோ கழிந்து நிகழப்போகிற விஷயங்கள் நமக்கு
முன்னமேயே கனவில் தென்படுமாகில், அது இன்னும் ஆஶ்சர்யமானதல்
லவா? அதற்கும் நாம் ஸமாதானம் சொல்லக்கூடும்.

எனெனில், பகவான் ஸர்வஜ்ஞனானதால், அவனுக்குச் சென்ற காலமென்றும் வருங்காலமென்றும் பேதங் கிடையாது. ஆதலால் இந்த ஜீவாத்மாவுக்குப் பரமாத்மாவாயிருக்கிற பகவானுக்குத் தெரிந்தவை தெரியக் கூடியவையெல்லாம் தஜ்ஞா க்யமான சில ஜீவாத்மாக்களுக்குச் சில காலங்களில் தெரியக்கூடும். இவ்வித ஸ்வப்நங்கள் நம் ஒவ்வொருவருக்கும் சில காலங்களில் ப்ராப்தமாயிருக்கலாம். அவ்வித கனவுகளை மற்றக் கனவுகளிலிருந்தும் பிரித்து அறிய வகையுண்டோ? அது எப்படி? எவரெவருக்கு எவ்வெக் காலங்களில் அவ்வித கனவுகள் உண்டாகின்றன? அவ்வித கனவுகளை நாம் முயற்சியினாலாவது ப்ரார்த்தனையினாலாவது ஸாதாரணமாகச் செய்துகொள்ள, முடியுமோ? இவ்விதமான எண்ணிறந்த கேள்விகளும் யோசனைகளும் மனதில் உதிக்கின்றன. இவைகளை ஆராய்ச்சி செய்து நிர்த்தாரணம் செய்யக்கூடுமானால், நம்முடைய வேதாந்தம் எவ்வளவு விளக்க முறும்? இவ்வித விஷயங்களைக் குறித்து இந்தத் தீபிகையைப் படிப்போர் தங்கள் தங்களுக்கு அவ்வப்பொழுது உண்டாகும் ஸ்வப்நங்களையும், பிறகு அவை ஸம்பந்தமாக உண்டாகும் நிகழ்ச்சிகளையும் எழுதிப் பிரசுரப்படுத்தவேண்டுமென்று ப்ரார்த்திக்கப் படுகிறது. அப்படி ப்ரசுரப்படுத்துவார்களே யாகில், அவர்கள் யாவரும் தத்வ விசாரத்திற்கும் ஆராய்ச்சிக்கும் மிகவும் உபகாரஞ் செய்பவராவர்.

ஸ்ரீ:

கம்பனும் கண்ணனும்

[பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ஸ்ரீ. உப. ரெ. திருமலை ஐயங்கார், காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்].

"சம்ப நாடன்னு மைசெவி சாற்றுபூங்
கொம்ப னுடன்கொ ழுநனி ராமப்பேர்
பம்ப நாடழைக் குங்கதை பாச்செய்த
கம்ப நாடன்க ழறலை யிற்கொள்வாம்"

[சிவன் பூர்வ காலத்தில் தனக்குரியளான உமாதேவியின் காதுகளில் உபதேசித்த பூங்கொம்பு போல்பவளாகிய ஜாநகியின் நாதனாகிய ஸ்ரீ ராமபிரானது நாமமானது உலக முழுதும் வியாபிக்க, எக்காலத்தும் வடமொழியில் விருத்தியடையா நிற்கிற இராம சரிதத்தைத் தமிழ்ச் செய்யுளாகச் செய்தருளிய கம்ப நாட்டாழ்வாருடைய திருவடிகளாகிற மலர்களை யாம் சிரசில் சூடுவோம்.]

நூல் மூன்று வகைப்படும். அவை: முதனூல், வழிநூல், சார்பு நூல் என்பன. இயல்பாகவே வினையினின்று நீங்கித் தானே விளங்கிய அறிவினையுடைய கடவுள் உயிர்களுக்கு ஆதிகாலத்திலே செய்தது முதனூல். கடவுளும் அவனருள் வழிபட்டோருமாகிய தொல்லாசிரியர், நூல்களினுடைய பொருண்முடிபு முழுவதும் ஒத்து வழிநூல் செய்வோன் முதனூ லிருக்கவுந் தான் வழிநூல் செய்தற்குக் காரணமாக வேண்டிய வேறுபாடுகளையும் உடன் சொல்லி, அவ்வேறுபாடுகள் அறிவுடையோர் பலர்க்கும் ஒப்ப முடிந்தமையால் அழியாது நிலைபெற்று விளங்குந் தன்மையை யுடையது வழிநூல். எனவே முதனூல் முழுவது மொத்துச் சிறிது வேறுபட்டிருப்பது வழிநூல் எனலாம். வழிநூல் ஆசிரியர் பழைய இலக்கணங்களாகி இக்காலத்து வழங்காதவைகளை இறந்தது விலக்க லென்னும் உத்தியினாலே விலக்கியும், புதிய இலக்கணங்களாகி இக்காலத்து வழங்குமவைகளை எதிரது போற்ற லென்னும் உத்தியினாலே தழுவியுங் கூறுதல் சகஜம். முதனூல் வழிநூல்களுக்குச் சிறுபான்மை யொத்துப் பெரும்பாலும் வேறுபட்டிருப்பது சார்பு நூல்.

ஸ்ரீ ராமாயணத்தை ஆதியில் வடமொழியிற் செய்தவர் வால்மீகி மாமுனிவர். இவ் வால்மீகி ராமாயணம் முதனூல். கம்ப நாட்டாழ்வா ரியற்றிய தமிழ் ராமாயணம் வழிநூல். இதனைச் சிறப்புப்பாயிரத்தில் கம்பரே கூறுகின்றார். வடமொழியில் இந்த ராம சரிதத்தைச் சொன்னவராகிய மூவருள்ளும் முதன்மையாகிய வாக்கினையுடையவராகிய வால்மீகி முனிவரது சொல்லின்படியே தான் தமிழ்க்கவிகளால் இந்தக் காவியத்தைச் செய்த முறைமை என்பது அக்கவியின் கருத்து.

இராமவதாரத்தைச் சிறப்பித்துக் கூறத் துணிந்த கம்பர், வான்மீகி முனிவருக்கு மிகவும் பிற்பட்ட காலத்தவ ராதலானும், ஆழ்வார்களிடம் விசேஷ ஈடுபாடு கொண்டவ ராதலானும், அவர்களிற் பெரும்பாலர் ஆயர் தம் கொழுந்தான கண்ணபிரானை மிகுதியும் அனுபவித்திருத்தலானும், அதையும் அடியொற்றித் தாமியற்றிய இராமாயணத்தில் கண்ணனையும் சிறப்பித்து அதில் ஈடுபட்டு அனுபவிக்கிறார்.

பால காண்டம் சிறப்புப்பாயிரம் மூன்றாவது கவியின் மூன்றும் அடியில் வந்துள்ள 'மெய்ந்நெறி' என்பதற்கு, "எம்பெருமானை அடைவதற்குக் கர்மம், ஞானம், பக்தி, பிரபத்தி முதலியவாகப் பல உபாயங்களிருப்பினும், அவை யாவும் எம்பெருமானது திருவருளில்லாவிடின் பயன் தாரா வாதலானும், 'மாமேகம் ஶரணம் வ்ரஜ' [கர்மம் முதலியவற்றை உபாயமாகப் பற்றாமல் என்னொருவனையே உபாயமாகப் பற்று] என்று பகவான் தானே

ஸ்ரீ கீதையில் அருளிச் செய்திருத்தலானும், கடவுளை 'மெய்ந் நெறி' என்றார்" என்பது பேராசிரியர் உரை.

சரயூ நதியின் வெள்ளம் முல்லை நிலத்துச் செல்லுதலைக் கவிச் சக்கிரவர்த்தியாய கம்பர்:

"செறிநறுந் தயிரும் பாலும் வெண்ணெயுஞ் சேர்ந்த நெய்யும்
உறியொடு வாரி யுண்டு குருந்தொடு மருத முந்தி
மறியுடை யாயர் மாதர் வனைதுகில் வாரு நீரால்
பொறிவரி யரவி னூடும் புனிதனும் போலு மன்றே."

என்ற அழகிய கவியால் வெள்ளத்திற்கும் கண்ணனுக்கும் சிலேடை முகத்தால் ஒப்புரைக்கின்றார்.

வெள்ளமானது புள்ளிகளையும் வரிகளையுமுடைய பாம்பின்மேல் ஆடின பரிசுத்தனாகிய கண்ணனையும் ஒக்கும். எப்படியெனின்: உறைந்த நன்மணமுள்ள தயிரையும் கட்டித் தூக்கியிருந்த உறியோடு வாரிப் பருகி, குருந்த மரத்துடன் மருத மரத்தைத் தள்ளி, ஆடுகளைத் தமக்குச் செல்வமாகப் பெற்ற இடையர்களுடைய பெண்களது உடுக்கின்ற வஸ்திரங்களை வாரிக் கொண்டு போகின்ற நீரினால். பால் முதலியவற்றை வாரித் தன்னுட் கொள்ளுதல், குருந்த மருத மரங்களை முறித்தல், ஆயராடையைக் கவர்தல் என்பவை கண்ணனுக்கும் வெள்ளத்துக்குமுள்ள பொதுத் தன்மைகள். அரக்கரால் ஆவேசிக்கப்பட்டுத் தன்மீது வீழ்ந்து கொல்லவேணுமென்று இருந்த குருந்த மரத்தைக் கண்ணன் தானே முறித்தெறிந்தான். கண்ணன் சேஷ்டிதங்களைக் கண்டு சினந்த யசோதைப் பிராட்டியார் ஒருநாள் கண்ணினுண் சிறுத்தாம்பினால் திருவயிற்றிற் கட்டி ஒருரலிலே பிணித்து விட்டாள். பெருமாயனான கோபாலன் அவ்வுரலை இழுத்துக் கொண்டு அங்கிருந்த இரட்டை மருதத்தின் நடுவிலே புக, அவ்வுரல் குறுக்காய் நின்று இழுக்கப்பட, அம்மரங்களிரண்டும் முறிந்து விழ, குபேர புத்திரரான நளகூபரன் மணிக்கிரீவன் இருவரும் சாபந்தீர்ந்து விண்ணுலகு எய்தினர். "மருதிடைச்சென் றுயர்சகடம் விழவுதைத்துப் பொதுவர்மனை வளர்ந்த மாலே!" என்பர் வில்லியும். காளியன் எனும் கொடிய ஐந்தலை நாகம் யமுனா நதியில் ஓர் மடுவில் இருந்துகொண்டு அம்மடு முழுவதையும் பானத்துக்கு யோக்கியமாகாதபடி செய்தது. கண்ணன் அம்மடுவிற்கு அருகிலுள்ளதொரு கடம்ப மரத்தின் மேலேறி அம்மடுவிற் குதித்து, கொடிய அந்நாகத்தின் படங்களின் மேல் ஏறித் துவைத்து நர்த்தனஞ் செய்து நசுக்கி வலியடக்கிப் பின்னர் நாக கன்னிகைகளின் பிரார்த்தனைக்கிணங்கி அக்காளியனை கடலிற் சென்று வாழுமாறு அருளினன். இவற்றின் உள்ளுறை பொருள்களை அறிஞர்பால் கேட்டுணர்க.

ஸ்ரீ ராமபிரான் அனுமதியினால் இலக்குவன் அழைத்துச் செல்லக் குகன் அப்பிரானைக் கண்டு வணங்குதலைக் கம்ப நாடர்,

"கண்ணனைக் கண்ணி னோக்கிக் களித்தன னிருண்ட குஞ்சி
மண்ணுறப் பணிந்து மேனி வளைத்துவாய் புதைத்து நின்றான்"

[கண்ணழகுடைய ஸ்ரீ ராமபிரானைக் கண்ணைப் படைத்த பயன் பெறத் தரிசித்து மனமகிழ்ந்து, கறுத்த கூந்தலைக் கொண்ட சிரசு மண்மீது பொருந்தச் சாஷ்டாங்கமாகச் சேவித்துத் தன்னுடம்பை வணங்கிக்கொண்டு கையால் வாயை மூடியவண்ணம் நின்றான்] என்பர். இங்குக் கண்ணன் என்பது க்ருஷ்ணன் என்ற வடமொழியின் திரிபாகக் கொண்டு, யாவருடைய மனத்தையுங் கவருந் தன்மையன் என்று கூறுதல் பொருத்தமுடையது. இவற்றால் கம்பருக்குக் கண்ணனிடம் உள்ள பக்தி வெளிப்படை.

"பத்துடை யடியவர்க் கெளியவன் பிறர்களுக் கரிய
வித்தகன் மலர்மகள் விரும்புமநம் மரும்பெற லடிகள்
மத்துறு கடைவெண்ணெய் களவினி லுரவிடை யாப்புண்டு
எத்திறம்! உறலினொ டிணைந்திருந் தேங்கிய வெளிவே."

என்ற நம்மாழ்வார் திருப்பாசுரத்தின் சுவையை,

"செறிநறுந் தயிரும் பாலும் வெண்ணெயுஞ் சேர்ந்த நெய்யும்
உறியொடு வாரி யுண்டு குருந்தொடு மருத முந்தி"

என இயைத்துக் கூறினார் கம்பர்.

நாச்சியார் திருமொழி "கோழி யழைப்பதன் முன்னம்" என்ற பதிகத்தைத் திருவுளத்துக் கொண்டு கம்பர்,

"மறியுடை யாயர் மாதர் புனைதுகில் வாரு நீரால்
பொறிவரி யரவி னூடும் புனிதனும் போலு மன்றே"

என்றார் போலும். மேலும்

"நஞ்சுமிழ் நாகம் கிடந்தநற் பொய்கைபுக்கு
அஞ்சப் பணத்தின்மேல் பாய்ந்திட் டருள்செய்த
அஞ்சன வண்ணன்"
"காளியன் பொய்கை கலங்கப்பாய்ந் திட்டவன்
நீண்முடி யைந்திலும் நின்று நடம்செய்து
மீள வவனுக்கு அருள்செய்த வித்தகன்"

என்ற பெரியாழ்வார் பாசுரங்களும், "பொறி வரி யரவினூடும் புனிதன்" என்பதும் ஒப்பிடற்குரியன.

ஸ்ரீ:

மீமாம்ஸா ஸங்க்ரஹம்

[திவான் பஹதூர் ஸ்ரீ. உப. வி. கே. ராமாநுஜாசார்யர்.]

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

பன்னிரண்டாவது அத்யாயம்

முதல் பாதம்

298. இரண்டு யாகங்களைக் குறித்து ஒரு வியாபாரத்தை ஒரே தடவை செய்வது தந்த்ரம்; ஒரு யாகத்துக்காகச் செய்யப்பட்ட அங்கம் அத்துடன் செய்யப்பட்ட வேறு யாகத்துக்கும் உபகாரம் செய்வதற்கு ப்ரஸங்கம் என்று பெயர். அந்த அங்கத்தை மறுபடியும் செய்யவேண்டியதில்லை. இந்த ப்ரஸங்கத்தின் விஷயம் இந்த அத்தியாயத்தில் விசாரிக்கப்படுகிறது.

299. அக்னிஷ்டோமஸோம யாகத்துக்கு அங்கமாக அக்னீஷோமீய பசு யாகமும், அதின் நடுவில் ஒரு புரோடாச யாகமும் செய்யப்படுகின்றன. இங்கே ப்ரயாஜம் முதலான அங்கங்களைப் பசு யாகத்துக்குச் செய்த பிறகு புரோடாச யாகத்துக்கும் செய்யவேண்டுமோ? என்று ஸந்தேஹம். பதில்- வேண்டியதில்லை. பசு யாகத்துக்குச் செய்யப்பட்ட அங்கங்கள் புரோடாச யாகத்துக்கும் உபகாரம் செய்கின்றன. இது ஸ்வயம்ப்ரவ்ருத்த [தானாய் உண்டாகிறது]. இதைத் தடுப்பாரில்லை: உதாரணம்—வாசல் திண்ணைக்காக ஏற்றி வைக்கப்பட்ட விளக்கு தெருவுக்கும் வெளிச்சம் கொடுக்கிறது. அதுபோல். (அதி—1)

300. அக்னீஷோமீய பசு யாகத்தில் 275 பாராவில் விசாரித்த வாக்யத்தில் ஆஜ்ய பாகங்கள் இல்லை. அவைகள் ப்ரஸங்கத்தால் வருகிறதில்லை. அவைகளைப் புரோடாச யாகத்துக்குச் செய்ய வேண்டுமா என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்:— செய்யவேண்டியதில்லை. ஏனென்றால், புரோடாச யாகத்தைப் பிரகிருதியைப்போல் செய்கிறது என்கிற அநுமானம் பாதிக்கப்படுகிறது. ஆகையால் இந்த அங்கங்கள் வர இடமில்லை.

ஸித்தாந்தம்:— அநுமானம் பாதிக்கப்படவில்லை. பாதிக்கப்படுவது ப்ரயோக வசனம். ப்ரயோக வசநம் என்பது ப்ரதான யாகத்தை அங்கங்

களுடன் செய்யவேண்டும் என்பது. இப்படியில்லாமல் அநுமானமே பாதிக்கப்படுவதானால், புரோடாச யாகங்களுக்கு அங்கங்களே யில்லாமல் போகும். அவைகளின் உபகாரம் ப்ரஸங்கத்தால் வரும் என்று சொல்லவே கூடாது. ஆகையால் அநுமானத்தால் அங்கங்கள் வருகின்றன. அவைகளில் எவைகளின் உபகாரம் ப்ரஸங்கத்தால் கிடைக்குமோ, அவைகள் பாதிக்கப்படுகின்றன. ப்ரஸங்கத்தால் எந்த அங்கங்களின் உபகாரம் கிடைக்காதோ, அவைகளைச்செய்ய வேண்டும். உதாரணம் ராமன், க்ருஷ்ணன் வண்டியில் ஏறிக்கொண்டான் என்றால், ராமன் வண்டி திரும்பிப்போய் விடுகிறது. அவனுடைய துணிகளும் கடுக்கன்களும் போய்விடவில்லை. அதுபோல, (அதி-2)

301. I ப்ரஸங்கத்துக்கு இன்னுமோர் உதாரணம் அக்னிஷ்டோம யாகத்தில் அங்கங்களோடு கூடிய ப்ரதானயாகங்களைச்செய்ய மஹா வேதி செய்யப்படுகிறது. தர்ச பூர்ணமாஸ இஷ்டிகளைப்போல் செய்யப்படும் யாகங்களின் ஹவிஸுக்களையும் அதில் வைக்கமுடியும். அவைகளுக்காகத் தனியாய் வேதி வேண்டியதில்லை. (அதி-3)

2. II ப்ரஸங்கத்தால் உபகாரம் கிடைக்காமலிருப்பதற்குஉதாரணம்- முன் சொன்ன யாகத்தில் ஸோம யாகங்கள் ஆன பிறகு ஸோம தேவதையின் சருயாகம் செய்யப்படுகிறது. அதில் க்ரஹபாத்ரங்களையும் கொண்டு ஹோமம் செய்யவேண்டியதில்லை. ஜுஹுவாலும், ஸ்ருவத்தாலும் செய்ய வேண்டிய ஹோமங்களைச் சொன்ன பாத்திரங்களால் செய்தால், யாகத்துக்கு குணக்குறைவு உண்டாகும். இஷ்டிகளைச் செய்தபோது உபயோகப்பட்ட ஜுஹு முதலானவைகள் இருக்கின்றன. (அதி-4)

3. III முன் சொன்ன யாகத்திலேயே பசுவின் அங்கங்களை ஶாமித்ரத்தின் அக்கினியில் ச்ரபணம் செய்கிறது. பசுபுரோடாசத்தையும் அதில் ச்ரபணம் பண்ணலாமா என்று ஸந்தேஹம். பதில்—பண்ண வேண்டியதில்லை. ப்ரகிருதியில் அதை கார்ஹபத்ய அக்னியில் ச்ரபணம் செய்யவேண்டும். அந்த அக்கினி சாலாமுகீயம் என்கிற பெயருடனிருக்கிறது. குணக்குறைவு இல்லாமைக்காக அதிலேயே ச்ரபணம் செய்ய வேண்டும். (அதி-5)

302. ப்ரஸங்கத்தால் உபகாரமுண்டாவதற்கு இடமும் காலமும் ஒன்றாக இருக்கவேண்டியது. உதாரணம்:—

1. சொன்ன யாகத்திலேயே இரண்டு வண்டிகளைக் கொண்டு போய் ஹவிர்தானத்தில் வைக்கிறது. அப்படிச் செய்வதற்குப் பின்னாலே அவைகளிலிருந்து நிர்வாபம் செய்யலாமா? அவைகளும் வண்டிகள் தானே என்று

ஸந்தேஹம்: பதில்—கூடாது. இடங்கள் வேறானபடியால். மஹாவேதியில் மந்திரத்துடன் அவைகளைக்கொண்டு போய் ஹவிர்த்தானம் என்கிற மண்டபத்தில் வைக்கிறது. நிர்வாபத்தைக் கார்ஹபத்யத்துக்குமேல் புறத்தில் செய்கிறது. ஆகையால் இடங்கள் வேறு. நிர்வாபத்துக்கு வண்டியில்லாமலிருக்கவில்லை. "ஸநாமஹி ப்ரவசதப்யஹி" என்கிற பஹுவசநத்தால் அது ஏற்படுகிறது. (அதி—7)

11. தீக்ஷை செய்யும் காலத்தில் ஜாகரணம் [தூங்காமலிருப்பது] விதிக்கப்படுகிறது. ப்ராயணீயேஷ்டி முதலானவைகளைச் செய்யும்போது ஜாகரணத்தைச் செய்யவேண்டியதா? என்று ஸந்தேஹம். பதில்—செய்யவேண்டும். ஜாகரணத்தின் பிரயோஜனம் த்ருஷ்டமாயிருந்தால், அதாவது அக்னியை ரக்ஷிப்பதானால், ப்ராயணீயேஷ்டியின் காலம் வேறானகையால், அதைச் செய்யவேண்டும். ப்ரயோஜனம் அத்ருஷ்டமானால், அப்போதும் ஜாகரணம்வேண்டும். ஸோமயாகத்துக்கு ஜாகரணம் செய்வதால், இஷ்டிகளின் ஜாகரணத்தால் உண்டாகும் அத்ருஷ்டமும் வரும் என்று ப்ரமாணமில்லை. (அதி—8)

முதல் பாதம் முற்றிற்று.

இரண்டாவது பாதம்

303. சில விடங்களில் இப்படி உபகாரம் செய்வது இன்னதென்றும், உபகாரத்தைப் பெற்றுக் கொள்ளுவது இன்னதென்றும் கண்டுபிடிப்பது கொஞ்சம் வருத்தமாயிருக்கும். உபகாரம் செய்வதற்கு 'தந்த்ரீ' என்றும், அதைப் பெற்றுக் கொள்ளுவதற்கு 'ப்ரஸங்கீ' என்றும் பெயர். உதாரணம்—அக்னிஷ்டோம யாகத்தில் கடைசி நாளில் ஒரு பசுயாகமும், சில புரோடாச யாகங்களும் செய்யப்படுகின்றன. இவைகளில் எது தந்த்ரீ, எது ப்ரஸங்கீ என்று ஸந்தேஹம். பதில்—ஸவனீய பசு யாகத்தில் மைத்ராவருணன் சொல்லும் ஒரு மந்த்ரத்தில் "சுயம யஜமாநஃ" என்றிருப்பதற்குப் பதிலாக "சுயம ஹவ்யதாஹவ்யதீ யஜமாநஃ" என்று பிரக்ருதியிலிருப்பதற்குப் பதிலாக வருகிறது. இது ப்ரஸ்தர ப்ரஹரண விஷயமான மந்திரம். அது பசுயாகத்துக்கு அங்கமென்று ஏற்படுகிறது. மைத்ராவருணன் பசு யாகத்திலதானுண்டு. புரோடாச யாகத்திலில்லை. மேலும், கடைசியில் ஸ்வருவைச் செலவழிப்பது விஷயமாய் ஒரு வாக்யம்—"ஸம்ஹ்ருதே யஜ்ஞே ப்ரஹரதி ஸ்வரும்" என்று. ஸ்வரு பசு யாகத்தைச் சேர்ந்தது. அதை யஜ்ஞத்தில் கடைசியில் அக்கினியில் சேர்க்கும்படி விதிப்பதால், புரோடாச யாகம் அதற்கு முன்னாலே முடியவேண்டியதாயிருப்பதால் பசு யாகம் தந்த்ரீ; புரோடாச யாகம் ப்ரஸங்கீ. (அதி—12)

304. ஒரு காம்யேஷ்டியில் த்ரவ்யங்கள்—அக்னி தேவதையின் புரோடாசம், இந்திர தேவதையின் புரோடாசம்; பிரஜாபதி தேவதைக்கு ததி (தயிர்), மது (தேன்), க்ருதம் (நெய்), ஆபஃ (ஜலம்), தானாஃ (அவல்) என்று விதிக்கப் படுகின்றன. ஒவ்வொன்றும் ஒருயாகத்தின் த்ரவ்யமானதால் யாகங்கள் ஏழு. இவைகளைச் சேர்த்தே செய்யவேண்டும். அவைகளுக்கு அங்கங்களான இரண்டு ஆஜ்ய பாகங்கள் ஒரே தடவை செய்யவேண்டும். இவைகளில் முதல் யாகத்தையும், ததி யாகத்தையும் தர்ச யாகம் போல் செய்யவேண்டும். மது யாகம் க்ருத யாகம் அப் யாகம் இவைகள் பூர்ணமாஸம் போல். ஆஜ்ய பாகங்களுக்கு மந்திரம் தர்சத்தில் வேறு; பூர்ணமாஸத்தில் வேறு. எந்த மந்திரத்தைச் சொல்லவேண்டியது என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்—இந்த்ர யாகம் ப்ரஜாபதி யாகத்துக்கு முன்னாலே சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியே ததியும் மது முதலானவைகளுக்கு முன்னாலே படிக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் இந்த யாகங்கள் ப்ரபலமானவைகள். தர்சத்தில் போல ஆஜ்யபாக மந்திரங்களை எல்லாவற்றிற்கும் ஒரே தடவையாகப் படிக்கவேண்டும்.

ஸித்தாந்தம்—இப்படியானால் அனேக யாகங்களுக்குச் செய்யவேண்டிய உபகாரம் கிடைப்பதற்காக பூர்ணமாஸத்தில் போல் மந்திரங்களைச் சொல்லவேண்டும். ஆகையால் யாகங்களின் தர்மங்களுக்கு விரோத மிருந்தால் அனேக யாகங்களுக்கு வேண்டிய தர்மத்தைச் செய்யவேண்டும். (அதி—7)

305. தர்மங்களுள் விரோதமுள்ள யாகங்கள் ஸமமாயிருந்தால், முதல் படிக்கப் பட்ட யாகங்களின் தர்மங்களை செய்யவேண்டும். ஓர் இஷ்டியில் அக்நா விஷ்ணு தேவதைக்குப் புரோடாசமும், ஸரஸ்வதிக்கு செய்யும் இப்படி இரண்டு யாகங்களிருக்கின்றன. முதலில் படிக்கபட்டதற்கு தர்ச இஷ்டியில் போல் ஆஜ்யபாக மந்திரமும், பின்னால் படிக்கப்பட்டதற்குப் பூர்ணமாஸ இஷ்டியில் போல் மந்திரமும் சொல்லவேண்டும். இரண்டு யாகங்களும் சேர்த்துச் செய்யவேண்டும். ஆஜ்யபாகங்களை ஒரே தடவை செய்யவேண்டும். எந்த மந்திரத்தைச் சொல்ல வேண்டியதென்று ஸந்தேஹம். இங்கே இரண்டு யாகங்களும் ஸமமாயிருப்பதால் முன் பாராவில் சொன்ன நியாயத்துக்கு இடமில்லை. அக்நாவிஷ்ணு யாகம் முதலில் படித்திருப்பதினால் அது ப்ரபலம். ஆகையால் அதற்கு வேண்டிய மந்திரத்தையே சொல்லவேண்டும். (அதி—8)

306. ப்ரதான கர்மத்துக்கும் அதன் அங்கத்துக்கும் தர்மத்தில் விரோதமிருந்தால் ப்ரதான கர்மத்தின் தர்மத்தைச் செய்யவேண்டும்.

ஸோம யாகம் ப்ரதானமானது. தீக்ஷணீயேஷ்டி அதற்கு அங்கம். இரண்டையும் பௌர்ணமியில் செய்யவேண்டும். அவைகளை வெவ்வேறு நாள்களில் செய்யவேண்டிய தாகையால் இரண்டுக்கும் இந்தக் காலம் கிடைக்காது. எதைப் பௌர்ணமியில் செய்யவேண்டியது என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்—இஷ்டி முதலில் படிக்கப்பட்டிருப்பதால் ப்ரபலம். முன் பாராவில் சொன்ன நியாயப்படி அதைப் பௌர்ணமியில் செய்து ஸோமயாகத்தை மேலே கொண்டு போகவேண்டும்.

ஸித்தாந்தம்—இது பிசகு, முன் பாராவில் சொல்லப்பட்ட யாகங்களுக்கு பலம் ஸமம். இங்கே யப்படி யன்று. ஒன்று ப்ரதானம்; மற்றொன்று அதற்கு அங்கம். ஆகையால் ப்ரதானமான ஸோம யாகத்தைப் பௌர்ணமியில் செய்யவேண்டும். அதற்குத்தகுந்தபடி இஷ்டியை முன்னால் செய்ய வேண்டும். (அதி—9)

இரண்டாவது பாதம் முற்றிற்று.

மூன்றாவது பாதம்

307. தர்ச பூர்ணமாஸ இஷ்டிகளில் ஆகாரஹோமங்களுக்கு விதிகள் "ருஜுமாகாரயதி । ஸந்ததமாகாரயதி । ஊர்த்வமாகாரயதி" என்பவைகள். இவைகளின் பொருள்—ஒழுங்காகவும், ஓரே தாரையாகவும் இந்த ஹோமங்களைச் செய்யவேண்டும். அக்னியில் படாமல் மேலே வைத்துக்கொண்டே ஹோமம் செய்யவேண்டும்—என்பது. இங்கே சொல்லப்படுகிற மூன்று வியாபாரங்களில் ஏதாவதொன்றைச் செய்தால் போதுமா? அல்லது மூன்றையும் சேர்த்துச் செய்யவேண்டியதா என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்—இந்த மூன்று வியாபாரங்களும் ஆகார ஹோமங்களுக்கு உபகாரம் செய்கின்றன. அந்த உபகாரம் ஒன்றாயிருப்பதால் எந்த வியாபாரத்தை வேண்டுமோ; அதைச் செய்யலாம்.

ஸித்தாந்தம்—இந்த உபகாரம் த்ருஷ்டமன்று. கண்ணாலே பார்க்கக் கூடியதன்று. உபகாரம் அத்ருஷ்டமானதால் மூன்று வியாபாரங்களையும் வெவ்வேறு என்று கொள்ளவேண்டும். அவைகளைச் சேர்த்தும் செய்ய முடியும். ஆகையால் இங்கே விகல்பமில்லை. ஸமுச்சயம் தானுண்டு. (அதி—3)

308. யாக விஷயத்தில் இரண்டு விதிகள் "வ்ரீஹிபிர்யஜேத । யவைர்யஜேத" என்று. இதின் பொருள்—நெல்லைக்கொண்டு யாகத்தைச் செய்யவேண்டும்; யவத்தைக்கொண்டு யாகத்தைச் செய்யவேண்டும்—என்பது. இங்கே இரண்டையும் கொண்டு யாகத்தைச் செய்யவேண்டியதா, அல்லது ஒன்றை மாத்திரம் கொண்டு செய்யவேண்டியதா என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்—விகல்பத்துக்கு எட்டுத் தோஷமிருப்பதால் ப்ரயோக வசனம் வீணாகப் போகாமலிருப்பதற்காக இரண்டையும் கொண்டு யாகத்தைச் செய்யவேண்டும்.

ஸித்தாந்தம்—இந்தத் திரவ்யங்களின் ப்ரயோஜனம் அத்ருஷ்டங்களென்றும், அவைகள் வெவ்வேறு என்றும் வைத்துக்கொண்டு ஸமுச்சயம் சொன்னீர். இங்கே ப்ரயோஜநம் த்ருஷ்டம். ஆகையால் அத்ருஷ்டத்தைக் கல்பிக்கவேண்டியதில்லை. த்ருஷ்டமான ப்ரயோஜநம் இங்கே உண்டுதான் அதாவது புரோடாசம் செய்வதற்கு ஸாதனமாயிருப்பது; அதை வ்ரீஹியைக்கொண்டும் யவத்தைக்கொண்டும் செய்யலாம். ஒன்றின் தேவை மற்றொன்றுக்கு இல்லை. ஆகையால் ஸமுச்சயத்துக்கு இங்கு இடமில்லை, விகல்பம் தான். (அதி—4)

309. தர்ச பூர்ணமாஸ இஷ்டிகளைச் செய்துகொண்டு வருகிறவன், அவைகளுக்கு ஏற்பட்ட காலங்களில் அவைகளைச் செய்யாவிட்டால் இரண்டு ப்ராயச்சித்தங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளாவன—வைச்வாநர தேவதைக்குப் புரோடாசம், வஸுமத் என்கிற அக்னிக்கு புரோடாசம். இவைகள் இரண்டையும் சேர்த்துச் செய்யவேண்டியதா? அல்லது ஒன்றை மாத்ரம் செய்யவேண்டியதா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்—இங்கே ப்ரயோஜநம் த்ருஷ்டமன்று. பிரயோஜனங்கள் அத்ருஷ்டமாகையால் ஸமுச்சயம்.

ஸித்தாந்தம்—இங்கே ப்ரயோஜனத்தை அத்ருஷ்டமென்று கல்பிக்க வேண்டியதில்லை. இஷ்டிகளுக்கு உண்டாகியிருக்கும் குறைவைத்தீர்ப்பது த்ருஷ்ட ப்ரயோஜநம். அது ஒன்றாயிருப்பதால் விதிக்கப்பட்ட யாகங்களில் எதை வேண்டுமோ அதைச் செய்யலாம். ஆகையால் வ்ரீஹியவ விஷயங்கள் போல விகல்பம். (அதி—5)

(2) "ஸ்ருவேண ஜுஹோதி, ஸ்ருசா ஜுஹோதி" என்று இரண்டு வாக்கியங்கள் இருக்கின்றன. இவைகளின் பொருள்—கபாலம் முதலான யஜ்ஞபாத்திரங்களில் பேதமுண்டானால் ஹோமம் செய்யவேண்டும். ஹோமத்துக்கு எடுத்த ஹவிஸ் கீழே சிந்தினால் ஹோமம் செய்யவேண்டியது என்பது இங்கே விதிக்கப்பட்ட ஹோமங்களுக்கு ஸமுச்சயமா? விகல்பமா என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்—ப்ரதான யாகங்களுக்குக் குறைவு உண்டாயிருப்பதால் முன் ந்யாயப்படி விகல்பம்.

ஸித்தாந்தம்—இங்கே தோஷமுண்டாயிருப்பதாகச் சொல்லாமல் நிமித்தங்களைக்கொண்டு ஹோமங்கள் விதிக்கப் படுகின்றன. ஆகையாலே கீழே சொன்ன ந்யாயம் வராது. ஒவ்வொரு நிமித்தத்துக்கும் ஹோமத்தைச் செய்யவேண்டியது. ஆதலால் ஸமுச்சயம். (அதி—6)

விவாத பாகம்

[சில மாதங்களுக்கு முன், சர்ச்சை விஷயங்களில் அபிப்ராய பேதங்கள் உண்டாகக் கூடிய வ்யாஸங்களும் இந்தத் தீபிகையில் அவ்வப்பொழுது பிரசுரப்படுத்த வேண்டியது அவசியமாக நேரிடு மாதலால், அவைகளை 'விவாத பாகம்' என்று தனியாக ப்ரசுரப்படுத்தலா மென்று தெரிவித்துக்கொண்டோம். இதனடியில் ப்ரசுரப் படுத்தியிருக்கும் வ்யாஸமானது, நமது நண்பர் ஸ்ரீமான். உ. வே. கீ. நரஸிம்மாசார்யரால் எழுதப் பட்டிருப்பினும், அது விஷயம் மிகவும் அபிப்பிராய பேதத்தை ஏற்கென்வே உண்டாக்கியிருப்பது தெரியவந்து, இந்தப்பாகத்தில் அச்சிட வேண்டியதா யிற்று. “[illegible]” என்று தன்னைப்பற்றி சொல்லிக் கொண்ட அவதாரமூர்த்தி, ஸமுத்ரதரண விஷயத்தில் மரணாந்தமான த்ருட வ்ரதங்கொண்டு அப்படி வசனிப்பதில் தோஷமிருப்பதாக நினைக்க அவச்யமில்லை. காவ்ய பதங்களை நேரில் ஸ்வரஸமாக அர்த்தம் செய்து கொள்வது ப்ராப்தமாயிருக்க, அதைவிட்டு முன்னும் பின்னுமாகப் பதங்களை மாற்றிப் போட்டு வ்யாக்யானம் செய்வது லக்ஷணத்திற்கு விரோதம். உபயோகப் படுத்தியிருக்கிற பதங்களின் வரிசையால் கிடைக்கும் அர்த்தமானது தோஷமாகத் தோன்றுமாகில், அந்தத் தோஷம் கவியைப் பொருந்தது. அதை விட்டு, ஸ்ரீராமபிரான் விஷயத்தில் கவி “[illegible] சரணம்” என்று சொல்லி, பிறகு ‘[illegible]’ என்று போட்டிருந்தும், ‘சரணம்’ என்ற எண்ணங்கூட நமக்கு அஸஹ்யமாய்ப் போவது பற்றி, நாம் காவ்யத்தை இஷ்டப்படி திருப்பி எழுதிக் கொள்வதற்குப் பாத்யதை யுள்ளவர்களாவோமா? தரணத்திற்கும் மரணத்திற்கும் ஓரே அக்ஷரம் பேதித்திருப்பதால் “[illegible] வா” என்று கவி எழுதியிருக்கும் பக்ஷத்தில், எவ்விதமான வ்ருத்த லோபமும் வருவதற்கும் இடமில்லை. மஹான்களான வ்யாக்யாதாக்கள் வேறு காரணங்கள் பற்றித் தாங்கள் சொல்ல வந்த விஷயத்திற்கு ஸ்வரஸமாய் மாற்றி வ்யாக்யானம் செய்திருப்பது, ஸாதாரணமான வ்யாக்யான ரீதியில் சரியோ வென்று சங்கிப்பதும் தோஷமாகுமோ? “முக்கண்ணனாலும் பிழை பிழையே” யென்று தமிழ்ச் சங்க முறையில் சொல்லியிருப்பதை மறக்கவும் கூடுமோ? இக்காரணங்களாலெல்லாம் நாம் இந்த வ்யாஸ கர்த்தாவின் அபிப்ராயத்தில் கலந்து கொள்ளச் சக்தியற்றவர்களா யிருப்பினும், விஷய சர்ச்சையில் நமக்கிருக்கும் குதூஹலத்தினாலே இந்த வ்யாஸத்தை ப்ரசுரிக்க யாதொரு விதமான ஆக்ஷேபணையு மில்லை. மேலும்: சர்ச்சை, விவாதம், உத்தர ப்ரத்யுத்தரங்கள் விஷயத்தில் அணுமாத்ரங்கூட துர்ப்பாஷை ப்ரயோக மில்லாமல் மர்யாதையாயும் விஷயமே ப்ரதானமாயும் எழுதும் ரீதியின் ஆவச்யகதையையும் மேன்மையையுங் குறித்து வ்யாஸகர்த்தா ஸ்வாமி சொல்லியிருப்பதை நாம் ஆமோதிப்பது மாத்திரமேயன்றி, இந்த விவாத பாகத்தில் ப்ரசுரிப்பதற்காக எழுதுபவர் யாவரும் அந்த ரீதியையே அநுஸரித்து எழுதவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம். (ப-ர்.)]

“இத்தை முடித்தல் கடத்தல்”

[ஸ்ரீ. உப. கீனூர் நரஸிம்மாசார்யர், B. A. B. L., அட்வோகேட், சென்னை.]

1. ஸ்ரீ ராமாயணத்தில் பெருமாள் ஸமுத்ரராஜனைச் சரணம் புக்கதாகச் சொல்லுமிடத்தில்,

“[illegible] சரணம் [illegible] தரணம் ஸாகரஸ்ய வா”

என்கிற ச்லோகார்த்தமாகப் பண்டிதர்களுக்குள் ஒரு பெரிய விவாதம் நடந்து கொண்டுவருகிறது. “[illegible] சரணம்” என்கிற பதக்ரமத்தில் பெருமாள் மரணம் என்றும், “[illegible] தரணம் ஸாகரஸ்ய [illegible]” என்று அந்வயிக்கு மிடத்தில் ஸமுத்திர ராஜன் மரணம் என்றும் இருவகையாகவும் பொருள்படும், என்பது ஸுஸ்பஷ்டம். அர்த்த நிரூபணம் பண்ணும் போது, ஸந்தர்ப்பத்துக்கும் விஷய வைலக்ஷண்யத்துக்கும் தகுந்தபடி பதக்ரமத்திலும் வ்யுத்க்ரமாந்வயத்திலும் பொருள் சொல்வது ஸாதாரணம். ச்லோக ரூபமான க்ரந்தங்களில் யாப்பிலக்கணத்துக்காகப் பதங்களை இடம் மாறி உபயோகிப்பது ஸர்வ ஸாதாரணம். ஆகையால் வ்யுத்க்ரமாந்வயத்தைக் காட்டிலும் பதக்ரமத்தில் படும் பொருள் விசேஷமானது என்று நினைக்க இடமில்லை.

2 இவ்விரண்டு அர்த்தங்களுக்குள் ‘பெருமாள் மரணம்’ என்பது தான் சரியான அர்த்தம் என்று “அத்யமே ச்லோகார்த்த தத்வ

ப்ரதிஷ்டை" என்கிற க்ரந்தம் வெளியிடப்பட்டது. அதை அடிபொற்றி வைகாச விசாக வைஜயந்தியில், அதில் சொல்லிய விஷயங்களையும் பூர்வ பக்ஷ ஸித்தாந்தங்களையும் ஸங்க்ரஹித்தும் விஸ்தரித்தும் ஸைஸைந்ய புத்ர சிஷ்யஸ்தாநே பேசுமாப்போல் பத்ராதிபரும் மற்றும் இரண்டு ஸ்வாமிகளும் ஸாதித்த விஷயங்களை ச்ரத்தையோடும் அவதாநத்தோடும் ஸேவித்தேன். ஆனால் அவற்றுள் சில மழிப்பும் பாரிஹாஸ்யமுமே வடிவு கொண்டாப்போல் இருந்ததைப் பார்த்து மனம் நொந்தேன். பண்டித பரி பாஷையில் அபத்தம், அஸம்பத்தம், அஸமஞ்சஸம், சோசநீயம், காடு பாய்ந்த வாக்யார்த்தங்கள் என்று "மாற்றங்கள்" தோய்ந்த சொற்களால் இகழ்வதில் விஷய வைலக்ஷண்யம் உண்டாகுமோ? விஷயங்களை மாத்ரம் சொல்லி நிறுத்தினால் என்ன குறை?

"கற்றோர்கள் தாமுகப்பர் கல்விதன்னில் ஆசையுள்ளோர்.
பெற்றோ மெனவுகந்து பின்புகற்பர்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னெஞ்சே இகழுகை
ஆச்சரிய மோதா னவர்க்கு."

3. இத்தனை நிந்தைக்கும் காரணம் என்ன? ஸமுத்ர மரணம் என்று பெரியோர்கள் பண்டே பணித்த ஓர் அர்த்த விசேஷம் பொருத்த முடையது; நூதநமாய்ப் பெருமாள் மரணம் என்று ஸாதிக்கும் பொருள் படவில்லை என்று சொல்வது என்ன விபரீதம்? ஒரே பாசுரத்துக்கு நம் பூர்வாசார்யர்கள் வெவ்வேறு விதமாக வ்யாக்யாநம் செய்த நிர்வாஹங்கள் பல வில்லையா? ஒருவர் நிர்வாஹத்தை மற்றொருவர் அபத்தம் என்றாவது அஸமஞ்ஸஸம் என்றாவது ஸாதித்தார்களா? அன்றியும், "ஸம்ப்ரதாய பேதங்கள் உண்டான இடங்களிலும் என்று ஒரு அபியுக்தர் அருளிச் செய்வர்" என்று ஸவிநயமாக அருளிச்செய்ய வில்லையா? (Abuse is no argument.) வைதல் விஷயமாகுமோ? 'ஆரண நூல் வழிச் செவ்வை அழித்திடும்' மதாந்தரங்களில் ஸக்ருத்தாக உண்டாகும் கோபாவேசத்திற்கும் இங்கு இடமில்லையே. "மெலிவிலும் சேமங் கொள்விக்கும் க்ருபையும் அங்கீகரிக்க அவகாசம் பார்க்கும் ஸ்வாமித்வமும்" ஸ்ரீ வைஷ்ணவ ஸ்வரூப மல்லவா? அவம் பறைதல் என்னுவது எத்தனை நாளைக்குப் போதும்?

4. நிற்க: இவ்விஷய சர்ச்சை பண்ண அடியேன் எல்லா ப்ரகாரத்தாலும் அசக்தனாயிருந்தாலும், "பெருமாள் மரணம்" என்கிற அர்த்த நிருபணத்துக்காக இப்போதுள்ள ஈட்டு பங்தியாகிற "இத்தை முடித்தல் கடத்தல்" என்பதை, "இற்றை முடிதல் கடத்தல்" என்று திருத்த

வேண்டும் என்று முயல்வது விபரீதத்தில் விளையும் என்று நினைத்து, அடியேன் சிற்றறிவுக்குத் தோன்றிய மட்டும் "ஸமுத்ரமரணம்" என்கிற அர்த்தந்தான் பூர்வோத்தர ஸந்தர்ப்பங்களுக்கும் உலகியற்கைக்கும் போரப் பொருந்தும் என்றும், "பெருமாள் மரணம்" என்கிற அர்த்தம் ஸர்வதா அஸம்பாவிதம் என்றும் விண்ணப்பித்துக் கொள்கிறேன். எங்ஙனே யென்னில்: விபீஷணாழ்வான் வருவதற்கு முன்னமே, "தபஸா ஸேதுபந்தேந ஸாகரோச்சோஷணேந ச" என்று தபஸ் என்கிற சரணாகதி, திருவணை, ஸமுத்ரமரணம் என்று கடலைக் கடக்கப் பெருமாள் திருவுள்ளத்தில் கொண்ட மூன்று உபாயங்களுள் "ஸமுத்ர மரணம்" என்கிற உபாயம் ஒன்று. பிறகு விபீஷணாழ்வான் சொல்படி சரணாகதி செய்தார். அது பலிக்காமையால், "சாபமாநய" என்று சீறிச் சிவந்து "காலைக் கையைக் கட்டா நின்றார்." ஆகையால் "அத்யமே" என்கிற இடத்துக்கு முன்னும் பின்னும் ஸமுத்ர மரணமே பெருமாள் திருவுள்ளம் என்பது ஸ்பஷ்டம்.

மேலும் பெருமாள் செய்த சரணாகதி ஒரு உபாயாநுஷ்டாநமேயொழிய ஸ்வரூப சரணாகதி ஆகாது. அது பொறுமையினுடைய கார்யம். "உலக முண்ட பெருவாயா" என்கிற பாசுர வ்யாக்யாந அவதாரிகையில் "இனித்தான் சரணாகதி பலப்ரதையாமிடத்தில் சரண்யன் பக்கலிலே பண்ணவும் வேணும்; தான் அதிகாரியாகவும் வேணும். வ்யதிரிக்த விஷயங்களிலே பண்ணுமிடத்தில் அதுதானே ஹாநஹேதுவாகக் காணாநின்றோமிறே * * "ஸமுத்ரம் விஜாநாதி" என்பார் ஆகாது * * பண்ணின ப்ரபத்திக்குப் பலம் தாழ்ந்தது என்றே வேறே போக்கடியுடையார்க்குக் கார்யம் ஆகாதிறே "ஸாகரம் சோஷயிஷ்யாமி பத்ப்யாம் யாந்து ப்லவங்கமா:" என்று அவன் தாழ்த்ததுவே ஹேதுவாக ஜலதத்வத்தை யழித்துப் போகட்டு மற்றை நாலையுங்கொண்டு காரியங் கொள்ளுகிறேன் என்றாரிறே என்று ஈட்டில் ஸாதித்துள்ளார். ஆகையால் பெருமாள் செய்த கார்யம் நிஜமான சரணாகதியாகமாட்டாது என்பதில் தட்டில்லை. கம்ப ராமாயணக்காரரும் பெருமாள் வருணனை வழி வேண்டினார் என்பர்.

அன்றியும் "ஸர்வதா ஸுகரோ ஹ்யஸௌ" என்று கடலைக் கடத்தல் தமக்கு எவ்விதத்திலும் எளிதே என்று வாய் விட்டருளினார். ஆகையால் ஸர்வ ஸௌலபமாகத் திருவுள்ளத்தில் கொண்ட ஸமுத்ரமரணத்தைக் கைவிட்டு பெருமாள் அபிஷிக்த க்ஷத்ரியாநுஷ்டாநத்துக்கு விரோதமாய்த் தன் மரணத்தைச் சிந்திப்பதற்கும் சொல்வதற்கும் இங்கு இடமேயில்லை. ஒரு கார்யத்தை, 'நான் பல வழிகளாலும் செய்து முடிப்பேன்; அது எனக்கு ஸர்வ ஸௌலபம்' என்கிற நிச்சயபுத்தியுள்ள ஒருவனுக்கு

அது முடியுமோ முடியாதோ என்கிற சங்கை உண்டாகி, அச்சங்கையின் கார்யமாய் முடியாவிடில் "மாள்வேன்" என்கிற பேச்சு வருவதற்கு எவ்வித ந்யாயமும் இல்லை. முடியுமோ முடியாதோ என்கிற ஸந்தேஹமும் உள்ளவனுக்கே முடியாவிடில் "நஜீவேயம்" என்கிற எண்ணமும் பேச்சும் உண்டாகுமேயன்றி, "ஸம்ஶயம் விஜாநாதி" என்கிற நிஸ்ஸந்தேஹமான நிஶ்சிதனுக்கு, "திண்கொள்ளப்பெருத மனச்சைதல்யம்" உண்டாக மாட்டாது. தோள் கொட்டுபவன் வயிறு பிசைப்பனோ? "ஸத்யஸந்த" என்றும் "ஸத்யவாதீ" என்றும் அவலீலையாகப் பேசிய பெருமாள் அந்யதா சங்கை பண்ண இடமில்லை. பண்ணுல் பித்தன் என்றே பிறர் ஏசுவர். "செவ்வை கெடப் பரிமாறினாரையும் ஒக்கவிட்டுக் கார்யங் கொள்ள வல்லன்" தன் மரணத்தை ஸ்மரிக்கவும் செய்யான்.

ஆகையால் "ஸாகரோத்தரணேந" என்றும், "மரணாந்தாநி" என்றும் உள்ள பூர்வ உத்தர ஸந்தர்ப்பங்களையும், "ஸத்யஸந்தோ த்ருடவ்ரத:" என்கிற த்ருடமான எண்ணத்தையும் நோக்கியே நம் பூர்வாசாரியர்கள் ஸமுத்ரமரணம் என்று நிர்வஹித்துப் போந்தார்கள்.

5. "பெருமாள் மரணம்" என்று பொருள் கூறுவோர் முக்யவாதம் ஒன்றே. அதாவது: காலைப் பிடித்து வணங்கி வழிபடும்போது, 'கத்தியெடுத்து வீசுவேன்' என்று நினைப்பது கூடாது என்பதாம். கத்தி எடுப்பதையும் ஒரு உபாயமாகத் திருவுள்ளத்தில் கொண்டும் உடனே வீசிய பெருமாள் அதை மறந்து விட முடியுமா? "உதிஷ்டோத உபாயஸ்ய" என்கிற நெஞ்சுக்குள் இத்தனை வரம்பு கட்டுவது எப்படி? மூன்று விதமான உபாயங்களை மனத்தில் கொண்ட ஒருவன் ஒரு உபாயத்தைச் செய்யும் போது, மற்ற இரண்டு உபாயங்களையும் நினையாமல் தன்னெஞ்சில் நின்றும் அகற்றுவது எப்படி? அது 'Human pscychology" என்கிற மாநஸ சாஸ்த்ரத்தில் சேராது. ஆகையால் பொறுமையின் கார்யமாகச் செய்யும் ஓர் உபாயாநுஷ்டாந ஸமயத்தில், மற்ற உபாயங்களை அடியோடு மறந்துவிடுவது கஷ்ட ஸாத்யம். அப்படி மறவாமல் நினைப்பது ஸஹஜம்.

6. ஸாகர சரணத்தையும் ஸாகர மரணத்தையும் விகல்ப கோடிகளாக வைத்து அந்வயிக்க முடியாது என்று ஒரு யுக்தி வாதம் செய்கிறார்கள். மரணம் வேறு, தரணம் வேறு. ஸாகர மரணத்தில் ஜலம் சோஷித்து வெறுந்தரையாய் விடும். அத்தரையில் நடப்பதேயன்றித் தாண்டுவதில்லை இரண்டிற்கும் உபாய உபேய பாவம் கல்பிக்க வேண்டாம்.

7. இதில் பூர்வாசார்யர்கள் திருவுள்ளம் நெகிழ்ந்தது எப்படி என்று யோசித்தால், இவ்வளவு விசாரம் வேண்டா. ஸர்வஜ்ஞர்களான பூர்வாசார்யர்களின் அடியொற்றிப் போவதே நமக்குப் பணி.

"யாநொட்டி" என்கிற திருவாய்மொழிப் பாசுர வ்யாக்யாநத்தில் "அத்யமே" என்கிற ச்லோகார்த்தமாக இப்போதுள்ள "இத்தை முடித்தல் கடத்தல்" சரியான பாடமானுல் ஸமுத்ரமரணம் என்கிற அர்த்தந்தான் நம்பிள்ளையின் திருவுள்ளம் என்பதில் ஸந்தேகமில்லை. ஆகவே அந்தப் பாடம் தப்பு; "இற்றை முடிதல் கடத்தல்" என்று திருத்தவேண்டும் என்று "தத்வ ப்ரதிஷ்டை" மன்றுடுகிறது. இது "புள்ளூரும் கள்வர்தம் பாரகத்து என்றும் ஆடாதன தம்மில் கூடாதனவாம்". எங்ஙனே என்னில்:—

(i) அரும்பதக்காரர்களில் ஒருவரான ஜீயர் குன்னத்தூர் ஐயன் பேரனார் மஹா ஜ்ஞாதா. அவர் காலம் கி. பி. 1610-20 என்று சுமாராகச் சொல்லலாம். அவர் காலத்தில் உள்ள பாடம் "இத்தை முடித்தல் கடத்தல்" என்பதில் ஸந்தேஹமில்லை. தம் அரும்பதத்தில் "அத்ய மே தரணம் வா ஸாகரஸ்ய மரணம்" என்று அந்வயித்து அர்த்தம், இத்தை முடித்தல் இத்யாதி 'மரணாந்தாநி' இத்யாதிப் படியைக் கடாக்ஷித்து இப்படி யோஜித்தது" என்று ஸாதித்துள்ளார்.

(ii) பிறகு சுமார் கி.பி. 1680ல் ஆத்தான் ஜீயர் நாநா திவ்யதேசத்து உபய கலா உபய வேதாந்த ப்ரவர்த்தகர்களைப் பேருளாளன் ஸந்நிதி நூற்றுக்கால் மண்டபத்தில் கூட்டி, "அடைய வளைந்தான் அரும்பதம்" நிர்வஹித்தார். அதில் தூதாசார்ய ஸ்வாமி நிர்வாஹம் என்றும் மற்றொரு ஸ்வாமி நிர்வாஹம் என்றும், நிர்வாஹ கர்த்தாக்கள் பேரைச் சொன்ன மாத்ரத்தில் அடியேன் போல்வார்க்கு வாயெடுக்க வழியிராது. அக்காலத்திலும் "இத்தை முடித்தல் கடத்தல்" என்பதுதான் பாடம். நாநா வ்யாக்யாநங்களின் ஸம்மேளநமாக ஸாதிக்கப்பட்டது என்று அதின் அவதாரிகை. அதில் தாநொட்டி வந்து தான் ப்ரதிஜ்ஞை பண்ணி வந்து ப்ரதிஜ்ஞை பண்ணினதுக்கு த்ருஷ்டாந்தம். "அத்யமே" இத்யாதி. கவி அவதாரணார்த்தம். "அத்ய மே தரணம் ஹ்யாத்ர ஸாகரஸ்ய மரணமேவ வா" இத்யந்வயம் ஹ்ருதி நியாய இத்தை முடித்தல் இதி" என்று ஸாதித்துள்ளார்.

(iii) திருவிருத்தம் 62-வது பாசுர வ்யாக்யாநத்தில் ஸர்வஜ்ஞரான பெரியவாச்சான் பிள்ளை "இதுதான் (ஸமுத்ரம்) சரணம் என்றால் இரங்குமதன்றிக்கே அம்புக்கு முகங்காட்டுமதிறே. அது ஆர்த்திக்கு இரங்குமதல்லவே. அம்புக்கிரங்குமதிறே. தனக்குச் சரணம் என்றால் இரங்குமதன்றே. தனக்கு மரணமானுல் இரங்குமதிறே" என்று அருளிச் செய்தார். இந்த பங்தியில் "தனக்கு மரணம்" என்பது ஸமுத்ரமரணம் என்பதைத் தவிர வேறு எந்த அர்த்தமும் கொள்ளாது. இவர் ஈட்டுக்காரரோடு ஸமகாலஸ்தர். இருபத்து நாலாயிரப்படியிலும் 'யாநொட்டி' என்கிற பாசுர வ்யாக்யா

நத்தில் "அத்யமே" என்கிற ச்லோகத்தை உதாஹரித்துள்ளார். அதையே ஈட்டு காரரும் உபயோகித்தார். பெரியவாச்சான் பிள்ளை "தனக்கு மரணம்" என்றும், ஈட்டுக்காரர் "இத்தை முடித்தல்" என்றும், இரண்டு பேரும் ஸமுத்ரமரணம் என்றுதான் அர்த்தம் ஸாதித்தார்கள் என்பது கரதலாமலகம்.

(iv) இதற்கு அரும்பதம் எழுதிய அப்பு "ஜெதுரணஂவா ஸாஹரவஷ்ரூ ஊரணஂவா" என்று அந்வயித்துள்ளார். "தனக்கு மரணம்" என்கிற சொல் கேட்கும் பெருமாள் மரணம் என்று ஸாதிப்பது ஸாஹஸமே.

(v) சுமார் 35, 40—வருஷங்களுக்கு முன் ப்ரபல பண்டிதர்களால் பரிசோதிக்கப்பட்டு அச்சிட்ட தெலுங்கு புஸ்தகங்களிலும், "இத்தை முடித்தல் கடத்தல்" என்பதுதான் பாடம்.

(vi) அன்று முதல் இன்று வரை ஈடு காலக்ஷேபம் சொல்லியும் கேட்டும் உள்ள ஸ்வாமிகள் பல்லாயிரவர்; அவர்கள் ஒருவரும் இந்தப் பாடம் தப்பு என்று சொல்லவில்லை.

ஆகவே "இத்தை முடித்தல் கடத்தல்" வெகு ப்ராசீந பாடமாய் நம் பிள்ளை காலம் முதல் அஸ்மதாசார்யர்கள் பர்யந்தம் வந்த பாடமே. ஆகவே நூற்றாண்டுகளாய் மஹான்களால் போற்றிவரும் பாடம் தப்பு என்று கி.பி. 1936ல் நிர்த்தாரணம் செய்ய என்ன ந்யாயம் உண்டு? "இற்றை முடிதல் கடத்தல்" ஓலைப்படா ப்ரமாணமாமோ? பூர்வாசார்யர்கள் நெஞ்சினால் நோக்கிக் காணாது தன்னெஞ்சில் தோன்றிய ஓரர்த்தத்தையே யோக்யமாகவும், மற்றொன்று துச்சமாகவும் கொண்டு, ஈட்டுபங்க்தி தப்பு, அரும்பதக்காரர்கள் தப்பு, அப்பு தப்பு, கோவிந்தராஜீயம் நினைவில் தப்பு கனவில் சரி, பண்டிதர்களும் மஹான்களும் போற்றிவந்த பாடமும் தப்பு என்று பிழை திருத்துவதுமல்லாமல், "அஜ்ஞர், ஞானிகள், ஞானவிசேஷயுக்தர், ஸர்வஜ்ஞன் என்னாமல் இவர் திருத்துவர்" என்பதுபோல இத்தனையும் திருத்த வேண்டுமே. இத்தனையும் பிழையாகக் கொண்டு இப்படியும் திருத்தப் போதுமான காரணம் ஒன்றும் இல்லை. யோசநா பேதங்கள் போதா. திருத்தவேண்டிய இடங்கள் வேறு பலவுளவாயினும், அவை இது திருத்தக் காரண மாகா. பெருமாளை முடிப்பதற்கோ இவ்வளவு கஷ்டப்படுவது. அவர் முடியவுமில்லை. முடியவும் முடியார்.

8. சமுத்ரமரணம் என்று பொருள் கொண்டால் "யானொட்டி" என்கிற பாசுர உபமேயத்தில் ஆழ்வாரை முடிப்பதாய் விடும் என்று ஒரு யுக்திவாதம் செய்கிறார்கள். 'தகுவஷ்ரூதிஷ்ஃர' அர்த்தத்தில் பெருமாள் முடிகிறார். முடிந்தால் "ஊனொட்டி நின்று என் உயிரில் கலப்பார்' யார்? ஆழ்வார் ரக்ஷண ப்ரதிஜ்ஞையை ஈடேற்றுபவர் யார்? உபமானமும் உபமேயமும் எல்லா ப்ரகாரத்தாலும் பொருத்தமுடையதாக வேண்டுமோ? வேண்டு

மானாலும் ஆழ்வார் மரணம் என்பது திருத்திப் பணிகொள்வதே யாகும். அப்போது "எழுநாற்றுக்களையும் வேர் முதல் மாயும்" அது ஒரு புநர்ஜந்மமாகத்தட்டில்லை.

9. ஈனச் சொல்லாயினும் ஆகுக. இப்போதுள்ள ஈட்டு பங்திகளையும் மற்றுமுள்ள வ்யாக்யாநங்களையும் இங்கு இட்டழிக்க வேண்டாம் என்பதுதான் அடியேன் செய்யும் விண்ணப்பம். அவரவர் தமதம தறிவறி வகைவகை ப்ராசீந பங்திகளைத் திருத்தப்புக்கால் இதற்கு முடிவு எங்கே? அந்யதாக்ரஹணம் பண்ண வேண்டாம். "கேட்டிரங்கி" யர்கையால் இதில் அநுதய ஸம்சய விபர்யய விஸ்ம்ருதிகளால் வரும் விஷய தோஷங்களையும் வாசக தோஷங்களையும் க்ஷமித்தருள வேணும்.

நிருபங்கள்

(1)

ஸ்ரீ:

ஸ்ரீபாஷ்யத்தில் ஓர் பாடபேதம்

[ஸ்ரீ. உப. வே, அநந்தாசார்யர், ஸம்ஸ்க்ருத பண்டிதர்,
பச்சையப்பன் கலாசாலை, சென்னை]

ஸ்ரீ விசிஷ்டாத்வைத மதத்தைச் சேர்ந்த நமது பெரியோர்களால் ஸ்ரீ பாஷ்ய க்ரந்தத்திற்கு மிகுந்த பெருமை கொடுக்கப் பட்டு வருகிறது. ஸ்ம்ருதி க்ரந்தங்களை இயற்றிய மஹர்ஷிகள் வேதங்களின் அத்யயநத்தை நமக்கு வற்புறுத்திக் கட்டாயப் படுத்தி இருக்கிறார்கள். அதுபோலவே, நமது ஆசார்யர்களும் ஸ்ரீபாஷ்யம் முதலிய க்ரந்தங்களின் படிப்பை நமக்கு அத்யாவச்யகமாகக் கூறி இருக்கிறார்கள். அது பற்றியே நாம் இந்த க்ரந்தங்களை வைதிகக்ரியைகளில் பாராயணத்தில் உபயோகப்படுத்தி வருகிறோம். இந்த ஸ்ரீ பாஷ்ய க்ரந்தத்தை முழுவதும் ஸேவித்தவர்களின் ஸங்க்யை இக் காலத்தில் மிகக் குறைந்தது என்றாலும், தொடக்கம் சாத்துமுறைகளில் அநுஸந்தாநம் செய்யவேண்டிய பாகங்களில் அநேக வித்வான்களுக்குப் பரிசயம் உண்டு. அதில் ஸர்வ ஸாதாரணமாய் ஆஸேதுஹிமாசலம் ப்ரசாரத்தில் இருந்து வருகிற பாடபேதத்தைப் பற்றி விசாரிக்கவேண்டிய அவச்யம் வந்திருக்கிறது. 'कृद्योगाच षष्ठी समस्यत इति प्रतिप-लवलंभवात्' என்பது இப்போது இருந்து வருகிற பாடம். இப்பொழுது அச்சில் இருக்கும் எல்லாப் புஸ்தகங்களிலும் இந்த பாடமே காணப் படுகிறது. நான் பத்து வ்யாக்யாநங்களுடன் அச்சிட்டு வருகிற ஸ்ரீ பாஷ்ய க்ரந்தத்திலும் மேற்கண்டபடியே பாடத்தை மூலத்தில் சேர்த்து விட்டேன். ஆனால் ஸமீப காலத்திற்கு முன், எனது நண்பரான, காஞ்சீபுரம்

ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்காசாரியர் என்னைக் கண்டு, ‘**प्रतिप्रसवसद्भावात्**’ என்று ஒரு பாடம் உண்டு; அதைக் கவனித்தீர்களா? என்று கேட்டார். நமது பாரத கண்டம் முழுவதும் எல்லா ஸ்ரீ கோசங்களிலும் ஏக ரூபமாய்ப் பாடம் வழங்கி வரும் போது, புதியதாக கொண்டு வரப்பட்ட இந்தப் பாடத்தில் எனக்கு ஸந்தேஹம் உண்டாயிற்று. என்னுடைய ஸந்தேஹத்தைத் தீர்க்கவேண்டி, ஷ அண்ணங்காசார்ய ஸ்வாமி பழைய ஓலை ஸ்ரீ கோசம் ஒன்றை எனது பார்வைக்கு அனுப்பி வைத்தார். அதில் ‘ஸத்பாவாத்’ என்ற பாடமே இருந்தது. பிறகு காஞ்சீபுரம் வித்வான் அய்யா க்ருஷ்ணதாதாசார்யர் ஸ்வாமியிடம் இந்த விஷயத்தை ப்ரஸ்தாவித்தேன். அந்த ஸ்வாமியும், ‘ஸத்பாவாத்’ என்ற பாடமும் நமது ஆசார்யர்களான சில பெரியோர்களால் ஒப்புக்கொள்ளப் பட்டதுண்டு என்றும், ஸ்ரீ ரங்கத்தில் பெரிய ஆண்டவன் காலக்ஷேபம் ஸாதிக்கும்போது, ‘ஸத்பாவாத்’ என்ற பாடமே ஸாம்ப்ரதாயிகமான பாடம் என்று திருவுள்ளம் பற்றினதாகக் கேள்வி உண்டு என்றும் ஸாதித்தார்.

அதன் பிறகு அடியேன் தத்வடீகையை சோதிக்குமளவில், “**प्रतिप्रसवः = अपवादापवादः, तस्य सद्भावात्**” என்று ப்ரதீகம் காணப்பட்டது. இது காணப்பட்ட பின் அடியேனுக்கு இந்தப் பாடத்தில் விச்வாஸம் அதிகமாயிற்று. இதற்கு இணங்க ஷ ஸ்ரீ பாஷ்ய முத்ரணத்தில் ‘**सद्भावात्**’ என்ற பாடமே தத்வடீகாகாரருக்கு அபிமதமான பாடம் என்று டிப்பணீ எழுதத் துணிந்தோம். ‘**संभवात्, सद्भावात्**’ இவைகளுக்குக் கொஞ்சம் அர்த்தபேதம் உண்டு. இந்த இடத்தில் ‘**सद्भावात्**’ என்ற பாடத்திற்கே அர்த்த ஸ்வாரஸ்யம் அதிக முண்டு எனத் தோன்றுகிறது. ‘**संभवात्**’ என்ற பாடமே ஒப்புக்கொள்ளப் பட்டால் அதற்கு ‘**सद्भावात्**’ என்ற பதத்தின் அர்த்தத்தை ஆரோபணம் செய்யவேணும்! ‘**सद्भावात्**’ என்ற பாடத்தை ஒப்புக்கொண்டால் அந்த ச்ரம மில்லை, என்று அடியேனுடைய அபிப்ராயம். இப்படி இருக்க ஸ்ரீ உடையவர் திருவாக்கி லிருந்து வந்த வர்ணாநு பூர்வீ ஏது என்று விசாரிக்கவேண்டியது நமது கடமை. ஸர்வ தேசங்களிலும் ஸர்வ வித்வான்களும், ஒப்புக்கொண்ட பாடமே ஸ்ரீ பாஷ்யகாரமுகோத்கதம் என்று சிலர் வாதிக்கக்கூடும். நமது தேசத்திய மஹாஜநங்களுக்குக் கதாநுகதிகத்தம் ஸஹஜம் என்று நிரூபிக்க அநேக உதாஹரணங்கள் உண்டு. கதாநுகதிகத்வம் எவ்விதத்திலும் தோஷம் என்று சொல்வதும் தவறு. ஸ்ரீ வ்யாஸ பகவான் அதையே நமக்குக் குணமாகக் காட்டியிருக்கிறார். ஆனாலும் எல்லா விஷயத்திலும் குணம் ஆகாது. ஆகையால் ஸாராஸார விவேக நிபுணர்களான ரஸிக வித்வான்கள் இதில் ஔசித்யாநௌசித்யங்களை விசாரித்து யுக்தமான பாடத்தைப் பரிக்ரஹிக்கவேணுமாய் விஜ்ஞாபிக்கிறேன்.

(2)

ஸ்ரீ தேசிகன் அவதார ஸ்தலமும் உத்ஸவங்களும்.

ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன் திருவடி ஸம்பந்தம் பெற்ற பாக்யசாலிகளின் ஸந்நிதியில் விநயத்துடன் செய்யும் விஜ்ஞாபநம்:—

“யஸ்ய வாங்ம்ருதஸாரை: ஸஞ்ஜீவிதமிதம் ஜகத்”

[எவருடைய திருவாக்கென்னும் அம்ருதத்தினால் இவ்வுலகம் நன்றாய்ப் பிழைத்ததோ அவ்வேங்கடஸூரி யெனும் ஸ்ரீ தேசிகனைப் போற்றி யுகப்பதும், புந்தியிற் கொள்வதும், பொங்கு புகழ் சாற்றி வளர்ப்பதும், அம் மஹான் நமக்குச் செய்த பேருதவிக்குச் சிறிதும் கைம்மாறாகா தென்பது நிச்சயமே.]

“ஏற்றி மனத்தெழில் ஞான விளக்கை யிருளனைத்தும்
மாற்றினவர்க்கோர் கைம்மாறு மாயனும் காண்கில்லான்”

என்றல்லவோ ஸ்ரீ தேசிகன் அருளிச்செய்தது. ஆயினும், நாம் ஸ்வரூபாநுரூபமாக அவ்விஷயத்தில் அடிமை செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். இதை யறிந்த பல ப்ரமுகர்களும், மற்றவரும் ஆங்காங்கு ஸ்ரீ தேசிகனுக்கு மஹோத்ஸவங்களையும், ஸ்ரீ தேசிக ஸ்ரீ ஸூக்தியின் அபிவ்ருத்திக் குரிய ஸபைகளையும் உபந்யாஸங்களையும் நடத்தி வருவது இக்கலியில் மிகவும் அருமையானதால், நாமனைவரும் அம்மஹான்களிடம் க்ருதஜ்ஞராக இருக்க ப்ராப்தம். இவ்விஷயத்தில் ஒரு முக்யமான அம்சம் மிகவும் சோசநீயமாய் இருப்பதை விவேகிகளிடம் விண்ணப்பம் செய்கிறோம்.

நம் ஸ்ரீதேசிகன் அவதார ஸ்தலமாகிய தூப்புலில் மட்டிலும் கீழ்ச் சொன்ன உத்ஸவாதிகள் மிக வருந்தக்கூடிய தசையில் நடக்கின்றன. பத்து மணி வரை உத்ஸவத்தை நடத்தும் உபயக்காரர் இன்னாரென்று ஏற்படாமல், சில உத்ஸவங்கள் பின்பு எப்படியோ ஒரு வகையில் கடு வெயிலில் நடைபெறுகின்றன. ஷ ஸந்நிதியில் பல பெரிய வாஹநங்க ளிருந்தும், ஒரு வேளை தோளுக்கினியானில் எழுந்தருளுவதற்கே சிரமப்படுகிறது. ஸ்ரீ காஞ்சியில் ஸ்ரீதேசிகன் உத்ஸவம், அங்கு நடக்கும் ஸ்ரீ தேவாதி ராஜன் வைசாகோத்ஸவத்திலும் சீரிய சிறப்புடன் நடப்பதன்றோ அவ்வெம்பெருமானுக்கும் அவனடியார்களுக்கும் பெருமையைப் பயக்கும்? ஏனெனில்; நம் ஸ்ரீ தேசிகன், ‘படாதன பட்டு மனிசர்க்காய்’ என்னும் ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனிலும், மனிசர்க்கும் தேவ தேவனை அப்பெருமானுக்கும் பட்டபாடுகள் அளவிற் கடங்குமோ? ஸகல சாஸ்த்ரார்த்தமும் அடங்கிய ‘ஸ்ரீ வரதராஜ பஞ்சாசத்’ என்னும் ஸ்தோத்ர ரத்நத்துக்குப் போதுமோ,

அப்பெருமானுடைய இரண்டு விபூதிகளும். 'தேவாநாம் தாநவாநாம் ச ஸாமாந்யமதிதைவதம்' என்று நம் தேசிகன் அருளிச் செய்தபடி, அவ்வெம்பெருமான் பொதுத் தெய்வமானதால், ஞ்ரிமதஸ்தர்களும் சேர்ந்து நடத்தும்படி நம்மவர்கள் மிக்க கவன மெடுத்துக் கொண்டு உழைப்பதால் அவ்வுத்ஸவம் அப்படி நடைபெறுகிறதெனில், இதற்கும் நம்மவர் அவ்வாறு பரிச்ரம மெடுத்துக் கொள்வது சரண்யன் திருவுள்ளத்துக்கு உகப்பான புருஷார்த்த காஷ்டை யெனும் பரிபூர்ண கைங்கர்ய ஸாம்ராஜ்யமன்றோ? சென்னையிலிருந்த பஞ்சம குலத்தில் பிறந்த புண்ணியவான் ஒருவர், பெருமாள் உத்ஸவத்தில் ஒன்றை நீடுழி காலம் நடத்தும்படி மூலதனம் வைத்திருப்பதாகக் கேள்விப்படுகிறோம்.

ஸ்ரீ தேசிகன் உத்ஸவத்திற்கு, மூலதநம் வைக்கத் தகுதியுள்ளவர் நம்மவர்களில் இல்லையென்று சொல்வதற்கில்லை. பெண் பிள்ளைகளின் விவாஹாதிகளில் ஊர்வலம் முதலியவைகளில் கொள்ளும் உத்ஸாகத்தில் ஒரு சிறு துளி எடுத்துக்கொண்டாலும் போதுமே இம்மாதிரியான நற்கார்யங்கள் நடைபெறுவதற்கு. நம் ஆழ்வாராசார்யர் அவதார ஸ்தலங்களில் தூப்புல் ஒன்று தானே ஸ்ரீ தேசிகன் திருவடிகள் ஆதரிக்க வேண்டிய நிலையில் இருக்கிறது. மற்றுமுள்ள நம்மாழ்வார், ஆண்டாள், திருமங்கை மன்னன், திருமழிசைப்பிரான், திருக்கச்சி நம்பி, எம்பெருமானார், கூரத்தாழ்வான் முதலான முன்னோர்களின் அவதார ஸ்தலங்களில் உத்ஸவங்கள் எப்படி நடக்கின்றன வென்பதைக் கொஞ்சம் கவனித்தால் நம்முடைய நிலைமை நன்கு புலப்படும். இத்தூப்புல் அவதார ஸ்தலத்தில் அபர தேசிகனை ஸ்ரீமத் திருப்புட்குழி ஸ்வாமி வெகு பரிச்ரமப்பட்டுச் சீர்திருத்தங்களைச் செய்து விமரிசையுடன் உத்ஸவாதிகளை நடத்தியதும், ஸ்ரீ பரமஹம்ஸேத்யாதி தேரெழுந்தூர் நம்மாண்டவன் என்னும் ஸ்ரீமத் வேதாந்த ராமாநுஜ மஹா தேசிகன் நம் தூப்புல் வள்ளலுக்கு உத்ஸவம் நடத்தி வைத்ததையும் கேட்கும் நமக்கு, மறுபடியும் அவ்வண்ணம் நடக்கும் காலம் எப்பொழுது நாடுமோ வென்று அவ்வாசார்யனையும் அவர் திருவடிகளான மஹான்களையும் ப்ரார்த்திக்கொண்டு ப்ரதீக்ஷிக்கிறோம். இவையெல்லாவற்றிற்கும் சிறிது ஸமதாநமளிப்பது ஒன்று; அதாவது: இவ்வவதார ஸ்தல மஹிமையறிந்த மஹானை ஸ்ரீ பரமஹம்ஸேத்யாதி பரகால ஸ்வாமி, ஸ்ரீதேசிகன் உத்ஸவத்தில் (சாற்று முறை மஹோத்ஸவத்தை) ஸ்ரீ தேவாதிராஜன் ஸந்நிதிக்கு எழுந்தருளி மலைமேல் மங்களாசாஸநம் செய்து மண்டபத்தில் திருவோலக்கத்துடன் வீற்றிருந்து, பின்பு அப்பெருமானுடன் ப்ராகாரத்தில் எழுந்தருளும் ப்ரஹ்மாநந்தம் தரும் காட்சியின் பெருமைக்கு ஸேவித்தவர்களே ஸாக்ஷிகள் என்று கொண்டாடும்படி நூற்றுக் கணக்கான பொருளைப் பொருட்படுத்தாது சீரும் சிறப்புமாக நடத்திவைப்பதே. இதுபோல் மற்றுமுள்ள மடாதிபதிகளும் ஆசார்ய ஸ்வாமிகளும் சிஷ்யர்களைக் கொண்டு நம் தூப்புல் குலமணியின் திருவிழாவை, அடியார் குழாங்கள் குழுமிக்கொண்டாடும்படி நியமிக்கவேணுமாய் ஜ்ஞாபிக்கிறோம். இப்போது நடக்கும் ரீதியில் சாற்றுமறை உத்ஸவத்துக்கு முன்னுள்ள ஒவ்வொரு உத்ஸவமும், குறைந்தது ரூபாய் முப்பத்தைந்து முதல் ரூபாய் ஐம்பதுக்குள் நடப்பதிலும், சில திருநாட்கள் வெறு நாட்களாகவே இருப்பதாகவும் தெரிவதால், அந்நாட்களை உபயமாக நடத்தி, ஐஹிகம் ஆமுஷ்மிகம் எனும் உபயத்தையும் பெற ஸ்ரீ தேசிகன் திருவடிகளான ப்ரமுகர்கள் முன் வர வேண்டுமென வேண்டுகிறோம்.

24-8-36 }
ஆவணி ௲ கூ }

பரவஸ்து. ஸ்ரீநிவாஸ தாஸன்.

[ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன் அவதரித்த தூப்புல் க்ஷேத்திரத்தில் நடைபெறும் ஸ்ரீ தேசிகனுடைய வர்ஷோத்ஸவமானது, மற்ற ஸ்தலங்களில் விட மிகவும் விமர்சையாயும் சோபையாயும், உத்ஸாகமாயும் நடைபெற வேண்டியது அத்யாவச்யம் என்பதைப் பற்றியாவது அவ்விதம் நடவாமலிருப்பது நம்முடைய ஸமூஹத்திற்கே பெரியதோர் குறை வென்பதைப் பற்றியாவது ஸந்தேஹம் சிறிதுமில்லை. ஆனால் இந்தப் பரமாசார்யனுடைய உத்ஸவங்களில் பாணம், மத்தாப்பு, ப்ரஸாதங்கள் நிரவதிகமாய் ஏற்பாடு செய்து, அவற்றால் உத்ஸவங்கள் ப்ரஸித்தி பெறுவது ஒரு பக்ஷமிருக்க, அந்தக் கவிதார்க்கிக ஸிம்ஹம் அருளிச்செய்த ப்ரபந்தங்கள் மேன்மேலும் ப்ரகாசிக்கவும், அவற்றை ப்ரகாசப்படுத்தவும், வித்வான்களைக் கொண்டு ஸ்ரீ கோசாதிகள் ஸம்பந்தமாய் உபந்யாஸாதிகள் செய்விப்பதும், பரீக்ஷைகள் வைத்துப் பஹுமாநங்கள் அளிப்பதும், மேற்கண்ட உத்ஸவங்களுக்கு முக்யதமமான அங்கங்களாக இருக்கவேண்டு மென்றும் ப்ரார்த்திக்கப்படுகிறது. அன்றியும், ஒவ்வொரு நாள் உத்ஸவத்தை ஒரு ஸ்ரீ கோசத்தின் பெயரையிட்டு நடத்துவதும் ஸித்தாந்த ச்ரத்தாளுக்களுக்கு அத்யந்தம் அபிநந்தநீயம். ப-ர்]

புத்தகவிமர்சம்

1. ஸ்ரீரங்க மாஹாத்ம்யம். இது, ஸ்ரீரங்கம் 'திருவரங்கம் பெரிய கோயில்' பத்ராதிபரான ஸ்தாநீகம் ஸ்ரீ. உப. பார்த்தஸாரதி ஐயங்காரால் எழுதப்பட்டு வெளியிடப்பட்டது. ஸம்ஸ்க்ருத புராணத்திலிருக்கும் விஷயங்களை ஒன்றும் விடாமலும் சுருக்கமாய் அவ்வோ அத்யாயங்களின் கணக்கையும் விடாமலும் அதிக விஸ்தார மில்லாமலும் இனிய தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ளது. இதில் முதலில் கருடபுராணத்தைச் சேர்ந்த 'சதாத்யாயி' என்றது, 100 அத்யாயங்கள் அடங்கியது. அதன் பின், ப்ரஹ்மாண்ட புராணத்தைச் சேர்ந்த 10 அத்யாயங்களடங்கிய 'தசாத்யாயீ' என்றது, முன் உரைத்த விஷயங்களையே வேறொரு விதத்தில் தெரிவிக்கின்றதாகும். அதன்பின், 'ஸ்ரீரங்க ப்ரஹ்ம வித்யை' யும் 'ஸ்ரீரங்கபட்டண மாஹாத்ம்யமும் புராணங்களில் கிடைக்கும் ரீதியில் எழுதிக் கோர்க்கப் பட்டிருக்கிறது. மேற் கூறியவைகள் அந்தந்த புராணங்களைச் சேர்ந்தவைகள் தான் என்பதற்கு ஆதாரமாக ஒரு விமர்சம் எழுதிச் சேர்க்கப் பட்டிருக்கிறது. இவைகளில் அடங்கிய விஷயங்கள் முழுவதையும் எளிதில் தெரிவிக்கக் கூடிய அகராதி யொன்றும் தயார் செய்து இணைக்கப் பட்டிருக்கிறது. இதன் விலை 0—8—0. கிடைக்குமிடம்: ஸ்ரீரங்கம் பெரிய கோயில் ஆபீஸ் 282 வடக்குச் சித்திரை வீதி, ஸ்ரீரங்கம்.

2. உத்தர காண்டஸங்க்ரஹம். இதுவும் ஷை பார்த்தஸாரதி ஐயங்கார் ஸ்வாமியாலேயே தமிழில் எழுதப்பட்டு வெளியிடப் பட்டிருக்கிறது. இதில் ஸ்ரீவால்மீகி ராமாயணத்தின் உத்தரகாண்டத்தில் அடங்கிய விஷயங்கள் யாவும் சுருக்கமாக ஸர்க்கங்களின் கணக்குக் குறிப்புடன் எழுதப்பட்டிருப்பதுடன், படிப்பவர்களுக்கு ஆங்கங்கு தோன்றும் சிற்சில ஸந்தேகங்களுக்கு ஸமாதாநங்கள் அவ்வோ பக்கங்களின் அடியிலேயே சேர்க்கப் பட்டுள்ளன. உத்தர காண்ட விமர்சம் என்று கதா ஸந்தர்பங்களில் தோன்றும் விரோதங்களைப் பரிஹரிக்க ஒரு விசாரம் கடைசியில் எழுதி சேர்க்கப்பட்டு, அதற்கு ஆதாரமாக ப்ராசீந ஆசார்யர்களின் வாக்யங்கள் எடுத்துக் காட்டப் பட்டிருக்கின்றன. அதில் 'பால காண்டத்தில் சில ஸர்கங்களும் உத்தரகாண்டம் முழுமையும் ஸ்ரீ வால்மீகியால்இயற்றப் பட்டதல்ல' என்கிற சில நவீனர்களின் வாதத்திற்கு தக்க ஸமாதானமும் காணப்படுகிறது குறிப்பிடத் தகுந்தது. இதன் விலை 0—6—0. தபால் செலவு தனி. இதையும் ஷை விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

ஸ்ரீ:

ஸ்ரீ வரதராஜ பஞ்சாசத்

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்யர் M.A. B.L. அட்வொகேட், திருச்சி]

ஸம்விஜயந்த்யஶிவஹரம் விவக்ஷமாணதம்
ஸ்வாநந்தந்தம் ஸுசிதா ஹ்ருதயேந யந்யா: ।
நித்யம் வரம் வரத ஸர்வகதம் ஸூக்ஷ்மம்
நிஷ்ப்ரத்யூஹம் பவத: ஸ்வரூபம் ॥ 16.

வரத!—உத்க்ருஷ்டத்தை அநுக்ரஹிக்கும் வரதனே! அஶிவஹரம் விவக்ஷமாணதம் - எல்லாக் கெடுதல்களையும் போக்குவதாயும், ஸ்வாநந்தந்தம் - தம்முடைய ஆநந்தமயமான ஸ்வரூபாநந்தாநுபவத்தால் பூர்ணமான ஆநந்தத்தை யுடையதாயும், நித்யம் - நித்யமானதாயும், வரம் - எல்லாவற்றுக்கும் உயர்ந்ததாயும், ஸர்வகதம் - எப்பொருளிலும் வ்யாபித் திருப்பதாயும், ஸூக்ஷ்மம் - அணுவிலும் ஸூக்ஷ்மமானதாயும், நிஷ்ப்ரத்யூஹம் - அசையாத குறையாத ஆநந்தம் நிரம்பினதுமான, பவத: ஸ்வரூபம் - உம்முடைய திவ்யாத்ம ஸ்வரூபத்தை, ஸுசிதா ஹ்ருதயேந - தோஷங்கள் நீங்கி சாந்தமான மனத்தினால், யந்யா: - பாக்யவான்கள், ஸம்விஜயந்தி - நன்றாய் த்யாநம் செய்கிறார்கள்.

அவ:—இது வரையில் பரதேவதா மூர்த்தி வரதனென்று நிஷ்கர்ஷத்தை விளக்கினார்: பரதேவதா வ்யக்தியை நிச்சயித்ததும், அத்தேவதையின் த்யாநத்தைத் தொடங்குகிறார். தேவப்பெருமாளால் அதிஷ்டிதமான ஸத்யவ்ரத க்ஷேத்ரத்தில் வஸிப்பவருக்கு 'ஆகைவல்யம்' என்ற ச்லோகத்தில் நிரூபித்தபடி ஸ்ரீமந் நாராயணனே பரதேவதை யென்றும், 'நிர்ணயம் பிறவியாலேயே ஸித்தம்' என்று ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் ஸாதித்தார். 'அநவாயஸித்தோ நிர்ணய:' அந்த இடத்திலும் 'ஆகைவல்யம்' என்னும் பரதேவதா பாரமார்த்ய மங்கள ச்லோகத்தை நிவேசித்தார். இப்பொழுது பரமான திவ்யாத்மஸ்வரூபம், ஆதியஞ்சோதியுருவம், வ்யூஹங்களெல்லாம் இந்த அர்ச்சா மூர்த்தியான வரத ரூபமாக அநுபாவ்யமென்று 16 முதல் 26 வரையிலுள்ள 11 ச்லோகங்களால் வர்ணிக்

கிறார். எல்லா ரூப பரிக்ரஹங்களும், எல்லா அவதாரங்களும் வரன்களைக் கொடுக்கத்தானே; ப்ரணதார்த்தியை ஹரிக்கத்தானே; ஆகையால் அவையெல்லாம் வரதாவிர்ப்பாவங்களென்று கொள்ளத் தடையென்ன வென்று திருவுள்ளம். எல்லா தேவதா வாசக சப்தங்களும் ஸர்வ காரணப் பொருளான வரதனிடம் ஸமந்விதமென்று நிரூபித்தார். வரதனுடைய த்யாநத்தைத் தொடங்கும் இந்த ஶ்லோகத்தில் அநேக உபநிஷத்துக்களையும் அதிகரணங்களையும் திவ்ய ப்ரபந்தப் பாசுரங்களையும் வரதனிடத்தில் ஸமந்வயம் செய்வதுமன்றியில், வரதனை ஆழ்ந்து அநுபவித்த ஆழ்வானுடைய அநுபவத்தையும் அழகாக அநுஸரிக்கிறார். 'ஸம்ஹிம்தய ஹ்ரிதி' ஸமந்வயமென்று 'ஸம்' என்று ஸூத்ரகாரர் தொடங்குவது போல் 'ஸம்' என்று ஆரம்பம். பகவானுடைய த்யாநத்தை ஸூத்ரகாரர் ஸம்ராதநம்' என்றார். 'ஸம்விஜ்ஞயேஹமவதூரணாரவிந்தம்' என்று சுகர் த்யாநஶ்லோகத்தைத் தொடங்கினார். பாசுரம் பாடவும் நினைப்பில்லாமல் த்யாநத்திலேயே ஆழ்ந்திருப்பவர்களையும் கூட்டிக் கொள்ளுகிறது.

அவிஜ்ஞேயவிபக்ஷஸம்ஸ்திதம்—முதலில் :தோஷலேசமும் அணுகக் கூடாமலிருக்கும் நிர்த்தோஷ தத்வத்தைப் பேசுகிறார். இரண்டுவித லிங்கங்கள் (காட்டும் அடையாளங்கள்) உண்டு. அதை உபயலிங்க மென்பர். தோஷமில்லாமல் குணங்கள் நிரம்பியிருத்தல். இரண்டு அதிகரணங்களால் ஸூத்ரகாரர் த்யாநத்தில் இவ்விரண்டும் இன்றியமையாதவை என்று காட்டினார். 'அக்ஷரதியாம்' என்னும் அதிகரணத்தில் தோஷமில்லாமையையும் 'ஆநந்தாதய:' என்னும் அதிகரணத்தில் முக்யமான குணங்களுடைய வைசிஷ்ட்யத்தையும் ஸாதித்தார். ஆநந்தாத்யதிகரணத்தில் 'அமலன்' என்று தோஷமில்லாமை சொல்லப்பட்டிருந்தாலும், அது மிகவும் அவச்ய மென்பதைக் காட்டுவதற்காக அதையே தனியாக 'அக்ஷரதியாம்' என்னும் அதிகரணத்திலும் வற்புறுத்தினார். இங்கு நிர்த்தோஷத்வம் ரொம்பவும் அவஶ்யமென்பதை வற்புறுத்திக் காட்ட அதை இங்கே முதலில் நிவேசித்தார். 'அவிஜ்ஞேயப்ரதிபடம்', 'ப்ரத்யநீகம்' என்று இதையே முதலில் பேசுவது நம் பெரியோர் ஸம்ப்ரதாயம். இங்கே 'ப்ரதிபடம்', 'ப்ரத்யநீகம்' என்று பேசாமல் 'விபக்ஷ' என்று பணித்ததில் ஒரு ரஸமுண்டு. இப்பேரருளாளனிடம் ஹேயத்துக்குக் கூட சத்ருவென்று மட்டும்

பொருள் கொடுக்கும் பதத்தை ப்ரயோகிக்காமல் 'அடியோடு ஒரு ப்ரக்ருதி தர்மமும் இல்லாதது' என்று பொருளைக் கொடுக்கும் 'விபக்ஷம்' என்னும் பதத்தை ப்ரயோகித்தார். இங்கே தோஷம் ப்ரக்ருதம். தோஷமென்பதே அடியோடு இல்லை யென்று நிச்சிதமான பொருள் விவக்ஷிதம். விஶ்வகுணதர்சத்தில் ஜகத் தூஷகனை க்ருசானுவும் தேவப் பெருமாளைத் தூஷிப்பதற்கு ஒன்று மகப்படாமல் ச்லேஷையால் ஒரு தூஷண ச்லோகம் அமைத்துப் பேசினதைக் கேட்ட விஶ்வாவஸு, 'உனக்குக் கூடத் தூஷணம் அகப்படாததால் வரதன் அகிலஹேய ப்ரதிபடனென நிச்சயமாகிறது' என்றான்.

ஶாந்தோதிதம்—பெருமாளுக்கு 'ஶாந்தோதிதம்' என்றும், 'நித்யோதிதம்' என்றும் இரண்டு ஆநந்தாநுபவாவஸ்தைகள் சொல்வர். ஆநந்தமயமான ஸ்வதிவ்யாத்ம ஸ்வரூபத்தை மட்டும் அநுபவித்து மகிழ்வதை 'ஶாந்தோதிதம்' என்றும், நம்முடைய விபூதிகளையும் கூடச் சேர்த்து அநுபவித்து மகிழ்வதை 'நித்யோதிதம்' என்றும் சொல்வர். இவ்விரண்டு பொருள்களிலே இந்தப் பெயர்களையே மாற்றியும் ப்ரயோகிப்பது உண்டு. ஆழ்வான் வரத ராஜனை, தமது ஸ்தவாரம்பத்தில் 12, 13-ச்லோகங்களில் அத்புதமாக அநுபவித்ததை ஸ்வாமி இங்கே சேர்க்கிறார்.

"நிராவாயம் நித்யம் நிரவதி நிரம்ஹோ நிருபமம்
ஸமாஶாஸம் ஶாந்தம் ப்ரதிபடமவத்யஸ்ய ஸததம் ।
வரம் ரூபம் ஸாக்ஷாத்"

என்று 12-ம் ச்லோகத்திலும்,

"ப்ரஶாந்தாநந்தாத்ம ஸஹஜமஹாநந்தமஹிமா
ப்ரஸக்தஸ்வோதித்யா ந கதவிதாரம்மாண ஸ்வபரம் ।"

என்று 13-ம் ச்லோகத்திலும் அநுபவித்தார். 13-ம் ச்லோகத்தில் சாந்தோதித தசையை வர்ணித்தார். அந்த ஸ்வ ஸ்வரூபாநந்தம் ஓர் அலைக்காத அமரிக்கையான ஆநந்தக் கடலாயிருக்கும். அது மாண்டூக்ய உபநிஷத்தில் 'ஶாந்தமஸாநம் அத்ருதாநந்தம்' என்று பணிக்கப்பட்டது. பட்டர் ஸ்தவத்தில் பெரிய பெருமாளை அநுபவிக்கையிலும் 'யசாஸி நித்ய' என்று தொடங்கிய ச்லோகத்தில்,

"......ஆநந்த: ப்ரஶம ப்ரஶாந்தோதித ரஸ: ।
ஸ்வைவ ஸ்வாம் வேத்து ஸ்திமித விதரங்கம் வரத ஹோ:
ப்ரஶம்வேத்யப்ராஶயஸ்ய ஹ்ருதநந்த ஸரித‌ழ"

என்று சாந்தோதித தசையின் எல்லையற்ற ஆநந்தத்தைப் பேசுகையில் பெரிய பெருமாளை 'வரத' என்று கூப்பிட்டார். ஆநந்தமயனை புருஷன் தம் ஆநந்தத்தை நமக்கும் அளிக்கும் வரதனாகவேணு மென்று ஸூசிப்பதில் நோக்கு. இந்த இரண்டு ச்லோகங்களின் அநுபவமும் இங்கே அநுஸரிக்கப் பட்டது. அங்கே 'அலையில்லாமல் அசங்காமல்' என்றதை இங்கு 'நிர்வ்ருத' என்று ஸாதித்தார். இந்த ஸ்வஸ்வரூபாநுபவார்த்தமே ஸுந்தரபாஹுஸ்தவத்தில் 'நித்யதசை' என்று ஸாதிக்கப்பட்டது. கரை புரண்ட அநுபவங்களில் நாமங்களும் வ்யவஸ்தை தவிரும் கரணங்களைப் போல. 'ஶாந்தோதிதம்' என்பது யோக சாஸ்த்ரத்தில் 'த்யாந' விஷயத்தில் ப்ரயோகித்துளது. த்யாநம் செய்யப்படும் வஸ்துவைப் பற்றி ஒரு நினைப்பு (ஸ்ம்ருதி, மநோவ்ருத்தி) ஓய்வதும், மற்றொரு நினைப்பு உதிப்பதும், காலபேத மறியாமல் அநாயாஸமாக ஸ்வயமாக உதித்துக் கொண்டேயிருப்பதை 'ஶாந்தோதிதம்' என்பர்.

ஶைவதா—உயர்ந்த சாந்தி ரஸம் நிரம்பிய சாண்டில்யர் பெருமாள் விஷயமாகப் பக்தி ஸூத்ரங்கள் பண்ணினவர். பாஞ்சராத்ரத்திலும் அவருடைய பக்தி விஷயமான உபதேசங்கள் உள. 'ஶாந்த: உபாஸீத' என்று சாண்டில்ய வித்யை. 'ஶாந்த: ஸந்' (சாந்தனாக) உபாஸிக்க வேண்டும். 'ஶம' என்பது, தமம் உபரதி (ஆசையொழிதல்), திதிக்ஷை (பொறுத்தல்), ஸமாதாநம் (ஐகாக்ர்யம்) என்பவற்றையும் காட்டும். ஶம தமாதிகளோடு கூடியவனாக த்யாநம் செய்யவேண்டுமென்று ஸூத்ரகாரரும் ஸாதித்தார். 'தொழுதெழென் மனனே' 'மனனக மலமறக் கழுவி,' 'நெஞ்சமே நல்லை நல்லை', 'மனந்தனைக் கட்டி,' 'யாதுமோர் பற்றிலாத பாவனை யதனைக் கூடில்' முதலியவற்றை நினைக்கவேணும். சாந்தப் பெருமாளை சாந்த மநஸ்ஸினால் உபாஸிப்பது உசிதம். 'ஶாந்தாம் ஶாந்தேந மநஸா' என்றார் ஆதிகவி. சாந்தை என்னும் கந்யகையை சாந்தமான மநஸ்ஸோடு தாநம் செய்தார். சாந்தி ரஸத்திற்கு ஶமம் ஸ்தாயிபாவம். அந்த ரஸம் ஸ்ரீமந் நாராயணனைத் தைவதமாக உடையது என்றும், பர

மாத்ம ஸ்வரூபம் அதற்கு ஆலம்பநமென்றும் ஸாஹித்ய தர்ப்பணத்தில் பணிக்கப்பட்டதையும் நினைத்து, இங்கே பரமாத்ம ஸ்வரூபாநந்தாநுபவம் சாந்தோதிதமாக ஸாதிக்கப் பட்டது. மநஸ்ஸில் ஸ்தாயிபாவமாக நிலை நிற்க வேண்டியதைப் பற்றி 'ஶைவதா' என்று ஸாதித்தார். அந்த ஶமமும் ப்ரஶஸ்தமும் அதிசயிதமாயு மிருக்கவேணும்.

ஹ்ருதயேந—யோகிகளுக்கு ஹ்ருதயேசயனுடைய த்யாநத்தில் அதிகார மென்பர். 'விசுத்தமான மநஸ்ஸினால் தான்' என்றது ச்ருதி.

தந்யா:—'மநஸ்ஸினால் தநவான்கள்' என்கிறதால், வேறு தநம் துச்சமென்றதாயிற்று. 'அம்ருதத்வம் என்னும் மோக்ஷம் வித்தத்தால் கைகூடுவதல்ல. இந்த த்யாந மென்னும் ஹ்ருத்யாகத்திற்கு (ஜ்ஞாந யஜ்ஞத்திற்கு) விசுத்தமான ஹ்ருதயமொன்று தான் தநம். த்ரவ்யஜ்ஞங்களுக்கு மிகுந்த தநம் வேண்டும். இந்த ஜ்ஞாந யஜ்ஞத்தில் தநம் இடைஞ்சலாகும். ஆகிஞ்சந்யமே பெரிய தநமாகும். 'தந்யர்கள் என்னைப் பஜிப்பதில்லை; நிஷ்கிஞ்சந ஜநங்களுக்கு நான் ப்ரியன்' என்றார் கண்ணன் ருக்மிணியிடத்தில். 'ஹ்ருதயத்தைத் தநமாகப் பெற்றவர்கள்' என்று பொருள். 'நெஞ்சமே! உன்னைப் பெற்றால்' என்றதை நினைக்கிறார். இந்த ஹ்ருதயத்தைத் தநமாகப் பெற்றால் ஆநந்தலாபம் நிஶ்சிதம். 'தநஞ்ஜயா' தநத்தை அடைபவர் தந்யர். வரதப் பெருமாள் இவருக்குப் பைதாமஹ தநம். 'வரதஜநம் ஶ்ரீ ஆநந்தம் ஶ்ரீ.' 'நித்யம் அகிலஹேயவிபக்ஷணோதம்' என்றும், 'ஶாந்தோதிதம்' என்றும் உபயலிங்காதிகரணத்தை வரதனிடம் யோஜித்தார். 'ஶாந்தோதிதம்' என்று மாண்டூக்யோபநிஷத்தையும் சேர்த்தார். 'ஶாந்திஸம்ருத்தம் அம்ருதாநந்தம்' என்று அங்கே உள்ளது. 'நித்யம் விபும் ஸர்வகதம் ஸுஸூக்ஷ்மம் தத் பூதயோநிம்' என்று முண்டகத்திலுள்ளதையும் இங்கே யோஜனை செய்கிறார். அந்த முண்டகத்திலும் 'ஆநந்தரூபம் அம்ருதம் யத்விபாதி' என்று ஆநந்த ஸ்வரூபத்வம் பணிக்கப்பட்டது. முன் ச்லோகங்களில் நிஷ்கர்ஷிக்கப்பட்ட காரணப்பொருள் ஆநந்த பரிபூர்ணமென்று இங்கே விளக்கப்படுகிறது.

பரம்—'உபயலிங்க பாதத்தில்' எல்லாவற்றிலும் உத்க்ருஷ்டமென்பது 'பராதிகரணத்தில்' நிரூபிக்கப்பட்டது. அதையும் இதனால் வரதனிடம் சேர்க்கிறார். பராதி கரணத்திற்கு அடுத்த அதிகாணம் ஃபலாதி

கரணம். வரதன் பலத்தைக் கொடுப்பவரென்பது திருநாமத்தாலேயே ஸ்பஷ்டம். ‘வரம்’ என்று பராதிகரணத்தை ஸூசித்தவுடன் அடுத்த பலாதிகரணத்துக்கும் விஷயமென்பதைக் காட்ட அடுத்தாற்போல் ‘வரத’ என்று கூப்பிடுகிருர். ஸூத்ரத்திலுள்ள அதிகரண க்ரமத்தை அநுஸரித்து இங்கே பதங்களின் க்ரமம்.

‘ஸர்வகதம் ஸுஸூக்ஷ்மம்’— முண்டக ச்ருதியில் இப்பதங்கள் இதே க்ரமத்தில் உள்ளனவென்று காட்டினேம். பராதிகரணத்தில் ‘அநேந ஸர்வகதத்வம்’, என்றும் ஸூத்ரம் உளது. முன் ச்லோகங்களிலுள்ள ஸர்வாத்மகத்வமும் சேர்க்கப்படுகிறது. அணுவிலும் ஸூக்ஷ்மமான அணுவாயிருந்தால் தான் ஸர்வகத மாகலாம்.

நிஷ்கம்ப ஆநந்தமயம்—பெருமாளை நிஸ்சலமான அசையாத ஆநந்த ஸ்வரூபமாக த்யானித்தால், த்யாநமும் அசங்காமல் நிஸ்சலமாயிருக்கும். ‘ஆநந்தமயம்’ என்னுமிடத்தில் ‘மய’ என்பது விகாரத்தைச் சொல்லுமோ என்ற சங்கை வந்தது. அந்த சங்கைக்கு இடமில்லாமல் ‘நிஷ்கம்ப’ என்று அதை முதலிலேயே போக்குகிருர். இங்கே ‘மய’ என்பதற்கு ஸ்வார்த்தம் கொண்டால், ஆநந்த ஸ்வரூபம் ஆநந்தமே என்று பொருளாகும். சலிக்காத ஆநந்தமானவென்று பொருள். ‘யஸ்யாஸௌ தஸ்ய நந்தயஃ’ என்று பட்டி காவ்யத்தில், ‘ஸீதை யாருடையவளோ அவனுக்குத்தான் ஆநந்தம்’ என்று சூர்ப்பணகை ராவணனிடம் பேசினுள்.

பவத்ஸ்வரூபம்— உம்முடைய என்று திவ்ய மங்கள விக்ரஹ விசிஷ்டமான வரதனைக் கூப்பிட்டு, உம்முடைய ‘ஸ்வரூபம்’ என்று பரஸ்வரூபத்தைப் பிரித்து (நிஷ்கர்ஷமாய்) ஸாதிக்கிருர். இங்கே நிஷ்க்ருஷ்ட ஸ்வரூபத்தின் த்யாநம். இங்கே அநுபவிக்கப்படும் எல்லையற்ற ஆநந்தத் தன்மையை அடுத்த ச்லோகாரம்பத்தில் ‘ஸதாதிமாயி ஸ்வரூபே’ என்று அநுபவிக்கிருர். ‘முதல் சதகத்தில் வரதனை வீக்ஷணம் செய்து’ என்று தாத்பர்ய ரத்நாவளியில் ஸாதித்தபடி ‘உணர் முழு நலம்’ என்னும் அநுபவத்தையும் வரதன் விஷயத்தில் காட்டிக் கொள்ளுகிருர்.

ஸ்ரீயை நம:

மஹாவீர வைபவம்

[ஸ்ரீமான் உ. வே. வித்வான் வி. அநந்தாசார்யர், பச்சையப்பன் காலேஜ் ஸம்ஸ்க்ருத பண்டிதர்.]

இந்த க்ரந்தத்திற்கு ரகுவீரகத்யம் எனப் பெயர் தற்காலம் வழங்கி வருகிறது. மஹாவீர வைபவம் என்னும் பெயரோ இந்த க்ரந்த கர்த்தாவினுல் இடப்பட்டது. மற்றவர்களால்இட்ப்பட்ட பெயரைக் காட்டிலும் நூலாசிரியர் இயற்றிய பெயருக்கே அதிக கௌரவம் உண்டு. ஆகையால் ஸம்ப்ரதாயத்தில் தேர்ந்தவர்கள் மஹாவீர வைபவம் எனும் பெயரையே வழங்குகிருர்கள். புத்திரனுக்குப் பெயர்வைக்கப் பிதாவுக்கே அதிகாரம். ஒருவனுக்கு அநேக பெயர்கள் இருந்தபோதிலும், பிதா இட்ட பெயருக்கே கௌரவம் அதிகம் என்பது உசிதமல்லவா? இந்த க்ரந்தத்தின் முடிவில் **‘पठत महावीरवैभवं सुधियः’** என்று ஸ்ரீதேசிகன் இந்த திருநாமத்தையே இந்த க்ரந்தத்திற்குச் சாத்தினுர் என்பது ப்ரத்யக்ஷம். மகாவீரன் என்று ஸ்ரீராமபத்ரனுக்கு அஸாதாரணமான திருநாமம். சக்ரவர்த்தித் திருமகனிடத்தில் அளவற்ற கல்யாண குணங்கள் இருந்தபோதிலும், இந்த மஹாவீரத்வமே ஸ்ரீ தேசிகனுடைய மனத்தைக் கவர்ந்தது என்று சொல்லுவதற்கு அநேக அத்தாக்ஷிகள் உண்டு. ஸ்ரீதேசிகன் தான் செய்தருளிய பற்பல நூல்களில் ஸ்ரீராமபிரானைப் பற்றிச் சொல்லவேண்டி வரும்போது, எப்படிப்பட்ட காம்பீர்யத்துடன் அவர் திருவாக்கிலிருந்து சப்தங்கள் புறப்படுகின்றனவென்று பாருங்கள். ஸ்ரீதேசிகனுடைய திருவுள்ளத்தில், ஸ்ரீராமபிரான், வீர ரஸத்திற்கு அபிமானி தேவதையாகக் கொள்ளப்பட்டார் என்று சொல்லவும் கூடும். கவிகள், ச்ருங்காராதி ரஸங்களை வர்ணிக்கும்போது, வர்ணிக்கப்படும் ரஸங்களுக்கு ஏற்றவாறு, கைசிகீ ஆரபடீ முதலிய வ்ருத்திகளை அமைத்துக் காவ்யங்களை இயற்ற வேணும் என்ற விதி உண்டு. அவ்விதிகளில் காளிதாஸாதி மஹாகவிகள் கூடத் தவறிப்போவதுண்டு. ஸ்ரீதேசிகனிடத்தில் தவறுதல் இல்லை என்று உறுதியாய்க் கூறலாம். இந்த ராமபிரானைப் பற்றிச் சொல்லவேண்டி வந்த பற்பல ஸந்தர்ப்பங்களில், வீரரஸத்திற்கு உரியதாகிய ஆரபடீவ்ருத்தியே நமது பரமாசார்யனுடைய திருவாக்கிலிருந்து பரவசமாய் புறப்பட்டிருப்பதைப் பார்த்தால், இவர் ஸ்ரீராமபிரானை எவ்விதமாய் அநுபவித்தார் என்பது நன்கு விளங்கும். இந்த மஹாவீரவைபவத்தை இயற்றும்போது ஸ்ரீ தேசிகனுடைய மனேபாவம் எப்படி இருந்திருக்கலாம் என்று விசாரித்

தால். ஸ்ரீராமபிரான் ராவண ஸம்ஹாரம் செய்த பிறகு திருவபிஷேகத்திற்காகத் திருவயோத்யையில் ஸகல வாநர ராக்ஷஸாதிகளான ஆப்தவர்க்கங்களுடன் ஊர்வலம் வரும்போது இவர் முன்னே அபிமுகராய்த் தமது சிரத்தில் கூப்பின கைகளை வைத்துக்கொண்டு கட்டியம் கூறுவதாக நினைத்திருந்தார் என்று கொள்வது மிகவும் பொருந்தும். இந்தத் தேசிகனே ஸ்ரீ கண்ணபிரானை அநுபவிக்கும்போது வாக்கின் மார்த்தவத்தைப் பாருங்கள்.

ஆரபடீ வ்ருத்திக்கு ப்ரதாநோதாஹரணமாக எழுதப்பட்ட ஸ்ரீ தசாவதார ஸ்தோத்திரத்திலுங்கூட, கண்ணன் அநுபவம் விலக்ஷணமான மார்த்தவம் நிறைந்து விளங்குவது ஒரு விசித்திர ஸம்பவமாய்த் தோன்றும். காளிதாஸாதிகளைப் போல் அதிம்ருதுவான ஸந்தர்ப்பங்களை இயற்ற நமது தேசிகனுக்கு ப்ரியமும் திறமையும் இருந்தும், தமது மனோபாவத்திற்கேற்றபடி வீர ரஸத்தையும் அதற்கேற்ற சப்த ரச்னையையும் அவர் எடுத்துக் கொண்டது மிகவும் கொண்டாடத் தகுந்தது.

ரகுவீரன் என்ற திருநாமத்தைக் காட்டிலும் மகாவீரன் என்ற திருநாமமே ஸ்ரீராமபிரானுக்கு மிகவும் உயர்ந்ததாக அநேக பழைய கவிகளாலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ரகுவீரன் என்ற பதம் இரகுவின் குலத்தில் தோன்றிய மற்ற அரசர்களில் ஒருவரைச் சொன்னாலும் சொல்லக்கூடும். மஹா வீரன் என்ற சொல் ஸ்ரீராமனைத் தவிர்த்து வேறு ஒருவரையும் சொல்வதில்லை என்பது வித்வான்களின் அபிப்ராயம். ரஸிக சிகாமணியான பவபூதி மஹாவீர சரிதம் எனப் பெயரிட்டு நாடகம் இயற்றி யிருப்பது எல்லோரும் அறிந்த விஷயம்.

சரிதம் என்ற பெயரைவிட வைபவம் என்று பெயரிட்டிருப்பதில் அநேக அர்த்த ஸ்வாரஸ்யங்கள் உண்டு. சரிதம் என்பது நடந்த வ்ருத்தாந்தத்தை உள்ளபடி உரைத்தல். வைபவம் என்பது பெருமையைக்கொண்டாடுவது. அதுபற்றியே முன்னர், 'ஸ்ரீதேசிகன் இதைக் கட்டியம் கூறுகிற ஸந்தர்ப்பமாக அநுஸந்தித்தார்' என்று சொன்னது இந்த க்ரந்தத்தின் திருநாமத்திற்கு மிகவும் பொருத்தமானது. இவ்விஷயங்களை ஆராய்ந்து பார்க்காமல் சிலர் இந்த க்ரந்தத்திற்கு ரகுவீரகத்யம் என்று பெயரிட்டதால், அதுவே தொன்றுதொட்டு வழங்கி வருகிறதுபோலும்.

ஆரம்பத்திலேயே '**जय जय महावीर!**' என்று உபக்ரமம் செய்து "**पठत महावीर वैभवं**" என்று பலச்ருதியைப் பரிபூர்ணம் செய்த ஆசார்யனுடைய நிஜமான அபிப்ராயம் வேறு எவ்வாறுதான் இருக்கக்கூடும்?

தொன்மறை முறையிற் றேமற வியற்றி
யடியர்தந் தொகுதியிற் குழுமி
யுண்மைசே ராரணத் துறு பொருளை
யுலகெலாம் பரப்பின ரொளிர்ந்தார். 31

வேறு

மற்றினி வருக்கை வாழை மாங்கனி யிரத முறிப்
பொற்றநெல் விளையும் வீர நாரண புரத்து வாழுங்
கற்றவர் களிக்கு நாத முனிகளின் பேரன் செம்மை
யிற்றிதென் றெவரு முள்ளங் குளிர்ப்புற வியம்புகிற்பாம். 32

ஒருமுறை புகல யாவு முப்த்துணர் கிற்கு மிந்தத்
திருவனார் திறமு மென்னென் றெவர்களுந் திகைக்க வந்தக்
கருவிலே திரும ணந்த யமுனையந் துறைவர் கற்று
விரிதரு மறைமு னெல்லாம் விளம்பின ரென்ப மாதோ. 33

தந்தையா ருலக மிந்தத் தனயனை யுயிர்க்கச் செய்த
தெந்தமா தவமோ வென்ன விலகுறும் புதல்வற் கேன்ற
வைந்தலங் காரம் வாய்ந்த வாயிழை மணியே யாமோர்
செந்துவ ரிதழி னாளை மணந்திடச் செய்து மன்னோ. 34

கரிமருப் பொசித்த கண்ணன் கழிலிணை கலந்தங் காரப்
பிரிவினி லுழந்து மற்றும் பிரமமே தமெனத் தந்தைக்
கெரிதழற் கரும முற்றி யேவரு முவக்கும் வண்ணஞ்
சரமகைங் கரிய மைந்தர் சதுருறப் புரிந்தா ரன்றே. 35

யாமுன ரியரிவ் வாறே யாவையு முடித்துப் பின்னர்
வாமமே கலையாள் வாழ்க்கைத் துணையொடு வரைவி லின்பத்
தேமமோ டிலகி யீறி லிருங்கலை யனைத்துந் தேர்ந்தா
ரேமபா டியமா பட்ட ரெனுமறை வலவ ரோடும். 36

இன்னண நிகழு நாளி லெறுழ்வலித் தடந்தோண் மன்னர்
மன்னவன் றனக்கு நண்பாய் மகிழ்வனோ ராக்கி யாழ்வா
னென்னுமோ ரபிதா னத்துப் புரோ கிதன் கலைஞ ரெல்லாந்
தன்னைவென் றிடுதல் காறுந் தனக்கிறை தருக வென்றே. 37

நிண்ணயித் தவனி யெங்கு நிகழ்த்தினன் புகுது மெல்லை
துண்ணென வவன்றன் றூத னொருவனிப் பட்டர் தம்பால்
நண்ணினன் றருக வென்று திறைதனை முறியு நல்க
வுண்ணனி நலிவு கொண்டா ருக்கமுந் துறந்து மன்னோ. 38

ஆயபோ ததனை யன்னா ரறிந்தகங் கொதித்துத் தந்த
தீயதா முறியை வாங்கிச் சிதைவுறக் கிழித்தெ றிந்து
சேயவர் புகழு நல்லீச் சுரமுனிச் சிறுவர் சீட்டைக்
காய்தரு சினத்திற் போழ்ந்தா ரென்றுபோய்க் கழறு கென்றார். 39

என்னவாங் கேவ லாளன் மீண்டெழுந் தாக்கி யாழ்வான்
றன்னுழை யணுகி யையன் றருமொழி விளம்ப லோடு
மன்னவ னிறும்பூ தெய்தி யவர்வெறுங் கலைஞ ரேயோ
மன்னிய கவியோ கேண்மி னெனவிடுத் திசைத்தான் மற்றும். 40

கண்டது கவியுங் கற்ற கலைஞரே யல்லோம் வாத
மிண்டராங் கரிகண் மத்த கம்பிளந் தடக்கு மேன்மை
கொண்டவெஞ் சீய மாவே மென்றவர் முறியிற் கோட்டி
யண்டரும் புகழும் வண்ண மடலுற விடுத்தா ரன்றே. 41

அம்முறி யவனுங் காணா வெகுளியும் வியப்பும் பொங்கத்
தெம்முனை யடக்கும் வைவேற் றிண்டிற லிறைவற் கோத
நம்மெதிர் விரைந்து வம்மி னெனவவ னடத்து மாணை
வெம்மையின் முடங்க லொன்று விகத்தகர்க் கெழுதி விட்டான். 42

செருக்குட னெழுதி விட்ட சீட்டினை யுணர்ந்து சேயார்
திருக்கிளர் முறுவல் பூத்துத் தெரிவிலா னிவனென் றாரும்
வெருக்கொள வதனை வாங்கி விரனுதி கொடுகி ழித்துப்
பொருக் கெனக் கொணர்ந்தோன் மீது போகட்டுப் போதி யென்றார். 43

போயவ னிதனை வெம்பப் புரவலற் குரைக்க வன்னாள்
காயெரி சினிமீ தூரக் கடுகடுத் திடுதல் காணாச்
சேயரி பரந்த கண்ணா ளவன் மனைக் கிழத்தி செய்ய
வாய்மலர்க் கரங்கள் கூப்பி யருகணைந் தறைத லானாள். 44

படியெலா நெறிகோ டாது பண்பினிற் புரக்கு மன்னன்
றடவரைப் புயத்து நாப்பண் டங்குவ தெனினு மன்னான்
மிடலெலாம் பயின்ற வேத மிகுபுகழ்க் கவிஞர் நாவின்
அடலுறு முனையிற் றங்கு மென்றிடு முலக மம்மா. 45

தம்மைமுற் கொணர முன்னுந் தரணிப ரவர்பா னேயஞ்
செம்மையிற் புரிவ ரைய வாதலிற் சினந்த விர்ந்தே
யம்மையி னவரை நின்ற னவைக்களத் தழைத்தி யென்றாண்
மும்மையி னுலகும் விற்குங் கற்பினின் முதிய ளன்றே. 46

வாமமே கலையி னாளி னெறிமொழி மறையின் வெய்ய
தாமல கையும் விண்டோ டவண லுந் தெருண்டு தந்தி
காமரு சிவிகை வாசி யாதிகள் கடிது விட்டான்
ஏமுற வுலகம் வந்த வெழுமையர் துறைவர் தம்பால். 47

காவலன் பரிவா ரத்தைக் கண்டதுஞ் சிவிகை யூர்ந்து
பூவனை யுத்தி யார்ப்பு மடங்குறப் புடைக்கும் பல்ல
வோவறு பறையி னோதை யுலகெலாம் போர்ப்ப முத்த
மேவிய கவிகை நீழற் பொற்பிடிக் கவிரி வீச. 48

குணகடல் குமரி மேலைக் குரைகட லிமைய நாப்பண்
பணிபதி சுமக்கும் பார்மே லிரண்டுமீ மாஞ்சை யெம்போ
லணிபெற வுணர்ந்தோ ராரு மறிகிலே மெனவே பாங்கர்
தணிவறப் புகழ்ந்து பாடத் தரணிப னவையுட் புக்கார். 49

தன்செவி தழலும் பாயி ரந்தனை நோனா னந்த
மன்புரோ கிதனு மன்னன் மதிமுகங் குறித்து வாதந்
துன்புற விழைத்தே யிந்தத் துடுக்கனை யடக்க வல்லே
னன்புட னிதற்கு நின்ற னாணையும் பிறக்க வென்றான். 50

கொற்றவன் யாமு னேயர்க் கன்னது குளிர்ந்து ரைக்க
மற்றவ ரிதனுக் குற்ற நடுநிலை யுடையார் வைக
லுற்றதென் றருள வன்னா னெண்குணத் தறிஞர் பல்லோர்
பெற்றதன் சவையிற் சான்றாய்ப் பொருந்துற விழைத்திட் டானால். 51

பொழுததி லிறைவன் பன்னி புரவலற் றொழுது கேண்மோ
பழுதறு சைவ வைண வந்தனிற் பரிய வாதங்
கெழுதகு முனக்கு மெற்குங் கிளர்ந்ததி லடியாண் முன்ன
மெழுதரு புகழா யெண்ணி யிழைத்திடு சபதந் தன்னை. 52

நிறைவுறப் புரிய வாதி நின்மலன் கருணை தன்னா
லறைதரு தகைய ராய யாமுனா ரியரும் போந்தார்
கறைகெழு கதிர்வேற் கையாய் வென்றவர் விழுந்தோர் தம்பான்
முறைமையிற் புரித லாய தெதுவது மொழிக வென்றார். 53

கேட்டது முறுவல் பூத்துக் கிளிமொழி வயங்கொண் டோரென்
பேட்டிட னெகினந் துஞ்சு முண்டகம் பெருகும் பண்ணை
நாட்டினி லொருயி லாள நவில்பணி யவர்க்கி ரிந்தோர்
வாட்டமில் வண்ணஞ் செய்வ ரென்றனன் வழங்குங் கையான். 54

இவ்வரை யறையை வள்ள லவைக்களத் தியம்பி யாரு
மவ்வயி னிருந்த பின்ன ரணிமணி முறுவ லாளி
னெவ்வகை மணியு மின்னு மிருக்கையி னிருந்து வாதஞ்
செவ்விதிற் புரியும் போருஞ் செய்வுறத் துவக்கு கென்றான்.

வேறு

மன்பு ரோகிதன் மற்றவர் மதிமுகங் குறியா
முன்பு நீயுள திலதென மொழிகுவன் பிறழப்
பின்பு நான்வயம் பெறும்வணம் பேசுவ லென்று
வன்பு மீங்குறார் வழங்குவர் புகலுதி யென்றான்.

செய்கை வல்லவர் செருக்கொடு முற்படக் கிளவார்
பொய்கை வல்லநீ பொறுத்தலிற் கண்ணியுட் புகுவாய்
மெய்கை வல்லயான் மிழற்றுவன் மும்மொழி யிவற்றி
னுய்கை வல்லையே லுரைத்தெதி ருய்குவை யுரவோய்.

இந்த மன்னவற் கியைந்திடுந் தேவியின் கற்பின்
முந்தி யுள்ளவ னிறைவனு முதிர்திரைக் கடல்சூ
ழுந்த வையக மளித்திடு மவனிபர்க் கிறைவன்
றந்த தாயுனை மலடியு மல்லள்சாற் றுதியால்.

மும்மை யாயவிவ் வுசாவினுக் கெதிருரை மொழியா
னம்ம வாய்புதைத் தசைவுறு திருந்துசற் றதன்பின்
வெம்மை யோடினி விரிதரு நால்வழக் கிடுவேஞ்
செம்மை யுண்டெனிற் றெரிந்தெதி ரறைகெனச் செப்பும்.

அத்து வைதிது வைதிகண் மதந்தனை யடக்க
மித்தி யைபிர பஞ்சமு மிதனையே மருண்டு
சுத்தி வெண்பொனிற் சொலிப்பதென் றுணர்வது கடுப்பப்
பித்தின் மாறுறப் பேசுவர் சிலரெனப் பகர்ந்தான்.

நன்று ரூதநீ நவில்வது பொய்யெனி னுலகம்
ஒன்றி யூடுறு மதனுழை யுரைத்தமித் தியையும்
பின்றெ ரிலந்திடின் மித்தியை பிறங்குவ தெதுவோ
மன்ற மின்னிடும் பொருள்களை யெங்ஙன மறைப்பாய்.

உள்ள தொன்றினை வேறென வுணர்குதி யென்று
யுள்ள தென்குவை யில்லதை யெனமறுத் துரைப்பாய்
பிள்ளை யொன்றுணர் விலதெனப் பேசினின் சமயங்
கொள்ள லெவ்வணங் குலவுவ திலதெனுங் குணத்தோய்.

பேத மின்றெலா மொன்றெனப் பிறழ்தர மொழிவாய்
பாதி யுண்டறுப் புளமருப் புடையதோர் பசுமற்
றேது மின்றியே முண்டமா யிலகுமொன் றெல்லாம்
போத வொன்றுள திவையெலாம் பொருந்து மென் றெனலே. 63

என்ன வின்னமும் பலபல வாதம ரிழையா
வன்னவன் செருக் கடங்குற வரனையன் றுயிர்த்தோன்
மன்னு நாபியந் தாமரை மருவிய மாலே
பன்னு மாரணப் பொருளெனப் பனுவலி னிறுவி. 64

யாமு னரியர் விளங்கிட யாவரும் புகலா
ஞேமு ளத்துட னவனுற நுண்ணறி வுடையார்
தாம வாகையீச் சுரமுனி தனயரே புனைந்தார்
வாம மாயென வழங்கின ரரசவை மகிழ. 65

துப்பி னேரிதழ்த் துடியிடை யரசியும் பூரித்
தப்ப னேயெமை யாளவந் தீரென வணைக்க
விப்பெ ரும்புவிக் கிறைவனு மிவர்க்கெழி லுமஞ்
செப்பு கென்றினி யாளவந் தாரெனச் செப்பி. 66

பன்னி யாயதன் றிருவரங் கத்தமை பகர்ந்த
வண்ண மேயுவர்க் கருத்தரா டுவந்துடன் வழங்கிப்
பொன்னின் மாமுடி புனைதலும் பூமழை யமரர்
மன்னு மாறுபெய் தார்த்தனர் முரசவண் மாதோ. 67

ஒட்ட முன்னைய துரைப்படி யாக்கியாழ் வானை
வட்ட வெண்குடை வாகுச னளவந் தார்பா
லிட்ட விண்பணி யிழைக்கென விசைத்தனு மவரு
மிட்ட மின்றுமூத் தவன்செய லெனமறுத் திட்டார். 6[illegible]

பாவ லாளருங் காவல ராகினர் பலரு
மாவ லாகியின் பயின்றனர் புகழ்தர நெறியின்
மேவ லாளரு மடங்குற மேதினி புரந்தே
யேவ லாளரு மிதங்கொடு மகிழ்வண மிருந்தார். 6[illegible]

வேறு

வடமீனும் வணங்குறுகற் பரசியெனும்
பன்னியொடு வளரவி லின்ப
நெடுநாளுண் டுறைபொழுது சொட்டைநம்பி
தெய்வத்துக் கரசு நம்பி

திடமாருந் திருவரங்கப் பெருமாளரையர்
  பிள்ளை யரசு நம்பி
யுடனுமிவ் வுத்தமர்கள் புத்திரரா
  யுதித்திட்டா ருவர்க்கு மன்றே. 70

ஈங்கிவரு மொழுகுகையி லிவையடையச்
  செவியுற்ற மணக்கா னம்பி
யோங்கியுய ருவகையனிவ் வுத்தமரைக்
  கண்ணுறவே நசைந்து போந்து
தூங்குமுகிற் புரிசைவளை மந்திரவா
  யிலினமனுந் துணுக்க மெய்த
நீங்கரிய காவல்புரி மறவர்களைக்
  கண்டுலையா நெஞ்ச முட்கி. 71

பன்னாளங் குழன்றுருகாற் பாசகனோர்
  வேதியனை யணுகிப் பையக்
கொன்னாரு நம்மிறைவர் கூர்நசையிற்
  புசிப்பதெது கூறு யென்ன
வன்னானின் றாதலையே யவராயில்வ
  ரருத்தியினென் றறைய நம்பி
பின்னாளுமதைக்கொணரா வவன்கையிற்
  பிரியமுடன் பெய்து வந்தார். 72

ஓராறு மதியவ்வா றொழுகுகையி
  லொருபயனு மிலதா யுள்ளந்
தீராத சங்கையுட னவர்தியங்கித்
  தினமொன்றில் வாளா நிற்க
நீராரந் நின்மலரு மித்தினமே
  னவ்வடகு படைத்த லின்றென்
றோராக வினவுகையின் மானசிக
  னிருகைகுவித் திறைஞ்சி நின்றே. 73

அறிவானும் வயதானு முதிர்ந்திடுமோ
  ரந்தணர்வந் ததனைத் தந்தும்
வறிதாகாத் தரிசனக்கு வைகல்பல
  காத்தனரிவ் வைகல் காணே

னறியேனம் மூலமென வதிசயித்துப்
  போந்தவுட னவரைத் தங்கண்
முறையானே படர்தரநீ யழைத்தடைக
  வெனமொழிந்தார் முழுதுந் தேர்ந்தார். 74

வேறு

மறுபகன் மடைத்தொழின் மன்ன னம்பியை
யிறையவ ரிடையழைத் தேக வன்னவர்
நறியபொன் னிருக்கையி லிருத்தி நற்பதஞ்
செறிதரச் சிரந்தனிற் றொழுதெ ழுந்தரோ. 75

முகநக வின்மொழி பகர்ந்து மூவருட்
பகாரு முயிர்களைப் படைக்கு மூர்த்திபோ
னகுதரு நீவிரிங் கெழுந்த நன்மையைப்
புக்றாத் திருவுளம் பொருந்து கென்றனர். 76

எனவவ ராளவந் தாரி னின்முக
நனிமகிழ் கொடுகுறித் தைய நாமொரு
தினையெனுங் கொளற்கிவண் விழைதல் செய்கிலே
முனமும தரியமூ தாதை மூப்பினில். 77

கிடைப்பரு நிதியமொன் றரிய கேண்மையாற்
படைத்ததை யெமதிடம் பரிந்து வைத்தன
ரடைத்தது செழிக்கநீ ரறியக் காட்டுதுங்
கடைத்தலை கரித்திரள் பிளிறும் பெற்றியீர். 78

சிலபக லதற்கியாஞ் சென்று நும்மகம்
பலரறி யாவணம் படர்தல் வேண்டுமென்
றலகறு முணர்வின ரறைய வன்னரு
மிலகவிங் குளப்படி யெழுக வென்றனர். 79

அன்றுதொட் டவருமூ யெழுந்து நம்பியுங்
குன்றுதொட் டெடுத்துமுற் கோவைக் காத்தமா
லன்றுதொட் டருளிய கீதை நாடொறுந்
தொன்றுதொட் டுளபொரு டோன்றச் செப்பினார். 80

264
158960

மூவ[illegible] முழுது மோதவே
[illegible] மனிடை யதிக ரித்திடத்
தேவரு மறிவருந் தெரிய வப்பொருண்
மேவர விழிவிர கருளு கென்றனர்.

அவருறு மருத்தியை யறிந்து நம்பியு
மெவர்களு மறிவுறு திராசி யந்தனி
னவையறுஞ் சரமசு லோக நண்ணுற
வுவகையிற் பொருளொடு முதவி மற்றரோ.

பரமபு ருடார்த்தமாங் கைங்க ரியமீங்
குரம்படு ப்ரபத்தியா முபாயங் கொண்டுளந்
திரம்படப் பரவினத் திரும ணாளனு
நிரம்பிடுங் கருணையி னேரு மென்றனர்.

என்னலுஞ் செந்நெலுக் கேறப் பானித
மின்னறுந் தலைநித மிறங்கு மாறவர்
பொன்னுளம் ப்ரபத்தியுட் புகப்பு கப்பரன்
றன்னுழை வணக்கமுந் தலையெ டுத்தரோ.

நம்பியை யதன்முனே நணுகு மாரிய
ரெம்பிறப் பறுவிவ ணெழுந்த ளாரெனத்
தம்பொரு வறுமுளத் துணர்ந்து தன்னமும்
வெம்புமில் வாழ்க்கையில் விழைத லின்றியே.

ஒளிர்குவ துணர்ந்தன ருவந்து நம்பியு
மளியொடு மவரொடு மந்த கன்றம
ருளம்வெரு வுறுங்கணி னுற்று நோக்கவு
மளகுறு மரங்கமா நகர நண்ணினர்.

நண்ணியங் கமரர்க ளுளுந் தாடொழும்
புண்ணிய விரவியங் குலத்துப் பூபர்முன்
பண்ணிய பூசையெம் பரனைக் காட்டிநுங்
கண்ணிய மரபினர் படைத்த மாநிதி.

இதுவென விசைத்தலு மெழிலி மேனியை
மதுவழி துளவவண் டாரின் மன்னுவ
ததிசயித் தடிமுதன் முடியி னெல்லையாய்
முதமொடு திறந்துகண் முழுதுங் கண்டவர்.

எல்லா ஆயுர்வேத வைத்தியர்களும் இங்கிலீஷ்
டாக்டர்களும் பிறரும் கொண்டாடும்

சார்ங்கதர ஸம்ஹிதை

ஆயுர்வேத சாஸ்திரத்தின் ஸகல ஸாராம்சங்களும் அடங்கிய மிகப்
பிராசீன வைத்தியக் கிரந்தம்.

வைத்தியரத்னம்

பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்,

ஆயுர்வேத பூஷணம், ஆயுர்வேதாசார்யர் அவர்களால்
ஸம்ஸ்க்ருதத்திலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது.
சீர்திருத்திய மூன்றும் பதிப்பு

மூன்று கண்டங்களும் 32 அத்தியாயங்களும் அடங்கியது.

வைத்திய பரிபாஷை முதலியவைகள்.

1. பூர்வகண்டத்தில்:—(1) வைத்திய பரிபாஷைகள், (2) ஔஷதி முதலியவற்றின் விவரணம், (3) நாடீ பரீக்ஷாதிகள், (4) தீபந-பாசநாதி குண விவரணம், (5) சரீரதத்வாதிகள், (6) உணவு உட்செல்லும் வகை முதலியன, (7) ரோகவிவரணம் என்னும் ஏழு அத்தியாயங்கள் அடங்கியுள்ளன.

ஔஷத முறைகள்.

2. மத்திம கண்டத்தில் :—(1) ஸ்வரஸ முறைகள், (2) க்வாத-கஷாய முறைகள், (3) பாண்ட கஷாய முறைகள், (4) ஹிமகஷாய முறைகள், (5) கல்க முறைகள், (6) சூர்ண முறைகள், (7) குளிகை-மாத்திரை முறைகள், (8) லேஹ்ய முறைகள், (9) ஸ்நேஹ-தைல-க்ருத-முறைகள், (10) ஸந்தாந ஆஸவாரிஷ்ட-முறைகள், (11) தாது-லோஹ-பாஷாணாதி-சுத்தி பஸ்மாதி முறைகள், (12) ரஸங்கள்-ரஸ-கந்தகாதி முறைகள் என்னும் பன்னிரண்டு அத்தியாயங்கள் அடங்கியுள்ளன.

சிகித்ஸா கிரமங்கள்.

3. உத்தரகண்டத்தில் :—(1) ஸ்நேஹபாநவிதி, (2) ஸ்வேதவிதி, (3) வமநவிதி, (4) விரேசநவிதி, (5) வஸ்திவிதி, (6) நிரூஹவஸ்திவிதி, (7) உத்தரவஸ்திவிதி, (8) நஸ்யவிதி, (9) தூமபாநவிதி, (10) கண்டூஷாதி விதி, (11) லேபநாதி விதி, (12) இரக்த மோக்ஷணவிதி, (13) நேத்திர சிகித்ஸை, ஆகப் பதின்மூன்று அத்தியாயங்கள் அடங்கியுள்ளன.

வேறு விவரம்.

எளிய வசனநடை, விஷயங்கள் ஒழுங்காகவும் தலை யங்கங்களோடும் அமைக்கப்பட்டிருக்கின்றன. விரிவான உரை. விசேஷ அநுபந்தங்கள். ஸகல விஷயங்களுக்கும் விஸ்தாரமான விஷய அகராதிகள்.

உயர்ந்த காலிகோ பைண்டு	ரூ.	5	4	0
இரண்டாந்தர பைண்டு	ரூ.	4	4	0

வைத்திய கலாநிதி ஆபீஸ்,

11, ஆதியப்ப முதலித் தெரு, வேப்பேரி, மதராஸ்.

Registered No. M. 916.

ஓர் ஆச்சர்யமான ஸம்வாதம்

கேளுங்கள்: பாருங்கள்: வாருங்கள்: வாங்குங்கள்:

சாஸ்திரி:—விசுவாச முள்ளோர்க்கன்ரு சாஸ்திரமே ப்ரமாண மென கிருர் கீதாசார்யன். "**तस्माच्छास्त्रं प्रमाणं ते**" என்று கேட்டதில்லையா?

க்ருஹிணீ:—ஆனல் என்ன?

சாஸ்திரி:—ஆசார்ய வாக்படர் கூறுவதைக் கேளம்மா. நீங்கள் சும்மா இருப்பது சரியல்ல.

"सूर्यादिग्रहनिग्रहापहरणं दीर्घायुरारोग्यदम्
सौभाग्योदयभाग्यवश्यविभवोत्साहप्रदं धैर्यकृत्
दुश्छायाचलधूलिसङ्गतिभवालक्ष्मीहरं सर्वदा
वज्राणां परिधारणं निगदितं भूतादिनिर्नाशकम् ॥



க்ருஹிணீ:—நீர் சொல்வது எனக்குப் புலப்படவில்லையே.

சாஸ்திரி:—கதிரவன் முதலான கிரகங்களின் சாபங்களைத் தடுக்கும்; நீண்ட ஆயுளையும் சரீர சுகத்தையு மளிக்கும்; ஸௌமங்கல்ய நிலையைத் தந்திடும்; ஸகல பாக்யங்களையும், வசியத்தையும், விபவங்களையும், உத்ஸாஹத்தையும் விளைவிக்கும்; கெட்ட நிழல் பர்வத தூசி இவைகளின் சேர்க்கையினால் உண்டாகும் பிணியை நீக்கும்; பூதம் முதலான பேய் பிசாசுகளை நிர்மூலமாக்கும். எது? வைரமணிகளை '**परिधारणं**' நிரம்பத் தரிப்பதேயாம்.



க்ருஹிணீ:—அடடா! என்ன ஆச்சர்யம்! அவைகள் எங்கே கிடைக்கும்?

சாஸ்திரி:—வெகு அழகாயும் மிக்க ஸரஸமாயும் ஒரே ரேட் (விலை) உள்ளதாயும் வைரங்கள் கிடைக்குமிடம்—

ஸூராஜ்மல் லல்லுபாய் அண்டு கம்பெனி,

313, எஸ்பளனேட், மதருஸ்.

SURAJMAL'S
The Jewellers
313 ESPLANADE, MADRAS.

Printed by Kabeer Printing Works, Triplicane, and Published by Vankipuram S. Vasudevachariar, for Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd., Madras